

# ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே...

**பானுகுமார்**



# ஞாபகம் வருதே...
# ஊர் ஞாபகம் வருதே...

பானுகுமார்

ராஜம் பதிப்பகம்

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | ஞாபகம் வருதே...<br>ஊர் ஞாபகம் வருதே... |
| ஆசிரியர் | : | பானுகுமார் |
| பதிப்பாசிரியர் | : | கே. நரேந்திரன், பி.இ., |
| முதல் பதிப்பு | : | 2006 செப்டம்பர் |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| நூலின் அளவு | : | டெம்மி |
| மொத்தப் பக்கங்கள் | : | XIV + 206 |
| தாளின் தன்மை | : | வெண்மை |
| கட்டுமானம் | : | சாதாரணக் கட்டு |
| நூல் வெளியீடு | : | அன்பகம்<br>பி 58, ஏழாவது குறுக்குத் தெரு,<br>அண்ணா நகர்,<br>செங்கற்பட்டு - 603 001. |
| ஒளி அச்சு | : | Prompt Offset Printers<br>34, திப்பு தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 14. |
| விலை | : | 100/- |

## தாய் மண்ணே வணக்கம்

வண்ண வண்ணக் கனவுகள் கருவுக்குள் வளர்த்தாய்
வந்து மண்ணில் பிறந்ததும் மலர்களைக் கொடுத்தாய்
அந்தப் பக்கம் இந்தப் பக்கம் மரங்களைக் கொடுத்தாய்
நந்தவனம் நட்டுவைக்க நதி (பாமணி) கொடுத்தாய்
உந்தன் மார்போடு அணைத்தாய் என்னை ஆளாக்கி வளர்த்தாய்
சுக வாழ்வொன்று கொடுத்தாய் பச்சை வயல்களை பரிசளித்தாய்
பொங்கும் இன்பம் எங்கும் தந்தாய் கண்களும் நன்றியால் பொங்குதே
தாய் மண்ணே வணக்கம் தாய் மண்ணே வணக்கம்

## ஊர் ஞாபகங்கள்

கண்ணிமை கவிழும் போதும்
கனவுகள் தவழும் போதும்
என்னையே தொலைத்து விட்டு
எங்கெங்கோ தேடும் போதும்
பானுமதி யோடு கொஞ்சம்
பூர்வீகம் பேசும் போதும்
என்னையே பிழியு தம்மா
என் ஊர் ஞாபகங்கள்

# இதனுள்ளே


I. வாழ்த்துரை
II. அணிந்துரை
III. ஞாபக அலைகள்

| | | |
|---|---|---|
| 1. | கனவா நினைவா | 1 |
| 2. | புண்ணிய பூமி | 4 |
| 3. | மண்வாசனை | 11 |
| 4. | அ, ஆ டீச்சர் | 17 |
| 5. | சிறகசைத்தக் காலம் | 20 |
| 6. | பாட்டி | 26 |
| 7. | நண்பர்கள் | 30 |
| 8. | ராமதாஸ் | 32 |
| 9. | பண்டிகைகள் | 34 |
| 10. | மார்கழி | 42 |
| 11. | சைக்கிளோட்டம் | 45 |
| 12. | தமிழ்த்தாத்தா | 47 |
| 13. | மகாமகம் | 50 |
| 14. | மயானம் | 52 |
| 15. | ஊர்தெய்வங்கள் | 58 |
| 16. | கோயில்பாதி குளம் பாதி | 69 |
| 17. | பங்குனித் திருவிழா | 77 |
| 18. | கல்வெட்டுக்கள் | 85 |
| 19. | ஊர் பஞ்சாயத்து | 90 |
| 20. | நூலகம் | 94 |
| 21. | சுற்றுலா | 97 |
| 22. | சாமக்குறி | 101 |
| 23. | தச்சாரி | 104 |
| 24. | இரண்டு கலைஞர்கள் | 107 |
| 25. | விரல்களின் நளினம் | 110 |
| 26. | சங்கூதியின் வாழ்த்து | 112 |

| | | |
|---|---|---|
| 27. | மண்பொம்மைகள் | 114 |
| 28. | கொம்புச்சீப்பு | 118 |
| 29. | உறுமிச் சத்தம் | 120 |
| 30. | காணிக் காத்த கலைஞர்கள் | 122 |
| 31. | 'வெளுத்த' உள்ளங்கள் | 124 |
| 32. | குறவன் குறத்தி | 127 |
| 33. | வேடிக்கையான விஷயங்கள் | 131 |
| 34. | ரசனை | 134 |
| 35. | விளையாட்டுக்கள் | 138 |
| 36. | கிராமபோன் பெட்டி | 142 |
| 37. | டூரிங் டாக்கிஸ் | 144 |
| 38. | சர்க்கஸ் | 147 |
| 39. | மழை | 150 |
| 40. | ஊர் பெரியவர்கள் | 154 |
| 41. | சாமானியர்கள் | 157 |
| 42. | கிராமத்து அடையாளங்கள் | 162 |
| 43. | தெருக்கூத்து | 166 |
| 44. | கீதாரி | 174 |
| 45. | வயல்காடும் களத்துமேடும் | 178 |
| 46. | கல்லூரி நாட்கள் | 183 |
| 47. | இரயில் பயணங்களில் | 187 |
| 48. | சின்ன சின்ன | 190 |
| 49. | மன்னார்குடி தேவதைகள் | 193 |
| 50. | அவள் ஞாபகம் | 196 |
| 51. | மன்னார்குடி இன்று | 199 |
| 52. | மீண்டும் நினைவுகள் | 202 |

## நினைத்தாலே இனிக்கும்

**Dr. C. அசோக்குமார்,** M.S.,
C.A.K. பாலிகிளினிக், மன்னார்குடி.

உலகைக் காண பத்துத் திங்கள் சுமந்த தாய்ப் பாசத்தையும், பிறந்த "மண்" பாசத்தையும் எவராலும் பிரிக்கவோ, மறக்கவோ முடியாது. இது வையத்துள் வாழும் மாந்தர் தம் இயல்பாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமுன் இன்றைய பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் அவர்கள் டெல்லியில்......... தான் பிறந்த இல்லம் வந்து பார்த்து சிலமணி நேரங்கள் தங்கி தன் இளமைக்கால நினைவுகளால் உள்ளம் பூரித்தமையை நாமறிவோம்.

ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து பல்வேறு பரிணாம வளர்ச்சிகளைப் பெற்று எங்கே எவராய் வாழ்ந்த போதும் தான் பிறந்த ஊரின் இளமைக்கால நிகழ்வுகள் நினையும்போது

"நினைத்தாலே இனிக்கும் நெஞ்சமெல்லாம் மணக்கும்"

இது உண்மை என்பது என் கருத்து.

மன்னார்க்குடிக்கு புராண, வரலாறு, அரசியல் காலந்தொட்டு பல சிறப்புப் பெயர்கள் உள்ளன. இதை pensioners town என்று கூட அழைக்கப்படுவதாகக் கேள்வி. இந்த வகையில் **"ஞாபகம் வருதே... ஊர் ஞாபகம் வருதே"** எனும் தலைப்பில் ஆசிரியர் பானுகுமாரின் ஞாபக அலையில் என்னையும் இணைத்தேன். ஆனந்த மழையில் நனைந்தேன் நண்பர் பானுகுமார் பல சிறுகதைகள், கட்டுரைகள் படைத்து நற்புகழ் பெற்றவர் என்றாலும் தன் ஊரைப் பற்றி எழுதிய

நேர்த்தியைப் பார்த்தால் இந்த உரைநடைக்குள் ஓர் கவிநயம் பொதிந்திருப்பதை நன்கு உணரமுடிகிறது.

மதிலழகு மன்னார்குடிக்கு "இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம்" என்பதுதான் முதன்மையாக விளங்கிய பெயர் என்றும் இன்னப் பிறப்பெயர்கள், பின்னாட்களில் பல்வேறு காலங்களில் அழைக்கப்படுவதை ஆதாரங்களுடன் கூறுகிறார்.

அண்ணாமலை நாதர் கோயில், ஜெயங்கொண்டநாதர் கோயில், கைலாசநாதர் கோயில் இம்மூன்றும் முதன்மையாகத் தோன்றிய திருக்கோயில்களாக இருந்தாலும் இவைகட்கு ஆதியாக முதன்முதலில் அருள்மிகு இராஜ கோபாலசுவாமி ஆலயத்தை இராஜாதிராஜன் பெயரால் கட்டப்பட்டிருந்தாலும் மூன்றாம் குலோத்துங்க சோழனே கற்கோயிலாக கட்டியதையும், அதன்பின் அச்சுப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர், மராட்டிய மன்னர் சகஜி மன்னாரு போன்றோர் கட்டிய வரலாறு உண்மைகளை மிகத் தெளிவாக எழுதி உள்ளமை போற்றத்தக்கதாகும்.

இதற்கு கல்வெட்டு சான்றுகளாக கங்கை கொண்டானாகிய இராஜேந்திரசோழனின் மூத்த மகன் கி.பி.1818 முதல், ஜெயங்கொண்டான் என்ற மெய்கீர்த்தியும், போசாள மன்னன் வீரராமநாதன் கி.பி.1528-ல் வழங்கிய சொத்துக்கள், இரண்டாம் மாறவர்மன் விக்ரமபாண்டியன் 1250-76 இப்படி பல்வேறு கல்வெட்டுக்கள் கூறும் சாசனக் குறிப்புகளை இவர் கண்டாய்ந்து வெளியிட்டுள்ளது, வரலாற்றை ஆய்வோர்க்கு பெரிதும் துணைநிற்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த அரிய குறிப்புகள் கோட்டூர் அரங்கசாமி முதலியார் நூலகத்தில் தேடிய பெறும் வேட்டையின் பரிசாகும்.

ஓர் ஊரில் வடக்கு நோக்கி ஆறு ஓடுவது என்பது மிகசிறப்பானதாகும். அப்படி ஓடும் பாமணி நதியையும் ஊரின் கிழக்குப் பகுதியில் அமைந்த இன்றும் நற்பணி ஆற்றும் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் மடம் அன்றைய நாளில் எப்படி மக்களுக்கு அந்தச் சித்தர் அரும்பணி ஆற்றினார் என்பதையும் ஆசிரியர் விளக்குவதைக் கண்டு ஆச்சரியப் படாமல் இருக்க முடியாது.

தன் பள்ளி வாழ்க்கையில் முதல் வகுப்பில் தனக்கு பாடம் கற்பித்த "ஜானகி" டீச்சரை நினைவு கூறுகையில் "டீச்சர்" இன்று கதைகள் பல எழுதி புகழ் பல பெற்றிருந்த போதிலும் நெல்லிலும், மணலிலும் என் கைவிரல்களைப் பிடித்து எழுத வைத்தீர்களே! இன்னமும் நான் தரையில் தான் இருக்கிறேன் நீங்கள் எங்கே? என்னை ஞாபகமிருக்கா? என்று கேட்கும் போதும், பின்லே மேல்நிலைப்பள்ளியில் படித்த காலத்தில் பிரின்ஸ்பால் திரு. அமலநாதன், ஆசிரியர்கள் பிரசாத், கதிரேசன், சண்முகசுந்தரம், தாமஸ், பார்த்தசாரதி போன்ற ஆசிரியப் பெருமக்கள் மீது தான் கொண்ட அன்பையும், பெரும் மதிப்பையும் உணரும்போது நூல் **ஆசிரியரின் குருபக்தி** எத்துணை உன்னதமானது என்பதை நம்மால் அறிய முடிகிறது.

தனது இளவயது நண்பர்கள் ராமதாஸ், ராஜேந்திரன், சம்சுதீன், மைனர் ராஜு இவர்களோடு தான் சேர்ந்து விளையாடிய விளையாட்டுக்கள் திருவிழாக் காலங்களில் கலந்து கொண்டு அடைந்த மகிழ்ச்சிகள் இவைகளை ஆசிரியர் விவரிக்கும்போது நூலைப் படிப்பவர்கள் தங்கள் இளம்பருவ நட்புகளை அசை போடாமல் இருக்க முடியாது.

தன் நண்பரோடு வெட்டிக்காடு கிராமத்துக்கு சென்றபோது வயலில் விளைந்த நெற்கதிர்களை வயலுக்கு சொந்தமில்லாதவரின் மாடுகள் அதை மேய்ந்து விட அதற்கு ஊர் பஞ்சாயத்து கூடியது. குற்றம் யாருடையது? மாட்டின் சொந்தக்காரருக்கா? மாடுகளுக்கா? மாடு மேய்த்தவனுக்கா? இறுதியில் மாடு மேய்த்தவனே குற்றவாளியாக்கப்பட்டு அவனுக்கு அளிக்கப்பட்ட குறைந்த தண்டனையை பானுமதிகுமார் சுவைபட கூறியுள்ளதைப் படிக்கும்போது அந்தக்கால கிராமங்களில் பசுமைகள் மட்டுமல்ல ஞாய தர்மமும் நம் **நெஞ்சை நெகிழச் செய்து விடுகிறது.**

தாமரைக் குளத்தில் உதய நேரத்தில் தாமரைமொட்டு மலரும் காட்சியில் தம் நண்பர்களுடன் சென்று பார்த்து பரவசப்பட்டதை விளக்குகையில் **அவரின் மென்மையான உள்ளத்தை** நம்மால் அறிய முடிகிறது. வயல் வெளிகளில் நாத்து நடும் பெண்கள் தன் குழந்தைக்கு பால் கொடுக்க

போன ஒருத்தி இன்னொரு குழந்தைக்கும் சேர்த்து பால் கொடுத்து பின் நடவு நட சேற்றில் இறங்கியதை ஆசிரியர் கோடிட்டு காட்டி மனித நேயம் கிராமத்தில் தளைப்பதை அருமையாக கூறியுள்ளார்.

தன்னுடன் இளம் வயதில் பழகிய மிக சாதாரணமான பூக்கார மோகன், சாரங்கபாணி கோனார், போஸ்ட்மேன் ரங்கராஜன், உடுப்பி ஹோட்டலில் வேலை செய்யும் கோவிந்தமாள், மருந்து கடை வேணுகோபால், பாண்டிச்சேரி கொத்தனார் ஆகியவர்களை மன நெகிழ்வுடன் நினைவு கூறுகிறார்.

கீதாரிகள் ஆடு மேய்ப்பதையும், வாத்துகளை மேய்ப்பவர்கள் அவ்வப்போது வயல்களில் தங்குவதையும், சிறுத் தொண்ட நாயனார் இசைக் கூத்து, பாகவத மேளா, பிரகலாத நாடகம், திரவொபதி அம்மன் தெருக்கூத்து ஆகியவற்றை சுவைப்படப் பதிவுச் செய்திருக்கிறார்.

மன்னார்குடி புண்ணியப் பூமியாகத் திகழ்வதற்கு முக்கிய காரணமாக ஈசானி மூளையில் மகான் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் ஜீவ சமாதி, மகான் மாயாண்டி சுவாமிகள் சமாதி (ஐயர் சமாதி) மேற்கே மகான் மேரு சித்தர் சமாதியும், தெற்கே வாட்டார் மௌன குரு சமாதியும் இருப்பது தான் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

தான் படித்த ஜெயலெட்சுமி பள்ளியைப் (இன்று மணிமேகலை நடுநிலைப்பள்ளி) பற்றி குறிப்பிடும் பொழுது - பள்ளி என்பது ஒரு தனி நபர்காகவோ ஒரு தனி மாணவனுக்காகவோ நடத்தப்படும் நிறுவனம் அல்ல - ஒரு சமுதாயத்திற்காக வரையறுக்கபட்ட கல்வித் திட்டம் என்று திட்ட வட்டமாக கூறுகிறார்.

மன்னார்குடியில் எத்துணையோ கலைஞர்கள் இருந்த போதும் ஊருக்கு ஒதுக்குப்புரத்தில் பறை அடிக்கும் கலைக்கு சொந்தக்காரரான மகாலிங்கமே இவரைக் கவர்ந்தவர் ஆகிறார். காரணம் இறப்புக்குப் பின் மயானத்தில் அவரைச் சார்ந்தவர்கள் ஆற்றும் பணி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி யிருக்க வேண்டும். உண்மைதானே? வீதிவரை மனைவி,

காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ? கடைசி வரை முடிசார்ந்த மன்னரையும் பிடிசாம்பல் ஆக்கும் பணிசெய்வோர் மீது பரிவும் பாசமும் ஞாயம்தானே?

மன்னைக்குப் பெருமை சேர்த்த இறவாப்புகழ் பெற்ற தென்கொண்டர், மன்னை, பெண் அன் கோ போன்றவர்கள் நினைவுகளையும் இவர் மறந்தாரில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பின் மிகப் பெரும் மாற்றங்களைக் கொண்ட மன்னார்குடியைப் பார்த்து அகமகிழ்ந்த ஆசிரியர் கல்விக் காவலராய், அறங்காவலராய் பணி செய்யும் டாக்டர். திவாகர் அவர்களைப் பாராட்டிப் போற்றியது, அவரின் கனவுகள் நிறைவேறியதைக் காட்டுகின்றன.

இராமபிரான் இலங்கைச் செல்ல பாலம் கட்டும் முயற்சியில் அணில்கள் தனது பங்கிற்கு மணல் எடுத்து போட்டமைப் போல எனது பணியையும் இந்நூலில் இணைத்துச் சிறப்பித்தமைக்கு நன்றி.

மன்னார்குடியில் நான் பிறக்கவில்லை. வாழ்க்கை இங்கேதான். ஆனால் பானுகுமாரின் இளமைக்கால நினைவுகளை ஆய்ந்தபோது நானும் மன்னையில் பிறக்கவில்லையே! என்ற ஏக்கம் எழத்தான் செய்கிறது. என்ன செய்வது? வாழ்கிறேன் என்ற அமைதி ஒன்றே போதும்.

அன்புடன்,

**C. அசோக்குமார்**

## வாழ்வின் அனுபவ வித்துக்கள்

**S. மாசிலாமணி,**
செயலாளர்
மன்னார்குடி மனவளக்கலை
அறக்கட்டளை

மனித மனம் ஞாபகச் சங்கிலியால் பின்னப்பட்டுள்ளது. நினைத்து உருக, மகிழ, வருந்த, அதிர, அதிசயிக்க என ஏராளமாய் எல்லோருக்குள்ளும் ஞாபக அலை அடித்துக் கெண்டேயுள்ளது.

நண்பர் பானுகுமார் எடுத்துக் கோர்த்துள்ள இந்த ஞாபக முத்துக்கள் வாழ்வின் அனுபவ வித்துக்கள்.

மன்னார்குடியில் பிறந்த ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய ஒரு நூல். பழைய நினைவுகளுக்கு நம்மை அழைத்துச் செல்லும் விதம் நம் வயதை மறந்து இளமைத் துள்ளலுக்கு தாவிச் செல்ல வைக்கிறது. நூலை படிக்கத் துவங்கினால் அதை நிறுத்த மனமில்லாது படிக்கத் தூண்டுகிறது. மன்னார்குடி நகரையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களைப் பற்றியும் பல நிகழ்வுகளைப் பல தலைப்புகளில், பல கோணங்களில் சித்தரிக்கும் பாங்கு அருமை. இளமைப் பருவத்திற்கு இட்டுச் சென்று மன்னார்குடியை பலமுறை வலம் வருவது போன்ற நினைவு. எனது வயதே குறைந்த மாதிரியான உணர்வு ஏற்பட்டது.

நெஞ்சைப் பிழியுதம்மா
எங்கள் ஊர் ஞாபகங்கள்

என்றெழுதியுள்ள எழுத்தாளர் பானுகுமார் எழுத எழுத இன்னும் வசப்படும் வெற்றியின் உயரங்கள். நண்பர் பானுகுமாருக்கு என் தோழமை வாழ்த்துக்கள்.

**S. மாசிலாமணி**

# ஞாபக அலைகள்

நினைக்கும் போதெல்லாம் ஒருவகை வியப்பு எனக்குள் கூடுகட்டிக் கொள்வதுண்டு. சுவாசத்தைப் போல் நெஞ்சுக்குள் வருகின்ற ஊர் ஞாபகத்தை நிறுத்த இயலவில்லை.

பிறந்த மண் என்றால் கூடுதல் பாசம் தான் வருகிறது என்று என் குருநாதர் வேதாத்திரி மகரிஷி செங்கல்பட்டில் அறிவுத் திருக்கோயில் திறப்பு விழாவில் குறிப்பிட்டார்கள்.

மகான்களுக்கே மண்பாசம் இருக்கும்போது என்னைப் போன்ற எளிய எழுத்தாளர்களுக்கு எவ்வளவு ஏக்கமிருக்கும். எழுத்தாளர்கள் படைப்புகளில் வரும் கதாபாத்திரங்கள், நிகழ்ச்சிகள், சம்பவங்கள் எல்லாம் அவர்களது வாழ்க்கை அனுபவங்களையொட்டியே அமைந்திருக்கும். அவரது மண் வாசனையும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இத்தனை வருடங்கள் கழிந்தாலும் இளவயது நிகழ்ச்சிகள் நேற்று நடந்து கேட்ட மாதிரி இருக்கிறது. அன்பிலும், கொடையிலும், ருசியிலும் உயர்ந்த சோழநாட்டின் ஒரு பகுதி மன்னார்குடிதான் நான் பிறந்த பூமி.

பழைய ஞாபகங்கள் இல்லாமல் மனிதர்கள் யாருமே இருக்க முடியாது. பழைய நாட்களுக்கு வலம் வருகிற சுகம் இருக்கிறதே அந்தச் சுகத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை.

***ஞாபகம் வருதே ஞாபகம் வருதே***
***பொக்கிஷமாக மனசிலே புதைந்த***
***நினைவுகள் எல்லாம் ஞாபகம் வருதே!***

எவ்வளவோ நிகழ்வுகள் ஒருவரது வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருந்தாலும் எல்லாவற்றிற்கும் அடிநாதமாக அடித்தளமாக ஒலித்துக் கொண்டிருப்பது பால்யவயது ஞாபகங்களே.

வாழ்க்கை என்பது ஒரு புனிதப் பயணம் ஒவ்வொருவருக்கும் விதவிதமான பயணம். பழைய நினைவுகளை இப்போது, நினைத்தாலும் மனசெல்லாம் இன்பம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

ஒவ்வொருவருக்கும் அவருடைய பால்யக் காலப் பதிவுகள் அவரவருக்குச் சரித்திரப் புத்தகம் ஒரு நதிபோல நகர்ந்துவிட்ட வாழ்வைத் திரும்பிப் பார்க்கிறேன். அங்கங்கே எத்தனை எத்தனையோ ஈர நினைவுகள்.

எனது இருபத்து மூன்று வருட வாழ்க்கையைப் பதிவு செய்து இருக்கிறேன்.

முதன் முதல் சேர்த்த உண்டியல் காசு பிடித்த தட்டாம்பூச்சி பார்த்த டூரிங் சினிமா ஆக்கிய கூட்டாஞ்சோறு - சிக்குப்புக்குப் பயணம் - பழகிய நீச்சல் - ஓட்டிய சைக்கிள் - முதல் வகுப்பு ஜானகி டீச்சர் - அரும்பிய மீசை - வானவில்லை ரசித்தது - விரும்பிய இதயம் - எல்லாவற்றையும் பதிவு செய்துள்ள மகிழ்ச்சி.

மன்னார்குடியில் நான் அனுபவித்த இளவயது வாழ்க்கை. என் தெரு, வீடு, கோயில்கள், பள்ளிக்கூடம், கூடவே என்னுடன் கலந்த நண்பர்கள், ஓடி ஆடிய இடங்கள், மனதைக் கவர்ந்த மனித முகங்கள், எல்லாம்தான் எனக்கு உரமாக அமைந்தன.

எவ்வளவோ புத்தகங்கள் படைத்திருந்தாலும், இந்தப் புத்தகத்தை எழுதுவது, ஒரு இனிமையான அனுபவம் மலரும் நினைவுகளைப் பதிவு செய்து இருக்கிறேன். ஊரோடு இருந்த எனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை ஞாபகப்படுத்தி எழுதியிருக்கிறேன்.

இந்தப் புத்தகத்தின் நாயகன் நானில்லை. அந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்த ஒரு சிறுவன்.

இந்நூலை எழுதுவதற்கு உந்துதலாய் இருந்து ஊக்கம் கொடுத்வர் எழுத்தாள சகோதரர் திரு ராஜசேகர். இது ஒரு ஊரின் பயணக் கட்டுரை.

பயணித்துப் பாருங்கள்.

**பானுகுமார்**

செங்கல்பட்டு
*20.9.2006*

# கனவா, நினைவா

எனது கனவுப் பள்ளத்தாக்கில் ஊர் ஞாபகங்கள் கீதம் இசைத்தபடியே வருகின்றன. அவை யாழின் கீதங்களைப் போல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

ஒருநாள் இரவு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தேன். கனவு. புத்தகப் பித்தனுக்கு என்ன கனவு வரும்? கதைப் புத்தகம். புரட்டினேன். தலைப்பு. ஓர் ஊரின் கதை. படிக்கிறேன், படிக்கப் படிக்கத் திகைப்பு. ஆச்சரியம்.

என்னடா மரத்துக் கதையைச் சொன்னாங்க. மனுஷக் கதையை மறந்தாங்க. இப்ப ஊர் கதை வேறா? என்ன கதை உடப் போறீங்களா? நீங்க கேக்கறது எனக்குப் புரியுதுங்க. சத்தியமாச் சொல்றேனுங்க. இது ஊர்வாசிகளின் கதை இல்லிங்க. ஒரு ஊரான அசல்கதைங்க. என் சுயசரிதைங்க.

என் வரலாற்றையும், பெருமையையும் தானுங்க கூறப் போறேன். கருவுற்ற கதை, பிறந்த கதை, வளர்ந்த கதை என்று வரலாறு முழுசும் சொல்லி உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன்.

இந்தக் காலத்து சிறுகதை மாதிரி கச்சிதமா முக்கியமா சொல்லப் வேண்டியத் தகவல்களை மட்டும் சொல்றேன். எனக்கு என்னைப் பற்றி என்னவெல்லாம் ஞாபகம் வருதோ, அதைச் சொல்றேன். நூறு வயசைத் தாண்டிய அனுபவத்தைச் சொல்ற கிழம்னு நினைச்சிக்காதீங்க. நான் மனசாலே இளமை. வயசாலே முதுமை.

பொறந்தா ராஜ வம்சத்திலே பொறக்கனும்னு சொல்லுவாங்க. ராஜாக்கள் அதாவது மன்னருங்க குடியிருந்த இடம் தாங்க என் பேரு. அட! இன்னுமா புரியலை. அதாங்க **மன்னார்குடி.** இதுதான் என்னுடைய ஒரிஜினல் பெயர்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னாலே என்னை "மன்னார் கோயிலு"ன்னு அழைச்சாங்க. கோயில்னா தெலுங்கில் "குடி"ன்னு பொருள். நாயக்க மன்னருங்க ஆட்சிக்கு வந்தாங்கள்ளே! அப்ப "மன்னார்கோயிலை" மன்னார்குடின்னு மாத்திட்டாங்க.

என்னிடம் இருந்த மன்னர்கள் எல்லாம் அவுங்க அவுங்களுக்குப் பிடிச்சுப் போன செல்லப் பேராலே வேறு என்னைக் கூப்பிடுவாங்க. ராஜமன்னார்குடி, குலோத்துங்க சோழ விண்ணகரம், வண்துலாரபதி, செண்பகராயஷேத்திரம், ராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம். தென்னகத்துத் துவாரகை. ஆறுபேருதாங்க எனக்கு ஞாபகமிருக்கு.

என்னைப் பற்றிய பழமொழி சொல்ல மறந்திட்டேனே. **மன்னார்குடி மதில் அழகு, கோயில் பாதி குளம் பாதி, மண்ணில் மிக்கது மன்னார்குடி, மறையோர் மிகுந்தது மன்னார்குடி** சொல்லிக்கிட்டே போகலாம். போதுங்க.

காட்டையெல்லாம் அழிச்சு ஊராக்க முற்பட்ட போது, பிறந்தவன் நான். பொறந்தப்ப ராஜாதிராஜ சோழன் தானுங்க என்னை உருவாக்கினாரு. பொறந்தப்ப வைச்சப் பேரு, **ராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம்.** இதை நான் சொன்னா நம்பமாட்டீங்க. முதல் குலோத்துங்கன் காலத்தின் (கி.பி. 1070-1125) கல்வெட்லேயே இருக்குதுங்க.

இப்ப இங்க இருக்கு பாருங்க ஸ்ரீ கைலாச நாதர் கோயில், ஜெயங்கொண்டநாதர் கோயில், ராஜகோபாலசாமி கோயில் மூனும் ராஜாதிராஜன் பேராலேதான் கட்டப்பட்டன.

என்னுடன் இருந்த மற்ற மன்னர்களை எல்லாம் சொல்லட்டுமா, மூன்றாம் குலோத்துங்கன். இவருதாங்க செங்கல்லா இருந்த பெரிய கோயிலைக் கல்கோயிலா கட்னாரு.

அச்சுதப்ப நாயக்கர், அவரது மகன் ரகுநாத நாயக்கர், அவரது மகன் விஜயராகவ நாயக்கர், அவரது மகன் மன்னாருதேவன் எல்லாரும் பெரிய கோயிலை விரிவாக்கம் செய்தவங்க. மராட்டிய மன்னரு, சகஜி மன்னரு, ஸ்ரீராஜ கோபாலன் மீது, பாடல்களே எழுதியுள்ளாரு.

எனக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு உண்டுங்க. சுதந்திரப் போராட்டத்திலே நான் பங்கேற்றதுக்காக, என்னை **"தென்னாட்டு பர்தோலி"** என அழைப்பார்கள்.

எனது பருமன் 11.55 சதுர மீட்டருங்க. இந்தப் பரப்பளவில் 190 தெருக்களில் வாழ்கிறேன். இப்ப 33 வார்டு இருக்குங்க. என்னுடைய சிறப்பான வடிவத்தைக் கண்டு, ஆங்கிலேயரான சர் பிரடெரிக் ஜெட்டினில், **"நம் மாநிலத்திலேயே மிகவும் அழகாக நிர்மானிக்கப்பட்ட நகரம்"** எனப் பாராட்டியிருக்கங்காங்க.

நூற்றாண்டுகளைக் கடந்தது என்ற பெருமை உடையதுங்க என் நகராட்சி. என்னைச் சுற்றிலும் 109 கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமத்து மக்கள் அனைவரும் எனக்குப் பரிச்சயமானவர்கள்.

ஒரு ஊரிலே வடக்கே ஆறு ஓடுவது விசேஷமுங்க. அப்படித்தான் வடக்குப் பக்கம் பாமிணி ஆறு எனக்கு மாலையாக இருந்து அணி செய்யுதுங்க. என்னுடனே 64 குளங்கள் இருக்கு. என்ன ஆச்சரியப்படுகிறீர்கள்? இதில் பத்து புண்ணிய தீர்த்தமும் இருக்கு.

கதையைப் படித்துக் கொண்டிருக்கும்போதே தூக்கம் கலைந்துவிட்டது. இது என்ன கனவா? மனதில் இருக்கும் வேர்களா?

***இருந்தாலும் நெஞ்சுக் குள்ளே***
***ஏனிந்த திணிவு - என்னை***
***மறந்தாலும் கண்ணுக் குள் ஏன்***
***மாறாத கனவு?***

❖❖❖

# புண்ணிய பூமி

ஆயிரமாயிரம் ஆண்டுகளின் பழமை வேர்களைத் தமக்குள் வைத்துக் கொண்டு, எதிர்வரும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கான நாளைய விதைகளையும் தமக்குள் உயிர்ப்பித்தபடி ரிஷிகள், மகான்கள் வந்தார்கள் - வருகிறார்கள்.

முனிவர்கள், ரிஷிகள், மகான்கள் காலத்தின் கட்டாயங்கள். மகான்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்திப்பூத்தாற்போல் வந்தாலும் அந்தச் சிலரின் எண்ணம்தான் உலக மக்கள் அனைவரையும் உயர்த்தி அரவணைத்துச் செல்கிறது.

**கோபிலர், கோப்பிரளயர்**

திருக்குடந்தைக்கு தென்கிழக்கில் சம்பகவனம் உள்ளது. இவ்வனத்தில் 1008 முனிவர்கள் தவமியற்றினர். அவர்களுள் "வஹ்னிமுகர்" என்பவர் சிறப்புடையவர். இவருக்கு கோப்பிரளயர், கோபிலர் என்னும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்கள் இருவரும் சிறந்த பக்தி மிக்கவர்களாக திகழ்ந்தனர்.

ஐந்தீ நடுவே எட்டெழுத்தோதி ஒற்றைக்காலில் நின்று இவர்கள் நாராயணனைக் குறித்து தவமியற்றினர். பெருமாள் இவர்கள் தவத்துக்கு உகந்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டருள, எங்களுக்கு மோட்சம் வேண்டும் என்றனர்.

அப்படியாயின் துவாரகையிலுள்ள கண்ணபிரானைத் தரிசித்தால் அப்பேறு கிட்டும் என்றார் பரமாத்மா. இருவரும் மகிழ்ந்து துவாரகையை நோக்கி புறப்பட்டனர்.

நடுவே நாரத முனிவரைக்கண்டு வணங்கி, கண்ணபிரான் எங்குள்ளார்? துவாரகை எங்குள்ளது? என வினவினர். "இவ்வுலகில் பூபாரம் தீர்க்க வந்த கண்ணபிரான் கம்ஸன் முதலான தீயவர்களை மாய்த்து பீஷ்மன் முதலான நல்லோரைக் காத்துத் தம் விண்ணுலகம் சென்றுவிட்டார்" என நாரதர் கூறக்கேட்டு, இருவரும் ஏக்கமுற்று அக்கணமே மூர்ச்சித்து விழுந்துவிட்டனர். நாரதர் அவர்களது பக்தியைக் கண்டு மகிழ்ந்தார்.

பின் பன்னிரெண்டெழுத்து மந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்து நீங்கள் துவாரகை நந்த கோகுலம் ஆகியவற்றைக் கண்டு தரிசித்துப் பின் சோழ வளநாட்டிலே குடந்தைக்கு தென்பால் அமைந்த சண்பகராண்யம் என்னும் தலத்திற்குச் செல்லுங்கள். அங்கு ஹரித்திராநதிக்கரைக்குச்சென்று நீராடி அங்கே ஓராண்டுகாலம் தவம் இயற்றினால் பகவான் உங்களுக்கு காட்சித்தருவார் என்று நாரதர் கூறியருளினார்.

இருவரும் மகிழ்ந்து துவாரகை, நந்தகோகுலம் முதலிய தலங்களை வழிபட்டுபின் ஹரித்திராநதியை அடைந்து ஆசிரமம் அமைத்து தவமியற்றினர். தவத்தைக்கண்டு பரமன் காட்சி அளித்தார்.

## முப்பதாவது திருக்கோலம்

ருக்மணி, சத்யபாமாவுடன் இரு மலர்களுக்கிடையே ஒரு வண்டுபோல் எழுந்தருளி வலத்திருக்கையில் மூன்று வளைவு கொண்ட சாட்டைக் கயிற்றுடன் கூடிய பொற்கோலை ஏந்தி, இடது திருக்கையை சத்தியபாமாவின் தோளில் வைத்து உத்ஸவ மூர்த்தியாக காணும் திருக்கோலமாகும்.

இரு முனிவர்களும் இக்காட்சி கண்டு, கண்ணீர் மழை சொரிய மெய்சிலிர்த்துத் திருவடிகளில் வணங்கி உள்ளம் குலாவும் இத்திருக்கோலத்துடன் என்றும் இவ்விடத்திலேயே தேவரீர் எழுந்தருளி எல்லோருக்கும் காட்சி தந்தருளல் வேண்டும் என்று விண்ணப்பித்தனர்.

அவர்கள் வேண்டுதல் பலித்தது. ஓங்கி உலகளந்த உத்தமன் சண்பகராண்யத்தில் ராஜகோபாலனாய் கோயில் கொண்டான் என்பது தலச்சிறப்பாகும்.

அவர்கள் விழைந்த வண்ணமே பரந்தாமன் கண்ணனாக அவதாரம் செய்து காட்டிய லீலைகளை அவ்ர்களுக்கு காட்டி அருளினார். கண்ணனது 30 கோலங்களை இரு முனிவர்களும் கண்டு பரவசமுற்றனர்.

மன்னார்குடி வரலாற்றுச் சிறப்புமிக்க புண்ணியத் தலமாகத் திகழ்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இங்கு சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் தங்கியிருந்தார்.

இந்தப் பகுதியில் பல்வேறு சித்து விளையாட்டுகள் மூலம் மக்களின் துன்பத்தைப் போக்கியுள்ளார். தன்னை நாடி வரும் நோயாளிகளின் நோயைக் குணப்படுத்தினார். வியத்தகு மருத்துவச் சாதனைகள் புரிந்து, வாடியவர்களின் கஷ்டங்களைப் போக்கியுள்ளார்.


சாதி, சமயங்களுக்கு அப்பாற்பட்டு தன்னை நாடி வந்தவர்கள் யாராயிருந்தாலும் முகமலர்ச்சியுடன் அவர்களுக்குச் சுடச்சுட அன்னம் வழங்கினார். பசித்தோரின் பசிப்பிணியைப் போக்கினார்.

மன்னார்குடி ஈசானிய மூலையில் சூட்டுக்கோல் ராமலிங்க சித்தரின் ஜீவசமாதி உள்ளது. அதன் அருகே அவரது சீடரான மாயாண்டிசுவாமியின் சமாதி உள்ளது.

சித் என்றால் உயிர். உயிரை உணர்ந்தவர்கள் சித்தர்கள். மானுடம் உய்விப்பதற்காக சித்தர்கள் தங்கள் ஆற்றலை உடம்பிலே வைத்து வெளியிட்டுக் கொண்டிருப்பார்கள்.

இந்தச் சித்தர் சமாதியான இடம் சிவன் கோவிலாக உள்ளது. கோவில் அருகே குளம் ஒன்று உள்ளது. இக்கோவிலில் உள்ள சிவலிங்கத்தின் இடது பக்கத்தில் இன்றும் இரண்டு சூட்டுக்கோல் இருக்கிறது. அது பாதுகாப்பாகப் பராமரிக்கப்பட்டு தினமும் ஆராதனை செய்யப்படுகிறது.

## சூட்டுக்கோல்



சூட்டுக்கோல்
இராமலிங்க சுவாமிகள்

ஐயர் சமாதி என்றழைக்கப்படும் இங்குத் தங்கி, தனது சித்து வேலைகள் மூலம் அருந் தொண்டாற்றி சமாதி அடைந்த சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமி தனது மார்பில் அணைத்தபடி இரண்டு சூட்டுக்கோலை வைத்திருப்பார். இந்த (இரண்டு கம்பிகள்) சூட்டுக்கோலை வைத்துதான் சித்தர் ராமலிங்க சுவாமிகள் வருபவர்களின் நோயைப் போக்கினார்.

தன்னிடம் வரும் பக்தர்களின் பிரச்சினைகளை முன்னரே அறிந்து அவர் களுக்கு மூலிகை வைத்தியம், தெளிவான

வழிகாட்டுதல் மூலம் தனது திருவருளால் பிணியைப் போக்குவார். சாதாரண வியாதிகளுக்கு சாதாரணமான மருத்துவம் செய்வார்.

குஷ்டம் மற்றும் பெரும் வியாதிகள் உள்ளவர்களுக்கு அவர் அமர்ந்திருக்கும் இடத்திற்கு எதிரே உட்கார்ந்து இருக்கும் அந்த அடியார்களிடம் பேசிக்கொண்டே அவர்கள் கவனத்தைத் திசை திருப்பி, அவர்கள் அறியாதவாறு தன்னிடம் உள்ள நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய இரண்டு கம்பிகளை (சூட்டுக்கோல்) அந்த அடியாரின் தொடையில் ஒரு இழுப்பு இழுத்து விடுவார்.

குறுகிய காலத்திலேயே அந்த அடியாரின் நோய் குணமாகிவிடும். அவர் நலம் பெற்று சுவாமிகளிடம் வந்து வணங்கி திருநீறு வாங்கிப் பூசிக்கொண்டு செல்வார். சுடப்பட்ட கம்பியான சூட்டுக்கோல் மூலம் (நோய்) பிணியைப் போக்கியதால், சூட்டுக்கோல் ராமலிங்கம் என்று அழைக்கப்பட்டார்.

## அன்னதானத்தொண்டு

ராமலிங்கசுவாமி அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவர். மக்களுக்குப் பசிப்பிணி இருக்க கூடாது. பசிப்பிணியை ஒழித்து, மக்கள் நல்ல ஆரோக்கியமும், நல்லொழுக்கமும், நல்லறிவும் பெற வேண்டும் என்பதில் தான் சிவத்தொண்டு இருக்கிறது என்று சித்தர் ராமலிங்க சுவாமி செயல்பட்டார்.

அந்தக் காலத்தில் தினமும் மாலையில் சூரிய அஸ்தமனம் அடையும் வேளையில் மேலே கூண்டு போட்ட பெரிய பாறை மாட்டு வண்டி மன்னார்குடி நகரின் நான்குபுறமும் உள்ள தெருக்கள் வழியாகச் செல்லும்.

ஒவ்வொரு வீட்டிலும் அவரவர் தகுதிக்கேற்ப ஒரு பிடி சாதம், சாம்பார் (சைவ உணவு) போன்றவற்றை வண்டியில் உள்ள பாத்திரங்களில் கொண்டு வந்து போடுவார்கள்.

வீடு வீடாக சேகரிக்கப்பட்ட சாதமும், குழம்பும் சத்திரத்திற்கு கொண்டு வரப்படும். பின்னர் சாதமும் சாம்பாரும் கலக்கப்படும் பாதசாரிகள், ஏழை எளியோருக்கு சுடச்சுட இலையில் வழங்கப்பட்டு அவர்கள் பசிப்பிணி போக்கப்படும்.

இதில் சித்தரின் மகிமையும் உள்ளது. பல வீடுகளில் இருந்து சேகரித்து வரப்பட்ட சாதமும், குழம்பும் சத்திரத்திற்கு கொண்டு வரும்போது சூடு ஆறியிருக்கும். ஆனால், சித்தர் ராமலிங்கசுவாமி அந்த அன்னத்தை பசித்தோருக்கு வழங்கும்போது அந்தச் சாதம்

சுடச்சுட இருக்கும். இதற்கு சித்தரின் மகிமையே காரணமாகும். மக்களின் முன்னேற்றம், நல்வாழ்வுக்காக சிவத்தொண்டு மூலம் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமி சேவை செய்தார்.

சித்தர் ராமலிங்க சுவாமி தனது ஜீவசமாதி நிலை குறித்து முன்பே அடியார்களுக்குத் தெரிவித்தார். தான், முக்தி அடையும் வேளையில் மன்னார்குடி நகரத்தில் நெசவாளர்கள் நெய்து கொண்டிருக்கும் நெசவுத்தறியும், மாடுகள் பூட்டிய வணிகச் செட்டியார்கள் வீடுகளில் எண்ணெய் ஆட்டும் செக்கும் சில விநாடிகள் நிற்கும் என்று கூறியிருந்தார். பின்பு மீண்டும் ஆலைகள் இயங்கத் தொடங்கும் என்று கூறியிருந்தார்.

சூட்டுக்கோல் சித்தர், உயிருடன் இருந்த போதே, தனது உடல் எங்கு, எப்படி அடக்கம் செய்ய வேண்டும் என பொது மக்களிடமும் தனது சக அடியார்களிடமும் சொல்லியிருந்தார்.

"எனது சமாதி அமையும் இடத்துக்கு எதிரில் மயானம் இருக்க வேண்டும். அருகாமையில் குளம் இருக்க வேண்டும். சத்திரம் இருக்க வேண்டும். தைப்பூசத்திற்கு அன்னதானம் வழங்க வேண்டும். அன்னக்கொடி ஏற்ற வேண்டும்" என்று கூறியிருந்தார்.

சூட்டுக்கோல் சித்தர் சிவத்தொண்டு செய்து கொண்டு யாத்ரீக நடைப்பயணமாக சில சிவனடியார்களுடன் சென்று கொண்டிருந்தார். "தண்ணீர் குன்னம்" என்ற இடத்தில் சென்று கொண்டிருந்த போது மாலை வேளையில் சூட்டுக்கோல் ராமலிங்சுவாமி ஜீவசமாதி அடைந்தார்.

அவரது அருள்வாக்குப்படி, மன்னார்குடி நகரில் இயங்கிக் கொண்டிருந்த நெசவுத்தறிகளும், எண்ணெய் செக்குகளும் சில வினாடிகள் நின்று, மீண்டும் இயங்கத் தொடங்கின.

அந்தக் குறிப்பை உணர்ந்து சூட்டுக்கோல் சித்தர் ஜீவ அடக்கம் அடைந்ததை அடியார்கள் உணர்ந்தனர். சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமி முன்பு கூறியிருந்த இடத்தில் சமாதி வைத்தனர்.

**மாயாண்டி சித்தர்**

மதுரை திருப்பரங்குன்றம் அருகே கட்டிக்குளம் கிராமத்தில் பிச்சை வேளாளர் கூத்தாயி அம்மாள் தம்பதியருக்கு சூட்டுக்கோல் ராமலிங்கசாமி சித்தர் அருளால் பிறந்தவர் மாயாண்டி சித்தர். மாயாண்டி சுவாமி சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமி ஆகியோர் இணைந்து ஊரில் சிவத்தொண்டில் ஈடுபட்டார்கள்.

மாயாண்டி சுவாமி பல்வேறு சித்து விளையாட்டு செய்து அடியார்களுக்கு பல நன்மைகள் செய்தார். ஜீவன் அடங்கிய பின், சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமிகள் ஜீவசமாதிக்குப் பின் உள்ள இடத்தில் ஜீவசமாதியில் வைக்கப்பட்டார்.

மாயாண்டி சுவாமிகள் நல்ல கருமை நிறம், நல்ல உயரம், மவுனமாக இருப்பார். நிர்வாண கோலத்தில் இருப்பார். வீதிகளில் பித்தரைப் போல திரிந்து கொண்டு இருப்பார்.

கடைவீதியில் திரிந்து கொண்டு செல்லும் போது இருபுறமும் உள்ள கடைக்காரர்கள், சுவாமி தனது கடைக்கு வரமாட்டாரா என்று ஏங்கிக் கொண்டு காத்திருப்பார்கள். சித்தர் மாயாண்டி சுவாமி ஏதாவது ஒரு கடலைக் கடைக்குச் சென்றால், அந்தக் கடையில் உள்ள கடலையைத் தனது இரு கரங்களால் வாரி இறைப்பார்.

அதே போல் பூக்கடைகளுக்குச் சென்றால் பூக்களை வாரி இறைப்பார். அன்று அவர் கரம் பட்ட அந்தக் கடையில் வியாபாரம் மிக அமோகமாக இருக்கும். கடைக்காரர் அன்று இரவு மகிழ்ச்சியோடு கல்லாவைக் கட்டுவார்.

சித்தர்களின் வழித்தோன்றல்கள் ஆன சூட்டுக்கோல் ராமலிங்கசுவாமி, மாயாண்டி சுவாமி ஜீவசமாதி அடைந்த ஐயர் சமாதியில் உள்ள கோவில் சிவலிங்கத்திற்கு ஒவ்வொரு பௌர்ணமி அன்று நள்ளிரவு சிறப்பு அபிசேகம், அலங்காரம், சிறப்புப் பூஜைகள் நடைபெறுகின்றன. அன்னதானம் வழங்கப்படுகிறது. சிவனடியார் திருக்கூட்டத்திற்கும், பக்தர்களும் கலந்து கொண்டு தேவாரம், திருஅருட்பா பாடி பூஜையில் பங்கு பெறுகிறார்கள்.

பிரதோஷ நாட்களில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை பூஜைகள் நடைபெறுகின்றன. இந்தச் சித்தர்கள் ஜீவசமாதியான இந்தக் கோவிலுக்கு, பல வெளியூர்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தந்து தினமும் வழிபட்டுச் செல்கிறார்கள்.

**மேரு சித்தர் :**


தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் வாழ்ந்தவர் மேரு சுவாமிகள், மன்னார்குடியில் தங்கி சமயப்பணி ஆற்றினார். இராமசோகளா, பீமோ உபதேச, அததூத கீதா, சிவானந்த லகிரி, ஆத்ம சாட்சாத்கார, பூரணாம்ருதகர, சோடசகலா, பிரம்மசமவீதி, ஆனந்த வால்மீகி இராமாயணம் போன்ற நூல்களை எழுதியுள்ளார். மன்னார்குடியிலேயே சமாதி அடைந்துள்ளார். இவரது குருநாதரான ஆனந்தமௌனியும் இங்குதான் சமாதி அடைந்துள்ளார்.



வாட்டார் மவுன குரு சாமிகள்

மன்னார்குடி புண்ணிய பூமியாக திகழ்வதற்கு காரணம் உண்டு. மன்னார்குடி நகரின் கிழக்கே "ஈசானிய மூலையில் மகான் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் ஜீவசமாதியும், மகான் மாயாண்டி சுவாமிகள் ஜீவசமாதியும் மேற்கே மகான் மேருசித்தர் சமாதியும், தெற்கே மகான் வாட்டார் மௌனகுரு சுவாமிகள் ஜீவசமாதியும் அமைந்துள்ளதே காரணம்.

மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்த சித்தர்களின் ஜீவசமாதிகளே தமிழகத்தின் தலைசிறந்த ஆலயங்கள். சித்தர்களின் சமாதி நிலையில் இருந்து இன்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.


◆◆◆



# மண்வாசனை

ஒரு ஊரைப்பற்றி ஏகப்பட்ட பழமொழிகள், கல்வெட்டுக்கள், சம்பவங்கள், கதைகள் இருக்கின்றன என்றால் அது மிகப் பழமையான புராதனமான ஊராக இருக்கும்.



மன்னார்குடி ஒரு அற்புதமான ஊராகும். இங்கே வாழும் மக்களின் வாழ்க்கையில் இந்த ஊர் ஏற்படுத்துகின்ற தாக்கம் எங்கே போனாலும் மறக்க முடியாதது. "மன்னார்குடிக்காரன்" என்ற ஒரு தனிப்பெருமையுடன் உருகிப் பேசுவார்கள்.

## சான்றோர் பலர் வாழும் ஊர்

உலக வாழ்க்கையில் சான்றோர்கள் பலர் அவதரித்த சிறப்புமிக்க ஊர். முனிவர்கள், சித்தர்கள், மன்னர்கள், சமுதாயச் சிந்தனையாளர்கள், மக்கள் நலம் விரும்பி வாழ்ந்த ஆன்மீகவாதிகள், சிறந்த கல்வியாளர்கள், பகுத்தறி வாதிகள் பலர் அவதரித்தது மன்னார்குடியாகும்.

- ஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் (தியாகராஜ மகி)
- பராங்குச மகாதேசிகர்
- மூவளூர் சபாபதி அய்யர்
- கொன்னக்கோல் பக்கிரியாப்பிள்ளை
- சாகித் யகர்த்த ராஜகோபாலய்யர்
- ஓவியர் சந்தனு
- தியாகி ஆர். பாஸ்யம்
- பத்மஸ்ரீ மனோரமா
- தலைமை நீதிபதி K.S. பக்தவச்சலம் (ஓய்வு)
- திரு. T.S. ராகவன், இந்தியன் வங்கி முன்னாள் தலைவர்
- திரு. வைகுந்த் IGP (ஓய்வு) சென்னை
- திரு. A. ஈஸ்வரன், மிருதங்கம்
- சங்கீத கலாநிதி R. வேதவள்ளி (பாடகி)
- திரு. நரசிம்ம அய்யங்கார், கர்நாடக இசை
- சின்னப் பக்கிரி பிள்ளை - நாதஸ்வரம்
- திரு. தி. ஜானகிராமன் - நாவலாசிரியர்

**மண்ணின் மதிப்பு :**

- சுதந்திரப் போராட்டமானது தென்னிந்தியாவில் மன்னார்குடியில் தொடங்கியதால் 'தென்னாட்டு பர்தோலி' என்று மகாத்மா காந்தி மன்னையைப் புகழ்ந்துள்ளார்கள்.
- முதல் நடமாடும் நூலகமும் முதியோர் கல்வியும் இந்தியாவிலேயே முதன் முதலில் மன்னார்குடியில்தான் தொடங்கப்பட்டது.
- எண்பது கோயில்கள் கொண்ட ஊர்.
- அறுபத்து நான்கு குளங்கள் கொண்ட நகரம்.
- தமிழ்நாட்டின் முதல் நகராட்சிகளில் ஒன்று (150 ஆண்டுகள்)

- ஹரித்ராநதி தெப்பக்குளம் இந்தியாவில் மிகப்பெரிய தெப்பக்குளம்.
- இந்தியாவின் மிகப்பெரிய கனிமவளப் பகுதி (நிலக்கரி மற்றும் இயற்கை எரிவாயு).

## திரைக்கடல் ஓடியும் :

சோழநாட்டிற்கும் சீனநாட்டிற்கும் இடையிலான வணிக உறவுகள் சீன அரச மரபினர்களான சோங் (1127-1279), யுவான் (1271-1368) ஆகியோர் காலங்களில் சீரோடு நடைபெற்றன. இதை உறுதிப்படுத்தும் வகையில் பட்டுக்கோட்டை, மன்னார்குடி வட்டங்களில் 2163 சீன நாணயங்கள் கிடைத்துள்ளன. இது மட்டுமல்ல, இராஜகோபாலச் சக்கரம் என்று எங்களூர் பெருமாள் பெயரில் வந்த நாணயங்கள் பற்றிக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், இலக்கியங்கள், மெக்கன்சியின் சேகரிப்பு ஓலைகள் புகழ்கின்றன. இதனை வெளியிட்ட விஜயராகவ நாயக்கருக்குப் பின்பு மராட்டிய மன்னர்களான சகஜி, பிரதாப சிம்மன் ஆகியோர் காலம் வரை இக்காசுகள் சோழநாட்டில் புழக்கத்தில் இருந்தன.

திரைகடல் ஓடியும் திரவியம்தேடு என்பதற்கேற்ப மன்னார்குடியிலும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்தும் அந்தக் காலத்திலேயே ஆயிரக்கணக்கானோர் மலேசியாவில் வாணிகம் செய்து வந்தனர். அந்தக் கால சிதம்பரம் கப்பலில் மன்னார்குடி மைந்தர்களே அடிக்கடி பயணித்தார்கள். ஊரிலிருந்து ஆறுகிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது கூத்தாநல்லூர். இங்கிருப்பவர்களில் 80% அயல்நாடுகளில் பணியாற்றி வருகிறார்கள். இந்த ஊரைப் பார்த்தால் ஏதோ வெளிநாட்டில் இருப்பது போன்ற பிரம்மை ஏற்படும். இவ்வூரை சின்ன சிங்கப்பூர் என்றழைப்பார்கள். அது போன்று எடமேலையூர் கிராமத்திலும் பலரும் அயல்நாடுகளில் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

## அரிசிக் கடைத்தெரு :

மன்னார்குடியின் பரபரப்பான முக்கியத் தெருக்களில் ஒன்று அரிசிக் கடைத் தெரு. ஊரின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் கடைவீதிகளுக்கு அருகில் அமைந்து உள்ளது. ஒரு காலத்தில் நகரத்தின் அரிசித் தேவைகளைப் பூர்த்தி செய்ததால் இப்பெயர் ஏற்பட்டதாம்.

தெருவுக்கு மேற்கே தாமரைக் குளமும் அருகில் தங்க வினாயகர் ஆலயம். கிழக்கே காகிதப் பட்டறைத் தெரு (இப்போது காகிதமும் கிடையாது, பட்டறையும் கிடையாது). வடக்கே பாமிணி ஆறு. தெற்கே முனீஸ்வரன் ஆலயம் மற்றும் கடைவீதி.

ஊரில் உள்ள தெருக்கள் எல்லாம் நான் நெருக்கமாக உணர்ந்தப் பகுதிகள்., பொறந்த தெருவில் பிள்ளையார் கோயிலும், முனீஸ்வரன் கோயிலும், பாமினி ஆறும் திருப்பாற்கடலும் என பால்ய காலத்தில் மனதில் பதிந்த இடங்களாகும்.

தாமரைக்குளத்துக்கு அருகில் பெரிய மார்க்கெட். பின்புறம் பெரிய திடல். இதுதான் எங்களது விளையாட்டு மைதானம். மைதானத்தை ஒட்டி வயல்கள், தொம்பன் குடிசை. இங்கு மணிவேலன் என்ற பள்ளித்தோழன். அவனது அப்பா ரயில்வே ஸ்டேசனில் காப்பாளர். மணிவேலனும் இளவயதில் ரயில்வே வேலைக்குப் போய்விட்டான். இப்போது ரயில்வே ஸ்டேசன் இல்லை.

வாணக்காரத் தெருக் கோடியில் இருக்கும் பத்மசாலித்தெரு பகுதியில் நெவாளர்கள் குடும்பங்கள். அந்தத் தெருவில் வீடுகள் தோறும் சாய நூல் சட்டங்கள் - கலர்கலராய் நூல் இருக்கும். தெருவிலேயே நெசவு செய்வார்கள். பார்ப்பவர்கள் கண்களைப் பறிக்கும். இதைப் பார்த்து இரசித்த அனுபவங்கள் இன்றும் மனதில் நிழலாடுகின்றன.

பெரியக் கடைத்தெரு, சின்னக்கடைத்தெரு, பந்தலடி எல்லா இடங்களிலும் பெரிய பெரிய கடைகள். ஜனபெருக்கம். ஊரில் இப்போது பல தெருக்களில் பழைய கட்டடங்கள் அழிந்துவிட்டன. பழைய தெருக்கள் வடிவம் மாறி வேகமான நாகரீக வளர்ச்சியில் திருதிருவென விழிக்கிறது.

பிள்ளையார் கோயிலுக்கு அதிகாலை செல்லும் போது தாமரைப் பூவையும், மாலையில் அல்லிப் பூவையும் பார்த்துக் கொண்டே நிறப்பேன். தாமரைப்பூ கிடைத்தால் அதன், மகரந்தங் களை மட்டும் சாப்பிடுவோம். கோடையில் தாமரைக் கிழங்கு கிடைத்தால் ஒரே கொண்டாட்டம்தான். அல்லிப்பூ தண்டை மாலையாக மாற்றும் மகிழ்ச்சி. இவை என்றும் நினைவில் உள்ளன.

பால் சுரக்கக் கோரும் மாடுகளின் சத்தம், பால் டிப்போவிற்கு மாடுகளுடன் கன்றை அழைத்துச் செல்லும் அதிகாலைக் காட்சி, பூம்பூம் மாட்டுக்காரர்கள், ஆடுகளுக்கு புல் அறுக்கப் போகும் சிறுவர்கள், தனிமையில் வானத்தைப் பார்த்து இரசிக்கும் அழகு - இவையெல்லாம் இனிமையான நினைவுகள்.

நகரின் முக்கியப் பகுதிக்குச் செல்லும் பாதையில் தெரு அமைந்ததால் எப்போதும் பரபரப்பாகவும் இருக்கும்.

## என் வீடு

தெருவின் மேற்குபார்த்திருக்கும் எங்கள் வீடு. மேற்கில் பிரதான தெரு. தெற்கில் இருபது அடி சந்து. ஊரில் மேற்குப் பகுதி மக்கள் அனைவரும் பள்ளிக் கூடங்களுக்கு, கடைகளுக்கு, ஆஸ்பத்திரிக்கு, ஏன் பங்குனித் திருவிழாவுக்கு எல்லாம் இந்த சந்துதான் பிரதானப் பாதை. எப்போதும் வீட்டைச் சுற்றி வாகனங்களின் சப்தம். ஜனத்திரளின் கூட்டம்தான்.



இன்றும் உள்ளது எங்கள் பழைய ஓட்டுவீடு. அப்போது அம்மா, அப்பா, ஆறு பிள்ளைகள் என்று எங்கள் வீடே ஜனரஞ்சகமாக இருக்கும். வாசலில் இரண்டு திண்ணைகள். அதையொட்டி பெரிய வராண்டா (ஆலவடி) வராண்டாவின் இரண்டு கார்னர்களிலும் சாய்மானம். இதில் சாய்ந்து கொண்டுதான் என்னுடைய படிப்பு... கற்பனை.

வீட்டின் பின்புறம் சின்னத் தோட்டம். கனகாம்பரமும், செம்பருத்தியும் என்னைப் பார்த்து நாள்தோறும் கண்சிமிட்டும். ஆடியில் விதை போடுவேன். மார்கழி, தையில் பீர்க்கங்கொடி மஞ்சள் பூக்களும், அவரையின் வெள்ளைப் பூக்களும் என் சிநேகிதர்கள்.

நான் விதைப் போட்டால் காய்ப்பு அதிகமிருக்கும். கைராசிக்காரன் என்று அம்மாவும், பாட்டியும் பாராட்டுவார்கள்.

கூடை கூடையாக அவரைக்காய், வெண்டைக்காய், தக்காளி, கீரை, புடலங்காய் பறிப்பேன். உடம்பில் அசுவினி பூச்சிக் கடித்து தடித்து விடும். சாம்பலை எடுத்து அம்மா பூசிவிடுவார்கள்.

தட்டாம்பூச்சியைப் பிடித்தால் - வலிக்கும் விட்டுவிடு என்று அம்மா சொல்வார்கள். வண்ணத்துப்பூச்சிகளை ரசிப்பேன். யாருக்கும் தெரியாமல் வண்டு பூவிலிருந்து தேனை எடுப்பது போல், செடி கொடிகளில் பூத்துக் குலுங்கும் பூக்களின் வாசனையை நுகர்வேன். வேலி ஓரம் மஞ்சள் பூவாசம். பூவின் அழகில் சொக்கி நிற்பேன்.

எங்கள் தெருவிலேயே நவராத்திரியில் கொலு வைக்கும் ஒரே வீடு எங்கள் வீடுதான். நண்பர்கள் அனைவரும் ஆஜராகி விடுவார்கள். சுண்டல் விநியோகம் செய்யும் போது ஒரு ஆனந்தம். - மார்கழி மாதங்களில் பிள்ளையார் கோயிலில் சுடச்சுட பொங்கலைச் சிறுவர்களுக்கு வழங்கும்போது ஒரு மகிழ்ச்சி. கை விரல்கள் தான் சுட்டுச் சிவந்திருக்கும்.

ராமதாசு, ராஜேந்திரன், தீனதயாளன், பாலு, முத்துசாமி, சம்சுதீன் வயதொத்த தெரு நண்பர்கள். இவர்களுடன் சின்ன வயதில் திருடித் தின்ற இலந்தைப் பழம், நாவற்பழம், கிராமத்து வயல்கள், வாய்க்கால் நீரின் சலசலப்பு, குளத்துக் கரையில் நீந்தும் மீன்கள் - இவை இன்றும் மனதில் பசுமையாகப் பதிந்துள்ளன.

இள வயதில் பார்த்த முகங்கள், நிகழ்வுகள், பரபரப்பான செய்திகள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கின்றன.

ஊரை நினைக்கும்போது வண்ணத்துப் பூச்சிகளின் வர்ணங்களின் மயங்கி அதன் பின்னால் செல்வது மாதிரி மனசு லேசாகி விடுகிறது.

ஊர் நினைவுகளை அவ்வளவு சுலபமாக மனதிலிருந்து நீக்கிவிட முடியவில்லை.

❖❖❖

# அ ஆ டீச்சர்

பள்ளிக்கூடப் பருவத்தை நினைத்துப் பார்ப்பது சில நிகழ்ச்சிகளையோ, சில முகங்களையோ நினைத்துப் பார்ப்பதாக இல்லை. ஒரு காலத்தை நினைத்துப் பார்ப்பதாகவே இருக்கிறது.

இந்தப் பள்ளி, பள்ளியைச் சார்ந்த நினைவுகள், பள்ளிக்கூடத்து ஞாபகம் எல்லாம் ஒரு வெதுவெதுப்பான வெயில் அடிச்சுக்கிட்டு இருப்பது போல் என் ஞாபகத்தில் இருக்கின்றன.

தொடக்கப் பள்ளிக்கூடத்தின் நினைவுகள் எல்லாம் அப்படியே புகைப்படம் போல் மனதில் பதிந்து உள்ளன. தேவைப்படும் போது ஒலியும் ஒளியுமாக மனத்திரையில் ஓடவிடுவதுண்டு.



ஆத்துப் பள்ளிக்கூடம்

எங்கள் தெருவைத் தாண்டி பாமினி ஆற்றங்கரையில், "ஜெயலட்சுமி ஆரம்பப் பள்ளி" என்ற பள்ளிக்கூடம் இருந்தது. (இப்போது மணிமேகலை என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது) ஒண்ணாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரைதான் வகுப்புகள் இருந்தன. சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்தே படித்தனர். கீற்றுக் கொட்டகைகளில் உருவாகி இருந்தது.

## ஒரு ஞாபகம்

"என்னை நினைவிருக்கா டீச்சர்? உங்கள் ஞாபகத்தை கொஞ்சம் கொண்டு வாருங்கள். கருப்பாய், குள்ளமாய், ஒல்லியாய் பிரகாசமாய் ஐம்பதுகளின் மத்தியில் உங்களோடு உறவாடிய சின்னப் பையன்.

ஜானகி டீச்சர்! நான் தான் பானுகுமார். என் பெயர் வேண்டு மானால் புத்தகங்களிலும் நூல்களிலும் நூலகங்களிலும் காற்றிலும் எழுதப்பட்டிருக்கலாம். நான் தரையில்தான் இருக்கிறேன். என்னை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா டீச்சர். உங்களை எனக்கு ஞாபகமிருக்கிறது".

மழை நின்ற பின்பும் மரங்கள் மட்டும் கொட்டிக் கொண்டிருப்பது போல் நாற்பத்தைந்து வருடங்களுக்குப் பிறகும் அந்த ஞாபகம் மட்டும். இன்னும் துளித்துளிகளாய்... துளித்துளிகளாய்... என் மனதில்...

நான் பார்த்த முதல் நவநாகரீக மங்கை. என் மூளையில் பதிந்த முதல் ஆசிரியை. உங்களது கருப்பு நிறத்துக்கும் ஒடிசலான உருவத்துக்கும் ஏற்றவாறு நித்தமொரு புடவைக் கட்டி குடைபிடித்துக் கொடியாய் நீங்கள் வரும்போது பரவசப்படுவேன்.

முதல் வகுப்பு ஜானகி டீச்சரை இன்னும் என்னால் மறக்க முடியலை. நினைக்க நினைக்க இனிக்கிறது. உங்களிடம் என்னைப் பாதித்தது என்ன தெரியுமா?

நீங்கள் என்மீது காட்டிய அன்பு, கருணை, பாசம். வகுப்பில் என்னை மட்டும் அதிகமாக ஏன் நேசித்தீர்கள்?

அ, ஆ சொல்லிக் கொடுத்ததும், அரிச்சுவடியும் ஆழமாக மனதில் பதித்த உங்கள் திறமை. முதன் முதலில் பள்ளித் தோட்டத்தில், சுட்டுவிரலால் பள்ளமிட்டு, அதில் விதையைப் போட்டு மூன்று நாளில் முளைவிட்ட அற்புதத்தைக் காட்டிக் கொடுத்த தேவதை.

திடீரென்று ஒருநாள் முத்தம் கொடுத்துவிட்டு, திருமணத்துக்கு கழுத்தை நீட்டச் சென்று விட்டீர்கள். உங்களை நான் பார்த்து நாற்பத்தைந்து ஆண்டுகள் இருக்கும்.

அநேகமாக வாழ்க்கையின் இறுதிப் பாகத்துக்கு வந்திருப்பீர்கள்.

காலத்தின் கையிலிருக்கும் தூரிகை உங்கள் மீதும் சில கோடுகள் எழுதியிருக்கக் கூடும்.

இப்போது சொல்லுங்கள்.

என்னை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா டீச்சர்? உங்களை எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆமாம்! டீச்சர் இப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்.

மூன்றாவது வகுப்பு டீச்சர் கோவிந்தராஜ், எல்லோரையும் தொடையில்தான் கிள்ளுவார். சிகப்பு உஷாவை மட்டும் மடியில் வைத்துக் கொஞ்சுவார்.

ஐந்தாம் வகுப்பு டீச்சர் குடுமி ராஜகோபால். ஹெட்மாஸ்டர். அப்போதெல்லாம் ஐந்தாம் கிளாஸில்தான் ஆங்கிலம். வெறும் ABCD நான்கு முறை சிலேட்டில் எழுத வேண்டும். ஒரு முறை எழுதி சாக்பீஸ் டிக் வாங்கிவிடுவோம். எளிதில் எங்களிடம் ஏமாந்து விடுவார்.


❖❖❖

*சிறகுகள் இருந்தால் அந்தத்*
*திசையிலே பறப்பேன்; பிறந்த*
*ஊரிலே படுத்துக் கொண்டு*
*வசதியாய் அழுவேன்; என்னைப்*
*பிரசவம் செய்த அந்தப்*
*பிரதேசம் தன்னை எந்தன்*
*விரல்களில் தொட்டுப் பார்த்து*
*விழிகளால் நகலெ டுப்பேன்.*

# சிறகிசைத்தக் காலம்

இளமைக்காலம் விதைப்புக்காலம். இளமை என்பது ஒரு துடிப்பு. எதிலும் புதுமையை விரும்புதல். இளமைப் பக்குவத்தில் தான் எதிர்கால வாழ்வு அமைகிறது.

பள்ளி நாட்கள் என்றாலே பசுமையான எண்ணங்கள் என் மனசில் தோற்றுவிப்பதாகத்தான் இருக்கு.



பின்லே உயர்நிலைப் பள்ளி

ஆறாம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ். எல்.சி. வரை பின்லே உயர்நிலைப் பள்ளியில் படித்த என் மாணவக் கால நாட்கள் நினைவில் நிழலாடுகின்றன. நூற்றாண்டு கண்ட பள்ளி. காலேஜாக இருந்து பள்ளியாக மாறியது. பள்ளியின் கற்கட்டடங்களும் அதன் வசீகரமும் அழகும் இப்போதும் என்னைக் கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கிறது.

மன்னை நகருக்கு பெருமை சேர்த்த நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கது பின்லே காலேஜ் ஆகும். 1845-இல் வெஸ்லியன் மிக்ஷினின் ஆக்கத்தால் பள்ளியாக (Lower Secandary Schools) ஆக

உருவானது. இதனுடைய கல்லூரி தொடக்கத்தில் (1883இல்) நாகப்பட்டினம் வெஸ்லின் உயர்நிலைப் பள்ளியோடு இணைக்கப் பெற்றிருந்தது. இதன் முதல்வராக ரெவண்ட் W.H. பின்லே என்பவர் இருந்தார். 1895இல் நாகப்பட்டிணத்திலிருந்த இந்த கல்லூரி மூடப்பெற்று பின்பு 1898 இல் இதனை மன்னார்குடியில் துவங்கினர். அப்போது உதயமானதே பின்லே காலேஜ். இது சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்திருந்தது.

நூறு வருஷம் முன்னே இந்தப் பள்ளிக்கூடம் உருவான நேரத்திலே நம் ஊரிலே சமூகத்திலே ஜனங்க எப்படி இருந்தாங்கன்னு யோசித்துப் பார்க்கிறேன். இந்த நூற்றாண்டிலே கல்வியைத் தீர்மானிச்சவங்க எல்லாம் போய்ச் சேர்ந்துட்டாங்க. இப்ப இருக்கிறவங்க நாம எல்லாம் இந்த நூற்றாண்டிலே கல்வியை நடத்திக்கிட்டு இருக்கோம்.

நூறு வருஷத்துக்கு முன்னே கல்வி எப்படி இருந்ததுன்னு யோசிக்கிறேன். பள்ளிக்கூடத்தைப் பத்தி நினைக்கிறப்ப எல்லாம் என்னையறியாமல் ஒரு நெகிழ்ச்சி ஏற்படுது. நூறு வருஷ விழா எனது பள்ளிப் பருவத்தில் (1962) நடந்ததுன்னு நினைக்கும் போது மனசுக்குள்ளே நெகிழ்ச்சி ஏற்படுது.

எங்க பள்ளிக்கூடத்துக்கு மகாத்மா காந்தி, சர். வல்லபாய் பட்டேல், மூதறிஞர் ராஜாஜி, அறிஞர் அண்ணா எல்லோரும் வந்திருக்காங்க. நான் படித்த போதுதான் முதலமைச்சர் அண்ணா வந்து மாணவர்களான எங்களிடையே உரையாற்றியதை நினைச்சாலே பெருமையா இருக்கு.

நூறு வருஷம் முன்னே இங்கே படிச்ச மாணவ மாணவிங்க அத்தனைப் பேரும் பேரன் பேத்தி எடுத்திருப்பாங்க. அவுங்களைப் பத்தி கற்பனை பண்ணி பார்க்க முடியல.

எனது பள்ளி நூறு வருஷமாக நடந்துகிட்டிருக்கு. இதைத் தொடங்கி வைத்த யாரும் இப்ப உயிரோடு இல்லை. அவர்கள் போட்டோ எல்லாம் ஸ்கூல் ஹாலில் மாட்டியிருக்கிறது. இவுங்க உயிரோடு இருந்தால் இந்த நூறு வருஷமா தொடர்ந்து சிறப்பாக நடக்குதுன்னு தெரிஞ்சா, எவ்வளவு மகிழ்ச்சியடைவாங்கன்னு எழுதுவதற்கு வார்த்தையே கிடையாது. அவுங்க என்னவெல்லாம் கனவு கண்டார்களோ, என்னவெல்லாம் நடக்கும்னு நினைச் சாங்களோ, அது நடந்துக்கிட்டு இருக்குது. நிறைவேறியிருக்கிறது.

என்னுடைய வீட்டில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் பள்ளிக்கூடம் இருந்தது. காலை ஒன்பதரை மணிக்கு ஆரம்பிக்கும்.

மதிய இடைவேளை. மாலை நாலரை மணிக்கெல்லாம் வீட்டுக்குச் செல்வதில்லை. நண்பர்களுடன் விளையாட்டுத்தான்.

கிறிஸ்துவப் பள்ளியில் விவிலியக் கருத்துக்கள் இயேசுவின் போதனைகள் போன்ற விஷயங்களை ஆசிரியர்கள் மூலம் பரிச்சயம் என்றால் மறுபுறம் தமிழ் வாத்தியார் மூலம் தேவாரம், திருவாசகம், கீதை எல்லாம் பரிச்சயம். கிறிஸ்துவப் போதனைகள் அறிமுகமான நேரத்தில் வீட்டில் பாட்டியோடு சேர்ந்து தினமும் பூஜை, பஜனை செய்ய வேண்டிய கட்டாயம் உண்டாயிற்று.

என்னுடைய ஆளுமையை உருவாக்கியதில் ஆசிரியர்களுக்கு பெரும் பங்குண்டு. இன்று தமிழகத்தில் மிகச் சிலருக்காவது அறிந்த மனிதனாக இருக்கிறேன் என்றால் என்னுடைய ஆசிரியர்கள்தான் காரணம்.

நான் படித்த காலத்தில் மிகச்சிறந்த ஆசிரியர்கள் இருந்தனர்.



என்.சி.சி. உடையில்

பள்ளிக்கூடம் என்பது அதனுடைய கட்டிடங்களாலோ அதனுடைய வகுப்பறைகளாலோ விளையாட்டுக் கூடங்களாலோ தீர்மானிக்கப்படுவது இல்லை. அங்கே பணிபுரிகிற ஆசிரியர்கள், மாணவர்கள் பால் கொண்டிருக்கிற அக்கரை. அதிலிருந்துதான் அது வெளிப்படுகிறது.

எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு கணக்கு வாத்தியார் இருந்தார். பிரசாத் என்ற வாத்தியாரை நாங்கள் காதலித்தது மாதிரி வேறு யாரையும் காதலிக்கவில்லை. கணக்கு கஷ்டம் - கணக்கு என்றாலே கஷ்டம். கணக்கு யாருக்கும் கஷ்டமில்லை. எனக்குக் கூடத்தான். கஷ்டம் அந்த வாத்தியார் வந்து கணக்கு ஆரம்பித்தப் பிறகு, கணக்கு கஷ்டமாய் இல்லை. இந்த மாதிரியான ஒரு அர்ப்பணிப்பு உணர் வோடு ஆசிரியர்களும் இருந்தார்கள்.

தாமஸ் அவர்களின் அமானுஷ்ய உருவமே என்னை வசீகரித்தது. இவர், அப்பாவின் பள்ளித்தோழர். எதையும்

எதிர்கொள்ளும் தன்மை. மாணவர் களிடையே அவர் வைத்திருந்த இறுக்கமான நட்பு. தோழமை எல்லாம் மாணவன் ஆசிரியர் என்ற கோடுகளை அழித்திருந்தது. அவரோடு என்.சி.சி. கேம்ப் போன நாட்கள் அபூர்வமானவைகள். அப்போதெல்லாம் சந்தோஷத்தின் உச்சத்தை அடைந்து நாங்கள் ஆர்ப்பரிப்போம்.

பள்ளியில் என்னை ரொம்ப ஆகர்ஷித்த மூன்று ஆசிரியர்கள் திரு. டேனியல், திரு. சண்முகசுந்தரம், திரு.பார்த்தசாரதி. இந்தச் சாதாரண மண்ணை, பாரதி பாடுவானே **'கல்லை வைரமணி யாக்கல்'** - அது மாதிரியான மனிதர்களை உருவாக்குகிற ஆசிரியப் பெருமக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

அவர்களால் தான் இந்த தேசம் அறுபது ஆண்டுகளுக்குள்ளாக இந்த அளவுக்கு எழுச்சி பெற்றிருக்கிறது. இன்றைக்கு உலகுக்குச் சமமான தேசமாக இருக்கிறது.

திரு. அமலதாசன் பிரின்ஸ்பால். அவரது ஷு சத்தம் கேட்டாலே அலறும் ஆசிரியர்கள். அவரது கண்டிப்பும் கவனமும் மாநிலத்தில் முதல் பள்ளியாக உருவாகக் காரணமாக அமைந்தது. ஆசிரியர்களுள் டேனியல் ஏழாம் வகுப்பிலேயே ஆங்கில இலக்கணத்தை அச்சரம் பிறழாமல் மனதில் விதைத்தார்.

எட்டாம் வகுப்பு சண்முகசுந்தரம் வாத்தியார் கண்டிப்பானவர். கறார் பேர்வழி. எளிமையான உதாரணங்களுடன் பாடம் நடத்துபவர். செவ்வகத்துக்கு அவர் சொன்ன மைசூர்பாக்கு உதாரணம். வாயில் இன்றும் இனிக்கிறது. பதினோறாம் வகுப்பு சாமுவேல் கிளாசில் ஆங்கிலப் பாடம் இனிக்கும். பார்த்தசாரதி வாத்தியார் சரித்திர வகுப்பு களைகட்டிவிடும்.

பதினொன்றாம் வகுப்பில் மாலை நேர வகுப்புகளும் உண்டு. தொடர்ந்து பள்ளியிறுதி வகுப்பில் செண்டம் வாங்கி மாநிலம் முழுதும் புகழ் பரப்பியது பள்ளி.

பள்ளியின் பின்புற வாயிலில் நெல்லிக்காய், கொய்யாப்பழம், சீதாப்பழம், நாவற்பழம் விற்கிற ஒரு கிழவி இருந்தார். இந்தக் கிழவியின் நாலணா முதலீட்டு நம்பிக்கையில் என் நம்பிக்கையையும் வளர்த்தேன். குச்சி ஐஸ் விற்கும் பையன், டீக்கடை, மசால்வடை, பால் டீ இவற்றையெல்லாம் சாப்பிட்ட அனுபவங்களும் உண்டு.

பள்ளியில் ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒரு இடம். ஆசிரியருக்கும் எனக்கும் இந்த உறவு. இதையெல்லாம் தாண்டி

உள்ள ஒரு உறவு. பள்ளி என்கிற மனோநிலை எப்போதும் என்னுடன் இருந்து கொண்டே இருக்கிறது.

வாழ்வில் சில முகங்களை நம்மால் மறக்க முடிவதில்லை. அவற்றில் ஆசிரியர்கள் முகங்களும் உண்டு.

என்னுடைய பள்ளிக்கூடத்தில் என்னை அதிகமாகப் பாதித்தவர்கள் என்னைத் தொடர்ந்து என்னுடைய மனோ உலகத்துக்கும் என்னுடைய இயக்கத்துக்கும் காரணமாக இருந்தவர்கள் என்னுடைய சக மாணவர்கள்தான். பார்த்தசாரதி, செங்குட்டுவன், கண்ணப்பன், ராஜேந்திரன், ஜெயபால், மகாலிங்கம், கோபால்சாமி, கிருஷ்ணன் இவர்கள் எல்லோருமே கிராமத்தினுடைய அடித்தட்டிலிருந்து வந்தவர்கள். உயிர்ப்புடன் இருந்தவர்கள்.

ஒவ்வொரு வகுப்பிலும் எனக்குப் பிடித்தமான இரண்டு மாணவ நண்பர்கள் இருப்பார்கள். இவர்களில் பலர் வாழ்க்கையினுடைய திசையே மாறிவிட்டனர். நிறைய மாணவர்கள் தொடர்ந்து என்னுடைய ஞாபகத்தில் வெவ்வேறு காலக்கட்டங்களில் ஞாபகப்படுத்திக்கிட்டு இருக்கிறார்கள்.

நண்பர்கள் வட்டத்தில் ஒரு கோமாளி இருப்பான். எங்கள் வட்டத்தில் மகாலிங்கம்தான் ஜோக்கர். இன்று அலுவலக உதவியாளராக கல்லூரியில் பணிபுரிகிறான். கண்ணப்பன் டெல்லி செகரட்டரியேட்டிலும், பார்த்தசாரதி அமெரிக்காவில் டாக்டராகவும் பணிபுரிகின்றனர்.

ஆண்டு இறுதி நாளிலும், ஏப்ரல் முதல் தேதியிலும் (ஏப்ரல் பூல்) கொண்டாட்டம்தான். ஒருவர் மற்றவருக்குத் தெரியாமல் ரகசியமாக இங்கைத் தெளிப்போம். கட்டுப்பாடான பள்ளியில் முறையற்ற விளையாட்டுகளுக்கு கண்டிப்பு உண்டு. அதனால் இரகசியம் காப்போம்.

பள்ளிக்கூடத்தில் எனக்கு ஏற்படுத்திய சுவையை விட பள்ளிக் கூடத்தை விட்டு வெளியே இருந்து பள்ளிக்கூடத்தைப் பார்க்கும் சுவை எனக்கு தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. பள்ளிக்கூடத்தில் இருக்கும் மரங்கள். இந்த மரங்கள் எல்லாம் என் தோழர்களாயிருந்தவர்கள். மழை இல்லாத காலங்களில் இங்கு வகுப்புகள் நடைபெற்றதுண்டு.

எங்களுடைய பள்ளிக்கூடத்தைப் போல புகழ்பெற்ற தேசிய உயர்நிலைப்பள்ளியும் ஜோசப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் சிறப்பான கல்வியைத் தந்து கொண்டிருந்தன. தஞ்சாவூர்

மாவட்டத்திலேயே தரமான கல்வியைத் தந்து கொண்டிருந்தது எங்கள் ஊராகும்.

என்னுடைய பள்ளிப்பருவம் என்ற நினைவலைகள் தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் எழுதத் தூண்டிக்கொண்டு இருக்கிறது. என்னைச் சிந்திக்கத் தூண்டிக் கொண்டிருக்கிறது. என்னுடைய எழுத்துக்களுக்கு ஊடகமாக ஏதாவது ஒரு வடிவில் வந்து ஞாபக அலைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறது.

பள்ளி என்பது ஒரு தனிநபருக்காகவோ தனி ஒரு மாணவனுக்காகவோ நடத்தப்படும் நிறுவனம் அல்ல. ஒரு சமுதாயத்திற்காக, ஒரு வளமான புதிய சமுதாயத்திற்காக வரையறுக்கப்பட்ட கல்வித்திட்டம். இந்த முக்கோணத் திட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என்ற மூவருக்கும் பொறுப்புண்டு. இதில் அதிகமான பொறுப்பு பெற்றோர்க்கு உண்டு.

ஒவ்வொரு மனிதனிடமும் வெளியில் தெரியாத சிறகுகள் இருக்கின்றன. ஆழ்ந்த நம்பிக்கைகள் சார்ந்த செயல்பாடுகள் மூலமே இந்தச் சிறகுகள் தம் இருப்பை வெளிப்படுத்துகின்றன. பள்ளிக்கூட கல்வி நம் சிறகுகளை அறிந்து கொள்ள நமக்கு உதவுகிறது.

ஏட்டுக் கல்வியில் முடங்கிக் கிடப்பதை மறுத்து சுதந்திர வானத்தை நோக்கி சிந்திக்க வேண்டும். அப்போது சிறகடித்துப் பறக்க நம்மாலும் முடியும். கிளியின் குஞ்சுக்கு முடிந்தது போல அப்படிப் பறப்பதில் பெருமிதமும் ஆனந்தமும் தன்னம்பிக்கையும் இருக்கின்றன.

பள்ளிப் பிராயத்தில் பார்த்து ரசித்த ஊரை இன்று தேட வேண்டியிருக்கிறது. கம்பீரமாக உயர்ந்து நிற்கும் பெரிய கோயில்கோபுரம், வயல்கள், மரங்கள், கண்மாய், பம்ப் செட்கள் எதுவும் எனது இப்போதைய வாழ்வில் இல்லை.

அங்கே வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் என் வாழ்க்கையின் ஒரு பகுதியாக என்னுள் இணைந்திருப்பதை நினைக்கும்போது எத்தனைச் சுகமாக இருக்கிறது.

❄❄❄❄❄

*ஓடி நான் மகிழ்ந்த எங்கள்*
*பள்ளியே சுகமா? நானே*
*பாடிவந் தமரும் எங்கள்*
*பாமணியே சுகமா? பாடம்*
*படித்து நடந்து போன*
*பாதையே சுகமா?*

# பாட்டி

பாட்டி - பாட்டி - பாசமுள்ள பாட்டி. கோவிந்தம்மாள் பாட்டி.

நீ எத்துணை உன்னதமானவள். அனுபவப் பெட்டகம்.

நீ அழகிப் பாட்டி.

மழை கழுவிய தும்பைப் பூவாய் உன் முகம்.

சூதுவாது புரியாமல் சூழ்ச்சிகளும் தெரியாமல் ஒரு மூதாட்டியின் முகத்தில் குழந்தையின் கண்கள்.

உன் முகம் என்னுள் பதிந்திருக்கிறது பாட்டி.

மரணத்தால் உன் உயிரைத்தான் திருட முடிந்ததே தவிர உன் புன்னகையை, பொலிவை உன் முகத்திலிருந்து துடைத்தெடுக்க முடியவில்லை.

பாட்டி நான் தழைப்பதற்கு முன்பே நீ உதிர்ந்து போனாய்.

உனக்கு ஒரு புடவை கூட வாங்கித் தந்ததில்லை. உன் புதைகுழிக்கு பூக்கள் கூட என்னால் வாங்கிப் போடமுடியவில்லை.

காட்டாறு வெள்ளம் கரைகளின் விலாவைக் குடைந்து போவது மாதிரி என் இருதயக் கூட்டை அடிக்கடி என் நினைவுகள் அறுக்கின்றது பாட்டி


ஆழ்ந்த நித்திரையில் புரண்டு படுக்கும் தூக்கச் சிதைவுகளில் - ஒரு நல்ல புத்தக வாசிப்பில் உன்னை ஞாபகப்படுத்தி என்னை இடறி விழவைக்கும் வார்த்தைகளின் இடைவெளியில்.

எங்கோ எப்போதாவது கேட்கும் வெற்றிலைப் பாக்கு உரல் களில் தாளகதி தப்பாத சப்தத்தில் - உன் நினைவுகள் பொசி கின்றன. என் கண்கள் கசிகின்றன.

என் பிஞ்சு வயதில் எனக்குத் தாகம் எடுத்தபோதெல்லாம் என் காலடியில் நீரோடையாக ஓடி வந்தவள் நீ பாட்டி. என் ஆன்மீகப் பயணத்தைத் துவக்கி வைத்து உன் பயணத்தை முடித்துப்போனாய்

நீ என்னிடம் விதைத்த அனுபவங்கள் எல்லாம் கதைகளாக பரிணமிக்கின்றன. நீ என்னைப் பக்குவப்படுத்த சொன்னக் கதைகள், பாட்டுகள், பழமொழிகள் என்னுள் பதிந்து உள்ளன பாட்டி.

உன்னுடைய அனுபவத்தையும், விவேகத்தையும் நீ கடந்து வந்த பாதையில் பெற்ற சம்பவங்களையும் என் மனதில் விதைத்துப் போனாய்.



இராமரையும், பாரதத்தை யும், பக்த பிரகலாதனையும், வீர ஆஞ்சநேயரையும், ஏன் வள்ள லாரையும் கூட அறிமுகப்படுத்தி வைத்தாய்.

உன் கைபிடித்து சென்று வழிபட்ட கோயில்களுக்குச் செல்லும் போதெல்லாம் நீயும் என்னிடம் வருவதை உணரு கிறேன் பாட்டி.

அடிக்கடி மன்னார்குடி வந்து தங்குவாய். விடுமுறையில் தஞ்சையில் உன்னிடம் வந்து தங்கி இளைப்பாறிய நாட்களை நினைத்தால் இனிக்கிறது பாடடி.

தள்ளாடும் பருவத்திலும் விதவிதமாக சமைத்துப் போட்ட சாப்பாடு - தூக்குச் சட்டியில் எனக்காகவே பத்திரப்படுத்தி வைத்திருக்கும் பலகாரம்.

உனக்குத் தெரியாத வைத்தியமே இல்லை. குழந்தை பிறந்தால் வசம்பு (பேர் சொல்லக் கூடாது என்பாய்) வைத்தியம் செய்வாய். பால் கொடுத்து முடிந்ததும், விளக்குத் தீயில் வசம்பைத் தீயில் கருக்கி சங்கில் தேய்த்து நாக்கில் வைப்பாய். ஜீரணமும் ஒருவித நறுமணமும் கிடைக்கும்.

வயிறு சரியில்லை என்றால் எங்களுக்கு பிரலிவாயு எண்ணெய் கொடுப்பாய். இந்த மருந்தை திருச்சி சென்று ஆண்டுக்கு ஒருமுறை வாங்கி வருவாய்.

உன்னருகே படுக்க வைத்து அரவணைக்கும் உன் கைகள் - முந்தானை முடிச்சில் நீ அவிழ்த்துக் கொடுக்கும் காசுகள் - இவையெல்லாம் என் மீது கொண்ட பாசத்தின் விஸ்வரூபங்கள்.

நீ சொல்லிக் கொடுத்தப் பாசுரங்களைச் சுலோகங்களை மனப்பாடமா சொல்லிக் காண்பிக்கும்போது உன்சந்தோஷம். கிறிஸ்துவ ஸ்கூல் பிரார்த்தனையில் "குள்ளக்குள்ளோனே..." பாட்டை மனதில் அசைபோடும்போது நீ வந்து வாழ்த்துவதாக இருக்கும்.

பாட்டி என்பது அம்மாவின் தாயாகவும் இருக்கலாம். அப்பாவின் தாயாகவும் இருக்கலாம். அப்பாவின் தாயைப் பார்த்த ஞாபகமில்லை. என் இளமைப் பருவம் வரை என்னை பாசப்பூங்காவிற்கும் அறிவுப் பூங்காவிற்கு அழைத்துச் சென்ற உன்னை இன்றும் நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

எனது படைப்புகளிலெல்லாம் உன் கதைகள், பழமொழிகள் பின்னிப் பிணைந்து வருகின்றன. அந்த எழுத்துக்களில் நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய். நீ சொல்லிக் கொடுத்த அனுபவங்களை இன்று பலநூறு ஆயிரம் பேர்களும் என் புத்தகத்தின் மூலம் உன்னிடமிருந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய ஆன்மிகப் படைப்புகளுக்கு நீதான் அடித்தளம். அடிநாதம். ஊருணி.

உனக்குச் சங்கீதமும் சாஸ்திரமும் தெரியாது. ஆனாலும் அழகாகப் பாடுவாய்.

தில்லையம்பலத்தானைக் காண நந்தனார் உருகிப் பாடியப் பாடல்களை நீ பாடும்போது நந்தனாராகவே காட்சித் தருவாய்.

திருஅருட்பாவை பாடும் போது உன்னை வள்ளலாராகத்தரிசிப்பேன்.

பேசும் போதும் உன் உன்குரலில் இழையும் லயம் - பாடும்போது தெய்வீகக் கானமாகக் கேட்கும்.

எழுத்தறிவில்லாத உன் பாட்டில் எப்படி இலக்கியம் வந்தது? நதி பரதம் கற்றுக் கொள்ளாமலேயே ஜதியோடு போகிறதே! அப்படியா அது! குயில் சுரம் கற்றுக் கொள்ளாமலேயே சுருதியோடு பாடுகிறதே! அப்படியா அது! உனது குரல் என் காதுகளின் அடியில் இன்னும் ஒட்டியிருக்கிறது பாட்டி. தாயுமானவரை நீ அடையாளம்

காட்டிப் போனாய். அந்த சித்தரின் பாடலைப் பாடி என்னுள் அத்வைதக் கருத்துக்களையும் அள்ளித் தெளித்துவிட்டுப் போனாய்!

*அங்கு இங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்*
*ஆனந்த பூர்த்தியாகி*
*அருளோடு நிறைந் ததெது தன்னருள் வெளிக்குளே*
*அகிலாண்ட கோடியெல்லாம்*
*தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்கு உயிராய்*
*தழைத்தது எது மனவாக்கினில்*
*தட்டாமல் நின்றதுஎது சமயகோ டிகளெல்லாம்*
*தம்தெய்வம் எம்தெய்வமென்று*
*எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது*
*எங்கணும் பெருவழக்காய்*
*யாதினும் வல்லதொரு சித்தாகி இன்பமாய்*
*என்றைக்கு முள்ள ததெமெல்*
*கங்குல்பகல் அறநின்ற எல்லையுளது எதுஅது*
*கருத்திற்கு இசைந்ததுவே*
*கண்டன வெலாமோன வுருவெளிய தாகவும்*
*கருதிஅஞ் சலிசெய்குவாம்.*

நீ அடிக்கடி பாடிய இந்தப் பாடல் இரசாயன மாற்றத்தை தந்து - ஞானமார்க்கத்திற்குப் பக்குவமாய் அழைத்துச் செல்கிறது பாட்டி. உன் புண்ணியத்தில் ஒருசிலரையும் என்னால் இப்பாதைக்கு அழைத்துச் செல்லமுடிகிறது.

திடீரென்று என் கனவின் மீது கல்லெறிகிறாய்.

'டேய் குமரா! நீ எழுத்தாளரா புத்தகமெல்லாம் எழுதறியாமே?'

அடேயப்பா! அன்று நான் அடைந்த ஆனந்தம் எவ்வளவு தெரியுமா?

என்னுள் நீ முழுதும் வியாபித்திருக்கிறாய். அது பிரபஞ்சம் பாட்டி! பிரபஞ்சம்.

என் மூலதன விரல்கள் --- வெளிச்ச விழுதுகளாய் --- இல்லையில்லை --- பத்து சூரியன்களாகவே ஒளிர்கின்றன! அத்தனை செவ்வான வட்டத்துக்குள்ளும் பாட்டியின் முகங்களே!.

ஆனால் உன்னை நினைக்கும் போதெல்லாம் என்னால் அழாமல் இருக்கமுடியவில்லை பாட்டி.

# நண்பர்கள்

ஒரு நல்ல நட்பு என்பது ஆரோக்கியமான வாழ்க்கையைப் போன்றதாகும். நட்பு உறவையும் வெல்லும் சக்தி படைத்தது. உயிர் காப்பான் தோழன்.

இளமையில்தான் எல்லாவகைப் பண்புகளும் உருவாகின்றன. எல்லாவகைக் கருத்துக்களும் ஆழமாக வேரூன்றுகின்றன. நண்பர்கள்தான் இளமைக்காலத்தை நிர்ணயிக்கின்றனர். "உன் நண்பனைச் சொல் நான் உன்னைப் பற்றிச் சொல்கிறேன்" என்பது பழமொழி.

நட்பு என்பது எல்லா உறவுகளையும் விட உயர்வானது. நட்பு சந்தோஷத்தை அதிகரிக்கும். துயரங்களைக் குறைக்கும். நட்புக் காலம் பசுமை நிறைந்த நினைவுகளாகத் தெரிகின்றன.

*பசுமை நிறைந்த நினைவுகளே*
*பாடித் திரிந்த பறவைகளே*
*பழகிக் களித்த தோழர்களே*
*பறந்து செல்கின்றோம்.*

இந்தப் பாட்டைக் கேட்கும்போது நண்பர்கள் பற்றிய இனிய நினைவுகள் மனதுக்குச் சுகமாக இருக்கிறது. என்னைப் பண்படுத்த என்னை உயர்த்த நண்பர்கள் பலமாக இருந்திருக்கிறார்கள்.

சின்ன வயது நண்பர்களாக வருபவர்கள் முத்துசாமி, ராமதாஸ், ராஜேந்திரன். ராஜேந்திரனும் நானும் அடுத்தடுத்தத் தெரு. நண்பன் வீட்டில் இருக்கும் இலந்தைப் பழத்தைக் கல்லால் அடித்து பொறுக்கிச் சாப்பிடுவோம். கொடுக்காப்புள்ளி மரத்தில் காய்களைப் பறிப்போம். வெள்ளைச் சதைப்பிடிப்பும் உள்ளே கருப்புநிறக்

கொட்டை. வெண்நிறம் காய். கொஞ்சம் மஞ்சள் நிறத்தில் பழம். பழம்தான் எனக்கும் பிடிக்கும்.

*குரங்குகள் போலே மரங்களின் மேலே*
*தாவித் திரிந்தோமே!*
*குயில்கள் போல இரவும் பகலும்*
*கூவித் திரிந்தோமே!*

விடலைப் பருவத்திற்கு உண்டான அந்தத் திமிர் எங்களையும் விடவில்லை. பாமணி ஆற்று மணலில் வீடு கட்டுவோம். குகைக் கோயில்கள் கட்டுவோம்.

வரும்போது இடித்துத் தள்ளி விடுவோம். ஆற்றுக்கு அக்கரையில் மரத்தில் இருக்கும் கிளிகளைப் பிடித்து வளர்க்க ஆசைப்படுவோம்.

வாசலில் கோலி, கிட்டிப்புள்ளை விளையாடுவோம். "போடாவாடா" என்றுதான் பேசிக் கொள்வோம். சடுகுடு விளையாட்டில் பெரிய டீமில் சேர்ந்து சமயத்தில் மாட்டிக் கொள்வோம்.

தெருவில் பாட்டி விற்கும் நெல்லிக்காயைக் கடித்துவிட்டு தண்ணீர் குடிப்போம். இனிப்புச் சுவை தெரிந்தவுடன் முகங்களில் ஒரு மலர்ச்சி. ராஜேந்திரன் அப்பா நாட்டு மருந்துக்கடை வைத்திருந்தார். பேரீட்சம்பழம், முந்திரி, திராட்சை எடுத்து வருவான். மணிக்கணக்கில் பேசிக்கொண்டே சாப்பிடுவோம்.

நண்பர்களுக்கு கனவுக் கன்னிகள் உண்டு. ராஜேந்திரன் பிரபல நடிகையைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக சபதம் செய்வான். கனவுக் கன்னிகள் போட்டோவில் சிரித்துக் கொண்டே பலருடைய தூக்கத்தைக் கெடுப்பார்கள்.

நண்பர்களில் மைனர் ராஜு குறிப்பிடத்தக்கவன். எப்போதாவது நாகைக்கு ஐந்து மைல் நடந்தே செல்வோம். நாவற்மரங்கள் நிறைந்த மரத்தின் மீது ஏறி குலுக்குவோம். "சுட்டப்பழமா சுடாத பழமா" என்று டயலாக் பேசுவோம்.

சாப்பிட்டது போக கால்டிரவுசர் பையில் பழங்களை நிரப்பிக் கொள்வோம். நீலநிறக்கரை டிரவுசர்களில் இருப்பதை அம்மா கண்டுபிடித்து சத்தம் போடுவார்கள். நண்பர்களுடன் ஓடி விளையாடி கலாட்ட செய்தபோது உடம்பில் சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டதுண்டு. இதைப் பார்த்த அம்மாவிடம் அடிவாங்கிய நிகழ்வு களும் உண்டு. பழையப் புத்தகங்கள் பயனுள்ளவை. அதே போல பழைய நண்பர்களும் நம்பிக்கைக்கு உரியவர்கள்.

# ராமதாஸ்

நட்பு என்பது இறைவனின் விசித்திரமான வரம். பால்ய நட்பு மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து விடுகிறது. நட்பு என்பது இரண்டு உடம்புகளில் குடியிருக்கும் ஒரே ஆன்மா.

ராமதாஸ் என் இளவயதிலிருந்து இன்றுவரை நண்பன். இருவரும் ஒரே தெருவில் பிறந்து வளர்ந்தோம். வெவ்வேறு பள்ளிகளில் படித்தோம். நினைவு தெரிந்த நாளில் இருந்து நண்பனாக இருக்கிறான். நல்ல நட்பு ஓசைபடாமல் நம்மில் கலந்து விடுவதுண்டு.

பண்டிகைக் காலங்களில் இருவரும் ஒன்றாக இருப்போம். தீபாவளியில் அதிகாலை நான்கு மணிக்கே எங்கள் தெருவில் வெடி வெடிப்பது நாங்களே. இருவரும் சந்திக்கும்போது ஊரைப்பற்றி, தெருவாசிகளைப் பற்றி பேசுவதிலேயே பொழுது போகும்.

ஆற்றுக்கு குளிக்க, ஒன்றாகப் போவோம். அக்ரஹாரத்து தேவதைகளைக் கிண்டலடித்துப் பேசிக் கொள்வோம். வாலிபம் கனவுகளைக் காட்சிகளாக்கிப் பார்க்க விரும்பும் பருவம். சின்னவயசு ஞாபகங்கள் பசுமையாக இருக்கின்றன.

மனச்சோர்வு அடையும் போதெல்லாம் ராமதாஸ்தான் தோழன். மாலை நேரங்களில் இருவரும் காலாற ஆற்றுப்பக்கம் போவோம். இருவரும் சேர்ந்து சினிமா பார்ப்போம்.

ராமதாஸ் எம்.ஜி.ஆர். ரசிகன். நான் சிவாஜி பக்கம். படங்களைப் பற்றி விவாதிப்போம். ராமதாஸ் அண்ணன் கலியமூர்த்தி பலசரக்கு கடை வைத்திருந்தார். பொழுதுபோக்க இந்தக் கடையில் அமர்ந்தும்

வியாபாரம் செய்வோம். ராமதாசை சந்திக்கும் போதெல்லாம் ஊரைப்பற்றி பேசுவதிலேயே பொழுது போகும்.

ராமதாஸ் பள்ளியிறுதி படிப்புடன் படிப்பை நிறுத்தி விட்டான். பொதுப்பணித்துறையில் வேலையில் சேர்ந்து விட்டான். கல்லூரியில் விடுமுறை நாட்களில் ராமதாஸ்தான் கம்பெனி. அவனுடைய வேலைச் சமாச்சாரங்களைச் சொல்வான். என் கல்லூரி வாழ்க்கையை அவனிடம் பகிர்ந்து கொள்வேன்.

தன் காதல் கனவுகளை என்னிடம் ராமதாஸ் பகிர்ந்து கொள்வதுண்டு. வலங்கைமானில் இருக்கும் உறவுப் பெண்ணை ஒரு திருமணத்தில் பார்த்து அவளை மணக்க ஆசைப்பட்டான். என்னிடம் ஐடியா கேட்பதுண்டு.

அடிக்கடி வலங்கைமான் போய் பஸ் ஸ்டாண்டில் நின்று சைட் அடித்துவிட்டு வருவான். பார்த்த நிகழ்வுகளை என்னுடன் பகிர்ந்து கொள்வான். இளமையில் காதல் ஒரு அனுபவம். காலையில் அரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலரும் நோயல்லவா காதல்.

காதல் என்பது ஒரு உண்மையான வேகமே. சமயத்தில் இருபக்கமும் காதலுண்டாகி திருமணத்தில் முடிவு பெறுகிறது. அவன் நினைத்தபடியே அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு வெற்றியும் பெற்றான்.

இப்போது இரண்டு சாப்ட்வேர் இன்ஜினியர்களை உருவாக்கி நல்ல நிலைமையில் இருக்கும் ராமதாஸ் தம்பதியினரைப் பார்க்கும்போது அவனுடைய பழைய காதல் அனுபவங்கள் என் மனதில் ஓடும்.

எனக்கு எத்தனையோ நண்பர்கள் இருந்தாலும் ராமதாசுடன் இருந்த நட்புதான் ஆயுளுடன் இருக்கிறது. ஊர்ப்பாசமும், தெருப்பாசமும் இருவரையும் இன்றுவரை இணைத்துள்ளது.

நண்பர்கள் பல திசையில் பிரிந்து விட்டோம். விதி என்னை இரண்டு டிபார்ட்மெண்ட்டில் கிளாஸ் டூ ஆபீசர் வரை கொண்டுவிட்டது. ராமதாசு ரோடு இன்ஸ்பெக்டராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறான்.

இன்றும் ஊர் சென்றால் அவனைப் பார்க்காமல் வரமாட்டேன். நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளாமல் திரும்ப மாட்டேன். இவனது நட்பு மனதுக்கு இதமாக இருக்கிறது.

# பண்டிகைகள்

பண்டிகை என்பதே கொண்டாட்டம்தான். பண்டிகைகள் பண்பாட்டு நதிகள், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பறைசாற்றும் பாசறைகள். மண்ணின் மரபுகளாகத் தொன்றுதொட்டு வரும் வழக்கங்கள். மன இறுக்கத்தை மாற்றும் மாமருந்து.

## ஆங்கிலப் புத்தாண்டு

தமிழ்ப்புத்தாண்டும் ஆங்கிலப் புத்தாண்டும் நம் மண்ணில் வேரூன்றிவிட்டன. அதிகாலையில் ஊரெங்கும் உள்ள கோயில்களில் கூட்டம் அலைமோதும்.. நண்பர்களுக்கு ஹேப்பி நியூ இயர், கடவுளுக்கும் பிரார்த்தனை மூலம் ஹேப்பி நியூ இயர் சொல்வோம்.

ஊர் பெரியவர்கள், நண்பர்கள், பெண்கள், குழந்தைகள் என்று காலையில் இருந்து மாலை வரை கோயில்களில் குறிப்பாக ஒத்தைத் தெரு பிள்ளையார் கோயில், ராஜகோபாலசாமி கோயில்களில் கூச்சல், ஆரவாரம் இருந்து கொண்டே இருக்கும்.

இன்று புத்தாண்டு என்றால் தொலைக்காட்சி முன்பு அமர்ந்திருக்கும் பண்பாடு. நள்ளிரவு வரை கொண்டாட்டம். பண்பாட்டின் பரிணாமம் பாதைமாறிச் செல்கிறதே என்ற ஏக்கம்தான் வருகிறது.

## பொங்கல்

தமிழர் திருநாள். சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஊருக்கு வரும் பொங்கல் கூட்டம் கடைவீதிகளில் அலைமோதும். காவிரி



பொய்ப்பிக்காத அக்காலங்களில் மூன்று போக விளைச்சல். மக்களிடம் தானிய லெட்சுமி அமர்ந்திருந்த காலம். ஊரெங்கும் கரும்பு, வாழை, நெட்டி மாலைகள், மஞ்சள் கொத்து, இஞ்சி கொத்து என்று வியாபாரம் களைகட்டிவிடும்.

வேடிக்கைப் பார்ப்பதற்காக நண்பர்களுடன் கடைவீதியைச் சுற்றுவோம். வீட்டில் கரும்புக்கட்டு இருக்கும். வாழைத்தார்களும் தொங்கும். போகிப் பண்டிகைக்கு சில நாட்கள் முன்னதாகவே வீட்டைச் சுத்தம் செய்து வெள்ளையடித்துப் பொருட்களைச் சுத்தம் செய்வோம்.

பெரிய வெண்கலப் பானையை முற்றத்தில் வைத்து, பொங்கல் இடுவோம். கையில் தாம்பாளத்தையும், கரண்டியையும் ரெடியாக வைத்துக் கொள்வோம். பால்பொங்கும்போது கரண்டியால் தாம்பாளத்தில் மணி ஓசை எழுப்பி “பொங்கலோ பொங்கல்” என்று கூறுவோம். வந்த வாழ்த்துக்களைச் சேகரிப்போம். சூரியனுக்குப் படையல் முடிந்தவுடன் கரும்பைச் சுவைத்து மகிழ்வோம்.

வீடெல்லாம் மாக்கோலம், மாவிலைத் தோரணங்கள். மனது குதூகலமாக இருக்கும். மாட்டுப் பொங்கலில் எங்கள் தெருவே களைகட்டி விடும்.

பால்கறக்கும் தொந்திக் கோனார், மாடுகள் புடைசூழ நாமம் போட்டுக் கொண்டு வாத்திய இசையுடன் ஊரையே வலம் வருவார். தான் பால் கறக்கும் வீட்டு மாடுகளை அழைத்துச் சென்று பொது இடத்தில் பொங்கலிட்டு மாலையில் கொண்டு வந்து அவரவர் வீட்டில் விடுவார். அவரது கழுத்தில் ஒவ்வொரு வீட்டிலும் போடும் வேஷ்டி, துண்டு, மலைபோல் காட்சி அளிக்கும். வாயில்லா ஜீவனை வாழ்த்தி விழா எடுத்த காட்சியெல்லாம் இப்போது வளரும் சமுதாயம் தேட வேண்டும். தேடிப் பார்க்க வேண்டும்.

## நவராத்திரி

புரட்டாசி மாதத்தை ஆசையுடன் எதிர்பார்ப்பேன். காரணம் நவராத்திரி வரும் ஒன்பது நாட்களும் எங்கள் வீட்டில் கொண்டாட்டம். தெருவில் எங்கள் வீட்டில் மட்டும்தான் கொலு வைப்போம்.

வீட்டில் உள்ள பென்ச், நாற்காலி, டிரங்க் பெட்டி, அட்டைப் பெட்டி, இதையெல்லாம் அடுக்கி வெள்ளைத் துணி போட்டு மறைத்து ஒன்பது படிகளை உண்டாக்குவோம். இதில் கொலு

பொம்மைகளை அடுக்கி விடுவோம். ஒவ்வொரு நாளும் விதவிதமான சுண்டல், பட்டாணி, வடை, பாயாசம் என்று வீடே அமர்க்களப்படும்.

அக்ரஹாரங்களில் எல்லோர் வீட்டிலும் கொலு இருக்கும். பெரிய கோயில் அருகே பொம்மைகள் விற்பனை வெகு ஜோராக நடக்கும்.

நவராத்திரியில் ஒரு சமூகக் காரணம் புதைக்கப்பட்டுள்ளது.

நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் கொலு நாட்களில் பார்த்துப் பேசி தங்களது உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் விழா. பெண்கள் விதவிதமாக மருதாணி அலங்காரம் செய்து கோயில்களுக்குச் சென்று வருவார்கள். கோயில்களில் அம்மனுக்கு நாளொரு அலங்காரம். பெண்களுக்கு குங்குமச்சிமிழ், வளையல்கள், மஞ்சள், குங்குமம், ரவிக்கைத்துணி, தேங்காய் என்று கொலு வீட்டில் கொடுப்பார்கள்.

கீழராஜவீதியில் தென்கொண்டார் வீதியையே அடைத்து பந்தல் போட்டு விடுவார்கள். ஒன்பது நாட்களும் பரதநாட்டியம், நடனம், பட்டிமன்றம், கலைநிகழ்ச்சி, பாட்டு, இசைக்கச்சேரி என்று ஊரே விழாக் கோலம் பூண்டிருக்கும்.

## தீபாவளி

தீபாவளி என்றாலே இனிக்கும். சிறுவர்களுக்கு கொண்டாட்டம். சின்ன வயசில் மன்னார்குடியில் மறக்கமுடியாத சந்தோஷமான தீபாவளி நாட்கள். இளவயதில் தீபாவளி பலவிஷயங்கள் நிழலாடுகின்றன. அதிகாலை எண்ணெய் ஸ்நானம், கங்கா குளியல், தீபாவளி மருந்து, புத்தாடை பலகாரங்கள், பட்டாசு, கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன், தீபாவளி மலர்கள், புதுப்பட தீபாவளி ரிலீஸ் படங்கள்.

எங்க மாவட்டத்திலே குறுவைச் சாகுபடி முடிந்து மக்களிடம் பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். ஜவுளிக் கடைகளிலும் பட்டாசுக் கடைகளிலும், தையற்கடைகளிலும் கூட்ட நெரிசல். தீபாவளி இரவு நண்பன் ராமதாசுடன் கடைவீதி உலா போவோம். மக்கள் மகிழ்ச்சியை இரசிப்பதே பெரிய ஆனந்த தீபாவளியாகத் தித்திக்கும். எனக்கு ஒருபோதும், எந்தத் தீபாவளியும் சலித்ததில்லை.

ஒருவாரத்திற்கு முன்னரே பட்டாசு வாங்கிவிடுவோம். வெடியை வெயிலில் காயவைத்து காவல் இருப்பதில் ஒருஇன்பம்.

தீபாவளியில் வெடி வெடிப்பது சுகம். அதிகாலையில் முதலில் ஒரு சரவெடி. பின்பு சாட்டை, புஸ்வானம், கம்பிமத்தாப்பு, சங்கு சக்கரம் என்று நீளும்.

கையில் ஒரு பெரிய ஊதுபத்தி எல்லோரிடமும் இருக்கும். ஒவ்வொரு வெடியையும் திரியை லேசாக முனையில் கிள்ளி வைத்து அப்புறம் ஊதுபத்தியால் பற்ற வைப்பது. பயம் - பாதுகாப்பு உணர்வு.

எனக்கு மிகவும் பிடித்தது கையில் கம்பியில் வைத்து சுத்தும் சங்குச் சக்கரம்தான். அப்போது மகாவிஷ்ணு என்று கருதிக் கொள்வேன். தீப்பொறிகள் கையில் பட்டாலும் உணர்வு தெரியாது. யார் வீட்டு வாசலில் அதிக வெடிக் குப்பைகள் இருக்கிறது என்று நண்பர்களிடையே ஒரு எதிர்பார்ப்பு, பெருமிதம்.

தீபாவளிக்கு ஒரு மாதம் முன்பே துணியெடுத்து தையற் காரரிடம் அளவு கொடுத்துவிட்டு, பின்பு அவரிடம் நடையாக நடந்து வாங்கிய அனுபவத்தை நினைத்தாலே சிரிப்புத்தான் வருகிறது.

வயதானவுடன் தீபாவளியில் குழந்தைகள் கொண்டாடுவதைக் கண்டு மகிழ்கிறது மனம். வாசலில் நின்று தீபாவளி மகிழ்ச்சியைப் பார்க்கும் போது நானும் குழந்தையாகிவிடுகிறேன். ஆரம்பகால எதிர்பார்ப்புகளில் எத்தனை மாற்றங்கள். மாற்றங்கள்தானே வாழ்க்கை.

## கார்த்திகை தீபம்

ஊரெங்கும் தீப அலங்காரம். மூன்று நாட்களும் கண்கள் குளிர்ச்சியாக இருக்கும். தீபாவளி சமயம் பாதுகாத்து வைத்த மத்தாப்பு, வெடிகள் வெடிக்கப்படும். அகல் விளக்கை முன்னதாக பரணில் இருந்து எடுத்து துடைத்து விளக்கேற்றுவோம். இவையெல்லாம் மனதில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன.

கார்த்திகைப் பொறி பல வாரங்களுக்கு மாலைநேர டிபனாக இருக்கும். நான், ராமதாசு, ராஜேந்திரன் மூவரும் தெருவெல்லாம் சென்று தீபங்களைப் பார்த்து ரசிப்போம்.

பண்டிகைகள் பண்பாட்டை மட்டுமா வளர்க்கின்றன. மனித நேயத்தையும், சமய சமரசத்தையும் போற்றிப் பாதுகாக்கின்றன.

## மகா சிவராத்திரி

மாதந்தோறும் சிவராத்திரி வரும். ஆனால் மாசிமாத சிவராத்திரியை மகாசிவராத்திரி என்று சொல்வார்கள். தெருவில்

இருக்கும் முனீஸ்வரன் கோவிலில் இரவு ஐந்து யாம பூஜை நடக்கும். ஒவ்வொரு பூஜையிலும் அபிஷேகம், வில்வ இலையால் அர்ச்சனை நடக்கும். ஒவ்வொரு பூஜை முடிவில் ஒவ்வொரு விதமான பிரசாதங்கள் கொடுப்பார்கள். இரவு முழுதும் விழித்திருப்போம். மறுநாள் வகுப்புகளில் தூங்கி விழுந்த அனுபவங்கள் உண்டு.

## தமிழ்ப்புத்தாண்டு

சித்திரை மாதம் பிறக்கும் போது வருடப்பிறப்பு வருகிறது. இது வசந்த காலமாகும். பூக்கள் மலர்ந்து, செடி கொடிகள் எல்லாம் நன்றாக வளர்ந்து, காய்கனிகள் சிறப்பாக விளையும் காலமிது.

முதல் நாளே இரவே பூஜை அறையில் புதுத்துணிகள், கும்பம், பழங்கள், பஞ்சாங்கம், பணம் எல்லாம் வைத்து அலங்காரம் செய்து வைப்பார்கள். வருடப்பிறப்பு அதிகாலை எழுந்து பூஜை அறையில் விஸ்வரூப தரிசனத்தை முதன் முதலில் தரிசிப்போம்.

பஞ்சாங்கத்தைப் படிப்போம். இந்த வருடப் பலன்கள் எப்படி இருக்கும் என்பதெல்லாம் கணக்கிட்டு எழுதியிருப்பார்கள். அது மாதிரியே எல்லாம் நடக்கும். எந்தப் பண்டிகையையும் பஞ்சாங்கத்தைப் பார்த்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும். திருமணம், உபநயனம், கிரகப்பிரவேசம் மற்றும் எல்லா நல்ல செயல்களையும் பஞ்சாங்கத்தில் பார்த்து செய்ய வேண்டும்.

வீட்டில் அறுசுவை உணவு சாப்பிடுவோம். உப்பு, காரம், புளிப்பு, தித்திப்பு, கசப்பு, துவர்ப்பு அறுசுவை. இந்த அறுசுவை நம் உடலுக்கு முக்கியமான தேவை. வேப்பம்பூ பச்சடி கண்டிப்பாக இருக்கும். இது தித்திப்பும் கசப்பும் கலந்ததாக இருக்கும். இது நம் வாழ்க்கையில் நல்லது கெட்டது எல்லாம் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை உணர்த்துவதாக இருக்கும்

## ஆடிப்பெருக்கு

காவிரியின் கிளையான பாமினி ஆற்றைப் பெண்கள் வழிபட்டு விளக்குகள் ஏற்றி தண்ணீரில் மிதக்க விடுவார்கள். இது ஆடிமாதம் பதினெட்டாம் நாள் நடைபெறும்.

சிறுவர்களாகிய நாங்கள் தேர் செய்வோம். நடைவண்டியின் மேல் பலகைகள் வைத்து, கலர் பேப்பர், பூ வைத்து அலங்கரிப்போம். உள்ளே விநாயகரை வைத்து ஆராதிப்போம். தேரை இழுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போய் வழிபடுவோம்.

கையில் காப்புக் கயிறு கட்டி விடுவார்கள். பெண்களுக்கு கழுத்தில் கட்டி விடுவார்கள். பதினெட்டாம் பெருக்கு காப்பரிசி கொடுப்பார்கள். விளாம்பழம், நாவற்பழம் பூஜையில் கண்டிப்பாக இருக்கும்.

காவிரி பெருக்கெடுத்து வருவதைக் கொண்டாடி, இப்படியே அவள் மங்கல வாழ்வை வழங்க வேண்டும் என்று வேண்டி வணங்குவார்கள்.

வீட்டிலும் பட்சணங்கள் செய்து அம்மனைப் பெண்கள் ஆராதனைச் செய்வார்கள். பாமினி ஆற்றில் விளக்குகள் மிதப்பதைப் பார்க்கக் கோலாகலமாக இருக்கும்.

காவிரி பொய்ப்பித்துப் போன இப்போது இந்தக் காட்சிகளை மீண்டும் காண மனம் விரும்புகிறது. காலம்தான் ஆசையை நிறைவேற்றி வைக்கவேண்டும்.

## விநாயகர் சதுர்த்தி

விநாயகர் என்றால் வினைகளைத் தீர்ப்பவன் என்று பெயர். விநாயகரை வழிபட்டு விட்டுத்தான் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். ஆவணி மாத வளர்பிறையின் நான்காம் நாள் சதுர்த்தி திதி. அன்று தான் விநாயகர் சதுர்த்தி

களிமண்ணால் செய்த விநாயகர் பொம்மையை வாங்கி வருவோம். எண்ணெய் பூசி காகிதக் குடையை வைத்து எருக்கம் பூமாலைப் போட்டு, அருகம்புல், செம்பருத்திப் பூ ஆகியவற்றால் அலங்கரித்து தொந்தியின் நடுவில் ஒரு ரூபாய் நாணயத்தை வைப்போம். வீட்டில் மாவிலைத் தோரணம் கட்டுவோம்.

பிள்ளையார் சதுர்த்தி என்றாலே கொழுக்கட்டை ஞாபகம் தான் வரும். விநாயகருக்குப் பிடித்த மோதகம், வடை, சுண்டல், பாயசம், அவல், பொரி, வாழைப்பழம், கொய்யாப்பழம், பலாப்பழம், நாவல்பழம், விளாம்பழம், வெற்றிலைப் பாக்கு, பூ வைத்துப் படைப்போம்.

"குள்ளக்குள்ளனே......" "பாலும் தெளிதேனும்....." பாடலைப் பாடுவோம். அம்மா விநாயகர் அகவலைப் பாடுவார்கள். தேங்காய் உடைத்து, கற்பூர தீபாரதனைச் செய்து கூட்டு வழிபாடு செய்வோம்.

ஒத்தைத் தெரு ஆனந்த விநாயகர் நகர்வலம் வருவார். அவரைத் தரிசிக்காமல் விநாயகர் சதுர்த்திப் போகாது.

பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போடுவோம். தோப்புக்கரணம் போடும்போது தலை உச்சியிலிருந்து

கால்வரையில் உள்ள நரம்புகள் சுறுசுறுப்படைந்து மூளைக்கு பலம் கொடுக்கும் என்று பாட்டி சொன்னதைப் பயபக்தியுடன் பின்பற்றுவோம். அறிவியல் முறைப்படியும் விநாயகர் தோப்புக்கரணம் போடவைத்து, நமக்கு அருள்புரிகிறார். தலையில் குட்டிக் கொள்வதும் இந்த அடிப்படைக் காரணம்தான்.

## சரஸ்வதி பூஜை

கொலுப் படிகளுக்கு அடியில் எங்கள் புத்தகங்கள், பென்சில், பேனா, ரப்பர் எல்லாம் வைத்து சரஸ்வதியை வழிபடுவோம்.

கொலுப்படியின் நடுவில் சரஸ்வதி வெள்ளைத்தாமரைப் பூவில் வெள்ளைப் புடவை உடுத்தி அழகான புன்னகையோடு அமர்ந்திருப்பார். ஒரு கையில் மணிமாலையையும், மற்றொரு கையில் ஓலைச்சுவடியையும் மடியில் வீணையும் வைத்துத் தன் மற்ற இருகைகளால் வாசிப்பது போல் காட்சி தருவார்.

ஓலைச்சுவடியினால் கல்வியையும், மணிமாலையால் ஞானத்தையும் வீணையின் ஒலியால் கலைகளையும் தந்து நமக்கு அருள்புரிகிறார். அதனால்தான் சரஸ்வதி பூஜை அன்று நாம் படிக்கும் புத்தகங்களையும் கலைப் பொருட்களையும் பேனா, பென்சில், கத்தி, உலக்கை, கத்தரிக்கோல், கடப்பாரை, மண்வெட்டி போன்ற தொழில் சம்பந்தமமான உபகரணங்களை அவள் அருகே வைத்துப் பூஜை செய்கிறோம்.

நமக்கு கல்வி, கலைகள், தொழில்கள், செல்வம் எல்லாம் அருள்புரியும்படியாக வழிபடுகிறோம். சரஸ்வதி பூஜை ஆயுத பூஜையானது. ஊரில் உள்ள எல்லா வாகனங்களையும் அன்று சுத்தம் செய்து வாழைமரம், தோரணங்கள் கட்டி, நைவேத்யமாக பொரி, வெல்லம், பழங்கள், சுண்டல் வைத்துக் கும்பிடுவார்கள். வந்தவர்களுக்குப் பிரசாதங்களைத் தருவார்கள். பூசணிக்காய் சுற்றி உடைப்பார்கள். ஊரும், தெருவும் விழாக்கோலம் பூண்டிருக்கும்.

## வைகுண்ட ஏகாதேசி

மாதமொருமுறை ஏகாதேசி வரும். ஆனால் மார்கழியில் வரும் ஏகாதசி வைகுண்ட ஏகாதேசியாகும். எங்கள் ஊரில் புகழ்பெற்ற பெருமாள்கோயில் இருப்பதால் ஸ்ரீரங்கத்தைப்போல் இங்கு வைகுண்ட ஏகாதேசி சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

வைகுண்ட ஏகாதேசிக்கு முன்னர் பத்துநாட்கள் பகல்பத்து விழாவும், பின்னர் பத்துநாட்கள் இரவுப்பத்து நிகழ்ச்சியும் கோயிலில் நடைபெறும். பெரும்பாலும் ஸ்கூல் விட்டவுடன் நண்பர்களுடன்

பகல்பத்து விழா பார்த்துவிடுவோம். இரவுப்பத்து பார்ப்பது அரிது. இதில் யானை பெருமாளை மண்டியிட்டு வணங்குவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

ஏகாதேசியில் அதிகாலையில் ராஜகோபால்சாமி இரத்தினங்கள் பளபளக்க அலங்கரிக்கப்பட்டு பரமபத உட்புற வாசலுக்கு வந்து நிற்பார். அப்போது கதவுகள் திறக்கப்படும். பெருமாள் பரமபத வாசலைக் கடந்து வருவார். இது சொர்க்க வாசலுக்குள் வருவதாக ஐதீகம்.

ஏகாதசி அன்று பட்டினியுடன் திருமாலை நினைத்து வழிபடவேண்டும். அன்று மதியம் மட்டும் விதவிதமான டிபன் இருக்கும். மூக்குப் பிடிக்கச் சாப்பிடுவோம். இரவு முழுக்க கண் விழித்து பரமபதம் விளையாடுவோம். மறுநாள் அதிகாலை காய்கறியுடன் துவாதசி சாப்பாடு. அன்று மாலை வரைத் தூங்கக் கூடாது.

இப்பண்டிகைகள் தவிர தைப்பூசம், பிரதோஷம், மாசிமகம், காரடையான் நோன்பு, ஸ்ரீராமநவமி, வரலட்சுமி விரதம், சங்கடஹர சதுர்த்தி, கிருஷ்ணஜெயந்தி போன்ற விசேஷ நாட்களையும் அனுபவித்து வரவேற்போம்.

பண்டிகைகள் வாழ்க்கையில் ஒரு அர்த்தத்தையும், நம்பிக்கையையும் நமக்குத் தந்து கொண்டிருக்கின்றன.

❖❖❖

# மார்கழி

*அஞ்ஞானம் போக்கி தினம் தினம் எல்லோர்க்கும்*
*மெய்ஞ்ஞானம் தந்தருளும் மாதத்தை - எந்நான்றும்*
*விந்திப்பார்க் கென்றே விளங்கும் சீர்மார்கழியை*
*வந்திப்பார்க்கில்லை இடர்.*

மோட்சத்தை அடைவதற்கான வழிகளில் தலையாய மார்கழி மாதத்தில் பகவானை ஆராதிப்பது ஆகும். பறங்கிப் பூக்களுடன் தான் மார்கழி மாதங்கள் விடிகின்றன.

மார்கழி மாதத்தின் உயர்வுக்குக் காரணங்கள் பல. மழையாகிற குழந்தையைக் கர்ப்பத்தில் வைக்கிற காலம். அதாவது இத்திங்களில் மேகங்கள் சஞ்சரிப்பதைக் கொண்டு அடுத்த ஆண்டில் மழை பொழிவதை அறிஞர் பெருமக்கள் அறிகிறார்கள்.

மார்கழி மாதத்தில் எப்படிப்பட்டவர்களும் அதிகாலை உறக்கத்தினின்று எழுந்திருப்பார்கள். தெய்வ வழிபாட்டு ஒலி, திருப்பாவை ஒலி இவைகளால் உறக்கம் கலைந்து உற்சாகத்துடனிருப்பார்கள். மார்கழி மாதத்தின் அதிகாலைப் பொழுதை வர்ணிக்க வார்த்தைகள் ஏது?

மார்கழி குளிரை எதிர்கொள்ள பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை மஃப்ளர், ஸ்வெட்டர் அணிந்து உருமாறி அலைவார்கள். தெருக்கள் பனிப்போர்வைக்குள் சுருண்டு கொண்டிருக்கும்.

மார்கழியில் பெண்கள் பாவை நோன்பு நோற்பர். இது மிகமிகப் பழங்காலத்துச் செய்கையாகும். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை - தொல்பாவை என்பது தொன்றுதொட்டு வரும் பாவை நோன்பின் பழமையைக் காட்டுகிறது.

அந்தக்கால இலக்கியங்களான பரிபாடல், கலித்தொகை இவைகளில் சொல்லப்பட்டுள்ளது. சங்க காலத்திற்கு முன்பே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு துவாபரயுகத்தில் அவதாரமான ஸ்ரீபாகவதத்தில் காத்யாயநீவ்ரகம் என்ற பெயரால் பாவை நோன்பு சொல்லப்பட்டுள்ளது.

*புல்வெளி புல்வெளி தன்னில்*
*பனித்துளி பனித்துளி ஒன்று*
*தூங்குது தூங்குது பாரம்மா - அதை*
*சூரியன் சூரியன் வந்து*
*செல்லமாய் செல்லமாய் கிள்ளி*
*எழுப்புது எழுப்புது ஏனம்மா?*

திருப்பாவை - திரு என்பது மேன்மை என்பதைக் குறிக்கும் அடைமொழி. பாவை என்றால் பெண், பாட்டு, நோன்பு இம்மூன்றையும் குறிக்கிறது. மேன்மை பொருந்திய பெண்கள், மேன்மை பொருந்திய பாட்டால், மேன்மை அளிக்கும் நோன்பு என்று கொள்ளலாம்.

ஆண்டாள் இம்மார்கழி மாதத்தில் தான் கண்ணனை அடைவதற்காகப் பாவை நோன்பிருந்து திருப்பாவை பாடினாள்.


"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்" என்ற திருப்பாவையையும் திருவெண்பாவையில் "ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியை" என்ற முதல்பாடலையும் மார்கழி மாதத்தில் முதல் தேதியில் அம்மாவுடன் சேர்ந்து கோரசாகப் பாடுவோம். இம்மாதத்தில் அதிகாலை 4 மணிக்கு எழுந்து திருப்பாற்கடல் சென்று குளித்து வந்து தினமும் ஒரு பாடல் பாடுவோம்.

"நமக்கு வேறுகதி கிடையாது. வாருங்கள் தோழிகளே" என்று ஆண்டாள் கூறுவது போல் அம்மா எங்களை அதிகாலை எழுப்புவார்கள். பாவை நோன்பில் சிறப்பியல்புகளையும் கூறுவார்கள். ஆண்டாள் கதையைச் சிறு வயதிலேயே விதைத்துச் சரணாகதி தத்துவத்தைப் புரிய வைத்தவரும் அம்மாவே!

அதிகாலையில் பஜனை கோஷ்டியின் ஜால்ரா சத்தமும் பாடலும் கேட்க இனிமையாக இருக்கும். பல நாட்கள் பஜனை கோஷ்டியுடன் செல்வதுண்டு. ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பஜனைக் கோஷ்டியைப் பயபக்தியுடன் வணங்குவார்கள்.

முனீஸ்வரன் கோயிலிலும் தங்க விநாயகர் கோயிலிலும் காலை அபிஷேகம் முடிந்தவுடன் சுடச்சுடப் பொங்கல் விநியோகம். இது

என்னுடைய வேலை. ஐயர் தாம்பாளத்தில் பொங்கலைக் கொட்டி விடுவார். சிறுவர்களை வரிசையாக நிற்க வைத்து பொங்கல் விநியோகம் செய்வோம். கையெல்லாம் சுட்டுவிடும். பாத்திரத்தில் தண்ணீரைத் தொட்டுக் கொண்டு பொங்கலைக் கொடுப்பதில் ஒரு பெருமிதம். கூட்டம் அதிகமிருந்தால் அளவைக் குறைத்து விடுவேன். சில நாட்களில் எனக்கே பொங்கல் இருக்காது.



திருப்பாவைப் பாடல் ஒப்பித்தல் போட்டி பெரிய கோயிலில் நடைபெறும். அதில் பரிசு பெற்று வருவேன். தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் போல அம்மா பெருமிதம் பொங்கப் பரிசுகளைப் பெற்று கண்களால் ஒத்திக் கொள்வார்.

அதிகாலைப் பனிக் காற்றின் தூய்மை. சாலையே மறைந்திருக்கும். குளிரில் நடுங்கும் பூக்கள், பனியில் குளிக்கும் புற்கள். தலைக்குளித்து தலையில் துண்டுடன் பெண்கள். வீடுகளின் முன்பு விதவிதமான மாக்கோலங்கள். கண்களுக்கு குளிர்ச்சி. மனதுக்கு மகிழ்ச்சி.

மாதங்களில் மார்கழியாக இருப்பதாக கிருஷ்ணன் சொல்வார். எனக்கோ அன்றும் இன்றும் மாதங்களில் பிடித்தது மார்கழிதான்.

❖❖❖

# சைக்கிளோட்டம்

எங்கள் வீட்டு ஹாலில் மூன்று சக்ர சைக்கிளில் நான் அமர்ந்திருக்கும் போட்டோ இன்றும் இருக்கிறது. சைக்கிள் உறவு குழந்தைப் பருவத்திலே இருந்து தொடர்கிறது.

எங்கள் வீட்டில் மரக்குதிரை ஒன்று இருந்தது. வில் போன்ற பாதமுள்ள குதிரையில் இரண்டு கைப்பிடிகளையும் பிடித்துக் கொண்டு வேகமாக ஆடுவோம். வராந்தாவில் மூன்று சக்கர சைக்கிளில் ரவுண்டு அடிப்பதில் ஓர் ஆனந்தம். தம்பியை பின்சீட்டில் வைத்துக்கொண்டு வாயில் விசில் சத்தத்தை எழுப்பி ஓட்டும்போது ராஜகம்பீரம்தான்.

பள்ளி நாட்களில் சைக்கிள் வைத்திருப்பவர்களைப் பார்த்தால் பொறாமையாக இருக்கும். பள்ளித்தோழன் சுகுமார் பக்கத்து காந்தி ரோட்டில் இருந்தான். உடுப்பி ஓட்டல் ஓனர் பையன். அவன் சைக்கிளில் என்னையும் ஸ்கூலுக்கு அழைத்துச் செல்வான். பள்ளியிறுதித் தேர்வு முடிந்தவுடன் கர்நாடகா சென்றுவிட்டான். இன்று இந்தியன் வங்கி மங்களூரில் பணிபுரிகிறான்.

சுகுமார் சைக்கிள் ஓட்டும்போது ஏதோ நமக்கு கிடைக்காத ஒன்றில் அவன் பயணிப்பதாகப் பார்ப்பேன். எப்போதாவது எனக்கு மட்டும் சைக்கிள் தருவான். பத்து நிமிடங்கள் கூட தரமாட்டான். உடனே பிடுங்கிக் கொள்வான்.

எல்லோருக்கும் சைக்கிள் பழகும்போது குரங்குப் பெடல் போட்ட அனுபவம் இருக்கும். அப்பாவைப் பார்க்க நண்பர்கள் வருவார்கள். வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சைக்கிளில் அப்படியே குரங்குப் பெடல் போட்டு வீலைச் சுற்றுவேன்.

விருந்தினர் அசந்தபோது எடுத்து ஓட்டி சிராய்ப்பு ஏற்பட்ட அனுபவங்கள் நிறைய உண்டு. பல சமயங்களில் பெடல் கட்டை காலில் உரசி ரத்தம் வந்ததுண்டு.

தொடக்கக்காலத்தில் கால் எட்டாமல் குரங்குப் பெடல் போட்டு பாதிச்சுற்றில், திரும்பத்திரும்ப ஓட்டுவேன். சைக்கிளில் நான் ஏறி ஓட்ட ராஜேந்திரன் பின்சீட்டைப் பிடித்துக் கொண்டு மூச்சிறைக்க ஓடிவருவான். எதிரில் யாராவது வந்தால் குறிப்பாக சமவயது பெண்கள் வந்தால் பெரிய ஹீரோ நினைப்பு வந்து கீழே விழுந்ததுண்டு. காயம்பட்ட இடங்களில் எச்சிலைத் துப்பித் துடைப்போம்.

நாளடைவில் குரங்குப்பெடல்களுக்குப் பிறகு ஹேண்டல் பார் பாலன்ஸ் வந்துவிட்டது. தெருவில் இருந்து கிளம்பினால் காந்திரோடு, வாணக்காரத் தெரு போய் ஒரு சுற்று வந்துவிடுவேன். சைக்கிள் ஓட்டும்போது ராஜகம்பீர உணர்வுடன் ஓட்டுவேன். பழகிய பின்பு வாடகை சைக்கிள் எடுத்து உலா வருவோம்.

சைக்கிளோட்டத்தில் எனக்குத் திருப்புமுனை நேர்ந்த அனுபவமும் உண்டு.

கல்லூரி வாழ்க்கை முடிந்து வேலைக்காகப் போட்டித் தேர்வுகள் எழுதிக் கொண்டிருந்தேன்.

1977ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் முதல்நாள் அன்று ஏகாதேசி. வழக்கம் போல் ஒத்தைத்தெரு வினாயகரை வழிபடச் சென்றேன். சைக்கிளை கோயில் முன்பு நிறுத்திவிட்டு சுலோகங்களைச் சொல்லிக்கொண்டு சகோதரியின் குழந்தை கண்ணனுடன் 48 முறை பிரகாரம் சுற்றிக் கொண்டிருந்தேன். பிரார்த்தனை முடிந்து சைக்கிள் நிறுத்திய இடத்திற்கு வந்தபோது அங்குச் சைக்கிள் இல்லை.

புது வருடப்பிறப்பன்று ஒரு இழப்பு. சோகம். சைக்கிளை எப்போதும் பூட்டுவது கிடையாது. வீட்டில் ஒன்றும் சொல்ல வில்லை. Loss is gain என்று குடும்ப நண்பர் திரு. ருத்ராபதி கூறிய வார்த்தைகள் ஆறுதலாயிருந்தது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வந்தோம்.

நண்பர் சொன்னது போல் இருபது நாட்களில் தலைமைச் செயலகத்தில் பணி கிடைத்தது. சைக்கிளோட்டத்தில் பலருக்கு பலவித அனுபவங்கள் இருந்திருக்கலாம். சைக்கிள் ஓட்டம் நமக்கு துணிச்சலைத் தருகிறது. அச்சத்தை அகற்றியிருக்கிறது.

# தமிழ்த்தாத்தா

ஆயிரமாயிரம் படைப்பாளிகள் தமிழகத்தில் இருந்தும் தமிழர்கள் சமுதாய நிலைமை இன்னும் ஏன் மேம்படவில்லை? தியாகம், ஒழுக்கம், தேர்ந்த ஞானம், லட்சியதாகம் கொண்ட தமிழ் சான்றோர்கள் குறைந்துவிட்டனரா?

இந்தக் கேள்வி மனதில் எழும்போது பள்ளியின் தமிழாசிரியர் கதிரேசன் நினைவுக்கு வருகிறார். நம் தஞ்சை மாவட்ட மண் தமிழ் சான்றோர்களை வழங்கிய புண்ணியப் பகுதி என்று சொல்லி பெருமைப்படுவார். அவர் வகுப்பெடுத்தால் தமிழ்தாத்தாவைப் புகழாமல் இருக்க மாட்டார்.

தமிழ்தாத்தா? யார் அந்தத் தமிழ்ப் பெரியவர். உ.வே. சாமிநாத அய்யர் தான் அந்தத் தமிழ்த்தாத்தா. இவர் தஞ்சை மாவட்டம் பாபநாசம் பக்கமுள்ள உத்தமதானபுரம் என்ற கிராமத்தில் வேங்கட சுப்பையருக்கும் சரஸ்வதி அம்மாளுக்கும் 1855-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் நாள் பிறந்தார். பெற்றோர் இட்ட பெயர் வேங்கட்டராமன்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை இவருக்கு சாமிநாதன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார். திருவாடுதுறை கல்லூரி, குடந்தைக் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகியவற்றில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

தமிழ்த்தாத்தா நாட்டுப்புறத்து புலவர்களின் வீடுகளிலும், பரண்களிலும், மூலை முடுக்குகளிலும் ஒளிந்துக் கிடந்த தமிழ்ச்சுவடிச் செல்வத்தைப் பதிப்பித்து தந்துள்ளார்.

இவர் பதிப்பித்த முதல் நூல் சீவகசிந்தாமணி. உரையெழுதி வெளியிட்ட முதல் நூல் மணிமேகலை. இதைத் தொடர்ந்து 1889-

ல் பத்துப்பாட்டையும், 1894-ல் புறநானூற்றையும், 1898ல் பரிபாடல், பதிற்றுப்பத்து, அய்ங்குறுநூறு, புதியதும் பழையதும், கண்டதும் கேட்டதும், நினைவு மஞ்சரி, சிலப்பதிகாரம், குறுந்தொகை போன்ற தமிழின் தலைசிறந்த இலக்கியங்களை யெல்லாம் சேகரித்து - தொகுத்து பதிப்பித்து வெளியிட்டார்.

1937-ல் சென்னையில் தமிழ்த்தாத்தா பட்டம் வழங்கப்பட்டது. 1940 ஜனவரி முதல் 'ஆனந்தவிகடன்' வார இதழில் தனது வாழ்க்கை வரலாற்றை 'என் சரித்திரம்' என்ற தலைப்பில் எழுதத் தொடங்கினார். 122 அத்தியாயங்கள் எழுதி, தொடரும் என்ற நிலையில் தனது எண்பத்து ஏழாவது வயதில் 1942 ஏப்ரல் 28-ம் நாள் இறைநிலை எய்தினார்.


*மால்கொடுத்த பிறமொழிகள் மோகத் தாலே*
*மக்களெல்லாம் பெற்றவளை மறந்தார் – ஞானப்*
*பால் கொடுத்த தமிழ்த்தாயார் மிகவும் நொந்து*
*பலமிழந்து நிலைதளர்ந்த பான்மை பார்த்துக்*
*கோல்கொடுத்து மீட்டுமவள் கோயில் சேர்த்துக்*
*குற்றமற்ற திருப்பணிகள் பலவும் செய்து*
*நூல்கொடுத்த பெருமைபல தேடித் தந்த*
*நோன்பிழைத்த தமிழ்த்தவசி சாமி நாதன்*



தமிழ் தாத்தாவைப் போன்று 'தமிழ்மலை' மறைமலைஅடிகளையும், தமிழகத்தின் 'சர்வால்டர் ஸ்காட்' கல்கியையும், பக்தி இலக்கிய முன்னோடி "பாபநாசம் சிவனையும்,

"தென்னாட்டு தாகூர்" கா.சி. வெங்கட்ரமணியையும், 'புதுக்கவிதை முன்னோடி' ந.பிச்சமூர்த்தியையும், "சொற்சிக்கன சொந்தக்காரர்" கு.ப. ராஜகோபாலனையும் "போராட்ட நாயகன்" சி.இலக்குவனாரையும், "அனுபவம் கண்ட அறிவுக்கவிஞர்" தஞ்சை இராமையாதாசையும், "பாட்டுக்குயில்" கு.மா. பாலசுப்பிரமணியத்தையும், "மக்கள் கவிஞர்" பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தையும், "நாவற்சிற்பி வடுவூர் துரைசாமி அய்யங்காரையும் தந்தது நம் மாவட்ட மண் என்று தமிழாசிரியர் வியந்துப் போற்றுவார்.

❖❖❖



# மகாமகம்

நெஞ்சில் அலைமோதி அலைமோதி அற்புதமான பழைய நினைவுகளை அள்ளி அள்ளித் தருகின்றன. வாழ்க்கை என்பது இனிய கதையோட்டமுள்ள நாவலன்று. படிப்பதையே திரும்பித் திரும்பி படித்துத் தொலைக்க வேண்டிய கணக்குப் புத்தகம்.

படிப்பில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தபோது ஒரு நாள் வீட்டிற்கு உறவினர்கள் வந்தார்கள். கும்பகோணம் மகாமகம் முழுக்கிற்காக எங்கள் இல்லத்தில் விருந்தினர்கள் கூட்டம்.

மன்னார்குடியில் இருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள திருத்தலம் கும்பகோணம். பண்டைக் காலத்தே 'திருக்குட மூக்கு' என தமிழ் இலக்கியங்கள் இத்தலத்தைப் போற்றுகின்றன. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள இந்நகரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சோழர் தலைநகரமாக விளங்கியது. பண்டுதொட்டே கலைகளிலும் இசையிலும் உயர்ந்து விளங்குவது. கணித மேதை ராமானுஜன் வாழ்ந்து படித்த இடம். தமிழ்த்தாத்தா பிறந்த நகரம்.

இங்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் மகாமகப் பெருவிழாவாகும்.

இது வடநாட்டில் கொண்டாடப்படும் கும்பமேளாவிற்கு இணையானது. மகாமகத்தின் போது கங்கை, காவிரி போன்று ஒன்பது தீர்த்த கன்னியர்கள் தங்கள் பாவங்களைப் போக்க நீராடுவதற்குத் திருக்குளம் உருவாக்கப்பட்டது.

பிரளயக் காலத்தில் மிதந்து வந்த அமுதகுடத்தை சிவபெருமான் அம்பெய்து குடத்தின் மூக்கை உடைத்ததால் குடமூக்கு எனும் பெயர் உரித்தாயிற்று.

கி.பி.7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இத்தலத்தை குடமூக்கு எனவும், ஆழ்வார்களுள் பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசை ஆழ்வார் ஆகியோர் குடந்தை எனவும், பூதத்தாழ்வார் குடமூக்கு எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

குடம் என்பதற்கு, கும்பம் என்ற பெயரும் உண்டு. கும்பம் உடைந்தப் பகுதி கோணலாதலால் கும்பகோணம் ஆயிற்று.

மகம் என்பது 27 நட்சத்திரங்களில் ஒன்று. இது கொண்டாடப்படுகிறபோது மகாமகம் எனப்படுகிறது. இதற்கு முன் 1897, 1907, 1921, 1333, 1945, 1956 ஆண்டுகளில் கொண்டாடப்பட்டது.

உறவினர்களுடன் நானும் மகாமக குளத்தில் கூட்டத்தின் நடுவே குளித்து வந்தேன். பத்துலட்சம் பக்தர்கள் வந்து முழுக்கு செய்தனர். பின்னர் 1980 ஆம் ஆண்டில் கும்பகோணத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அப்பா காலத்தில் வந்திருந்தவாறு எனது வீட்டில் உறவினர்கள் வருகை. ஆனால்இந்த மகாமகக் கூட்ட நெரிசலில் பல உயிர்கள் பலியானது நெஞ்சை உருக்கியது.

2004ஆம் ஆண்டு மகாமகத்தின் போது சென்னையில் இருந்து தம்பியின் அழைப்பிற்கிணங்க வந்து கூட்ட நெரிசலில் குளித்தேன். பிளிச்சிங் பவுடர் வாசம். சிந்தனையில் தெளிவு. குளிக்கும்போது மனசில் திருமூலர் பாடல்தான் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

***“உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்***
***மெள்ளக் குடைந்து நின் றடார் வினைகெடப்***
***பள்ளமும் மேடும் பறந்து திரிவரே***
***கள்ள மனமுடைக் கல்வியில் லோரே”***

மனதில் மாறாத நினைவுகளாய், மறக்க முடியாத பக்கங்களில் பழைய நினைவுகளை சேர்த்து வைத்திருக்கிறேன். எப்போதாவது மனம் இறுகும் போது அங்கிருந்து கொஞ்சம் எடுத்துக் கொள்ளும் போது சுகம் பரவுகிறது.

❖❖❖

# மயானம்

வாழ்வில் சில ஸ்பரிசங்கள் நீங்கவே நீங்காது. என்னுடைய ஏழாவது வயதில் சுடுகாடு பார்த்த திகில் அனுபவம். முதல் தடவை. காற்று பலமாக அடித்தால் கூட பயந்து விடுவேன்.

மானுட வாழ்க்கையில் நல்ல இடம் சுடுகாடுதான். மனித மனம் மட்டுப்படும் இடம் - செத்துப் போனவனுக்கு நிரந்தரமான அமைதி கிடைக்குமிடம். வீடு திரும்புகிறவனுக்கு ஓரளவு ஞானமும் தருகிற இடம். சுடுகாட்டு வைராக்கியம் பார்க்கும் இடம்.

இன்றைக்கு இருக்கிறவர் நாளைக்கு இல்லை. இதுல வம்பெதுக்கு? வழக்கு எதுக்கு? பொறாமை எதுக்கு? கொஞ்சம் போல நல்ல மனிதத் தன்மை பிறக்கும் இடம். அவசர அவசரமாக சித்தராவதும் ஞானியாவதும் சுடுகாட்டில்தான்.

எதிர்வீட்டு பாட்டி இறந்துவிட்டார். அன்று இரவு முழுவதும் தாரைத் தம்பட்டம் அழுகுரல் சத்தம். தூக்கமே இல்லை. நினைவு தெரிந்த நாளில் கேட்ட முதல் அழுகுரல்கள் - ஒப்பாரி.

மறுநாள் காலை பாட்டி பல்லக்கில் பயணப்பட்டார். தெருவாசிகளுடன் நானும் பின் தொடர்ந்து மயானத்துக்குப் போக, அம்மா "நீ ஏண்டா போறே" என்று சத்தம் போட்டது காதில் விழுந்தது.

மயானத்தில் எங்களைப் போன்ற சிறுவர்களை ஓரிடத்தில் நிற்க வைத்துவிட்டு பெரியவர்கள் பாட்டியை அக்னிக்கு தாரைவார்க்கும் சடங்குகளைச் செய்தனர். தூரத்தில் ஒரு தகரக் கொட்டகையில் ஒரு பிணம் பொசுபொசுவென்று புகைந்து கொண்டிருந்தது. மரணத்தின் சமையலறையாய் புகைந்து கொண்டிருக்கிறது.

பாமணி ஆற்றுக்கு வடக்கே, ரயிலடியைத் தாண்டி 100 மீட்டர் தூரத்தில் மயானம் இருந்தது. சுடுகாட்டை ஏன் வடக்கு பக்கம் வச்சாங்க. நம்மூரிலே தெற்கு வடக்காகத்தான் காத்தடிக்கிறது வழக்கம்! பிணம் வேகிற புகை ஊருக்குள்ளே வராம அப்படியே ஓடிப்போகணும்னுதான் வடக்கே வச்சிருக்காங்க மயான பூமியை.

மனிதர்கள் எல்லோரும் கடைசியாக வரும் இடத்தில் முதன்முதலாக நின்று வேடிக்கைப் பார்க்கிறேன். அங்கங்கே சமாதிகள். சிலவற்றில் இறந்தவர்கள் பெயர் - ஊர் - விலாசம்.

ஒரு பிணத்தைத் தீ சாப்பிட்டு முடிக்கும் நேரம். பிணத்தின் பெரும்பகுதியை விழுங்கியபின் பாக்கியிருக்கும் சிறு பகுதியை அது சப்பிக் கொண்டிருந்தது. கருகியப் பிணத்துண்டினின்று உருகிவரும் நீரையும் நெய்யையும் கனல் "சொய் சொய்..." என்று ருசிப் பார்க்கிறது. இடையிடையே கனல் சரிந்து விழும் சத்தம் கேட்கிறது.

*'கண்ணீர்த் துளியில் ஞானம் கலந்து*
*கசிந்ததும் சுடுகாடே - வாழ்க்கை*
*விண்ணில் அல்ல மண்ணில் என்று*
*விளக்கியதும் சுடுகாடே"*

அந்த வயது வரை அவ்வளவு அருகாமையில் சடலத்தை நான் பார்த்தது இல்லை. வீட்டில் விடமாட்டார்கள். ஏதாவது வந்தால் கூட கண்ணைமூடி கூட்டிப்போய் விடுவார்கள்.

பாட்டி உடம்புபூரா வெறட்டியை அடுக்கி வெச்சாங்க. சடங்குகள் முடிந்தவுடன் நெருப்பு வைத்தார்கள். எல்லோரும் திரும்பி ஆற்றில் குளித்தோம். வீட்டு வாசலில் கால் கழுவ சொம்பில் தண்ணீர் தயாராக இருந்தது. சுடுகாட்டுக்குப் போய் வந்தால் கால் அலம்பித்தான் வீட்டுக்குள்ளே போகணுமாம்.

மறுநாள் பால் தெளிக்கப் போனவர்களுடன் சிறுவர் களாகிய நாங்களும். இந்த முறை அம்மா ஒன்றும் சொல்லலை.

பாட்டியின் எரிந்த சாம்பலைக் குச்சியால் கிளறினார்கள். நான் அந்தச் சாம்பலுக்கு மிகச் சமீபத்தில் நின்று எரிந்துபோன பாட்டியின் உருவத்தை மானசீகமாக நினைத்துக் கொண்டிருந்தேன்.

எலும்புகளைப் பொறுக்கி அபிஷேகம் செய்து பானையில் வைத்து மாலையிட்டு வணங்கினார்கள். அப்பானையை ஆற்றில் விட்டுக் கரைத்தார்கள்.

சுடுகாட்டு விசிட்டில் என்னுடைய தந்தையின் பூதவுடலை எடுத்துச் சென்றபோதுதான் சடங்குகளின் சம்பிரதாயங்களின் அர்த்தம் புரிந்தது.

எம்.ஏ., முடித்துவிட்டு வேலைக்கு அப்ளிகேஷன் போட்டுக் கொண்டிருந்தேன். இருபத்திரண்டு வயது. மூத்தப் பையன், காலையில் எழுந்ததும் இந்தியன் எக்ஸ்பிரஸ் பேப்பர் - ஒத்தைத் தெரு பிள்ளையார் வழிபாடு - நூலகம் - தட்டச்சு நிலையம் - இதுதான் அப்போதைய வேலை.

அன்று, ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்து அப்பா சாப்பிடலை. கண்கள் மூடியபடி இருந்தார். அடிக்கடி வரும் வயிற்றுவலி அவரை வாட்டியது. வேளா வேளைக்கு குளுக்கோசும் பழச்சாறும் கொடுத்தோம். அதையும் வாந்தி எடுத்துவிட்டார். மாலையில் நிலைமை மோசமாகியது. சிறுநீர் பிரியவில்லை. மூச்சு மெதுவாக ஓடியது. டாக்டர் வந்து ஊசி போட்டுவிட்டுச் சென்றார்.

அருகிலேயே அம்மாவும் நானும் இருந்தோம். தம்பிகள் சகோதரிகள் ஒன்றும் புரியாமல் முழித்துக் கொண்டிருந்தனர். மயான அமைதி. அம்மாவின் கண்களில் தாரைத் தாரையாக கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

அப்பா என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தார். கண்கள் என்ன பேசின என்பதை உணர முடியவில்லை. மாலையில் 5.30க்கு மெல்ல மெல்ல அவர் உயிர் பிரிந்தது. ஓவென்ற கதறல்கள். செய்வதறியாது திகைத்து நின்றேன். அப்பாவின் கைகளைப் பிடித்துக் கதறினேன்.

நான் உறைந்து போய் நின்றேன். என் வாழ்வில் சந்தித்த முதல் இழப்பு.

அப்பாதான் என்னுடைய முதல் ஆசிரியர். முதல் தோழர். விளையாட்டு நுணுக்கங்களைச் சொல்லித் தருவார். பூமி சுழல்வதையும், பருவகால மாறுதல்களையும் பக்குவமாய் பால்ய வயதில் சொல்லிக் கொடுத்தார்.

அலெக்சாண்டரையும், நெப்போலியனையும், தாகூரையும், காந்தியையும், வ.உ.சி.யையும், பட்டேலையும், பாரதியையும் அப்பாதான் சிநேகமாக்கினார்கள்.

பருவ வயதில் எனக்கு உடலில் மாறுதல்கள். எனக்கு இன்னதென்று குறுகுறுப்பை ஏற்படுத்தியபோது ஒரு நண்பனுக்கு சொல்வதுபோல் உடம்பின் வளர்ச்சிகளைக் காஷுவலாக சொல்லிவிடுவார். உடற்கூறுகள், ஹார்மோன் வளர்ச்சி பற்றியெல்லாம் கதைபோல் சொல்லி விடுவார்.

என் நண்பர்களைத் தெரிந்தெடுப்பதில் கவனமாக இருப்பார். பொருள் வறுமை ஒரு பக்கமிருந்தாலும் அறிவு புகட்டுவதில் அப்பாவிடம் வறுமையே கிடையாது.

எம்.ஏ. படித்து முடித்துவிட்டு வேலைக்காக முயற்சிக்கும்போது அப்பாவின் மரணம். தெருக்காரர்கள் ஊர்க்காரர்கள் மரணச்செய்தி கேட்டு ஓடி வருகின்றனர்.


அப்பா

ஐம்பத்து நான்கு வயதில் மரணம். "படிக்கவச்சப் புள்ளை சம்பாதிப்பதைப் பாக்கலையே" ஊர்க்காரர்கள் கதறல்கள், வருத்தங்கள்.

உறவுக்காரர்கள் ஒவ்வொருவராக வந்தனர். இரவு முழுவதும் சங்கொலி. அழுகைக் குரல்கள். மனம் இறுகி தூக்க மின்றி அப்பாவின் அருகிலேயே இருந்தேன்.

மறுநாள் காலையில் பூச்சரங்கள் தொங்கும் அப்பாவின் கடைசிப் பயணத்துக்கு வாகனம் தயாரானது.

இறுதிக்கடனுக்கு "குளியலுக்கு தண்ணீர் எடுத்து வருவது" முதல் சடங்கு. திருப்பாற்கடலுக்குச் சென்று பிள்ளைகளும் பங்காளிகளும் குளித்தோம். குடங்களில் நீர். எனக்கு நீச்சல் கற்றுக் கொடுத்த அப்பாவுக்கு குடத்தில் நீர் எடுத்து குளிப்பாட்ட கிளம்புகிறேன். பெரிய வேஷ்டியை நான்கு மூலையில் நால்வர் பிடிக்க நடுவிலே குளியல் தண்ணீர் குடங்களைச் சுமந்து சென்றோம்.

அப்பாவின் பூதஉடலைச் சுற்றி மறைவிடம் கட்டி குளிப்பாட்டினார்கள். பிறந்த போது குளிப்பாட்டுவதும் சீவாத்மாக்களுக்குத் தெரிவதில்லை. இறந்த பிறகு குளிப்பாட்டுவதும் 'பரமாத்மாக்'களுக்குத் தெரிவதில்லை.

அப்பாவின் இறுதிக்குளியல் நடைபெற்றது. சின்னவயசில் நாள்தோறும் எங்களை அழைத்துச் சென்று குளிப்பாட்டி அழைத்துவரும் அப்பாவுக்கு இறுதிக் குளியல், ஒருநாள் குளிக்கும்போது "அப்பா! நீ வேணா நானே குளிக்கிறேன்" என்றேன். பருவத்தால் ஏற்பட்ட கூச்சம் ஒருபக்கம். விளையாடப் போகனமுன்னு அவசரம் ஒருபக்கம். ஓடி விட்டேன்.

மறுநாள் அப்பா விடவில்லை. சிறுநீர் பிரியும் இடத்தில் அழுக்குகளைக் கழுவிவிட்டார். உடம்புன்னா என்ன... அதை எப்படி பத்திரமா பாத்துக்கனும். சுத்தமா எப்படி வச்சுக்கனும் என்பதைப் பொறுமையாக விளக்கினார்.

அப்பா அழுக்குத் தேய்க்கும் முறை, சோப்பு போடும் அழகு, குளித்தவுடன் ஈரத்தைத் துண்டால் துடைத்துவிடும் நேர்த்தி,

எல்லாவற்றிலும் ஒழுங்கு - சிக்கனம் - அழகு இவற்றையெல்லாம் கற்பித்துப் போன அப்பா.

குளிப்பாட்டிய பிறகு கோடியை அப்பாவின் உடலுக்குப் போட்டார்கள். தெருப் பெரியவர் நாயக்க வாடியார் உத்தரவுப்படியும், யோசனைப்படியும் தேவலோக பல்லக்கே கட்டிவிட்டார்கள். எட்டு மூங்கில் மரம் போட்டு ஆறு மூங்கில் வலைக் கட்டி பூப்பல்லக்கு கட்டி, கொடி வேறு கட்டியிருந்தது.

பல்லக்கு முழுவதும் செவ்வந்தியை அடுக்கி கைவண்ணம் காட்டப்பட்டிருந்தது. கனாம்பரத்தைச் சுற்றி, அரளிப்பூத் தோரணம் தொங்க விட்டிருந்தனர். காட்டுமல்லிகையும், வெள்ளை நந்தியாவட்டையும் பச்சை மருக்கொழுந்தும், சரம் சரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

அந்தக் கடைசி நேரமும் வந்தது. பெருங்கூட்டம் கூடிவிட்டது. "தூக்கு! தூக்கு! தூக்கப்பா!" என்று தெருக்காரர்கள் கத்த, கொட்டுச்சத்தம் தாண்டி அம்மாவும் பிள்ளைகளும் சுற்றமும் கதற சங்கூதும் பண்டாரம் சங்கையே உடைத்துவிடுவது மாதரி உச்சித் தொனியில் ஊத அப்பாவை கண்ணீரோடு ஒருமுறை அண்ணாந்து பார்த்தேன். அந்த இறுதி ஊர்வலப் பாதைகள் சோகச் சுமைத் தாளாமல் நெளிந்தன.

இடுகாட்டில் பல்லக்கை இறக்க, நாவிதர்கள் முடியைச் சரைக்க, அப்பாவின் பூத உடல் முழுவதும் வறட்டிகள் அடுக்க, மண்பானையில் நீர்சுமந்து மூன்றுமுறை பூதவுடலை வலம் வந்தேன்.

சுடுகாட்டில் கொள்ளிக்குடம் - அதில் 3 ஓட்டை போடுவதின் பொருள் என்ன?

பானை என்பது இறந்தவரின் கருமையம். இறந்தவரின் அகச்சொத்தை சஞ்சித, பிராரதே, ஆகாமிய கர்மங்கள் எனப்படும் - மூன்று கர்மங்களை அதாவது இறந்தவரின் வினைப் பதிவுகள் அனைத்தையும் பிள்ளைகளாகிய நாங்கள் ஏற்றுக் கொண்டு விட்டோம் என்று சங்கல்பமிடுதல். அதற்காகவே பானையில் மூன்று ஓட்டைகளைப் போடுதல்.

இப்பொழுது இறந்தவரின் பதிவுகளைப் பிள்ளைகள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். வினைப் பதிவுகள் இல்லை. அதற்காகவே கடைசியில் பானையை உடைக்கிறார்கள்.

அப்பா செத்துப்போனது பூமி செத்துப்போனது மாதிரி இருந்தது.

தண்ணீர் குடம் கீழே விழுந்து உடைய, சிதைக்கு தீமூட்டி திரும்பிப் பார்க்காமல் போகச் சொன்னார்கள் பெரியவர்கள்.

கண்ணீரும் கைகளும் என் கண்களைப் பொத்தின. அழுதேன். அழுத கண்ணீரில் தீ அணைந்துவிடாதா என்று அழுதேன். இன்னொரு சாவுக்கு அழ என்னிடம் கண்ணீர் மிச்மில்லை. அந்த சுடுகாட்டுத் தீ உன் உடலைச் சுட்டது. பிறகு என் உயிரையும் சுட்டது.

மனசின் மெல்லிய பிரதேசங்களில் படுத்திருக்கும் உன் பதிவுகள் --- கனவுகளில் வந்து கிசுகிசு மூட்டும் உன் வார்த்தைகள் --- எல்லாம் என்னிடம் --- நீ எங்கே?

மறுநாள் பால்தெளியல் சடங்கு. வீட்டில் அப்பாவுக்கு பிடித்தப் பலகாரங்களுடன் கூடையில் துண்டு கட்டி மூடி மயானம் சென்றோம். அப்பாவின் எலும்புகளையெல்லாம் சேகரித்து பல்வேறு அபிஷேகம் செய்தோம். எலும்புக் குவியலுக்கு மாலை, பலகாரப்படையல், தீபாரதனை. பலகாரங்கள் காகங்களுக்கு வைக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட எலும்புகள் மண்பானையில் வைக்கப்பட்டன.

ஆறு ஒளி பெற்றிருந்தது. அலை அடித்தபோது கண்கள் கூசின. எனக்கு மிகவும் பரிச்சயமான பாமிணி ஆறு. என் இளவயது தோழி. மழையில் அவளுடைய துள்ளல், இரவில் அவளது மௌனம், பனி பெய்யும் காலையில் அவளது நாணம். எத்தனை நெருக்கமானவள் என் ஆறு.

இன்று ஆறு எனக்குப் பழக்கமே இல்லாத புதிய இடம்போலத் தோன்றுகிறது. இடுப்பளவு ஆழம் கூட இல்லாத ஆற்றுக்கு ஆயிரம் அடி ஆழமிருப்பதாக நினைத்தேன். ஒரு நிமிஷம் உடம்பு நடுங்கிச் சிலிர்த்தது.

ஆற்றில் இறங்கி இடுப்பளவு நீரில் நின்று கொண்டேன். அப்பாவின் முகம் பானையில் தெரிந்தது.

குடத்தை நழுவவிட்டு பின் மூழ்கினேன். குடம் மூழ்கியது. பூக்களில் ரத்த சிவப்பில் குடம் மூழ்கியது. அரளியும், வெள்ளை நந்தியாவட்டையும், பழுப்புநிற செண்பகமும், மஞ்சள் நிற செவ்வந்தியும் மெதுவாக மிதந்து அழிந்து ஓடி மறைந்தன.

மனுஷன் உயிருடன் இருக்கும் வரை அடிக்கடி சுடுகாடு சென்று வரணும். அப்பத்தான் மனுஷ வாழ்க்கையில் போட்டி, பொறாமை, வஞ்சம், பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி போன்ற கெட்ட குணங்கள் நீங்கி அறுகுண சீரமைப்பு பெற்று வாழ்வில் வசந்தமும் அமைதியும் நிலவும்.

# ஊர் தெய்வங்கள்

ஊர் தோன்றிய நாள் தொட்டு ஊரைக் காத்துவரும் தெய்வம் காவல் தெய்வம் ஆகும். இதை ஊர்ச்சாமி என்றும் கிராம தேவதை என்றும் ஊர்த்தெய்வம் என்றும் கூறுவர்.

மனிதனுடைய சுகதுக்கங்களில் பங்கேற்பவரைத்தான் மனிதன் விரும்புவான். இது உலக நியதி. அதுபோன்று மக்களின் சுகதுக்கங்களில் மக்களுக்கு உறுதுணையாக இருந்து 'நல்லது கெட்டது'களில் பங்கேற்கும் சில சக்திவாய்ந்த தெய்வங்களை நினைக்கிறார்கள். இவைதாம் ஊர்தெய்வங்கள். ஊரைக் காப்பதே ஊர்த்தெய்வத்தின் கடமையாக இருக்கிறது.

ஒவ்வொரு ஊரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தெய்வங்களின் சக்திக்குட்பட்டதாக - கட்டுப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது. அந்த ஊர்ப்பகுதியின் நிலப்பகுதி, நீர்நிலை, மழைவளம், மக்கள், கால்நடைகள் ஆகிய அனைத்தையும் காக்கும் பொறுப்பு அத்தெய்வங்களைச் சேர்ந்தது.

அந்த ஊரில் குடிகொண்டுள்ள தெய்வங்களின் அனுமதியில்லாமல் எவ்வித தீய சக்திகளும் அல்லது தெய்வங்களும் உட்புகமுடியாது. சடங்குகள், விழாக்கள், காணிக்கைகள் மூலம் ஊர் மக்கள் இத்தெய்வங்களை மகிழ்வித்தால் நன்மைகள் பெருகும். புறக்கணித்தாலோ துன்பங்கள் தலைகாட்டும். இத்தெய்வங்களைக் குறித்து அப்படிப்பட்ட நம்பிக்கைகளை மக்கள் கொண்டுள்ளனர். இத்தகைய தெய்வங்களை மக்கள் ஊர்தெய்வம் என்று அழைத்து வருகின்றனர்.

## எல்லைத் தெய்வம்

ஊர்தெய்வம் வேறு. எல்லைத் தெய்வம் வேறு. ஊர் எல்லையைக் காத்து நிற்கும் தெய்வம் எல்லைத் தெய்வம் ஆகும். இதற்கு எல்லையம்மன் என்று பெயர். இத்தெய்வங்கள் ஊர்த்தெய்வங்களுக்கு கட்டுப்பட்ட எல்லையாகக் கருதப்படுகின்றன.

அய்யனாரும் செல்லியம்மனும் காவல் தெய்வமாக உள்ளதால் எங்களூரில் தனியாக எல்லையம்மன் இல்லை. எங்கள் ஊரில் மூன்று காத்தாயி அம்மன் கோயில்கள் உள்ளன.

ஊருக்குள் மழை பெய்யாவிட்டால் இத்தெய்வங்களுக்கு பொங்கல் வைப்பார்கள். பொங்கல் என்பது பொங்கல் வைத்துப் பூசை நடத்துவதைக் குறிக்கும். இதற்குத் தெய்வக்கோயில்களில் 'திருவிழா' என்று சொல்வதை, திராவிடக் தெய்வக் கோயில்களில் கொடை என்றோ பொங்கல் என்றோ சொல்லுவார்கள்.

## முனீஸ்வரன்

பல ஊர்களில் அய்யனார், கருப்பசாமிக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றி வழிபடும் முதன்மை இடத்தில் இருப்பவர் முனியசாமி.



முனீஸ்வரன் கோயில்

எங்கள் தெருவின் மையப்பகுதியில் முனீஸ்வரன் கோயில் உள்ளது. சிறிய கோயில். தெருமக்களுக்கு காவல் தெய்வம். நாள்தோறும் ஐயர் வந்து அபிஷேகம், ஆரத்தி செய்வார். மார்கழி மாதங்களில் மாதம் முழுவதும் பூஜை. சிவராத்திரியில் சிறப்பு பூஜை நடைபெறும்.

மார்கழி மாதத்தில் அதிகாலையில் திருப்பாவை, திருவெண்பாவை பாடல் ஒலி பரப்புவார்கள். நான் சிறுவனாக இருந்தபோது இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.


கும்பாபிஷேகம்

முனீஸ்வரன் மற்றும் இரண்டு பக்கமிருந்த விநாயகர் மற்றும் முருகன் விக்ரகங்களை எடுத்துச் சுத்தம் செய்தார்கள். அதற்கு முன்பு இத்தெய்வங்களின் ஆற்றலை யாகசாலையில் உள்ள கலசங்கள் மீது டிரான்ஸ்பர் செய்து சுத்தம் செய்த பின்பு மீண்டும் சக்தியை டிரான்ஸ்மிட் செய்து, கலச நீரை கோபுரத்தின் உச்சியில் ஊற்றினார்கள்.

இந்தக் கோயில் மிகச்சிறப்பாக புனரமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கு ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் 'அமுதுப்படையல்' விழா நடைபெறுகிறது.

## விநாயகர்

தெருவில் தாமரைக்குளத்தின் வடக்குக் கரையில் அமைந்திருப்பது தங்க விநாயகர் ஆலயம். இக்கோயில் தனியார் ஒருவர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். எனது தந்தையாரும் பென் அன் கோ உரிமையாளர் திரு. கலியமூர்த்தியும் சேர்ந்து இக்கோயிலை தெருவாசிகள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். எனது பால்ய பருவத்தில் இங்கும் எனது நாட்கள் கழிந்துள்ளன.

பாமனி ஆற்றங்கரையில் ஒரு பிள்ளையார். நாள்தோறும் குளித்துவிட்டு அவரை வணங்காமல் வந்ததில்லை. இன்று இக்கோயில் சிறப்பாக சிறிய அளவில் புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஊரிலே மிகவும் பிரபலமானது ஒத்தைத் தெரு ஆனந்த விநாயகர். இப்பிள்ளையார் எனது மாணவப் பருவத்தில் மனதில்

கலந்தவர். தேசிய மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ளது. இக்கோயிலைக் கடந்துதான் நான் பள்ளிக்கூடம் செல்லவேண்டும்.

பள்ளி செல்லும் நாட்களில் காலையிலும் மாலையிலும் ஆனந்த விநாயகரைத் தரிசித்து, விநாயகர் அகவலைச் சில வரிகளைப் பாடிவிட்டு மூன்று பிரகாரம் சுற்றிவிட்டுத்தான் செல்வேன். அடாத மழை பெய்தாலும் இவ்விநாயகர் வழிபாடின்றி பள்ளிக்கூடம் செல்லமாட்டேன்.

பரீட்சை நேரங்களில் நானும் சுகுமாரும் ஆனந்த விநாயகரை பயத்துடன் வழிபடுவோம். அவருக்கு இன்னின்ன பூக்கள் சாத்தியிருந்தால் தேர்வுகளில் வினாக்கள் இப்படி இருக்கும் என்று எங்களுக்குள்ளே ஒரு வரையறைச் செய்து வைத்திருந்தோம்.

தேர்வு முடிவுகள் வரும் முதல்நாள் ஆனந்த விநாயகருக்கு சிதறுதேங்காய்கள் உடைப்பதாகப் பிரார்த்திப்போம். என்னுடைய கணக்குப்படி அவருக்குப் பல ஆயிரம் தேங்காய் பாக்கியுள்ளது.

**மாரியம்மன்**

மாரியம்மன் கோயில் ஊரின் நடுபாகத்தில் அமைந்துள்ளது. ஊர்த் தெய்வமாகவே மக்கள் வழிபடுகிறார்கள். இங்கு ஒரு பூசாரி இருப்பார். வேப்பிலை அடித்து விபூதி கொடுப்பார். சிறுவயதில் இவரிடம் விபூதி சாப்பிட்டதுண்டு. வேப்பிலைச் சுற்றியதுண்டு.

கண்நோய், அம்மை நோய்க்கு மாரியம்மன் காப்புத் தெய்வமாக வணங்கப்படுகிறார். ஊருக்கு அருகில் இருக்கும் மேலவாசலில் ஒரு மாரியம்மன் கோயில் உண்டு.

கண்ணகி கோயில்தான் மாரியம்மன் கோயிலாக இருக்கிறது. மழையம்மன்தான் மாரியம்மனாயிருக்கிறது. கேரளாவில் இது பகவதி கோயிலாகிறது. தமிழ்நாட்டில் கேரள தமிழ்நாட்டின் எல்லைப்பகுதியான குமுளி, தேக்கடிக்கருகில், பெரியாறு, பேரியாற்றக்கரை சூழ்ந்த மலை உச்சியில்தான் கண்ணகிக்கு மூலக்கோயில் உள்ளது. இது சேரன் செங்குட்டுவன் கோயில். இதை மங்கலதேவி கண்ணகிக் கோட்டம் என்று இப்பகுதியில் அழைத்து வருகின்றனர்.

இதற்கு அடுத்து, கேரளாவில் பகவதி கோயில் சேரனால் பிடிமண் எடுத்துக் கட்டப்பட்டது. அதையொட்டி, கேரளப் பகுதிகளில் பகவதி கோயில் இருக்கிறது. அம்மன் கோயில் என்ற பொருளிலே பகவதி கோயில் இருக்கிறது. இது போல் தமிழ்நாட்டில் பிடிமண் கோயில் மாரியம்மன் கோயிலாகியிருக்கிறது.

இருக்கன்குடி மாரியம்மன், வீரபாண்டி மாரியம்மன், சமயபுர மாரியம்மன், தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன், கண்ணாடி மாரியம்மன், சேலம் கோட்டை மாரியம்மன் ஆகிய கோயில்கள் பெயர்பெற்ற கண்ணகியின் பிடிமண் கோயில்கள். இந்தப் பிடிமண் கோயில்களிலிருந்து பிடிமண் எடுத்து வந்து அந்தப் பகுதிகளில் மாரியம்மன் கோயில் கட்டியிருக்கிறார்கள்.

## செல்லியம்மன்

மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் உப்புக்காரத் தெருவிலும், ராகவன் தெருவிலும் செல்லியம்மன் கோயில் உள்ளன. இந்தக் கோயில்களில் மாசி மாதத்தில் காப்புக் கட்டுவார்கள். திருவிழா முடிந்ததும் காப்பு அவிழ்ப்பார்கள். காப்பு கட்டியபின் ஊரைவிட்டு யாரும் வெளியே செல்லக்கூடாதென்பது விதி. இத்திருவிழா முடிந்ததும் பெரிய கோயில் பங்குனி விழா தொடங்கும்.

இக்கோயில் விழாவில் அக்கினிச் சட்டி, மாவிளக்கு வழிபாடு உண்டு. ஆடு பலியிடுவார்கள். பத்து வயதில் முதன் முதலாக இக்காட்சியைக் கண்டு பயந்தது மனதில் பதிந்துள்ளது. ஆட்டின் பின் காலை ஒருவர் பிடிக்க தலையை மற்றொருவர் பிடிக்கத் மீசை வைத்த பூசாரி ஒரு வீச்சரிவாளால் ஒரே வெட்டில் வெட்டிச் சாய்க்கிறார்.

பூமியெல்லாம் இரத்தம். வெட்டப்பட்ட ஆட்டின் உடல் சிறிது நேரம் பதைபதைத்து ஒடுங்குகிறது. பல ஆடுகள் பலி கொடுத்தனர். இந்நிகழ்ச்சி என் மனதில் நீங்கா வடுவாகி, பின்னாளில் உயிர்க் கொல்லாமையில் உறவு பூண்டு முழுமையாகச் சைவ உணவுக்காரனாக என்னை மாற்றியது.

கடாவெட்டு நிகழ்ச்சி முடிந்தவுடன், அவற்றை வெட்டியவர்கள் வீடுகளுக்கு எடுத்துச்சென்று விடுவார்கள். அங்குச் சமையல் நடக்கும். உறவினர்களுக்கும் விருந்தினர்களுக்கும் விருந்து வைப்பார்கள். கோயிலிலேயே வெட்டிய கடாவை அறுத்துச் சோறாக்கி அங்குள்ளவர்களுக்கு விருந்தும் வைப்பார்கள்.

வழிபாடு முடிந்தவுடன் மேளக்காரர்கள் முழக்கத்தோடு, அம்மனை வழிபடுகின்றனர். செல்லியம்மன் பந்தலடி வரை அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வந்து செல்லும்.

நம்மில் பெரும்பான்மையோர் கிராமவாசிகளாக இருந்த காரணத்தினால் படிப்பறிவில்லாதவர்களாக இருந்தார்கள்.

இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் நம் தெய்வங்களைப் பற்றிய தத்துவங்களை, வரலாறுகளை எழுத்து வடிவில் பார்க்கவில்லை. முன்னோர் செய்த பழக்கம் வழக்கமாகி வந்துள்ளது.

## காளியம்மன் கோயில்

தஞ்சை மாவட்ட ஊர்களில் அம்மன் தெய்வங்கள் இல்லாது இல்லை. அம்மன் தெய்வங்கள் முக்கியமாக வழிபடப்படுகின்றன. அம்மன் தெய்வங்களில் காளியம்மன் கோயில் எல்லா ஊர்களிலும் இருக்கின்றன. காளியம்மன் கோயில் ஊர்தெய்வக்கோயிலாக இருக்கிறது.

எங்கள் ஊரில் வாணக்காரத் தெருவில் காளியம்மன் கோயில் உள்ளது. வருடத்திற்கு ஒருமுறை மாசி மாதத்தில் தீமிதி திருவிழா சிறப்பாக நடைபெறும். இறைவனைத் தொழுவது எத்தனையோ விதங்களில் மனிதர்களால் வெளிப்படுத்தப்படுகிறது. தனது பிரார்த்தனைகள் நிறைவேறும்போது கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதமாக **'குண்டம் இறங்குதல்'** அல்லது **'தீமிதித்தல்'** எனப்படும் பூமிதித்தல் திருவிழாவை மனிதர்கள் கொண்டாடுகிறார்கள்.

சமையல் அறையில் சிறு நெருப்புப் பட்டாலே அல்லது சூடானப் பாத்திரங்களைத் தொடும்போதோ தீக்காயங்கள் ஏற்படுவது வழக்கம். ஆனால் பூமித் திருவிழாவில் தீயில் இறங்கும்போது அதிகக் காயம் ஏற்படுவதில்லை. இதற்கு என்ன காரணம் தெரியுமா? இறைவன் அருளோடு தண்ணீரில் முதலில் காலில் நனைத்த பின்னர் குண்டம் இறங்குவர்.

கால்களில் உள்ள நீர் சூட்டினால் ஆவியாகி தீக்கும் தோலுக்கும் இடையே ஒரு படலமாக மாறும். மேலும் கரியின் வெப்பக் கடத்தும் திறனும் மிகக்குறைவு. மேற்கூறிய இரண்டு காரணங்களோடு, உடலின் பிற பகுதிகளைவிட பாதங்களில் உள்ள தோல் சிறிது தடிமனாக இருப்பதாலும் அதிகத் தீக்காயங்கள் தவிர்க்கப்படுகிறது.

ஆனால் கரியின் வெப்பநிலை அளவு கொண்ட எந்த ஒரு உலோகத்தின் மீது நாம் நடந்தாலும் மிக அதிக அளவு பாதிப்புகள் உண்டாகும். மனம் உருகி பிரார்த்திக்கும் போது இறைவன் அருள் ஒன்றே நம்மைக் காக்கும் கருவியாகிப் போகும்.

அன்று பள்ளிக் கூடத்திலிருந்து சீக்கிரம் வந்து விடுவேன்.

அம்மன் கோயிலுக்கு முன்பு பெரிய பாத்திகளில் தகதகவென நெருப்புத் துண்டுகள் கனல் விட்டுக் கொண்டிருக்கும். தொடக்கத்தில் சிறிய பாத்தியில் நீர் இருக்கும். கரகமும், கப்பரைச்

சட்டியும் தூக்கிக் கொண்டு நெருப்புக் குண்டத்தில் நடந்து செல்வார்கள். வேண்டுதல் செய்த பக்தர்களும் தீமிதிப்பார்கள். இதைப் பார்க்கப் பார்க்க ஆவலாக இருக்கும். இந்தத் திருவிழா எப்போது வரும் என்று சிறுவர்களாகிய நாங்கள் காத்துக் கொண்டிருப்போம்.

காளியம்மன் கோயில்களில் அக்கினிச்சட்டி இல்லாது வழிபாடு இருக்காது. பொதுவிலும் அக்னிச் சட்டிகள் எடுப்பார்கள். நேர்த்திக் கடனாகவும் எடுப்பார்கள்.

குழந்தைப் பருவத்தில் நான் மிகவும் நோய்வாய்ப் பட்டிருந்தேனாம். ஊரில் இருந்து அம்மா பாட்டி வந்திருந்தார்கள். அவர்கள் கனவில் ஒரு பெண் வந்து எனக்கு குணமாகும் என்று சொன்னார்களாம். நீ யாரம்மா என்று கேட்க வாணக்காரத் தெருவில் இருக்கிறேன் என்றாராம் அப்பெண்.

பொழுது விடிந்ததும் வாணக்காரத்தெருவில் என்ன இருக்கிறது என்று பாட்டி அம்மாவிடம் கேட்க காளியம்மன் என்று அம்மா சொன்னதும் அனைவரும் திகைத்துப் போய் விட்டார்களாம்.

அன்றிலிருந்து தீமிதியன்று எங்கள் வீட்டிலிருந்து அனைவரும் சென்று மாவிளக்குப் போடுவார்கள். இரவு வரும் கரகத்திற்கும் அக்னிச்சட்டிக்கும் தேங்காய் பழ ஆரத்தி எடுப்பார்கள். இது என் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவமாக பதிந்துள்ளது.

**அங்காள பரமேஸ்வரி - மயான சூறை**

எல்லா ஊர்களிலும் சிவராத்திரி மறுநாள் அங்காள பரமேஸ்வரி மயான சூறை உற்சவம் நடக்கும். மக்கள் நலனுக்காக பேய் பிசாசுகளை விரட்ட வருடத்தில் ஒருநாள் சுடுகாட்டிற்கு அம்மனை எடுத்துச் சென்று பூஜை செய்து வருவார்கள்.

கீழ்ப்பாலத்தைத் தாண்டி அங்காளம்மன் தெருவில் பரமேஸ்வரி அம்மன் கோயில் உள்ளது. அன்று கொடிச்சப்பரத்தில் அம்மன் நகரில் உலா வருவார். சப்பரத்திற்கு முன்பு அங்காளம்மன் வேஷம் போட்ட ஒருவர் மேளதாளத்துடன் ஆடிவருவார். இதனைப் பார்க்க சுற்றுக் கிராமங்களில் இருந்து எல்லோரும் வருவார்கள். மதியம் அரை நாள் ஸ்கூலுக்கு லீவு எடுத்து விடுவோம். அங்காளம்மன் துரத்தத் துரத்த ஓடி வருவோம்.

கொடிச்சப்பரம் எங்கள் தெருவில் நின்றுவிடும். அங்காளம்மன் மட்டும் சுடுகாட்டுக்குச் செல்லும். சிறுவர்களாகிய எங்களுக்கு

அங்குச் செல்ல அனுமதி இல்லை. சுடுகாட்டில் பிணத்தின் எலும்புகளைக் கடித்துச் சாப்பிடும் என்று பேசிக் கொள்வார்கள். அம்மா மயான சூறைக் கதையை விலாவரியாகச் சொல்வார்கள்.

பிரம்மனுக்கும் சிவனுக்கும் நான்கு தலைகள் இருந்ததால், பிரம்மன் தானும் சிவனும் ஒருவரே என்று ஆங்காரம் கொண்ட பிரம்மனின் ஒரு தலையைச் சிவன் பிய்த்து எடுத்துவிட்டார். ஆனால் அந்தத் தலை அவர் கையில் ஒட்டிக் கொண்டு கபாலம் கீழே விழாமல் தோஷம் அடைந்து உடலில் ஆடை ஏதும் இல்லாமல் சுடுகாட்டில் அலைந்தார்.

உமையாள் காளியாக பயங்கர உருவம் எடுத்துக் கபால மாலையுடன் அங்காள பரமேஸ்வரியாக சுடுகாட்டில் வந்து நர்த்தனமாடி சிவனின் கையிலிருந்த கபாலத்தைப் பிய்த்து எறிந்தார். சிவராத்திரியின் மறுநாள் அமாவாசையன்று இது நடந்ததால் அங்காளபரமேஸ்வரி கபாலத்தைப் பிய்த்து எறிந்து இடுகாட்டில் இருந்த பேய்களை அடக்கினாராம்.

அங்காளம்மனைப் பார்த்து அது விரட்ட விரட்ட ஓடி வந்த பழைய நாட்கள் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது. அது சுடுகாட்டுக்குப் போய் எலும்பு தின்றதைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மட்டும் அப்படியே இருக்கிறது.

## குலதெய்வங்கள்

இனத்தின் உட்பிரிவுகள் குலம். அதனை வடமொழியில் கோத்திரம் என்று சொல்வர். ஆங்கிலத்தில் 'Clan' என்று வழங்குவர். 'கோத்ரா' வடமொழி சொல் 'Clan' என்று மொழி பெயர்க்கப்பட்டு பரவலாக இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. Clan என்பதற்கு, மரபுக்குழு, பங்காளிக் கிளை, குலமரபு, கூட்டம் என்று பொருள் படுகிறது.

ஒரு குடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்து போய் அக்குடும்பங்கள் எல்லாம் ஒரே உறவு முறையாகும் போது குலம் ஆகிறது. அதாவது பல பங்காளி உறவு முறையைக் குலம் என்று அழைத்து வருகின்றனர். முன்னோர் ஒருவரின் மரபு வழியில் வந்த உறவினர்களால் அமைந்த அமைப்பே குலமாகிறது. எனவே, ஒரு வழி மரபினைக் கொண்டதே குலமாகும். குலத்தின் தெய்வம் குலதெய்வமாகும்.

ஒரு வீட்டிற்குத் தெய்வமாக இருந்து, பல வீடுகளாக உறவு முறை விரியும் போது குலத்தெய்வமாக மாறுகிறது. ஒரு கோயிலை வணங்கும் முறையால் குலம் இனம் காணப்படுகிறது. ஒரு

குறிப்பிட்ட கோயிலைக் கும்பிடுபவர்கள் எல்லாம் பங்காளிகளாக இருப்பர்.

அக்கோயிலைக் கும்பிடுபவர்களுக்குள் மண உறவுமுறை செய்யக்கூடாது. வேறு கோயிலை வணங்குபவர்களோடுதான் திருமணம் உறவு கொள்ள வேண்டும். நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இதைச் சிறப்பாகக் கடைபிடித்து வருகிறார்கள். கோயிலை வைத்துத்தான் அவர்கள் உறவுமுறைப் பிரிக்கப் படுகிறது.

குலத்தெய்வக் கோயில்கள் பெரும்பாலும் மாலைத் தெய்வக் கோயில்களாகவும், சமாதி தெய்வக் கோயில்களாகவும் உள்ளன. தங்கள் குடும்பத்தில் வாழ்ந்து தெய்வ நிலைக்கு உயர்ந்த பெரியோர்களை வணங்குவதாகக் குலத் தெய்வங்கள் இருக்கின்றன.

கருப்பசாமி, அய்யனார், முனியசாமி, மாடசாமி, காளியம்மாள், மாரியம்மாள் ஆகிய தெய்வங்களும் குலத் தெய்வங்களாகின்றன. நண்பர்களில் சிலர் பெற்றோர்களுடன் வருடம் ஒருமுறை மாட்டுவண்டியில் குலதெய்வக் கோயிலுக்குப் போவதைப் பார்த்தும் போயும் உள்ள அனுபவம் உண்டு.

எங்களுக்கு பழனி முருகன்தான் குலதெய்வம். ஒரு வயசு நிறைந்தவுடன் குடும்பத்துடன் அப்பா அழைத்துச் செல்வார். மொட்டை அடித்துக் காது குத்திவிடுவார்கள். பின்பு ஓய்வும் வாய்ப்பும் கிடைக்கும்போது பழனி சென்று வருவோம். அங்கு போகர் சமாதியில் பலமுறை தனிமையில் அப்பாவுடன் அமர்ந்திருந்த காட்சி இன்றும் பசுமையாக உள்ளது.

## மாதா கோயில்கள்

ஊரில் ஆற்றுக்கு அக்கறையில் ஒரு மாதா கோயில் உண்டு. பின்லே பள்ளியைத் தாண்டி ஒரு சர்ச் உள்ளது.

## ஜைனக் கோயில்

பண்டைய காலத்தில் இங்கு சமணர்கள் அதிகமாக வாழ்ந்தனர். இப்போதும் சில சமணர்கள் வாழ்கின்றனர். ஜைனத் தெருவில் இருக்கும் ஜைனக் கோயில் இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது. 19வது தீர்த்தங்கர் மல்லிநாதர் சிலையைப் பிரதிஷ்டைச் செய்து வழிபட்டு வருகின்றனர். மகாவீரர் 24வது தீர்த்தங்கர். சுமார்

30 குடும்பங்களின் கட்டுப்பாட்டில் கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள ராஜகோபால கோயில் துவஜ்ஸ்தம்பம், ஜைனருடைய மானஸ்தம்பம் போன்றிருக்கிறபடியால் இஃது ஆதியில் சமணக் கோயிலாக இருந்திருக்கக் கூடும் என்று கருதுகின்றனர்.

## அய்யனார்

ஊர்த் தெய்வங்களில் - எல்லா கிராமங்களிலும் இருக்கும் தெய்வம் அய்யனார் ஆகும். பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் திறந்த வெளியில் ஒரு மரத்தடியில் உள்ள பீடத்தில் அய்யனார் சிலை இருக்கும். மண்சிலைதான்.

குதிரை, நாய், வீரர்கள், அய்யனார் சிலைக்குப் பக்கத்தில் இருப்பார்கள். வீரர்கள் தங்கள் தலைவருக்குப் பாதுகாப்பு கவசமாகப் பக்கத்தே இருப்பார்கள். மிருக வாகனங்கள், இரவில் ஊரைக் காக்கச் செல்வதற்கு உரிய வகையில் இருக்கின்றன. இந்த வாகனங்களில்தான் சவாரி செய்து மக்களை அய்யனார் காத்து வருவதாக நினைக்கிறார்கள்.

அய்யனாருக்குத் துணை தெய்வமாக கருப்பசாமி எல்லா ஊர்களிலும் இருக்கிறது. கருப்பசாமியைக் கருப்பண்ணசாமி என்றும் அழைக்கின்றனர். இவர் கோயிலின் முன் வேட்டைக்குச் செல்லும் பாவனையில் இருப்பவர். நாயைக் கட்டியச் சங்கிலியைக் கையில் பிடித்துக் கொண்டு அரிவாளை ஒருகையில் ஏந்திக் கொண்டு கம்பீரமாகத் தோன்றுவார்.

அய்யனார் கோயில் என்றாலே அங்கு காவல்தெய்வமாகக் காத்துக் கொண்டிருக்கும் தெய்வம் கருப்பச்சாமியாக இருக்கும்.

அய்யனார் ஊரின் முன்னோடித் தெய்வம். அத்தெய்வத்திற்குத் தான் முதற்பூசை.

எங்கள் ஊரில் மூர்க்க வினாயகர் கோயில் தெருவிலும் கீழப்பாலம் சேராங்குளம் அருகிலும் அய்யனார் இருக்கிறார்.

அய்யனார் ஊர்மக்களைக் காப்பதற்காக - தீய சக்தியிலிருந்து காப்பதற்காக எப்போதும் இரவு வேளைகளில் குதிரை மீது சவாரி செய்து ஊர்வலம் போவார் என்ற நம்பிக்கை. அவ்வாறு இரவு வேளைகளில் செல்லும்போது எதிரில் வருவோர் பிழைப்பதரிது என்பது மக்கள் நம்பிக்கை. அய்யனார், கருப்பசாமி 'வேட்டைக்குச் செல்லும் நேரம்' என்றே மக்கள் வழக்கில் பொழுதைக் கணக்கிட்டுக் கூறுகிறார்கள்.

அய்யனார் துடியானத் தெய்வம். சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட தெய்வம் என்று மக்கள் நம்புகிறார்கள். அதுவே சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட தெய்வமாக மதிக்கிறார்கள். கொடுக்கல் வாங்கல் தகராறு, திருட்டுக்குற்றம் ஆகியவற்றைத் தீர்க்கும் நீதிபதியாக அய்யனாரை மதிக்கிறார்கள்.

அய்யனார் முன் சத்தியம் பண்ணினால், போதும். குற்றம் செய்தவர் நிச்சயம் தண்டிக்கப்படுவார் என்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும். சர்வாதிகாரிகளில் நல்லெண்ணம் படைத்த சர்வாதிகாரி போன்று அய்யனார் துடியானத் தெய்வங்களில் நல்ல தெய்வமாக மதிக்கப்படுகிறார்.

**முக்கிய கோயில்கள்:**

- ✦ கைலாச நாதர் கோயில்
- ✦ அண்ணாமலைநாதர் கோயில்
- ✦ ஜெயங்கொண்டாநாதர் கோயில்
- ✦ பாமனிநாதர் ஆலயம்
- ✦ காசிவிஸ்வநாதர் ஆலயம்
- ✦ அருள்மிகு காமாட்சியம்மன் கோயில்
- ✦ அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயம்.

மக்கள் தீய சக்திகளின்றும் தங்களைக் காக்க வேண்டியும் ஊர்த் தெய்வங்களை வணங்குகிறார்கள். ஒட்டுமொத்தமாக ஊரார் எல்லாம் நோய்வாய்ப்பட்டு இறக்காது இருக்கவும் ஊர்தெய்வங் களை வணங்குகிறார்கள். ஊர்தெய்வம் என்பது மக்களின் காவல்தெய்வம் என்பது நம்பிக்கை. நம்பிக்கைத்தானே வாழ்க்கை.

# கோயில்பாதி; குளம் பாதி

இளமை என்பது மனித இனத்தின் மாபெரும் அற்புதம் நிறைந்த பகுதியாகும். இளமை என்பது வாழ்வின் கவிதையாகும். ஒவ்வொருவரும் அவரது இளமைப் பருவத்தில், அவர்களது வாழ்வின் மற்ற பருவங்களில் இருந்ததைவிடச் சிறந்தவர்களாகவே இருந்துள்ளனர்.


இளமையிலேயே எங்களூர் பெரிய கோயில் என்னுள் ஆழமானப் பதிவை ஏற்படுத்திவிட்டது.

கலைச் சிறப்புமிக்க புகழ்பெற்ற மன்னார்குடி ராஜகோபால்சுவாமி, கோயில் பாதி, குளம் பாதி, என்னும் தீர்த்தச் சிறப்புமிக்கது. இவ்வூரில் துருவாச தீர்த்தம், திருப்பாற்கடல், கோபிகா தீர்த்தம், ருக்மணி தீர்த்தம், அக்னிகுண்ட தீர்த்தம், கிருஷ்ண தீர்த்தம், சங்கு தீர்த்தம், சக்கர தீர்த்தம், பாம்பனி ஆறு என்னும் புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

இத்திருத்தலத்தில் ஓரிரவு தங்கினாலும் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் கிட்டும். மற்ற புண்ணியத்தலங்களில் ஒரு கோடி ஆண்டுகள் தவமியற்றி பெரும் பலனை, இத்திருத்தலத்தில் வீற்றிருக்கும ஹரித்திராநதிக் கரையில் ஓராண்டில் அடையலாம் என்றும் நாரதர், கோபிகர், கோப்பிரனாயரிடம் கூறியதாக வரலாறு நமக்கு கூறுகிறது.

இந்தச் சோழநாடு என்றுமே சோடைப் போகாத நாடு; வளமுள்ள நாடு; வளர வேண்டிய நாடு; வளர்ந்து கொண்டிருக் கின்ற நாடு.

கடவுள் எடுத்த அவதாரங்கள் 10. இந்த அவதாரங்களிலேயே முழுமையாகக் கருதப்படுவது இராமவதாரமும், கிருஷ்ணவதாரமும் ஆகும். ஆயிரம் ஆண்டுகள் தொன்மை மிக்க பழமையான **கோவில் மன்னார்குடி ராஜகோபாலஸ்வாமி கோயிலாகும்.**



**ஸ்ரீராஜகோபால சுவாமி திருக்கோயில்**

'இக்கோயிலைக் கட்டி முடிக்க சுமார் 50 ஆண்டுகள் ஆனது' என வரலாறு கூறுகிறது. தமிழகத்தின் தலைசிறந்த வைணவத் திருத்தலங்களுள் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பது அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில்.

கோயில் 16 கோபுரங்களுடன் பிரம்மாண்டமான முறையில் அமைந்துள்ளது. 154 அடி உயரமுள்ள ராஜகோபுரமும், 54 அடி உயரமுள்ள கருடஸ்தம்பமும் கோயிலின் அழகுக்கு அழகு சேர்ப்பவை.

மதிலழகு மன்னையிலே, ராஜமன்னார் சிறப்பாக கோலோச்சும் கண்ணனாக, மாடு மேய்க்கும் மன்னனாக ஸ்ரீவித்யா ராஜ கோபாலனாக அமர்ந்திருப்பது மன்னையின் **மைந்தர் அத்தனைப் பேருக்கும் பெருமை.**

ஸ்ரீ வித்யா ராஜகோபாலன் என்பது அவன் எல்லைகளைத் தாண்டி அறிவின் உச்சியில், வித்தையின் உச்சியிலே இருப்பவன் என்று பொருள்படுகிறது. அதை எடுத்துக் காட்டும் வகையில் தான் தனது இரண்டு காதுகளிலுமே ஸ்ரீசக்கரத்தை உடைய தோடு அணிந்திருக்கிறான்.

**'திருவாரூர் தேரழகு, மன்னார்குடி மதிலழகு'** என்பது தொன்றுதொட்டுவரும் ஒரு வழக்கு. தமிழனுக்கு வருடந்தோறும் திருவிழா. மன்னையின் மாதவனுக்கோ நாள்தோறும் விழா.

திருமஞ்சனம், ஆடிக்கு பூரம், ஆவணியில் பவித்ரோஸ்வம், புரட்டாசியில் நவராத்திரி விழா, ஐப்பசிக்கு தீபாவளி விழா, கார்த்திகைக்கு தீப விழா, மார்கழி பஜனை, தைக்கு பொங்கல், மாசிக்கு மகம், பங்குனிக்கு உத்திர விழா, பங்குனியில் 18 நாள் திருவிழா முடிந்து விடையாற்றி விழா, ஆனியில் தெப்பத்திருவிழா 10 நாட்கள். இப்படி இன்னும் ஏராளமான திருவிழாக்கள் நடக்கின்றன. கோயிலுக்கு 1000 ஏக்கருக்கு மேல் பாசன நிலங்கள் சொந்தமாக உள்ளன.

இந்த நாட்களில் நண்பர்களுடன் கோயிலில் இருப்போம். இக்கோயிலின் உறவு பால்ய வயதிலிருந்து இன்றும் தொடர்கிறது.

## திருக்கோயில் வரலாறு:

திருக்கோயில் கட்டப்பட்ட காலம் கி.பி. 1122 என முதலாம் குலோத்துங்க சோழனது கல்வெட்டால் அறியமுடிகின்றது. நம் மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி கருவறை குலோத்துங்க சோழன் காலத்திலேயே எழுப்பிக்க பெற்றதால் குலோத்துங்க சோழ விண்ணகரம் என்று அழைக்கப்பட்டது.

மேலும் குலோத்துங்க சோழன், இராஜகோபாலசுவாமி கருவறையை மட்டுமல்லாது அர்த்த மண்டபம், மூன்றாம் கோபுரம் ஆகியவற்றையும் கட்டினான். ஆகவே முதற் குலோத்துங்க சோழனால் எழுப்பிக்கப்பெற்ற கருவறையுடன் இக்கோயில் பின் வந்த பல மன்னர்களால் பெரிதும் வளர்ந்து மன்னர்களின் உள்ளத்தைக் குடிகொண்டு மன்னார்குடியாகத் திகழ்ந்தது.

நாயக்க வம்சத்தில் சிறந்தவராகத் திகழும் இரகுநாத நாயக்கர் (1600-1634) பல கோயில் பணிகளைச் செய்தார். இவர் நம் இராஜகோபால சுவாமிக்கு மண்டபம் அமைத்தார். அடுத்துப் பட்டமெய்தியவர் விஜயராகவ நாயகர் (1933-1973) இவருக்கு

மன்னாருதாசன் என்ற பெயரும் உண்டு. விஜயராகவ நாயக்கருக்கு நம் மன்னார்குடி அருள்மிகு இராஜகோபால் சுவாமியே குலதெய்வம் ஆவார்.

இவர் திருச்சிக்கருகில் 50 கல் தொலைவிலிருந்த மாமலை என்ற ஊரிலிருந்து கருங்கற்களைக் கொணர்ந்து இக்கோயிலுக்கு ஐந்து பெரிய கோபுரங்களையும், பலவண்ணச் சிற்ப வேலைப்பாடுகளையும் செய்தார் என்று அக்கெஸட்டியர் கூறுகிறது.

இக்கோயிலில் திருப்பள்ளியறையின் முன்னால் உள்ள தூணின் அடிவாரத்தில் அச்சிதப்ப நாயக்கர் விஜயராகவ நாயக்கர் அவர் மனைவி சம்பகலக்ஷ்மி ஆகியோர் கூப்பிய கரங்களுடன் சிற்பமாக விளங்குகிறார்கள். உத்ஸவ காலங்களில் பெருமாள் இச்சிலைகளருகே எழுந்தருளி நிற்கும்போது ஸதானீர்கள் (தீட்சதர்கள்) "அனைத்துலகும் ஆண்ட அச்சுத விஜயராகவ மன்னார்தாசனுக்கு அருளிப்பாடி" என்று அருட்பாட்டிடுவர்.

இக்கோயில் பிரகாரங்களையும் நந்தவனங்களையும், ஹரித்ரா நதி படிக்கட்டுகளையும் அமைத்தவரும் இராஜகோபால சுவாமிக்கு நவரத்தின கவசம், வைரமுடி ஆகியவையும் செய்து சமர்ப்பித்து வழிப்பட்ட பெருமையும் விஜயராகவ நாயக்கருக்கே உரிதாகும்.

## திருக்கோயிலின் சிறப்பு :

தென்னகரத்து விண்ணகரமாம் மன்னை மாநகரத்து ஸ்ரீராஜகோபால்ஸ்வாமி திருக்கோயில் ஆறு சதுர ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

7 பிரகாரங்கள், 24 சந்நிதிகள், நீண்ட நெடிதுயர்ந்த மதில்கள், அழகான ஏழு மண்டபங்கள் கொண்ட இம்மாபெரும் திருக்கோயில் கவின்மிகு சிற்பங்களும் கட்டடக் கலை நுட்பங்களும் கொண்ட கலைப்பெட்டகம்.

கிழக்குப் பகுதி ராஜகோபுரம் 154 அடி உயரமுடைய விண்ணைத் தொடும் உயரமுடன் கம்பீரமாய் காட்சியளிக்கிறது. இக்கோயிலுக்கு ஏழு பிரகாரங்கள் என நோக்குமிடத்து ஏழாவது பிரகாரம் எது என வினா எழுகிறது.

வீதிகளையும் பிரகாரமாகக் கணக்கிடுவது அக்கால வழக்கம். இன்றைக்கு கோபாலசமுத்திரம் என்று கூறப்படும் நான்கு வீதிகளையும் சுற்றி பிரளயகால வீதி என்ற நான்கு வீதிகள் இருந்தன எனவும் இன்று அவை மறைந்துவிட்டன என்பர்.

கோபாலசமுத்திரம் நான்கு வீதிகளும் ஆறாவது பிரகாரமாகும். இந்நான்கு வீதிகளும் முற்காலத்தில் பெரிய அகழிகளாக இருந்தமையால் கோபாலசமுத்திரம் எனப்பெயர் பெற்றிருக்கலாம் எனவும் பின்னர் வீதிகளாக மாறிய பின்னரும் பழைய பெயரையே சந்நிதிக்குச் செல்லும் பாதைநீங்க அகழி சூழ்ந்திருந்ததென்பதை நில அளவுக் கணக்குகளிலிருந்து காண முடிகிறது.

**மூலவர்** : ஸ்ரீதேவி, பூதேவி சமேத வாசுதேவப் பெருமாள் (நின்ற திருக்கோலம்)

**உற்சவர்** : செண்டலங்காரர் எனப் போற்றப்பெறும் ஸ்ரீருக்மணி சத்யபாமா சமேத ஸ்ரீராஜகோபாலன்

**தாயார் மூலவர்** : ஸ்ரீ செங்கமலத் தாயார்.

மூலவர் வாசுதேவப் பெருமாள், விஷ்ணு சஹஸ்ரநாமங்களை மாலையாக அணிந்து கொண்டிருக்கிறார். உற்சவர் ராஜ கோபாலன் ஒரு காதில் மட்டும் குண்டலம் அணிந்து, ஒரே ஒரு வஸ்திரம் அணிந்து ஏகவஸ்திரதாரியாகக் காட்சியருளுகிறார்.

இதன் காரணம் ஹரித்ராநதி எனும் பெரிய தெப்பக் குளத்தில் (1158 அடி நீளம் * 847 அடி அகலமுடைய 23 ஏக்கர் பரப்பளவு விரிந்து பரந்த திருக்குளம்) ஸ்ரீ பெருமாள் ஜலக்கிரீடை முடிந்து கரையேறியபோது அங்கே ஒரு பட்டாடையும், ஒரு குண்டலமும், ஒரு தோடும் (தாடங்கமும்) இருந்தது.

கோபால கோபிரளய முனிவர்களின் தவத்தினை மெச்சி கண்ணன் துவாரகையில் செய்தருளிய 30 லீலைகளை மன்னார்குடியில் காட்சித் தந்தபோது 30வது கோலம் இன்று நாம் காண்கின்ற ஸ்ரீராஜகோபாலன் உற்சவர் திருக்கோலம்.

## ஸ்ரீசந்தான கோபாலன் :

கோயிலின் பெருமாள் சன்னிதியில் பாலசுவாமிகளால் பூஜிக்கப்பெற்ற 5 தலைநாகத்தின் அணைப்பில் கால்விரலை வாயில் வைத்துக் கொண்டு குழந்தையாகக் காட்சித் தரும் ஸ்ரீசந்தான கோபாலனைக் கையில் வாங்கிப் பிரார்த்தனைச் செய்பவர்களுக்கு வேண்டிய வரம் அருள்வான் என்கிறது தல வரலாறு.

## சதுர்யுகம் கண்ட பெருமாள் :

நான்கு யுகங்களிலும் பெருமாள் ஸ்ரீராஜகோபாலன் அருள் பாலித்தமையால் சதுர்யுகம் கண்ட பெருமாள் என்றழைக்கப் படுகிறார்.

கிருதயுகத்தில் பிரம்மாவும், திரேதாயுகத்தில் ஸ்ரீலெட்சுமியும், ப்ருகு முனிவரும், துவாபரயுகத்தில் அக்னிதேவனும், கோபில கோபிரளய முனிவர்களும், கலியுகத்தில் சோழ, நாயக்க மன்னர்களும், ஸ்ரீ மணவாள மாமுனிகள், ஹேத்ரக்ஞர், முத்துசாமி தீட்சிதர், தியாகப் பிரம்மம், ஸ்ரீராஜூ சாஸ்திரிகள், ஸ்ரீபராங்குச தேசிகர் என எண்ணற்ற அருளாளர்கள், இசைமேதைகள்.....

நாள்தோறும் திருவிழாதான் நம் மன்னையம்பதியில், நித்ய உற்சவப் பெருமாள் என்றழைக்கப்படும் ஸ்ரீராஜகோபாலனுக்கு வருடந்தோறும் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

## படிதாண்டாப் பத்தினி - தாயார் :

ஸ்ரீசெங்கமலத் தாயார், மன்னார்குடி ஸ்ரீராஜகோபால் ஸ்வாமி கோயிலில் நம் பண்பாட்டு மரபிற்கேற்ப படிதாண்டாப் பத்தினியாகத் திகழ்கிறார்.

5வது பிரகாரமாக விளங்கும் "நாச்சியார்பிரகாரம்" அருள்மிகு செங்கமலத் தாயாருக்கு தேரோடும் பிரகாரமாகும். இவ்வாறு தேரோடும் வீதி கோயிலினுள் அமைந்திருப்பது வேறெங்கும் இல்லாத தனிச்சிறப்பாகும்.

## மன்னார்குடி ஸ்தலம் குறித்து காஞ்சி சுவாமிகள் :

யதீந்த்ரர் இராமானுஜர் அபிமானித்தது திருநாராயணபுரம் யதீந்த்ரப்ரவணராண ஸ்ரீமணவாள மாமுனிகள் அபிமானித்தது ராஜமன்னார்கோயில். இந்த மன்னார்குடியை நம்மாழ்வார் வண்டுவராபதி என்று கூறுவார். புராணம் சம்பகாரண்யம் என்றும் தென்துவாரகை என்றும் கூறும் ஸ்தலபுராணப்படி இது 108 விஷ்ணு ஸ்தலங்களில் ஒன்றாகும்.

'தீர்ப்பாரையாமனி', 'மாசறுஜோதி என்ற இரு திருவாய்மொழிப் பாடல்களால் **நம்மாழ்வார்** இப்பதியைப் பாடியிருக்கிறார். கோபால விம்சதியும், கமலாஸ்துதியும் மணவாள மாமுனிகளின் அனுபவ ஜனிதமான க்ரந்தங்கள், மாமுனியளித்த கோபாலனுக்கு ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாமங்களம் பாடினார்.

வண்டுவராபதி மன்னனுக்கு ஸ்ரீவித்யாராஜ கோபாலன் என்பது புராணப்பெயர். ஸ்ரீவித்யாசக்கரத்திற்கு அதிஷ்டான தேவதை வேணுகோபாலன்.

நம்மாழ்வாரால் தொழப்பட்ட வண்டுவராபதி மன்னன், மணிவண்ணன், வாசுதேவன், மணியிலணி நிறமாயன் என்று

இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் நான்கு அச்சாமூர்த்திகளின் அசாதாரண திருநாமங்கள் ஆக இந்த க்ஷேத்ரம் ப்ரம்மாதி தேவதைகளாலும், ரிஷிகளாலும், ஆழ்வார்களாலும் ஆச்சார்யார் களாலும் புகழப்பட்ட ஒரு சிறந்த திவ்யதேசமாகும்.

## கெருடஸ்தம்பம்

கோயிலுக்கு எதிரில் 54 அடி உயரமுள்ள ஒற்றைக்கல் கெருட ஸ்தம்பம் கம்பீரமாக நம்மை வரவேற்கிறது. கம்பத்தின் மேல் தளத்தில் கருடனுக்கு ஒரு சிறிய அழகிய கோயிலும் உள்ளது. கருடன் கைகூப்பிய கரங்களுடன் மேற்கு நோக்கி விளங்குகிறார். கருட ஸ்தம்பத்தில் இராஜகோபாலன், அனுமன், அச்சுதப்ப நாயக்கர், அவரது தேவி மூர்த்தியம்மாள் ஆகியவர்கள் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளன.

## ஹரித்திரா நதியின் சிறப்பு

தமிழகத்திலேயே, இந்தியாவிலேயே மிகப் பெரிய திருக்குளமாக 23 ஏக்கர் பரப்பளவு கொண்ட முதன்மையாக திகழும் ஹரித்திராநதி என்றழைக்கப்படும் தெப்பக்குளம் மன்னைக் கோயிலின் வரலாற்றுச் சிறப்பமாகும்.

இத்திருக்குளத்தில் ஸ்ரீராஜகோபாலன் ஜலக்கிரீடை செய்த போது அந்த கன்னியவர்கள் உடலில் பூசியிருந்த மஞ்சள் (அரித்திரா) மற்றும் நறுமணப் பூச்சுப் பொருட்கள் இந்த தீர்த்தத்தில் படிந்துள்ளதால் இத்திருக்குளம் ஹரித்திராநதி (மஞ்சள்நதி) என்ற காரணப் பெயரால் அழைக்கப்படுகிறது.

இத்திருக்குளம் காவிரித்தாயின் மகள் என்றும், அறுபத்தாறு கோடி புண்ணிய தீர்த்தங்கள் ஒன்று சேர்ந்தது என்றும் புராணச் செய்திகள் உண்டு. இத்திருக்குளத்தில் ஆனிமாதம் நடைபெறும் தெப்பத்திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்தது.

பத்து நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் 9ம் நாள் பௌர்ணமி நிலவு ஒளியில் ஹரித்திராநதி திருக்குளத்தில் ஸ்ரீராஜகோபாலன் ருக்மணி சத்யபாமாவுடன் தெப்பத்தில் பவனி வரும் தெப்பத்திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பால்ய வயதில் தெப்பத்தில் அமர்ந்து எம்.எஸ்.சுப்புலட்சுமியின் கச்சேரி கேட்ட அனுபவம் இன்பமயமானது.

மன்னார்குடி தீர்த்தங்களில் நீராடினால் காசிக்குச் சென்ற புண்ணியம் கிடைக்கும்.

மன்னை நகருக்கு புண்ணிய தீர்த்தங்கள் உடைய நகர் என்றும்

காசியை விட வீசம் அதிகப் புண்ணியம் என்றும், "மஞ்சள் நதி" என தமிழிலும், வடமொழி "ஹரித்ராநதி" என்றும் அழைக்கப்படும்.

இக்கோவிலின் திருக்குளத்தில் ஸ்ரீகோபாலன் கோபிகைகளுடன் ஜலக்கிரீடைக் கண்டதாலும் அவனது திருமேனி சம்பந்தப்பட்டதாலும் கூடிய சிறப்புடையதாக இந்த தீர்த்தத்திலும் ஐப்பசி மாதம் பாமணி ஆற்றிலும், கார்த்திகை மாதம் அக்னி தீர்த்தமான கோபிரயைத் தீர்த்தத்திலும், மார்கழி மாதம் கிருஷ்ணதீர்த்தத்திலும், தை மாதம் திருப்பாற்கடல் தீர்த்தத்திலும் புனித நீராடினால் பல புண்ணியங்களை அடையலாம்.

திருமணமாகாதவருக்கு திருமணமும், மக்கட்பேறு இல்லாதவருக்கு மக்கட்பேறும் பெற்று மேலும் தோஷம், வியாதிகள் நீங்கி வாழலாம் என நாரத முனிவருக்கு பிரம்மா கூறியதாக **பிரமாண்ட புராணம். நாரத புராணங்களில்** அறிய முடிகின்றது.

ஊரில் சுமார் 80 கோயில்களும் சுமார் 70 குளங்களும் உள்ளன. எனவே, கோயில் பாதி குளம் பாதி என்று பெருமையுடன் அழைக்கிறார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயிலில் என் கால் படாத இடங்களே இல்லை என்பதை நினைக்கும்போது பெருமையாக இருக்கிறது.

❖❖❖





மாவீரன் நெப்போலியன வாழ்வில்
100
சுவையான நிகழ்ச்சிகள்

இதைக் கையில் எடுத்துவிட்டால் படித்து முடித்து விட்டுத்தான் கீழே வைக்க முடியும். அந்த அளவுக்குச் சிறப்பாக இதைச் செய்து முடித்திருக்கிறார் இந்நூலாசிரியரும் எனது இனிய நண்பருமான பானுகுமார் அவர்கள்.
பல நூல்களைப் படித்து உண்மை விபரங்களை சேகரித்து, ஒழுங்குபடுத்தி ஒரு அழகிய நூலாக உருவாக்கி இருக்கிறார்.
தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

உலகம் இதுவரை கண்ட மாவீரர்களில் முக்கியமான ஒருவர் நெப்போலியன். அவருடைய வாழ்க்கை திரைப்படங்களைவிட அதிக திருப்பங்கள் கொண்டது. நெப்போலியன் வாழ்க்கையில் நடந்த 100 சுவையான நிகழ்ச்சிகளை சிறு கதைகளைப் படித்த மன நிறைவு ஏற்படுகிறது.
தினத்தந்தி : 19.01.2005.

மாவீரன் நெப்போலியன் வரலாற்றை தெளிவாக விளக்கும் வகையில் அவரது வாழ்க்கையிலே நடந்த நூறு சுவையான சம்பவங்களைத் தொகுத்து கூறும் நூல்.
தினமணி : 20.01.2005.

ஒரு வீர வரலாற்றை நூறு நிகழ்ச்சிகளில் அடக்கிய ஆசிரியரின் திறமை பாராட்டுக்குரியது.
பொதிகை தொலைக் காட்சி.

# பங்குனித் திருவிழா

ஒரு தனிமனிதன் அடைகிற மகிழ்ச்சி. குடும்பத்தோடு அடைகின்ற மகிழ்ச்சி. சமூகத்தோடு அடைகின்ற மகிழ்ச்சி ஆகியவையே திருவிழாக்களின் நோக்கம்.

மக்களை அன்றாட நிகழ்வுகளில் இருந்து அப்புறப்படுத்தி சந்தோஷப்படுத்துவது திருவிழாக்கள். உயர்வு தாழ்வினை அகற்றி மக்களை ஒன்றுப்படுத்திப் பார்க்கும் வைபவம்.

பல்வேறு தொழிலாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் வாழ்வு கொடுக்கும் திருவிழாக்கள் சமுதாயத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி, போக்கு, மறுமலர்ச்சி, வீழ்ச்சி முதலியவற்றை அந்தச் சமுதாயம் காலம் காலமாகப் போற்றிக் கொண்டாடி இருக்கும் விழாக்களின் வழி அறிய முடியும்.

மன்னார்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராம மக்களை உற்சாகப்படுத்துகின்ற மாதிரி பங்குனித் திருவிழா மற்றும் பல திருவிழாக்கள் நடைபெறும் - பல மண்டகப்படிகள் இருக்கும்.

ஸ்ரீராஜகோபாலனுக்கு ஆண்டுதோறும் ஆண்டு முழுவதும் உற்சவங்களே. அதனாலேயே **நித்ய உற்சவப் பெருமாள்** என்றழைக்கப்படுகிறார். அதில் பங்குனி ப்ரம்மோற்சவம், ஆனிதெப்போற்சவம், வைகுண்ட ஏகாதசி ஆகியன மிக முக்கியமானவையாகும்.

பங்குனி ப்ரம்மோற்சவம் என்பது பிரம்மாவே முன்னின்று நடத்திய திருவிழாவாகும். இன்றளவும் பிரம்மாவே திருவிழாவை நடத்துவதாக ஐதீகம்.


வேறெங்கும் இல்லாத வகையில் பங்குனித் திருவிழா (30 நாட்கள்) நடைபெறுவது தனிச் சிறப்பாகும். 18 நாட்கள் திருவிழாவும் தொடர்ந்து 12 நாட்கள் விடாயாற்றி விழாவும் மன்னார்குடியில் எங்கு காணினும் விழாக்கோலம்தான்.

புன்னை வாகனம், ஹம்ச வாகனம், கோவர்த்தன கிரி, பஞ்சமுக அனுமார், கண்ட பேரண்ட பட்சி, பல்லாக்கு, ரிஷிமுக பர்வதம், சிம்ம வாகனம், சூரிய பிரபை, சேஷ வாகனம், ஹனுமார் வாகனம், நாள்தோறும் ஒரு வாகனத்தில் பெருமாள் வருவார்.

**கண்ட பேரண்டபட்சி :**

விலங்குகளில் யானையை விட சிங்கம் வலிமையுடையது. சிங்கத்தைவிட யாளி (சரபம்) வலிமை மிக்கது. இவை எல்லாவற்றையும் விட கண்ட பேரண்ட பட்சி (இருதலைப்றவை) வலிமையுடையது.

அத்தகையக் கண்ட பேரண்ட பட்சியையே தன் வாகனமாக ஸ்ரீராஜ கோபாலன் கொண்டிருப்பதால், அனைவரையும் காக்கும் மஹாசக்தி படைத்தவனாகிறான்.


கண்ட பேரண்ட பட்சி

ஐந்துத் தலைகளையுடைய ஸ்ரீஹனுமார் வாகனம் மிகச் சிறப்புவாய்ந்ததாகும். ஐந்து முகங்களும் ஐந்து வெவ்வேறு வண்ணங்களில் இருக்கும்.

மேலும் தங்கெருட சேவை, தங்க குதிரை வாகனம், தங்க சூர்யப்பிரபை, வெள்ளிசேஷ வாகனம், வெள்ளி ஹனுமந்த வாகனம், கோரதம், திருத்தேர் முதலியன சிறப்பு வாய்ந்த திருவிழா நாட்களாகும்.

திருமலையைப்போல மன்னார்குடி பெருமாளுக்கு ஒவ்வொரு நாளும் கண்ணைக் கவரும் அலங்காரம் பார்க்க அழகாக இருக்கும். வேணுகோபாலன் அலங்காரம், இராஜ அலங்காரம், கிருஷ்ண திருக்கோலம், மரவுரி ராமர் திருக்கோலம், மாட்டையடி அலங்காரம், பட்டாபிராமன் திருக்கோலம், வைரமுடி சேவை, தங்க கருட சேவை, காளிங்க நர்த்தன சேவை, ஆண்டாள் திருக்கோலம், கோதண்ட ராமர் சேவை, திருக்கல்யாணம், செட்டியார் திருக்கோலம் என்ற அலங்காரங்கள் வேறு எந்த ஊரிலும் பார்க்க முடியாது.

நாள்தோறும் இரவு ஏழுமணிக்கு சாமி புறப்படும் முன்னே யானைச் செல்ல ராஜாராணி பொம்மைகள், தீப்பந்தம் பின்தொடர பல்லக்கில் விதவிதமான அலங்காரங்களில் பெருமாள் வருவார். பந்தலடியில் ஒருமணி நேரம் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் சமயத்தில் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

புகழ்பெற்ற வித்வான்கள், தவில், நாதஸ்வரம், கிளாரனட், புல்லாங்குழல், வீணை, வாய்ப்பாடு என்ற பல்வேறு கச்சேரிகள் நடைபெறும். கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக அமையும்.

தினந்தோறும் வாணவேடிக்கைகள் இருக்கும். குறிப்பாக சூர்யபிரபை, கெருடசேவை, வெட்டுங்குதிரை விழாக்களில் விதவிதமான வாண வேடிக்கைகள் நடைபெறும். ஒரு மணி நேரம் நடக்கும் வாண வேடிக்கை கண்ணைப் பறிக்கும் வண்ணம் இருக்கும்.

பெரிய கோயில் வாசலில் இரண்டு புறமும் திடீர்க் கடைகள். விளையாட்டுப் பொம்மைகள், பந்து, தண்ணீர் பந்து, வேடிக்கைச் சாமான்கள், மணிகள், வளையல்கள், குங்குமம், பலகாரங்கள், வியாபாரம் களைகட்டும்.

பக்கத்திலேயே பொரிகடலை, சர்பத் வண்டி, மிளகாய் பொடி கலந்த மசாலா பொரி, சுண்டல், வறுத்தக் கடலை, கரும்புச்சாறு, பஜ்ஜிகள் கடைகளில் கூட்டம் அலைமோதும். அங்கங்கே அலைந்து கொண்டிருக்கும் மக்கள். இளைஞர்களின் விளையாட்டு, இளம் ஜோடிகளின் காதல் - வியப்பூட்டு விஷயங்கள் நிறைய இருக்கும்.

விதவிதமான ராட்டினங்கள் இருக்கும். குடை ராட்டினம், ராட்சச ராட்டினம் என்று சுற்றி மகிழ்வோம். ராட்டினத்தில் குதிரை, புலி, சிங்க பொம்கைமள் மீது அமர்ந்துதான் சுற்றி இரசிப்போம்.

தொட்டி ராட்டிணத்தில் பயணம் செய்த அனுபவம் பரவசமாக இருக்கும். நண்பர்களுடன் உட்கார்ந்த சீட்டில் பிடிமானமோ, பெல்டோ இல்லை. கொஞ்சம் உஷாராக உட்கார வேண்டிய கட்டாயம். ராட்டினம் ஒரு குலுக்கலுடன் புறப்பட்டு, நாங்கள் உட்கார்ந்திருந்த இருக்கை சர்ரென்று வானத்தில் ஏறியது. சரசரவென்று வளைந்து ஓடி, தடாலென்று சறுக்கிக் கொண்டு அதலபாதாளத்தில் கீழே சரிந்தது.

சிறுகுடல் பெருங்குடலைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வாய்க்கே வந்துவிடும் போலிருந்த அந்த அனுபவங்கள்.

இருந்தாலும் ராட்டினத்தின் பயணத்தை ரசிப்போம். திடீர் திடீரென வரும் ஏற்ற இறக்கங்களை ஆனந்தமாக அனுபவிப்பேன்.

லயிப்புக்கு என்ன காரணம்? பயம்!

பயணம் முடிந்து கீழே இறங்கியதுமே அத்தனைப் பேர் முகத்திலும் அப்படியொரு சிரிப்பு. அவரவர் பயத்தைப் பற்றி ஜோக் அடித்துக் கொள்வோம். நிஜம்தானே. எதிர்பாராத ஏற்ற இறக்கங்கள் இவை எல்லாம் சந்தோஷம் கொடுக்க வல்லதுதானே!

ஒட்டுமொத்தமாக பார்த்தால் ராட்டினப் பயணம் எப்படி திரில்லான அனுபவமோ, ஜாலியான சந்தோஷமான அனுபவமோ அது மாதிரிதான் மனிதனின் வாழ்க்கையும்.

ராட்டினம் மாதிரியே வாழ்க்கையில் வரும் ஏற்றத் தாழ்வுகளையும் ரசிக்கக் கற்றுக் கொண்டால் போதும். வாழ்க்கை வசந்தமாகும்.

பெரிய பூமி போன்ற கூண்டுக்குள் மோட்டார் சைக்கிள் சுற்றும் இடத்தில் 'ரிங்ரிங்' என்று சத்தம் ஒலிக்கும். மனிதத்தலை, பாம்பு உடல் அதிசயக் காட்சி, குட்டி சர்க்கஸ் என்று அங்கங்கே கட்டணம் செலுத்திப் பார்த்து மகிழ்வோம்.

## வெண்ணெய்த்தாழி :

வெண்ணெய்த்தாழியன்று காலை கண்ணன் தவழ்ந்த நிலையில் வெள்ளிக்குடமேந்தி, பல்லக்கில் வரும்போது, பக்தர்கள் வெண்ணெயால் குடத்தை நிரப்பி கண்ணன் திருமேனி முழுவதும் வெண்ணெயால் அர்ச்சித்து மகிழ்வார்கள்.

ஸ்ரீராஜகோபாலன் திருமேனி முழுவதும் வெண்ணெயால் நிரம்பி வழிந்து ததும்பும்.

காலை 7.30 மணிக்கு நவநீத சேவை ராஜகோபாலசாமி தவழும் குழந்தை கண்ணன் அலங்காரத்தில் பல்லக்கில் கோவிலில் இருந்து புறப்படுவார். கோவில் முன்பு கருடஸ்தம்பம் வந்து கோவிலைச் சுற்றியுள்ள கோபாலசமுத்திரம், கிழக்கு வீதி, தெற்குவீதி, மேற்குவீதி, வடக்கு வீதி வழியாக மீண்டும் கிழக்கு வீதி வந்தடைவார்.

தொடர்ந்து மேலராஜவீதி, காமராஜர் வீதி, பெரிய கடைத்தெரு, பந்தலடி, காந்தி ரோடு வழியாக பக்தர்களுக்கு தரிசனம் தந்து காந்தி ரோட்டில் உள்ள வெண்ணெய்த்தாழி மண்டபத்தை சென்று அடைவார். வீதிகள் தோறும் பக்தர்களும், பெண்களும் கோபாலனுக்குப் பிடித்தமான வெண்ணையை கோபாலன் மீது 6

தெளிப்பார்கள். காலைத் திருவிழாவை **யாதவர் சமூகத்தினர்** செய்வார்கள்.

மதியம் 3 மணிக்கு வெண்ணெய்த்தாழி மண்டபத்தில் செட்டி அலங்காரத்தில் ராஜகோபாலசுவாமி பக்தர்களுக்கு தரிசனம் தருகிறார். ஊரே ஜனத்திரளாகக் காட்சியளிக்கும்.

## தேர்த்திருவிழா

கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பது வசனம். தேர், கோபுர வடிவத்தில் அமைந்த மேற்பகுதியைக் கொண்டது. நமக்கு புண்ணியம் தேடித்தர அது வீதியில் வருகிறது.

பூதாகாரமாக மரத்தில் டன் கணக்காகச் செதுக்கி வைக்கப் பட்ட தேரை சற்று அருகில் சென்று அக்கறையோடு கவனித்தால் அங்கே நாம் அருமையான தச்சு வேலையில் தசாவதாரம், ராமாயணம், சிவலீலைகள், கீதாபதேசம், கந்தலீலைகள், இப்படி நம் அரிய இதிகாச புராணக் காட்சிகளைப் பார்க்கலாம்.

கோவிலுக்குள்ளே கற்சிற்பங்கள் என்றால் வெளியே தேரில் மரவேலைப்பாடுகள், கலை நுணுக்கம் மிகுந்த கவினுறு காட்சிகள் அவை. ஊரேதேர் செல்வதற்கான வீதியமைப்புக் கொண்டிருக்கும்.

அந்த ராஜவீதிகளைத் தேரோடும் வீதி என்று சொல்வார்கள். வீதிவலமாக வரும்போது ஒவ்வொரு வீதியின் முடிவிலும் நேரே சிறிது தூரம் குறுகிய சந்து செல்லும். அதை வடம் போக்கி சந்து என்பர்.

கீழவீதியில் செல்லும் தேரை, தெருக்கோடியில் உள்ள வடம் போக்கி சந்து தொடங்கும் வரையில் இழுத்து சென்று வடத்தை வெளியே எடுத்து வந்து தெற்கு வீதியில் இழுக்கத் தொடங்குவார்கள்.

இப்படியே தேர் செல்லும். ஆங்காங்கு வீட்டு வாசலில் அர்ச்சனைக்கு அளிக்கும் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, சூடத்தைத் தேர் மேலேயிருந்து கயிற்றில் தொங்கும் குடலையில் வாங்கி, மேலே இழுத்து அதே போல திருப்பி வாங்குவார்கள்.

தேர் ஆடியாடி வருவதே தனி அழகு. மேலே எங்கிருந்தோ நாதஸ்வர கலைஞர் இன்னிசை வழங்குவார். அசைந்தாடிகள், அலங்காரங்கள் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்பவையாக இருக்கும்.

வீதியெல்லாம் ஜே ஜே என்று ஆரவாரம். ஊர்க்காரர்கள் எல்லோரும் சேர்ந்து வடம் பிடித்து இழுப்பார்கள். ஊர் கூடி தேர்

இழுத்தல் என்பது பழமொழி. சாதி, குலம், உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரன் போன்ற வேறுபாடுகளை மறந்து அனைவரும் அடுத்து அடுத்து நின்று ஆம், ஒருவர் மீதொருவர் இடித்துக் கொண்டு, துணை நின்று ஒருசேர வடம் பிடித்து வியர்க்க, விறுவிறுக்க சப்தம் போட்டுக் கொண்டு உற்சாகமாக இழுப்பதுதான் தேர்த்திருவிழாவின் தனித்துவம்.

திருத்தேரினை பொதுமக்கள் இழுப்பது தான் பல்வேறு ஊர்களில் நாம் பார்ப்போம். ஆனால் மன்னார்குடியில் ஆடிப்பூர தாயார் திருத்தேர் விழாவின் போது சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக மன்னை தேசிய மேல்நிலைப்பள்ளி மாணவர்களே தேரினை இழுத்து நிலைக்கு கொண்டு வந்து சேர்ப்பர்.

தேரில் சாமியை ஏற்றி எல்லோருமாக சேர்ந்து உடலுழைப்பினால் சமூகத்தோடு ஒத்துழைத்து, தெருவெல்லாம் இழுத்து, தேர்முட்டிக்கு அல்லது நிலைக்கு கொண்டு சேர்க்க பொறுப்பேற்று, அதற்கேற்ப பணியாற்றுவது பக்தியும் பணிவும் நிறைந்த தொண்டு.

உடல் வலிமையும் உள்ளத்தில் உரமும் பெற்றவர்கள் முதியவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் தேர்த்திருவிழாவை நடத்தி வைப்பதில் பெருமை கொள்கிறார்கள்.

திருவிழா என்றாலே ஞாபகத்திற்கு வருவது பலூன்தான். இந்த ஊரில் திருவிழா என்ற தகவல் பலூன்காரர்களுக்கு எப்படித்தான் தெரியுமோ?

சவ்வுமிட்டாய் மாதிரி கம்பைச் சுற்றி கட்டப்பட்டிருக்கும் பலூன்கள். துப்பாக்கியால் சுடுவதற்கு தயாராக இருக்கும் பலூன்கள், கேஸ் பலூன்கள் என்று திருவிழாக்களில் பலூன் காரர்கள் அதிகம். குழந்தைகளைக் கவர்வது பலூன்கள்தானே.

குச்சிப் பலூனை ஊதியதும் அதன் காற்று வெளியேற்றத்தில் சத்தமிடும் ஊதுகுழல் பலூன் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நண்பர்களுடன் சென்று பலூனை வாங்கி ஊதுவோம். கலர் கலராய் கையில் பிடித்துக் கொண்டு இன்பப் போதையில் களித்திருப்போம்.

பால்ய வயதில் திருவிழாவில் பிடித்தது, சவ்வு மிட்டாய்கள், விதவிதமான பொம்மைகள், கடிகாரம் என்றெல்லாம் மிட்டாய்காரர்கள் செய்து கொடுத்து அசத்துவார்கள். ரோஸ் கலரில் பஞ்சுமிட்டாய் அங்கங்கே விற்றுக் கொண்டிருப்பார்கள். நண்பர்களுடன் அங்கே முற்றுகையிட்டு விரும்பி வாங்கிச் சாப்பிடுவோம்.

வெண்ணெய்த்தாழி, கருடசேவை, வெட்டுங்குதிரை போன்ற நாட்களில் அங்கங்கே கரகாட்டம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, உபன்யாசம் என்று சகலமும் நடக்கும். குறவன் குறத்தி ஆட்டம் நடக்கும்.

## கரகாட்டம்

கரகம் என்பது, பூரணக் கும்பம் போன்ற வடிவுடைய அமைப்பு. இதைப் பல்வேறு விதங்களில் அலங்கரித்து வைத்து, தலையில் வைத்துக் கொண்டு ஆடுவதாகும். பல்வேறு மெய்ப்பாடுகளைக் காட்டி ஆடும்போது, பக்க வாத்தியங்கள் பலவும், கேட்போரைப் பரவசமூட்டும் வகையில் அமைந்திருக்கும். அப்படியெல்லாம் ஆடும்போதுகூட, தலையில் வைத்திட்ட அந்தக் கரகம் விழுந்து விடாமல் ஆடிட வேண்டும். நளினமான நாட்டுப்புறக் கலையான கரகம் ஊர் கோவில் விழாக்களில் பிற சமூக விழாக்களிலும் சிறப்பிடம் பெறும்.

## பொய்க்கால் குதிரை

பொய்க்கால் குதிரை, இரும்புப் பூண் பதித்த கட்டைக் கால்கள், அதன்மீது நின்றபடி நல்ல எடையுள்ள பொய்க் குதிரையைக் கட்டையை மாட்டிக் கொண்டு தொடர்ந்து ஆடுவது அழகாக இருக்கும். நிஜக்காலில் ஆட்டம் இருக்கிறது என்றாலும், பொய்க்காலில் சவால் இருக்கிறது. கட்டைமேல் நின்று பேலன்ஸ் செய்தபடி வெவ்வேறு அசைவுகளைக் காட்டுவது வியப்பாக இருக்கும்.

கூட்டத்தின் ஓரம் நையாண்டி மேளம், உறுமி, இரட்டைக் கொட்டு, நாயனம்.

கால்களில் சலங்கைக் கட்டு பொய்க்காலுடன் பொய்க்கால் குதிரை. பொய்க்காலிலும் கலைப் பிறப்பதை அந்தக் கிராமியக் கலைஞன் நிரூபிக்கிறான்.

பொய்க்கால் குதிரைக்கு இணையாக மயில் ஆடுகிறது. நையாண்டி மேள வாசிப்புக்குத் தகுந்த மாதிரி காலடி வைப்பு நடக்கிறது. மின்னல் வேகத்தில் மயில் சுற்றிப் பார்க்கிறது.

மின்னல் வேகப் பறப்புக்கு ஈடுகொடுக்க முடியாமல் மேளக்காரன் திணறுகிறான்.

கூட்டத்திற்கு உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. கிறுகிறுத்துப் போய் நிற்பார்கள்.

பங்குனித் திருவிழாவில் மயிலாட்டம், பொய்க்கால் குதிரை கண்டிப்பாக இருக்கும்.

**கிருஷ்ண தீர்த்தம் :**

பங்குனி மாத ப்ரம்மோற்சவ நிறைவில் கோவிலுக்கு அருகேயுள்ள அழகிய நீராழி மண்டபத்துடன் கூடிய கிருஷ்ண தீர்த்தம் எனும் திருக்குளத்தில் ஸ்ரீராஜ கோபாலன் தெப்போற்சவம் கண்டருளுவார்.

கோவிலிலுள்ள கோபுரங்கள் மீது விழும் மழைநீர், பரந்த முற்றவெளியில் பெய்யும் மழைநீர் அனைத்தும் இக்குளத்தில் சேகரமாகும் வண்ணம் திருக்குளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. **சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னதாகவே மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் நம் முன்னோர்கள் இதனை உருவாக்கியிருப்பதை காணும்போது, வியப்பும், பெருமையும் மேலிடுகிறது.**

பங்குனிப் பெருவிழா 30 நாட்களிலும் பல்வேறு சாதிச் சங்கங்கள், பல்வேறு சமூக, வணிக அமைப்புகள், அரசு ஊழியர் சங்கங்கள் பொறுப்பேற்றுத் திருவிழாவினை பன்னெடுங் காலமாக சிறப்புடன் கொண்டாடி வருவது சமூக ஒற்றுமைக்கு, சமுதாய நல்லிணக்கத்திற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

மேலும் விழா நாட்களில் ஸ்ரீராஜகோபாலனுக்கு முன் மேள வாத்தியங்கள், யானைக்கும் முன்னதாக நாலாயிர திவ்வியப் பிரபந்த கோஷ்டியினர் தமிழ்ப் பாசுரங்களைப் பாடிச் செல்வது, தமிழ்மொழியின் சிறப்பை முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

ஸ்ரீராஜகோபாலனே தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில், தீந்தமிழ்ப் பாசுரங்களைப் பாடச் செய்து பக்தர்களுக்கு அருட்காட்சித் தருவதும், காணக்கூடிய ஒருபேறாகும்.

வேதபாராயணக் குழுவினர் ருக், யசூர், சாம வேதங்களை ஓதி ஸ்ரீராஜகோபாலன் பின்னால் வருவர். ஓசை நயத்துடன் தமிழ்ப் பாசுரங்களைப் பாடிவரும் அந்த அந்தணப் பெரியோர்களின் அழகிய பாடல்கள் காண்போரையும் கவரும், கருத்தையும் கவரும். இத்துணைப் பெருமைகள் கொண்ட ஸ்ரீராஜகோபலன் பங்குனிப் பெருவிழாவினைக் கண்டு, தரிசித்த அந்த நாட்களை மனம் என்னும் பொக்கிஷத்தில் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறேன்.

❖❖❖

# கல்வெட்டுக்கள்

கல்வெட்டுக்கள் கலாச்சாரத்தைக் காட்டும் கண்ணாடி. வரலாற்றை அறிய உதவும் காலப்பெட்டகம். மன்னார்குடி கல்வெட்டுக்களை - நூலகத்தில் படித்தபோது ஆச்சரிய மடைந்தேன். நண்பர்களுடன் இக்கல்வெட்டுக்களை அடிக்கடி சென்று பார்ப்பதுண்டு.

கங்கை கொண்டானாகிய இராஜேந்திர சோழனின் மூத்த மகன் இராஜாதி ராஜனாவான். கி.பி. 1018 முதல் 1054 வரை அரசு புரிந்தான். இவனுக்கு 'ஜெயங்கொண்டான்' என்ற சிறப்புப் பெயர் இருந்ததை இவனது மெய்க்கீர்த்தியால் அறியலாம்.

மன்னார்குடியில் சோழர்காலத்திய கோயில்கள் நான்கு உள்ளன. இவைகளில் உள்ள எல்லா கல்வெட்டுக்களிலும் ஊரின் பெயர் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் என்றே அழைக்கப் படுகிறது. இன்று ஏன் மன்னார்கோயில் (குடி) என்று மாறிவிட்டது. வரலாற்றைப் பார்ப்போம்.

இவ்வூரில் உள்ள ஜெயங்கொண்டநாதர் சிவன் கோயில் இராஜாதிராஜனின் சிறப்புப் பெயரால் எடுப்பிக்கப்பட்டது. கல்வெட்டுகளின் இராஜாதிராஜ சதுர்வேதி மங்களத்து ஜெயங்கொண்ட சோளீஸ்வரர் என்றே அழைக்கப்படுகிறது.

சோழர்களின் நண்பனான போசள மன்னன் வீரராமநாதனின் கல்வெட்டின் (கி.பி.1258) கோயிலுக்கு உரிய முந்நூற்று நாலு மாநிலமும் அதிலிருந்து ஆண்டொன்றுக்கு வரும் ஆயிரத்து அறுநூற்று முப்பத்திரண்டு கலம் நெல்லும் குறிப்பிடப்படுகின்றன.

சோழமண்டலத்தில் போசனரின் ஆதிக்கத்தைப் பாண்டியர் முறியடித்தனர். இப்பணியை வெற்றிகரமாக செய்து முடித்தவர்கள் இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியனும், (1250-76) அவனது தம்பி முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனும் (1250-83) ஆவார்கள். சமஸ்தனபுனேசுவீர என்னும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் விக்கிரமபாண்டியனின் கல்வெட்டு ஒன்று இக்கோயிலில் உள்ளது.

பிடாரிகோயில், மதுராந்தக ஈஸ்வரமுடையார் கோயில், கருமாணிக்க விண்ணகர் எம்பெருமான் விஷ்ணு கோயில், முதலாம் இராஜராஜன் பெயரால் விளங்கிய ஜகந்நாத விண்ணகர் எம்பெருமான் விஷ்ணு கோயில் ஆகியவையும் அவைகளுக்கு உரிய நிலங்களும் குறிப்பிடப்படுகின்றன. (இக்கோயில்கள் இன்று இல்லை).

மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டு (கி.பி. 1343) ஜெயங்கொண்ட சோளீஸ்வரமுடையார் கோயிலில் அத்தியானம் பண்ணும் ஆறு பட்டர்களுக்கு நிலம்அளித்ததைக் கூறுகிறது. ஒரு கல்வெட்டு 1303 இல் முடி சூடிய நாலாம் சுந்தரப்பாண்டியனுக்கு உரியது. இதன் காலம் 1314 புரட்டாசி மாதம் 16ம் தேதி வெள்ளிக்கிழமை.

சாரிகைக் கோட்டையில் விக்கிரமபாண்டியன் மடிகையின் நான்கு திசை பதினென் விஷயத்து வணிகர்கள் கோயிலில் கூடினார்கள். சாரிகைக் கோட்டைக்கு வரும் மிளகுப் பொதி ஒன்று உழக்கு மிளகும், புடவை (துணி) கட்டு ஒன்றும் பணம் காணியும் வரி வித்தனர். இதனைக் கொண்டு கோயிலில் திருப்பணியும், கறியமுது படைத்திடவும் நிவந்தம் ஏற்படுத்தினர்.

அடுத்தக் கல்வெட்டு இந்த சுந்தரபாண்டியனின் தங்கை மகனான ஐந்தாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனுக்கு உரியது. இவன் கி.பி. 1304ல் முடி சூடியவன். இக்கல்வெட்டின் காலம் கி.பி. 1316 தை மாதம் ஏழாம் தேதி வெள்ளிக்கிழமை. சாரிகைக் கோட்டை புவனேகவீரன் மடிகை நகரத்தாரும், நான்கு திசை பதினென் விஷயத்து வணிகரும் கோயிலில் கூடினார்கள்.

கோட்டையில் புகும் பாக்குப் பொதி ஒன்றுக்கு உழக்கு பாக்கு வரி விதித்தனர். இதன் வருவாயைக் கொண்டு ஜெயங்கொண்ட சோளீஸ்வரர்க்கு அமுதுபடி சாதித நிவந்தம் செய்தனர்.

இவ்வூரில் உள்ள கைலாசநாதர் கோயிலும் இராஜாதிராஜன் பெயரால் எடுக்கப்பட்டது. கி.பி. 1216 முதல் 1261 வரை ஆண்ட இரண்டாம் இராஜராஜனின் கல்வெட்டுகள் நான்கு உள்ளன.

இராஜாதிராஜ சதுர்வேதி மங்களத்து ஸ்ரீகைலாசமுடையாரான இராஜாதி ராஜ ஈஸ்வரமுடையார் கோயில் என்றே குறிப்பிடப்படுகின்றது.

கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள் விரிவாக கூறப்பட்டுள்ளன. கி.பி. 1242ல் போசள மன்னர் வீர சோமேஸ்வரனின் பிரதானி கம்பண்ணதெண்ட நாயகன் அம்மன் கோயிலைக் கட்டினான். இவ்வூரில் போசளர், சோழர்களின் படைவீரர்கள் இருந்ததும் சொல்லப்பட்டுள்ளது. மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியன் காலத்தில் (கி.பி. 1300) கையிலாயமுடையார் கோயிலில் ஸ்தாபன மண்டபம் கட்டப்பட்டது.

சோழன் பெயரால் அழைக்கப்பட்ட இராஜாதிராஜ ஸ்வரமுடையார் என்னும் பெயர் நீக்கப்பட்டு இருப்பதைக் கவனிக்க வேண்டும். மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டின் காலம் கி.பி. 1342 மார்கழி மாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமை. ஒரு பிராமண பெண் ஸ்ரீகைலாசமுடையார் கோயிலுக்கு இரண்டு மாநிலம் விற்றதைக் கூறுகிறது.

மன்னார்குடியில் உள்ள அண்ணாமலைநாதர் கோயில் மூன்றாம் இராஜேந்திர சோழன் காலத்தில் கி.பி. 1258ல் கட்டப்பட்டது. திருவிடைமருதூர் உடையாள் தாய் அம்மை பெரியாச்சி என்பவள் இராஜேந்திர சோழ திரு அண்ணாமலை உடையார் என்னும் திருநாமத்தால் ஸ்ரீகோயிலும், திருமுற்றமும், திருவிடைவளாகமும், தீர்த்தக்குளமும், திருநந்தவனமும் எடுப்பித்தாள். கோயிலுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன.

1266ல் முடிசூடிய கொங்குபாண்டியன் இராஜகேசரி வீரபாண்டியனுடைய கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இதன் காலம் கி.பி. 1284 புரட்டாதி மாதம் 22ம் தேதி வெள்ளிக்கிழமை. சாரிகைக் கோட்டைப் பதினென் விஷயத்தூர் வணிகர்கள் கோயிலில் கூடினார்கள். கோயில் திருப்பணிக்கும், திருஅமுதுக்கும் உடலாக கோட்டைக்கு வரும் மிளகுபொதி ஒன்றுக்கு உழக்கு மிளகாக வரிவிதித்தார்கள். இவ்வருவாயைக் கோயிலுக்கு அளித்தனர்.

இராஜகோபால ஸ்வாமி கோயில் கல்வெட்டுக்களைப் பார்ப்போம். கர்ப்பக்கிரகத்தில் உள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் முந்தியது. முதலாம் குலோத்துங்க சோழனுக்கு உரியது. இதன் காலம் கி.பி. 1118. எனவே இக்கோயில் இம்மன்னன் காலத்தில் கட்டப்பட்டது என்பதை அறியலாம்.

கோயிலின் பெயர் இராஜாதிராஜ சதுர்வேதி மங்கலத்து நடுவில் திருமுற்றமான குலோத்துங்க சோழ விண்ணகர் ஆழ்வார் கோயில்

என்று உள்ளது. (இராஜாதி ராஜனின் தங்கையின் மகனே குலோத்துங்கன்). இதிலிருந்து இக்கோயில் வைணவக்கோயில் என்றுதான் அறியமுடிகிறது.

மூன்றாம் இராஜராஜ சோழன் கல்வெட்டே (கி.பி. 1239) இது கிருஷ்ணர் கோயில் என்பதை உறுதி செய்தது. வண்டுவராபதி மன்னார்கோயில் என்று தெளிவாகக் கூறுகிறது. மூன்றாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டும் (கி.பி. 1267) இப்பெயரையே உறுதி செய்கிறது. வளமையான துவாரகை நகரின் அரசனின் கோயில் என்பது இதன் பொருள்.

அந்த அரசன் இராஜகோபாலன் அல்லவா! இதே போன்று இராமர் கோயிலாக இருந்தால் திருஅயோத்தி எம்பெருமான் என்று கல்வெட்டுகளில் வரும்) முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (1250-84) கல்வெட்டு சுரங்க அறையில் உள்ளது. கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தம் கூறுகிறது.

இக்கோயிலின் மூன்றாம் கோபுரத்தில் உள்ள கல்வெட்டு கோனேரின்மைக் கொண்டான் என்று தொடங்குகிறது. பொதுவாக எல்லா தமிழ் மன்னர்களும் இப்பெயரைக் கூறுவார்கள். இந்த அரசனின் செங்கோல் ஆட்சிக்கு நிகர் உள்ளவர் எவரும் இல்லை என்பது இதன் பொருள். (கோள் நேர் இன்மை கொண்டான்). மன்னனின் 13வது யாண்டு ஆடிமாதம் வெட்டப்பட்டது.

அரசனின் ஜென்ம நட்சத்திரமான புரட்டாதி மூல நாளில் இ.ராஜாதிராஜ விண்ணகர் கோயில் திருநாள் எழுந்தருள அளித்த நிவந்தம் கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு 13ம் நூற்றாண்டின் எழுத்தின் அமைதியைக் கொண்டது.

அக்காலகட்டத்தில் புரட்டாதி மூலத்தை ஜென்ம நட்சத்திரமாகக் கொண்ட அரசன் முதலாம் சடையவர்ன சுந்தர பாண்டியன் ஆவான். இக்கல்வெட்டு அவனுக்கு உரியது. இதன் காலம் கி.பி. 1263. அப்போது இராஜாதிராஜ விண்ணகர் என்னும் வைணவக் கோயில் ஒன்று இவ்வூரில் இருந்துள்ளது. இன்று அது மறைந்து விட்டது.

கோயிலின் 16 கோபுரங்களின் மேல் பெய்யும் மழைநீர் கீழே வழிந்து கிருஷ்ணதீர்த்தம், சீனிவாச தீர்த்தம் ஆகிய இரண்டு திருக்குளங்களுக்குச் சென்று விழுகிறது. இந்த நீர் புனித நீராக மக்களால் கொண்டாடப்படுகிறது.

கோபுரங்களின் மேல் நின்று பார்த்தால் இந்த கோயிலின் நகரமைப்புத் திட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ளது போன்ற உணர்வு தோன்றும்.

குலோத்துங்க சோழன், விஜயராகவ நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர் ஆகியோரால் இக்கோவில் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் ஒரு பக்கம் ராமர் பாதம் பட்ட இடம் உள்ளது. இங்குள்ள தூண்களில் கருங்கல்லால் தட்டினால் சப்தஸ்வர இனிய ஒலியைக் கேட்கலாம்.

செங்கமலத் தாயார் சன்னிதியிலிருந்து ராமர் பாதத்துக்குப் போகும் வழியில் சங்க நிதி, பதுமநிதி உள்ளன.

இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் உடும்பு சிலை வடிவில் உள்ளது. செங்கமலத் தாயார் சன்னதியில் குரங்கின் சிலை உள்ளது. உடும்பின் கண்பார்வையும், குரங்கின் கண்பார்வையும் இணையும்விதமாக அமைந்திருக்கும் காட்சி கோயிலின் சிறப்பு அம்சமாகும்.

இந்தக் கோயிலின் சுவாமிகளுக்கு பூஜைக்கு வேண்டிய மலர்கள்யாவும் கோயில் வளாகத்தில் 4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள நந்தவனத்திலேயே பயிரிடப்படுகிறது.

மன்னார்குடி நகரத்தில் மட்டும் சுமார் 65 கல்வெட்டுக்கள் உள்ளன.

நீண்ட சரித்திரம் கொண்ட மன்னார்குடியில் பிறந்ததையே பெருமையாக நினைக்கத் தோன்றுகிறது.

❖❖❖



ஸ்ரீ செண்டும் கையும் செங்கமலத்தாயார்

# ஊர் பஞ்சாயத்து

ஊர் பஞ்சாயத்து.

எங்கள் ஊரின் மேற்கே ஐந்து மைல் தூரத்தில் மூவாநல்லூர் கிராமம் - அதற்கடுத்து வெட்டிக்காடு கிராமம். இங்கிருந்த ராமச்சந்திரன், குணசேகரன் இருவரும் பள்ளி நண்பர்கள்.

பள்ளி விடுமுறை நாட்களில் ஒருமுறை வெட்டிக்காடு சென்றிருந்தேன். அமாவாசை தினம். அன்று கிராமப் பஞ்சாயத்துக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இது பேரு நாட்டுப் பஞ்சாயத்து. கிராமியம் என்பதின் மூச்சுக்காற்று. இவை இல்லாத கிராமங்கள் வெறும் காடுகள்.

படிக்காத கிராம மக்களுக்கு சந்தோஷப் பகிர்தலுக்கும் சண்டைத் தீர்வுக்குமுள்ள ஒரே அமைப்பு.

பஞ்சாயத்தைப் பார்த்தால் மனதில் பதியும்! ஆனால் புரியாது. அப்படியொரு வயதில் இதனை முதன் முதலில் பார்த்தேன்.

அரசமரத்தடியில் நடந்த பஞ்சாயத்து விசாரணை - குறுக்கு கேள்விகள் - இறுதித் தீர்ப்பை - இன்று நினைத்தாலும் வினோதமாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது.

செழிப்பான வெட்டிக்காடு கிராமம் அந்த வருஷ வெள்ளாமையில் சக்கைப் போடு போட்டது. விதைச்ச விதையும் - தெளித்த உரமும் - பெய்த மழையும் ஒன்று சேர்ந்த நேரம்.

நெல் கதிர்கள் விட்டு பயிர்கள் பசுமையாகத் தலையாட்டிக் கொண்டிருந்தன. தனது கழிவுகளை வெளியேற்ற வயல்பக்கம் வந்தார் சொந்தக்காரர். ஐந்தாறு மாடுகள் கதிர் விட்டிருந்த நெல்

பயிர்களைச் 'சுருக்கு புருக்கு'ன்னு தின்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவருக்கு மனது பொறுக்கலை.

பேசத் தெரியாத ஜீவன்களை அடிச்சு என்ன பயன்? அருகிலிருந்து வைக்கோலைக் கயிறாக முறுக்கி மாடுகளின் கழுத்திலே கட்டி 'தரதர'ன்னு கிராமத்துக்குள் இழுத்து வந்து விட்டார்.

பஞ்சாயத்துக் கூடியது. மாடுகளை மேயவிட்டவன் கைகட்டியிருந்தான்.

"ஏண்டா... வயல் வரப்பிலே மாடுகளை விட்டுவிட்டு நீ எங்கடா மேயப் போயிருந்தே...?"

மௌனம்.

"வாயில் என்னத்தை வச்சிருக்க... கேக்குறமில்லே.. பேசுடா.." ஒரு அதட்டல் குரல்.

தரிசு ஓரத்திலே மாடுகளை மேயவிட்டு, புளியங்காய் பொறுக்கினேன். அப்ப, எப்படியோ கண்ணை மறச்சிட்டு மாடுகள் வயலுக்குள்ளே போயிட்டு. மடியில் இருந்த புளியங்காய்களைக் காட்டினான்.

இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. இருபது ரூபாய் தண்டனை. ஒரு மணி நேரத்துக்குள்ளே கட்டணும்.

மேயவிட்டவன், "அய்யா தாங்காது" என்று புலம்பிக் கொண்டே பஞ்சாயத்தார் முன்னால் சாஸ்டாங்கமாக விழுந்து எழுந்தான்.

"சரி பதினைந்து ரூபாய்... போ..."

"அய்யா... தாங்காது..." மீண்டும் விழுந்தான்.

"சரி...போ.... ஐந்து ரூபாய் கட்டு!"

"அய்யா... தாங்காது..." மீண்டும் விழுந்தான்.

"துப்புக் கிடையாது. சக்தி கிடையாதுன்னு தெரியுதில்லே... ஒழுங்கா மாடு மேய்க்கிற புத்தி எங்கடாப் போச்சு... சரி சரி... கடைசி தீர்ப்பு... இரண்டு ரூபாய் கட்டிடு..."

"அய்யா... தாங்காது..." மீண்டும் விழுந்தான்.

"சின்னப்பய... முதல் தடவையா தப்பு பண்ணியிருக்கான். ஒரு தடவை மன்னிச்சிடுவோமா..." என்று கேட்டுக் கொண்டே,

"சரி.,... நாலணாவுக்கு எண்ணெய் வாங்கி புள்ளையார் கோயில்லே ஊத்திடு!"

இறுதித் தீர்ப்புடன் பஞ்சாயத்துக் கலைந்தது. வழக்குத் தொடுத்தவரும் எதிரியும் மனம் குளிர்ந்தனர். தவறை உணர்ந்தான் தப்பு செய்தவன்.

கோயிலுக்கு எண்ணெய் ஊத்துவதெல்லாம் தண்டனையா? இந்தக் காலத்திற்குப் பொருந்தாது. அந்தச் சமுதாயத்தில் சம்பிரதாயத்துக்காக ஒரு தீர்வுக்காகச் சொல்லப்பட்ட வார்த்தை.

தண்டனைத் தொகையைக் குறைக்கச் சொல்லி பலமுறை பஞ்சாயத்தார் முன்னாலே பலதடவை விழுந்தானே... அதுதான் தண்டனை!

அவன் விழுந்தது மனிதர்களுக்காக அல்ல. நியாயத்திற்காக. இதில் மூடத்தனமோ, மடத்தனமோ, அநியாயமோ கிடையாது.

போலீசுக்கோ, கோர்ட்டுக்கோ போவ விரும்பாத கட்டுக்கோப்பு. அடித்தாலும் பிடித்தாலும் ஊர் எல்லைக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள விரும்பினர். என்ன காரணம்? அவர்களது பிரச்சினைக்கு உடனடி நீதி கிடைத்ததுதான் உண்மை!

"தன்கை வெத்திலைக்கு அடுத்தவனிடம் சுண்ணாம்பு வாங்கக் கூடாது..." என்ற சுயசிந்தனைக் கொண்ட பெரிய மனிதர்கள் தலைமைத் தாங்கிய பஞ்சாயத்தார்.

இந்த நாட்டுப் பஞ்சாயத்து வேலைச் சண்டைச் சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது மட்டுமல்ல.

குளிக்கிற குளத்தை ஆழப்படுத்துவது. ஏரிகளை தூர் எடுப்பது. குளத்துக்குத் தண்ணீர் வருகிற வாய்க்கால்களை ஒழுங்கு செய்வது. இதுக்கெல்லாம் கூடி வரிபோடுகிறது. வேலைக்கு வீட்டுக்கொரு ஆள் சேர்ப்பது.

தலைக்கட்டுக்கென்று வரி நிர்ணயித்து, வசூலித்து, விழாக்கள் நடத்துவது. தெருக்கூத்து நடத்துவது. பயிர் தானியங்கள் களவு போகாமலிருக்க காவற்காரர்களை நியமிப்பது.

ஊருக்கு வரும் அரசு அதிகாரிகளை உபசரிப்பது. ஊருக்கு புதுசா வருகிறவர்களை விசாரித்து அங்கீகரிப்பது. சொல் கேட்காதவனை ஊரைவிட்டுத் தள்ளி வைப்பது. அவன் திருந்தியவுடன் மீண்டும் சேர்ப்பது...

ஒருவரது மாடு தொலைந்துவிட்டால், யார் யார் எந்த திசைக்கு என்று ஆள் பிரிப்பது, ஊரோ, ஊர் மக்களோ தாக்கப்பட்டால் எதிர்தாக்குதல் குறித்து முடிவெடுப்பது.


பஞ்சாயத்து செய்த நல்ல காரியங்களால் ஊரில் அமைதி இருந்தது. ஒற்றுமை இருந்தது. சந்தோஷம் இருந்தது. கூட்டு முயற்சிக்கு வெற்றி நிச்சயம் என்பதை எல்லாக் கிராமங்களும் பரிபூரணமாக நம்பிய காலம். நல்ல தலைமையிருந்ததாலே இருந்தது அடிப்படையான காரணம்.

நல்ல தலைமை என்றால் சண்டைச் சச்சரவுகளில் அவர்கள் வழங்குகிற பாரபட்சமற்ற தீர்ப்பே அவற்றை முடிவு செய்யும்.

பஞ்சாயத்துக்கு உட்காருவதற்கு முன்னே துலாக்கோல் மனப்பான்மையுடன் விசாரணையைத் தொடங்குவார்கள். தப்பாகத் தீர்ப்புச் சொன்னால் குடும்பமே தீஞ்சு போய்டும்னு உறவுமுறை சொந்தபந்தம் கண்ணுக்குத் தெரியாது. அப்படி வாழ்ந்த தலைவர்கள் செத்துப் போனபிறகு எல்லாமே செத்துப் போயிருச்சு.

இன்று இதெல்லாம் சாத்தியமா? எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை எதிர்பார்க்கும் சமுதாயம். பொதுநலம் தொலைந்து போய் சுயநலம் மிகுந்துவிட்ட காலக்கட்டம். குளம் தூர் எடுக்க காண்டிராக்ட் - கமிஷன். ஏன் இந்த நிலைமை? பாரபட்சமற்ற மனிதர்கள் இல்லை. பஞ்சாயத்து இல்லை. தீர்ப்பும் இல்லை. தலைமுறை இடைவெளி எல்லாத்தையும் புதைச்சிடுச்சு.

❖❖❖



# நூலகம்

பற்பல புத்தகங்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஓர் இடமே சிறந்த பல்கலைக் கழகம்.

கூரை வடிவ ஸ்டாண்டில் செய்தித்தாள்கள் வைக்கும் மேசை, ஸ்கூல் ஹாலில் வைக்கப்பட்டிருக்கும். நின்று கொண்டே படிக்கலாம். அன்றாடம் இதனைப் புரட்டிய அனுபவம்தான் என்னை நூலகத்திற்கு அழைத்துச் சென்றது.

படிக்கும் பழக்கம் ஒரு முழுமையான மனிதனை உருவாக்கும். ஸ்கூல் லைப்ரரியில் ஏராளமானப் புத்தகங்கள். படக் கதைப் புத்தகம்தான் என்னுடைய முதல் வாசிப்பு. கொஞ்சம் கொஞ்சமாக கதை, நாவல் என்று வளர்ந்தது.

விளையாட்டு மைதானத்தைவிட லைபரரியில் இருந்த நேரங்கள் அதிகம். படித்த புத்தகக் கருத்துக்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

புத்தகம் என்பது எத்துணை அற்புதம். நல்ல புத்தகங்கள் எனக்கு நண்பர்களாகி விடுவதுண்டு. புத்தகம் என்பது கருவூலங்கள், காலப்பெட்டகம்.

எங்களூரில், புகழ்பெற்ற நூலகம் இருக்கிறது. கோட்டூர் ரங்கசாமி நூலகத்தைத் தெரியாத எழுத்தாளர்கள் தமிழகத்தில் இருக்க முடியாது. அவ்வளவு பழமையானது.

இங்கு இல்லாத புத்தகங்களே கிடையாது. படிப்பதில் அதிக ஆர்வத்தைத் தூண்டியது இந்த நூலகமே, விடுமுறை நாளில் நண்பர்களுடன் போய் வாசிப்போம். நேரம் போவதே தெரியாது. பல நாட்கள் மதியம் சாப்பிடாமல் படித்திருக்கிறோம்.

பெரிய கோயிலுக்கு அருகில் இருக்கும் இந்த நூலகத்தில் தமிழகத்தில் கிடைக்காத பல நூல்களையும் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். சரித்திரம், வரலாறு, நாவல், சிறுகதை, ஆன்மீகம், பூகோளம் என்று தனித்தனியே இருக்கும் நூல் குவியல்களைப் பார்த்து வியந்ததுண்டு.

ஒரு நூலினைப் படிப்பது நல்ல அறிஞர்களோடு உரையாடு வதற்குச் சமம். இங்குதான் பொன்னியின் செல்வன், கள்வனின் காதலி, அலை ஓசை, தியாக பூமி போன்ற கல்கியின் நூல்களில் லயித்திருந்தேன்.

ஜெகசிற்பியன், வடுவூர் துரைசாமி அய்யங்கார், நா. பார்த்தசாரதி போன்ற நூலாசிரியர்களையும், நெப்போலியன், ஹிட்லர், முசோலினி, ரூஸ்வெட், ஆப்ரஹாம் லிங்கன் போன்ற உலகத் தலைவர்களையும், எடிசன், மார்க்கோனி, ரைட் சகோதரர்கள் போன்ற விஞ்ஞானிகளையும் அறிமுகப்படுத்தி வைத்தது இந்த நூலகமே.

பிற்காலத்தில் என்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள நூல்கள் தான் எனக்குத் துணை நின்றன. நூல் வாசிப்பு என்னை ஒரு புதிய உலகத்திற்கு அழைத்துச் சென்றது.

ஒவ்வொரு புத்தகத்தைப் புரட்டும் போது எதிர்காலத்தின் உயர்வுக்கு ஒரு படி எடுத்து வைக்கிறோம். ஒரு புத்தகம் படித்து முடிக்கிறபோது, மனசின் மலைப்பிரதேசம் விரிகிறது.

என்னுடைய நண்பர் உளுந்தூர்பேட்டை சண்முகம் நாவல்கள் குறித்து ஆராய்ச்சி செய்தார். இந்த நூலகத்திற்கு அழைத்து வந்து பல புத்தகங்களை அறிமுகப்படுத்தினேன். டாக்டர் பட்டம் பெற்ற தனது நூலில் இந்த நூலகத்தைப் பற்றியும், என்னைப் பற்றியும் மகிழ்ந்து பாராட்டி எழுதியுள்ளார்கள்.

இந்த நூலகம் இருப்பதினால் எங்களுக்குப் பெருமையா? எங்களது ஊரில் இது இருப்பதினால் நூலகத்திற்குப் பெருமையா? இரண்டுமே இருந்த ஊரில் பிறந்ததுதான் எனக்குப் பெருமையாக இருக்கிறது. இந்தியாவிலேயே முதல் நடமாடும் நூலகம் முதன் முதலில் மன்னையில் தொடங்கப்பட்டது என்பதும் எனக்கு பெருமையாக இருக்கிறது.

அறிவுநூல்கள் பாதுகாத்து வைக்கும் பழக்கம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே எகிப்தில் இருந்து வந்திருப்பதாக வரலாறு கூறுகிறது. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற மேதைகள் தொகுத்து வைத்திருந்த ஆயிரக் கணக்கான நூல்கள் அந்தக் கால நூலகங்களில் இருந்தன.

இதற்குமுன் வாழ்ந்த பலப்பல மில்லியன் டிரில்லியன் ஆண்டுகளில் நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்று கற்று ஆண்டு அனுபவித்துச் சென்ற அனுபவங்கள்தான், அவற்றினுடைய திரட்சித்தான் நமக்கு நூல்களாக கிடைத்திருக்கிறது.

கம்ப்யூட்டர் மூலம் அச்சுத்தொழில் காற்றில் வாகனமேறி (டெலிபிரிண்டர்) பயணிக்கிறது. அறிஞர்கள் சிந்தனைகள் உலா வரத் தொடங்கிய இந்த நாட்களில் நூலகத்தின் நோக்கும் பணியும் முற்றிலும் மாறியுள்ளன.

அறிவுப் பசி தீர்க்கும் அமுதசுரபிகளாக, கல்விக்கண் திறக்கும் கலாசாலைகளாக, மனமாசு நீக்கும் ஆலயங்களாக அவை இன்று விளங்குகின்றன. உலகெங்கும் நூலகப்பணி இன்று உன்னத இடத்தைப் பெற்றுள்ளது.



எங்களூரில் பொது நூலகமும் செயல்பட்டு வருகிறது. இங்கும் நண்பர்களுடன் சென்று புத்தகங்கள் எடுத்து வருவோம். எங்களுக்குள் புத்தகங்களை மாற்றிக் கொள்வதும் உண்டு.

அமெரிக்கா - நூலகங்களின் நாடு என்று அழைக்கப்படும் சிறப்புக்குரியது. நியூயார்க் நூலகம் மிகப்பெரிய நூலகமாகும். சோவியத் ரஷ்யாவில் உள்ள இம்பீரியல் பொது நூலகம் 18ஆம் நூற்றாண்டில் காதரின் இராணியின் முயற்சியால் உருவானது.

கல்கத்தாவில் இருந்த இம்பீரியல் பொது நூலகம் சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் தேசீய நூலகமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் இருக்கும் கன்னிமரா பொதுநூலகம் 1890-ல் சென்னை மாகாண கவர்னராக இருந்த கன்னிமாரா பிரபுவால் உருவாக்கப்பட்டதாகும்.

ஆளுக்கொரு நூல் - நூலுக்கொரு ஆள் என்பது நூலக இலக்கணம். படிப்பதற்கே புத்தகங்கள் என்பதுதான் நூலகத்தின் இலட்சியம். என்னைப் பொறுத்தவரையில் நூலகங்கள் நல்ல மனிதர்களை உருவாக்கி வருகின்றன.

புத்தக வாசிப்பு எனக்கு புதிய பாதையைக் காட்டியது. உயிரின் சுவாசமாக இருக்கிறது புத்தகம். எனக்குள் ஒரு சூரியனாக புத்தகம் இருந்து வருகிறது.

# சுற்றுலா

ஒரு நதி போல் நகர்ந்து நகர்ந்து வந்துவிட்ட வாழ்வைத் திரும்பிப் பார்த்தால் அங்கங்கே எத்தனையோ ஈர நினைவுகள்.

என்னுடைய முதல் சுற்றுலாவும், கடலைப் பார்த்த ஞாபகமும் மன ஏட்டில் அப்படியே பதிவு செய்திருக்கிறேன்.

கடல் என் வாழ்க்கையின் ஓட்டத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது?

சிந்தனையை ஓட விட்டேன்.

"கடல் பார்க்காதவங்க எல்லாம் எழுந்து நில்லுங்க"

பாதி பையன்கள் எழுந்து நின்றார்கள்.

"சரி மலைப் பார்க்காதவங்க எல்லாம் ஏந்திரிங்க"

பாதி பையன்கள் எழுந்து நின்றார்கள்.

டீச்சர்! தனபால் இரண்டு தடவையும் எழுந்து நிற்கிறான்.

"ஏண்டா! நீ இரண்டு தடவையும் நின்னே?"

"டீச்சர் நான் கடலையும் பார்த்ததில்லை, மலையையும் பார்த்ததில்லை"

"சரி, சரி உட்கார்" என்றார் டீச்சர்.

நான் ஏழாவது படித்துக் கொண்டிருந்தேன். அந்த நிகழ்ச்சி எனக்கு நன்றாக நினைவில் உள்ளது.

அந்த வகுப்பில் கடலையும், மலையையும் பார்த்த ஒருத்தன்தான் இருந்தான்.

நாங்கள் எல்லோரும் அவனைப் பொறாமையோடும், அதிசயத்தோடும் பார்த்தோம்.

"கடல் எப்படி இருக்கும்?"

பாக்கு இடமெல்லாம் தண்ணீரா இருக்கும். கடல் ஓரத்தில் நின்னேன்னா தண்ணி வந்து என்னோட விளையாண்டது.

"போதும் வாடா" அம்மா கூப்பிட்டாங்க. நான் விளையாடிட்டே இருந்தேன். அம்மா கையை பிடித்து இழுத்துக் கொண்டுபோய், கட்டுமரத்திலே நிக்க வைச்சாங்க.

ஈரமான டிரவுசரையும், சட்டையையும் கழற்றி, உடம்பையெல்லாம் துடைத்துவிட்டு வேறு சட்டைப் போட்டாங்க அம்மா.

அவன் சொல்லச் சொல்ல என் விழிகள் இமைக்காமல் அவன் வர்ணனையைக் கேட்டு மகிழ்ச்சியுற்றன. கடலைப் பார்த்து விட்ட இன்பம். கடலைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை தீயிட்டு எரிந்தது.

"கடல் பார்க்கணும்ங்கறவங்க எல்லாம் நாளைக்கு ஐந்து ரூபாய் கொண்டாங்க. வேளாங்கண்ணி எக்ஸ்கோர்ஷன் போகலாம்."

"மலைப் பார்க்கணும்ங்கறவங்க எல்லாம் பத்து ரூபாய் கொண்டாங்க. திருச்சிக்கு எக்ஸ்கோர்ஷன் போகலாம்."

டீச்சரின் அறிவிப்பில் மனம் குதூகலித்தது.

கடல் பார்க்கும் லிஸ்டில் என் பெயரை எழுதிக் கொண்டார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஆறு மணிக்கெல்லாம் இரண்டு பஸ் வந்தது.

கடல் பார்க்கும் பஸ்ஸில் ஏறினேன்.

மலைப்பார்க்க போகும் பஸ்ஸைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சு விட்டேன்.

கடலையும், மலையையும் ஒரே நேரத்தில் பார்க்க ஆசைதான்.

முதல்லே வேளாங்கண்ணி கோயிலுக்குப் போனோம்.

கண்கள், எதிரே இருந்த அதிசயத்தைப் பார்த்து நம்ப மறுத்தன.

நீலக்கலரில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தண்ணி. மகிழ்ச்சி தாங்கமுடியலை.

நெஞ்சில் ஆர்வத்தையும், கண்களில் வியப்பையும் தேக்கி வைத்திருந்த நான் கடலை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். கடல் ஓலமிட்டுக் கொண்டிருந்தது.

டீச்சர் கடலின் ஓரத்திற்கு அழைத்துச் சென்றார்.

கடலைப் பற்றி புதினங்களையும், கதைகளையும், கவிதைகளையும் படைத்து உயர்புகழ் பெறுவேன் என்பதும் கடலுக்குத் தெரியும் போலிருக்கிறது. என்னைவிட கடல் இன்பமுற்று ஓடிவந்து என்னை வரவேற்றது.

கடல் அலைகள் ஓடி வந்து என்னைத் தழுவின. அலைகள் என் கால்களை முத்தமிட்டன. குனிந்து இரு கைகளாலும் கடல் நீரை எடுத்து முகத்தில் தெளித்தேன். முகம் சிலிர்த்தது. ஆனந்தக் கண்ணீரின் உப்பும், கடல் நீரின் உப்பும் சங்கமமாயின. கடல் அலைகள் என் கால்களுக்கு சிலம்பாயின. சிலம்பு கட்டிய கால்கள் நடனமாடின.

மற்ற பையன்களும் ஓடி வந்து என் இன்ப வெள்ளத்தில் பங்கேற்றனர். அவர்கள் கையைப் பிடிப்பதும், அலைகளின் கைகளைப் பிடிப்பதும் மாறி மாறி நடந்தன. அலைகளின் புரளில் இருந்த ஒழுங்கின்மையில் தெரிந்த ஒரு ஒழுங்கின் லயத்தில் ஒன்றிப் போனேன்.

பக்கத்திலிருந்த பாறைகளின் மீது அலைகள் மோதிச் சென்றன. பாறை பதில் சொல்லவில்லை. நான் மட்டும் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். கடல் அலைகள் வெள்ளிப் பூக்களாக உயர்ந்து தாழ்ந்து கரையில் மோதுவதும் மறைவதும் ஓயாத அற்புதத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தது.

நிலத்தைக் கலப்பை உழுவதைப் போல உழுது கொண்டே கடலின் நடுவில் புதைந்து புதைந்து கப்பல்கள் சென்று கொண்டிருந்தன.

கடலே பார்க்காத நான் முதன் முதலில் கடலைப் பார்த்த சந்தோஷத்தில் வானமும் மழை பெய்தது. கடல் அலைகள் என் காதுகளை நிறைத்து என் நெஞ்சுக்குள் புகுந்து ஓங்காரமிட்டது.

காற்றுக்கும் மழைக்கும் குருஷேத்தரம்தான். இப்படியே கடலோடு பேசிக் கொண்டே இருந்து விடட்டுமா? கடலைப் பார்த்தவுடன் என்னுள் நிகழ்ந்த ரசாயன மாற்றத்தைச் சொல்லத் தெரியவில்லை.

சூரியனைக் கண்டு தாமரையும் நிலவைக் கண்டு அல்லியும், மாலைக் கருக்கலில் மல்லிகையும், சுடர் மின்னல் கண்டு தாழையும் மலருவதுபோல் கடலைப் பார்த்தவுடன் என் மனம் மலர்ந்தது. உள்ளம் பேருஉவகை அடைந்தது.

என் சிரிப்பலைகள் மோதியதில் கடல் அலைகளே கொஞ்ச நேரம் ஆடி அசைந்து நின்றது. திருவிளையாடலில் சிவாஜி பாடும்

போது கடல் அலை நிக்குமே அது மாதிரி.

ஒரு பெரிய அலை அவசரமாய் ஓடிவந்து என் உடல்மீது ஆசை தீர முட்டிக் கொண்டது. பிரணவ கீதமாக மனசை என் உள்ளத்தை நிரப்பி தாலாட்டியது.


டீச்சர் விசில் அடித்து, கையில் உள்ள பிரம்பைக் காட்டி எல்லோரும் திரும்ப வரும்படி அழைத்தார்.

விசில் சத்தம்கேட்ட கடல் அலைகளுக்கு என்னைப் பிரிய மனம் வரலை போலிருக்கு. வேகமாக வந்து என்னைத் தழுவி விடை கொடுத்தது.

கடல் நீலத்தில் கண்களைக் குளிக்க விட்டுக் கொண்டே மனமில்லாமல் கடலை விட்டுப் பிரிந்தேன். கடல் ஒரு அற்புதந்தான். பார்க்க பார்க்க சலிக்காத காட்சி.

முதன் முதலில் கடல் என்னைப் பார்த்து தழுவிய புன்னகையை, அது மோதியபோது இருந்த அலைகளின் குளிர் நிலையில் அப்படியே வாடி விடாமல், இன்றும் என் இதயம் என்ற குளிர்பதனப் பெட்டியில் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன்.

❖❖❖



# சாமக்குறி

"சக்கம்மா! சக்கம்மா! இந்த வூட்டுக்கு நல்ல சேதி வருது... நல்லது நடக்கப்போகுது. அய்யாவுக்கு காசு கொட்டப்போகுது.. லட்சுமி வரப்போறா....

நடு இரவிலே குடுகுடுப்பு சத்தம் கேட்டு எழுந்து வருவோம். குடுகுடுப்பு சத்தம் கேட்டாலே அம்மாவும் பாட்டியும் நடுங்குவார்கள். என்ன குறி சொல்லப்போறானோ என்று பயந்துகுகிட்டு இருப்பாங்க.

குடுகுடுப்பைக்காரர்களுக்கு ஊர்களிலும் கிராமங்களிலும் மந்திரவாதி என்ற மாயை இருந்தது. குடுகுடுப்பைக்காரன் சொன்னால் பலிக்கும் என்ற பயமிருந்த காலம்

"குழந்தைப் பிறந்து முப்பது நாட்களுக்குள் இறந்துவிட்டால் வாசலிலோ, படியிலோ புதைத்துவிடுவது என்ற வழக்கமிருந்த காலம். அதிலும் தலைப்பிள்ளை ஆம்பிளை என்றால் சுடுகாட்டுப்பக்கமே போகமாட்டார்கள். மந்திரவாதிங்க, குடுகுடுப்பைக்காரங்க எல்லாம் 'தலைச்சன் பிள்ளை மண்டை ஓடு கிடைச்சா விடமாட்டாங்களாம்!'

தெருக்கோடியில் நாயக்கர் ஒருவர் திடகாத்திரமாக இருந்தார். வயலுக்குப்போகும் போது குடுகுடுப்பைக்காரனை ஏதோ திட்டியிருக்கிறார். ஒரு வாரத்தில் நாயக்கர் இறந்து விட்டார்.

இந்த மாதிரிக் கதைகளால் தலைமுறை தலைமுறையாய் பயந்துக்கிட்டு இருந்தாங்க. பேய், பிசாசு, பில்லி, சூன்யம், காத்துக் கருப்பு இவற்றின் மீது மக்களுக்கு அதிகமாக பயமிருந்த காலம்.

பகல்பொழுது இவர்களைப் பார்க்கும்போது எங்களுக்கும் ஒருவித பயங்கலந்த அச்சவுணர்வு வந்துவிடும்.

நல்ல அமைதியான இரவு நேரத்தில் ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் நின்று இந்த குடுகுடுப்பைக்காரர் குறிசொல்லுவார்கள். அந்த வீட்டில் நடக்கப்போகும் நல்லது, கெட்டது, தோஷம், ஆபத்தான விஷயங்கள் எச்சரிக்கை செய்திகள் சொல்வார்கள்.

அவ்வளவுதான். வீட்டுக்குள் இருக்கிறவர்களுக்கு தூக்கம் பிடிக்காது. குறிப்பாக பெண்களுக்கு அச்சம் வந்துடும். தூங்கமாட்டார்கள். என்ன குறி சொல்றான்னு உற்றுக் கேட்பாங்க. பக்கத்தில் படுத்திருப்பவர்களையும் எழுப்பி தங்கள் பயத்திற்குத் துணை தேடிக் கொள்வார்கள்.

பொழுது விடிந்ததும் "குசுகுசு"ன்னு பேசிக் கொண்டிருப்பார்கள். நல்ல குறின்னா முகத்திலே சந்தோசக் கலை இருக்கும். கெட்ட குறி இருந்துவிட்டால் வீடு முழுக்க இழவு சோகம்தான்.

இந்த மாதிரியான சமயங்களில், வயதானவர்களுக்கு தொண்டை குழி வறண்டு போகும். உடுக்குச்சத்தம் ஓயும் வரை படபடப்பில் இருப்பார்கள். திகில் படத்தைப் பார்ப்பது போல் இருக்கும். ஊர்களில் இவர்களை எமனின் "நேரடித் தூதுவராக" கருதுவார்கள். அப்படியொரு பயம்.

நடு ராத்திரியிலே சுடுகாட்டுக்குப்போய் பூஜை செய்து, கோழி பலி கொடுத்து சக்கம்மாவின் உத்தரவுப் பெற்று தான் ஊருக்குள் குறி சொல்ல வருவார்கள்.

பொழுது விடிந்ததும் குறிசொன்ன வீட்டுக்குப் போவார்கள். பழைய துணி, அரிசி, உப்பு, புளி, தானியம் என்று கொடுப்பதை வாங்கிச் செல்வார்கள்.

இந்த பயமும், மாயையும் சற்று குறைந்த கல்லூரி பருவத்தில் இவர்களிடம் பேச நண்பர்கள் ஆசைப்பட்டனர்.

பாமினி ஆற்றுக்கு வடக்கே சுடுகாட்டுக்கு முன்னேதான் வழக்கமாக 'டேரா' போடுவார்கள்.

"சனங்களிட்டே உங்களுக்கு இப்ப எப்படி வரவேற்பு இருக்கு" என்று கேட்டதும் வயதில் மூத்த ஒருவர் எங்களைப் பார்த்துப் புன்னகைத்தார்.

எங்க உடுக்குச் சத்தம் கேட்டாலே பயந்த காலம் இருந்துச்சி. சுடுகாட்டிலே உத்தரவு வாங்கி உடம்புலே துணியில்லாமல் நடு

இரவே குறிசொல்லப் போவோம். உடுக்குச் சத்தம் கேட்டாலே கதவை மூடுறச் சத்தம் கேட்கும். நாங்க தங்கியிருக்கிற இடத்துக்கே ஊர்க்காரங்க வரமாட்டாங்க.

நாங்க சொல்ற வாக்கு பலிச்சிடும்னு சனங்க பயந்தாங்க. இப்ப நிலைமையே வேறப்பா. ராத்திரியிலே தெருவெல்லாம் லைட்டு போட்டுட்டாங்க. சனங்களுக்கும் அந்தப் பயம் கிடையாது.

"நீங்க சொல்றதெல்லாம் பலிக்குமா என்ன?"

"அப்படி சொல்ல முடியாதப்பா. சக்கம்மாவை நினைச்சு வாக்குச் சொல்வோம். இரண்டு உண்மையாயிருக்கும். இரண்டு பொய்யுமிருக்கும். சில பேரு நகை, மூக்குத்தி, பட்டுச்சேலை என்று தாராளமாகவும் கொடுப்பாங்க."

'சக்கம்மா'ன்னா யாரு?

"கட்டபொம்மனின் குலதெய்வம் சக்கம்மா. காடுகளில் சுற்றுவது கூட கட்டபொம்மன் வாக்குத்தானுங்க. நாங்க கட்டபொம்மன் சாதிங்க. காட்டு நாயக்கர் வம்சமுங்க."

"சரி எப்ப ஊருக்குப் போவீங்க"

"நாடாறுமாதம். காடாறுமாதம். எங்கேச் சுற்றினாலும் ஆறு மாதங்கள் ஆனா சொந்த ஊருக்குத் திரும்பிடுவோம். விவசாயம், கல்யாணம் காச்சி, சாமி கும்பிடுதல் முடிச்சுட்டு மீண்டும் கிளம்பிடுவோம்."

பகுத்தறிவாதிகளின் பிரச்சாரங்களினாலும் சிந்தனையில் வளர்ச்சியினாலும் இப்பெல்லாம் ஊருக்குள் குடுகுடுப்பைக்காரர்கள் வருகை அத்திப்பூத்தாற்போல் இருக்குதாம்.

❖❖❖

# தச்சாரி

*களம்புகல் ஓம்புமின் தெவ்வீர்*
*எம்மிலும் உண்டு ஒரு பொருநன்*
*வைகல் எண்டேர் செய்யும் தச்சன்*
*திங்கள் வழித்த கால் அன்னானே*

-புறநானூறு

அதியமான் என்ற அரசனுடன் மோத வந்த பகையரசர்களைப் பார்த்து "எம் தலைவனுடன் மோதிப் பார்க்காதீர்" என்று எச்சரிக்கிறாள் அவ்வை. இது கவிதாயினி அவ்வையின் வார்த்தை சாதுரியமல்ல.

ஒரு தச்சனின் தேர்செய்யும் திறமையை, வீரனின் யுத்த ஆற்றலுக்குச் சமமாகச் சொல்கிறார். இதையுணர்ந்து கலகத்தை தவிர்த்து எதிரிகள் ஓடினார்கள். போர்புரியும் எண்ணம் மறந்தார்கள்.

எங்கள் ஊரிலும் ஊரைச் சுற்றிலும் தச்சாரிகள் நிறைய இருந்தனர். சாதாரண மக்கள் ஏராளமாக வாழ்ந்த காலம். அஞ்சறைப் பெட்டி, அகப்பை, பெட்டிகள், பல்லாங்குழி, வசிக்க வீடு, வீட்டுக்குக் கதவு, சன்னல் என்று வாழ்க்கைக்குத் தேவைப்பட்ட அத்தனையும் ஆசாரியின் கைப்பொருட்களாக விளைந்தன.

விவசாயி நிலத்திலிருந்து தானியத்தை விளைவிக்கும் வித்தைச் செய்கிறார். தானியத்தை விளைவிப்பதற்கான அறுப்பு, இழைப்பு, காடி, தட்டு, சாட்டைச் சக்கரம், ஆரக்கால் கருவிகளை ஆசாரி செய்கிறார்.

விவசாயி தன்னிடம் விளையக்கூடிய தானியத்தில் ஒரு பகுதியை இவருக்குக் கொடுத்தான். இவனோ தன் கைவினைப்

பொருட்களை அவனுக்குக் கொடுத்து மகிழ்ந்தான். நாளடைவில் ஆண்டுக்கூலி போய் நாள் கூலி வரை வந்துவிட்டது.

இத்தொழில் செய்பவர், ஆச்சாரி, கம்மாளன், விஸ்வகர்மா என்ற பெயர்களில் அழைக்கப்பட்டார்கள். கொல்லர், தச்சர், தட்டார், கண்ணார் (பாத்திரம் செய்பவர்) கல்தச்சர் என்று ஐந்து வகையினரும் எங்கள் ஊரில் இருந்தனர்.

ஐந்து தொழில் செய்தபோதும், ஒரேஇனம். பலர் பூணூல் அணிவார்கள். இவர்களுக்குத் திருமணம் முதலிய சடங்குகளை நடத்திவைக்க இந்த இனத்திலேயே ஒருவர் இருப்பார். இதற்கென இவர்கள் பிராமணர்களை எப்போதும் அழைத்ததில்லை.

இவருக்கு வாத்தியார் ஆசாரி என்று பெயர். ஆசாரி நடத்தும் திருமணச் சடங்குக்கு **நாகவல்லி சாஸ்திரம்** என்றார்கள். இதனை அப்பாவுடன் ஒருசமயம் பார்த்த ஞாபகம் இருக்கு.



எங்க வீட்டுக்கு உயரமாக ஒரு ஆசாரியார் மரவேலைகள் செய்ய வருவார். அவருடன் அவரது மகன் இருதயசாமியும் (விடுமுறைநாளில்) வருவான். இவர்களும் ஆசாரித்தான். வேண்டுதலுக்காக இருதயசாமி என்று பெயர் வைத்தார்களாம். இவன் எனது பள்ளியில் படித்தான்.

வீட்டில் கட்டில், பீரோ போன்ற வேலைகள் செய்யும் போது அருகே உட்கார்ந்து அவருக்கு எடுபிடி வேலை செய்வேன். அவரது கை வண்ணத்தில் உருவாகும் கைத்திறனையும், கற்பனைத்

திறனையும் கண்டு வியந்ததுண்டு. அவருக்குப் பிறகு இருதயசாமியும் ஆசாரி வேலைகள் செய்கிறான்.


ஊர்போகும் சமயங்களில் சக ஆசாரிகளுடன் அவன் நிற்பதைப் பார்த்து பழைய ஞாபகங்களைப் பகிர்ந்து கொள்வோம்.

குழந்தை பிறந்ததும் "குவாகுவா" என்று அழுவதை பிரசவித்த தாய் எதிர்பார்க்கிறாள். இதைப்போலத்தான் ஆசாரியும் தன் கைவினைப் பொருட்களை எங்கேயும் எந்த இடத்திலும் பேசப்படணும் என்று எதிர்பார்க்கிறான்.


இன்று இயந்திரங்கள் தச்சாரிகளை விழுங்கிக் கொண்டிருந்தாலும் அவன் கை செய்வதை ஒரு இயந்திரம் செய்ய முடியுமா? அந்தக்கால வீடுகளில் கதவுகள் இருந்தன. யானை முட்டினாலும் தகராத திண்ணமான கதவுகள். இந்தக் கதவுகளில் தங்கள் கனவு பலிக்காது என அந்தக்கால கள்ளர்கள் கன்னக்கோல் வைத்துச் சுவரைத் துளைத்துத் திருடினார்கள்.

ஒருபுறம் இயந்திரங்கள் ஆசாரிகளைத் தின்று கொண்டிருக்கிறது. மறுபுறம் வாரிசுகள் படித்து பல வேலைகளுக்குச் சென்று விட்டனர்.

ஊரில் சில வாரிசுகள் மட்டும் கம்மாளத் தொழில், கல்தச்சு, கொல்லர், தச்சாரி போன்ற தொழில்களைச் செய்து வருகின்றனர்.





# இரண்டு கலைஞர்கள்

கலை கருத்தின் உறைவிடம். அழகின் பிறப்பிடம். இன்பத்தின் ஊற்று. கவர்ச்சியின் நிறைவு. மகிழ்ச்சியின் மாட்சி. பண்பாட்டின் கொடுமுடி. நாகரீகத்தின் ஒளிவிளக்கு. மனிதனுடைய எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்குவது கலை.

ஊரின் தென் கோடியில் பத்து வீடுகள். ஊரில் ஒட்டாத உறவில் இருந்த வீடுகள். ஊருக்குள் வசிப்பவர்களின் காலடியில் கிடந்தார்கள்.


இவர்கள் வீட்டைத் தாண்டி கிராமத்திலிருக்கும் எங்கள் வயலுக்கு அறுவடைக் காலங்களில் செல்வதுண்டு. அந்த வீடுகளில் மகாலிங்கமும் இருந்தான். இவன் என் வகுப்புத் தோழன். நண்பர்கள் வட்டத்தில் கோமாளி செய்து நகைச்சுவை செய்பவன்.

வயற்பக்கம் போகும்போது குடிசையின் முன்னே முருங்கை மரத்தின் அடியில் அவனிடம் பேசிக் கொண்டிருப்பேன். அருகில் எருமை, பசு, ஆட்டுக் குட்டிகள், பன்றிக்குட்டிகளும் மேய்ந்து கொண்டிருக்கும்.

நண்பர்கள் வட்டாரத்தில் அவன் வீட்டுப் பக்கம் போகக்கூடாது என்ற அறிவுரைகள் வரும். மனுசன்னா எல்லாம் ஒண்ணுதானே என்ற பக்குவம் பால்ய வயசிலேயே என்னிடம் இயற்கையாய் இருந்தது.

சில நாளில் இவனது வீட்டில் பறையொலியும் குழலும் கேட்கும். என்னடா சத்தம்னு அவனிடம் கேட்பேன்.

செத்துப்போனவங்க வீட்டில தாரை தம்பட்டம் அடித்து நொறுக்க ஒத்திகை நடத்துகிறார்கள் என்பான்.



கீழராஜவீதி அனுமார் கோயில் அருகே காலை வேளைகளில் போகும் போது தவில் ஓசையும் நாதஸ்வர ஓசையும் கேட்கும். அவர்கள் பிராக்டிஸ் செய்கிறார்கள் என்று அப்பா சொல்வார்.

என்ன ஒரு வித்தியாசம். அவர்கள் பண்டிகைக்கோ, பூப்புனித நீராட்டோ, கல்யாண வீட்டிற்கோ, கோயில் விழாக்களுக்கோ வாசிக்க ஒத்திகைச் செய்கிறார்கள். இவர்களோ இழவு வீட்டில் வாசிக்க மட்டும் ஒத்திகைப் பார்க்கிறார்கள்.

இரண்டு நிகழ்ச்சிகளையும் அப்போதே அசைப்போட்டுப் பார்ப்பேன். காரணம் புரியாத வயசிலே இதில் வரும் இனிமையை, நாதங்களை மட்டும் இரசித்தேன்.

வார்த்தைகள் தேடும் காதலே இசை. மனித இனத்தின் மொழிதான் இசை. இசையில்லாவிட்டால் வாழ்க்கைப் பிழைபடும்.

ஊரில் இழவு விழுகிறபோது மகாலிங்கத்து உறவினர்கள் நிற்பதைப் பார்ப்பேன். செத்துப்போனச் செய்தியைச் சொந்தபந்தங்களுக்கு, தூரத்து ஊர்களுக்குச் சேதி சொல்ல இவர்கள்தான் போனார்கள்.

போக்குவரத்து வசதியும், தொலைத்தொடர்புச் சாதனங்களும் வராத நேற்று வரை இப்படித்தான் நடந்தது.

பண்டிகைகளிலும், திருமணங்களிலும் தூரமாக நிறுத்தப்பட்ட இவன் இழவு வீட்டுப் பந்தலில் நிற்கிறான். அவன் கால்களில் சலங்கை, கைகளில் பறை, கதைப்பாடல், ஒப்பாரி எல்லாம் போட்டிப் போட்டு உதிரும்.

பிணத்தை எரிக்க விறகு, விராட்டி அடுக்குவது, புதைக் குழி வெட்டுவது என்று இவனது கைகளும் உழைப்பும் ஊர்மக்களுக்கு இன்று தேவைப்படுகிறது.

இவர்களைப் பார்க்கும்போது மகாலிங்கம்தான் நினைவுக்கு வருவான். மகாலிங்கம் பத்தாவது வரை படிச்சு பெயிலாகி உள்ளூர் அரசுக் கல்லூரியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிகிறான்.

இப்போது பார்க்கும் போது அவனிடம் அந்த பழைய கலகலப்பு இல்லை. நகைச்சுவை இல்லை. நையாண்டி இல்லை. இவற்றை எங்கே அவன் தொலைத்திருப்பான்?

என்னுடைய பள்ளித் தோழர்களில் ராஜேந்திரனும் ஒருவன். இவனது அப்பா பெரிய நாதஸ்வர வித்வான். மன்னார்குடி பரமசிவம் பிள்ளை நாதஸ்வரம் என்றால் ஒரு சிறப்புத்தான்.

சீர்மிகுந்த விழாக்களை செந்தமிழ் மக்கள் நாதசுர இசையோடுதான் நடத்துவார்கள். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளை இந்த மங்கள இசையுடன் தொடங்குவது நம் முன்னோரின் நடைமுறை.

நெடுங்குழல் என்றும் பெருவங்கியம் என்றும் போற்றப்படும் நாதசுரம் அமுத இசை வளர்க்கும் துளைக்கருவி. நாதசுரம் நீண்ட குழலுடன் சீவாளி இணைத்து வாசிக்கும்போது இசைவெள்ளம் பூம்புனல் வெள்ளமாகப் பொங்கிப் பெருகும்.

திருமண வீடுகளில் கச்சேரியும், பெரிய கோயில்களில் விழாக் கச்சேரியிலும்! ஏன், வானொலியிலும் அவரது இசை மழையில் மயங்கி நின்றதுண்டு. மறுநாள் நண்பனிடம் கூறுவேன்.

ஒருமுறை அவன் வீட்டிற்கு சென்று தவில், நாதஸ்வர வாத்தியங்களைப் பார்த்து ரசித்த ஞாபகம் வருகிறது.

இன்று மன்னார்குடியில் மின்சாரத் துறையில் சூப்பிரண்டாகப் பணிபுரிகிறான். பள்ளித் தோழர்களில் இரண்டு நண்பர்களின் குடும்பத்தையும் கலைக்குடும்பமாகப் பார்த்தேன். எங்களூரில் தவில் வித்வான் ராஜகோபால் பிள்ளை கச்சேரி தமிழகம் முழுதும் இசைத்துக் கொண்டிருந்தது. இவரது சீடர்தான் வளையப்பட்டி சுப்பிரமணியம். "திருவாரூருக்கு ஒரு ராஜரத்தினம் - மன்னார்குடிக்கு ஒரு ராஜகோபால் பிள்ளை" என்று இவரை முதல்வர் கலைஞர் கருணாநிதி அடிக்கடி எங்களூரில் பாராட்டி பேசுவார்கள்.

பிறந்த மண், அதிலிருக்கும் மனித முகங்கள், அவர்களின் சந்தோஷங்கள், துக்கங்கள் எல்லாம் கலந்த மொழியின் வீச்சு அதில் படிந்திருக்கிற கலாச்சாரம் - இவற்றைச் சுலபமாக உதறிவிட முடியுமா?

# விரல்களின் நளினம்

பால்ய காலத்தில் மனதைவிட்டு அகலாத முகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களை இப்போதும் நினைத்துப் பார்த்து அசை போடுவதில் ஒரு இன்பம்.

பக்கிரிசாமி என்றொரு நாவிதர். கட்ட பிரம்மச்சாரி. கக்கத்தில் சவரப்பெட்டியுடன் இருப்பார். இவர்தான் எங்கள்வீட்டு சிகை அலங்காரக் கலைஞர். ஞாயிற்றுக்கிழமை களில் வீட்டுக்கு வருவார். வீட்டு வராண்டாவில் எல்லோருக்கும் முடிவெட்டும் கச்சேரி நடக்கும்.

குளிர்காலங்களில் அவர் தலையில் தடவும் தண்ணீரால் குளிரெடுக்கும். இவருடைய ஐந்து விரல்களுடன் இன்னும் இரு விரல்களாய் அசைகிற அவருடைய கத்தரிக்கோல் ஜோக்கடித்துக் கொண்டும் கதைகளைச் சொல்லிக் கொண்டும் முடிதிருத்தி விடும் அவரது நளினம். தேவைப்பட்டால்தான் கூலி வாங்கிக் கொள்வார். அபூர்வப் பிறவி. இச்சமுதாயத்திற்கு தன்னுடைய தொழிலை மட்டும் தந்த கொடை வள்ளல்.

ஒரு கலைஞனின் ஆறாவது விரலிலிருந்து சிந்துவது கவிதை என்றால் இவரது விரலிடுக்கில் பாடுகின்ற கருவியும் கவிதைதான்.

காலங்கள் தோறும் மாறுபட்டு, மாறுபட்டு ராகங்களை மீட்டுவது வீணை என்றால் இவரது விரலிடுக்கில் பாடுகிற கருவியும் வீணையாகத் தான் எனக்குத் தெரியும்.

புராணக் கதாநாயர்களுக்குப் பல பெயர்கள் உண்டு. குடிமகன், நாவிதன், மருத்துவன் என்று.

இவர்களது நாட்டு வைத்தியத்தால் பலனடைந்த மக்கள் அவர்களை நினைத்துப் பெருமைப்படுவதைப் பார்த்திருக்கிறேன். இக்கலைஞர்கள் பெரும்பாலும் முதிர்ந்த ஞானமுள்ளவர்கள். உலகறிவு அதிகம் இருப்பவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

ஸ்கூல் செல்லும் போது பெரிய ஆஸ்பத்திரி எதிரே ஒரு பார்பர் கடை. அந்தக் கடையில் தினத்தந்திப் பேப்பரில் சிந்துபாத் படக்கதையைப் படிக்காமல் பள்ளி செல்வதில்லை. எங்களுக்காக தினத்தந்தி பேப்பரை வாசல் பெஞ்சிலேயே வைத்திருப்பார் அக்கடைக்காரர்.

காலம் பக்கிரிசாமியை எங்கோ கொண்டு சென்றுவிட்டது. அவர் ஊரில் காணோம். தெருவில் மாணிக்கம் கடையில்தான் முடி அலங்காரம் தொடர்ந்தது. இருப்பினும் பக்கிரிசாமியை மறக்கமுடியவில்லை. அவர் சொன்ன ஜோக்குகள், கதைகள், அரசியல் விஷயங்கள் அவர் வடிவத்தில் என்னிடம் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

தஞ்சையிலே கல்லூரியில் படிக்கும் போது மிஷன் தெருவில் ஒரு பார்பர் ஷாப். இவரது கடையில் கூட்டம் அதிகமிருக்கும். தலைக்கு எட்டணா தான் வாங்குவார்.

தனக்கென உதவியாளர்கள் வைத்துக் கொள்ள மாட்டார். யாரும் பேசக்கூடாது. கடையில் காத்துக் கிடந்து வரிசையாகத்தான் முடிவெட்டிக் கொள்ள வேண்டும். குள்ளமாக இருப்பார். சுறுசுறுப்பானவர். தலை கிராப் ஸ்டைலை நம் விருப்பப்படி வெட்டிக் கொள்ள முடியாது. அவர் வச்சதுதான் அங்குச் சட்டம். தினத்தந்தி பேப்பர் இருக்கும். வானொலியில் ஒரு சேனல்தான் பாடிக் கொண்டிருக்கும்.

இந்தக் கலைஞர்களை நினைத்து இன்றும் பெருமைப்படுகிறேன். அவர்களது தொழில் எதுவாக இருந்தாலும், மானுட சேவையைப் புனிதமாகச் செய்த அவர்கள் மனுஷ உருவில் இருக்கும் தெய்வங்களே!

# சங்கூதியின் வாழ்த்து

இப்போது நினைத்தாலும் மார்கழிப் பனியில் சங்கூதும் சத்தம் காதில் இனிக்கிறது.

மார்கழி, தை மாதங்களில் தவறாது வீடு வீடாய் போய் சங்கூதும் வழக்கம் உண்டு. வீதிகளிலும் கோயில்களிலும் காலை, மாலை இரண்டு வேலைகளில் சங்கூதிகள் சங்கூதுவர். வாழ்த்துச் சொல்வதும் சங்கூதுவதும் மணியோசையும் நடக்கும்.

பனிகொட்டும் அதிகாலையில், தலையில் முண்டாசு. நெற்றியில் நாமம். குளிருக்காக உடம்பைப் போர்த்திய போர்வை. ஒரு கையில் சிறு குச்சியுடன் வெங்கல **(காம்பஸ்** சைஸில்) மணித்தட்டு. மறு கையில் சங்கு. இதுதான் சங்கூதி கோவிந்தராசு. தாதன் என்று இவர்களை அழைப்பார்கள்.

மார்கழி, தை மாதங்களில் ஒவ்வொரு வீடாக நின்று மேலத்தெரு கோவிந்தராசு சங்கூதுவார். அப்பாவுக்கு நன்கு பழக்கமானதால் வீட்டு வாசலில் இரண்டு மூன்று முறை சங்கூதி, மணியடித்து வாழ்த்துச் சொல்வார்.

'வாழ்த்து' என்றாலே அதை நினைக்கு தோறும், அதைச் சொல்லுந்தோறும், மனதிலே ஒரு அமைதியான இயக்கம் ஏற்படும். ஏனென்றால் பிறர் நலமாக வாழவேண்டும் என்று கருத்தோடு எழும் ஒலியே வாழ்த்து என்ற வார்த்தையாகும்.

வாழ்த்துச் சொல்லும்போது வாழ்த்துக் கூறுபவர்களும் வாழ்த்துப் பெறுபவர்களும் மகிழ்ச்சியில் இன்புறுவர்.

சங்கூதி சான்றோர் நிலையில் நின்று பிரம்ம முகூர்த்தத்தில் வாழ்த்தும்போது, அவர் குறிப்பிடுகின்ற புகழ், வலிமை, நன்மக்கள்,



பொன், நெல், நல்லூழ், கல்வி, அனுபவம், அழகு, இளமை, துணிவு, நலம், வாழ்நாள், வெற்றி, பெருமை, அறிவு போன்ற பதினாறு செல்வங்களும் நம்மை வந்தடையும்.

சங்கில் 'தவளைச்சங்கு' என்று ஒன்றிருக்கும். இது பம் பம் என்று கம்பீரமாய் ஒலிக்கும். இதை வாத்தியமாக வாசிப்பார்கள்.

இவரிடம் சங்கு பேசும். மணி கீதம் பாடும். வாய் வாழ்த்து மழையைப் பொழியும். பால்ய வயதில் முதலில் நான் கேட்டது இந்த கலைஞனின் இசைகானம்தான்.

பொதுவாக வசதி குறைவான மக்கள் வசிக்கிற தெருவில் 'இரண்டு இழுப்பு' இழுத்து விட்டுப் போய்விடுவார். இல்லாத சாதாரண மக்கள் கண்டு கொள்ள மாட்டார்கள். இருக்கப்பட்ட பணக்காரர்கள் பெரிய வீடுகளில் அப்படி போகமாட்டார்.

எங்கள் ஊரில் உள்ள மிராசுதாரர்கள் பண்ணையார்கள் பங்களாக்களின் முன்பு அவரது சங்கொலி 'எக்காளம்' போல முழங்கும்.

தைமாத அறுவடையில் வருஷத்துக்கொருமுறை மொத்தமாய் நெல் அளப்பார்கள். குடும்பத்துடன் போய் ஒவ்வொரு வீட்டிலும் வாங்கி வருவார்.

இப்போது இவர் தொழிலாளி. சங்கூதும் போது கலைஞன். மற்ற தொழிலாளிகளைப்போல் இவ்வளவு உழைப்பு - இவ்வளவு கூலி என்றில்லை. இவரை கலைஞராகவே பார்த்த சமுதாயம்.

விவசாயமும் காவிரியும் பொய்த்தப் பின்பு அளப்பவர்களும் குறைந்து போனதால் சங்கூதிக்கும் அளப்பது கட்டுப்பாடானது. வருஷா வருஷம் வரும் தானியமும் குறைந்து போனது. அவர்களும் வேறு வேலைத் தேடிக் கொண்டனர்.

நகரத்தில் இயந்திர வாழ்க்கைக்கு வாழ்க்கைப்பட்டு விட்டாலும், பழைய நினைவுகள் மனதில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கின்றன.

# மண் பொம்மைகள்

*யத்த-தத்ரேச்ய-மக்ராஹ்ய-மகோத்ர-மவாண-மசக்ஷு*
*ச்ரோத்தரம் ததபாணி- பாதம் நித்யம் விபும் ஸர்வகதம்*
*ஸுஸுக்ஷ்மம்! ததவ்யயம் யத் பூதயோனிம் பரிபச்யந்தி*

\- முண்டகோபநிஷத்

எல்லாம்வல்ல பரம்பொருளிடம் காரணகாரிய தத்துவம் நடக்கிறது. மூலத்திடமிருந்து ஒரு பொருள் பலப்பல வகையாக தோன்றுகின்றன. குயவன் களிமண்ணை வைத்து பானை, சட்டி, என்று பலபல வடிவங்களைப் படைக்கிறான். இங்கு குயவன் காரணம். களிமண் காரியம். களிமண் காரணம். மண்பானைக் காரியம். உபாதனக் காரணம். களிமண் நிமித்தக் காரணம் குயவன். குயவன் களிமண்ணை வைத்து படைப்புத் தொழிலைச் செய்கிறான்.

பரம்பொருள் தன்னை வைத்தே படைக்கிறான். தன்னிடமுள்ளதை உருவாக்கி தானே படைக்கும்போது ஒரே சமயத்தில் உபாகர காரணமாகவும் நிமித்தக் காரணமாகவும் இருக்கிறார்.

காரணம் ஒன்று காரியம் பல. எப்படி சிலந்திப்பூச்சியானது தன்னிடமிருந்து நூலைப் படைத்து வலையை உருவாக்குகிறதோ, எப்படி நிலத்தில் மரங்கள் தோன்றுகின்றனவோ, எப்படி உயிருள்ள மனிதரிடத்தில் உரோமங்கள் தோன்றுகின்றனவோ, அப்படி அழிவற்ற பரம்பொருளிடமிருந்து பல வடிவங்களில் உயிரினங்கள் தோன்றுகின்றன. பிரபஞ்சம் உண்டாகுகிறது.

ராஜகோபாலசுவாமி கோவிலில் பாகவதர் உபநிஷத்தின் விளக்கத்தை கதாகாலட்சேபம் செய்து கொண்டிருந்தார். எதிரே

அம்மாவின் பக்கத்தில் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்த எனக்கு, தத்துவம் புரிந்ததோ புரியவில்லையோ குயவர் மண்பாண்டம் செய்வது மட்டும் நன்கு புரிந்தது.

"அம்மா மண்பாண்டம் எங்கே செய்கிறார்கள்" என்று கேட்டேன். கோயிலுக்குப் பக்கத்து... தெருவில் செய்கிறார்கள் என்று பதிலளித்தார்.

மறுநாள் அங்குச் சென்று அந்தப் படைப்புகளை நேரில் நான் பார்த்தேன்.

ஊரில் தெற்கு கோடியில் குயவர்கள் வீடு இருந்தன. பத்து வீடுகள் இருந்தன.

அந்தக் குயவனின் கரங்கள் பிரம்மாவின் கரங்களாகத் தெரிகின்றன. அந்தச் சக்கரங்களை எத்தனைக் காலம் சுற்றிக் கொண்டிருக்கின்றன.

இப்பூமியின் சக்ரச்சுழற்சி புதுப்புது பாத்திரங்களை வனைந்தளித்துக் கொண்டே இருக்கிறது.

இந்தக் குயவனின் சக்ர சுழற்சி மண்பாத்திரங்களைப் படைத்தளிப்பது போல.

பச்சைமண்ணை வண்டி வைத்து சேர்த்து வருவார்கள். வண்டல், மணல், களிமண் சேர்த்துத்தான் மண் தயாராகிறது. இந்த மண்ணைக் காயவைத்து சுத்தம் செய்து நீரூற்றி மிதித்து பாடம் செய்கிறார்கள்.

கிராம மக்கள் குழந்தையைப் பச்சைமண் என்பார்கள். ஒரு தாய் பச்சைமண்ணைத் தூக்குவதுபோலத்தான் அவனும் முழங்கைச் சேர்த்து மார்போடு அணைத்து எடுப்பான். செல்லமாய் கிச்சு, கிச்சு மூட்டுவான். சில துகள்களை விரல் நுனியில் எடுப்பான். தகட்டால், அதற்குத் தலை வாருவான். சுற்றிலும் வகிடு எடுப்பான்.

பச்சை மண்ணுக்கும் பக்குவம் உண்டு. பக்குவமாகப் பிசைந்த மண் சக்கரத்தின் உச்சியில் வைக்கப்படுகிறது. ஒரு பிள்ளையார் போல அது குவியும். குத்தக்கல் போல் நிமிரும். பனை உச்சிப் போல் விரியும்.

அவன் கையில் ஈரத்துணிக் கட்டிய தகடு. கொத்தனின் கையில் இருக்கும் ரசமட்டம் போல், சிற்பியின் கையில் இருக்கும் உளிபோல், ஓவியனிடம் ஆடுகிற தூரிகைப்போல் இவன் கையில் தகடு.

ஒரு சக்கரம் ஓடிக்கொண்டிருக்கும்போதே, படைக்கும் இந்தச் சகலகலா வல்லவனின் திறமையைக் கூர்ந்துப் பார்த்துப் பிரமித்தேன்.

இந்தப் பச்சை மண்ணில் உருவங்கள் படைக்கிற தகட்டை கிளியாற்சட்டிகள் என்கிறார்கள். கிராமத்து மக்கள் வாழ்க்கையில் வாழ்ந்து போகிற சில பொருட் களுக்கு அபூர்வமான வார்த்தைகள் கையாளப்பட்டன. என்றைக்கு அந்தப் பொருட்கள் கழற்றி விடப்பட்டனவோ, அன்றைக்கே அந்த வார்த்தைகளும் கழற்றி விடப்பட்டன.



ஒருமுறை சக்கரத்தின் முனையில் வைக்கிற மண்ணில் இருபது பானைகள் வரையில் செய்யலாம். பானை செய்கிற சக்கரம் மாட்டுக்கொம்பால் செய்த அச்சில் கருங்கல் குழியில் சுழல்கிறது.

சக்கரம் சுழலச் சுழல அதன் வேகத்திற்கேற்ப பானை அழகாய் வளைந்துவரும். அடிப்பாகம் இல்லாமல் பானைச் செய்வார்கள். பிறகு அதனைத் தட்டுக்கல் வைத்துக் கொண்டு தட்டுப்பலகையில் தட்டுகிறார்கள். முழுப்பானை வந்துவிடுகிறது.

வேகமாய்ச் சுழலும் சக்கரத்திலிருந்து அந்தப்பச்சை மட்கலத்தை இலாவகமாக கையேந்துகிறான். தாயேந்தும் குழந்தையைப்போல் அக்னிப் பிரவேசம் செய்த பின்பே இவனது படைப்புகள் ஏற்கப்படுகின்றன.

பூவிதழ் போல் வட்டமாய் ஒன்றன்மேல் ஒன்றாய் பச்சை மண்பாண்டங்களை அடுக்கி, அமர்ந்து ஒரே சீராய் எரியும் சுள்ளிகளை அடுக்குகிறார்கள். ஆவாரஞ்செடிகளை அதன் மேல் அடுக்கி, மேலே ஈர மண்பூசி - தண்ணீர் தெளித்து - எல்லாப் பண்டுகமும் பார்த்து அந்தப் பச்சை மண்ணை ஆளாக்குகிறார்கள்.

பக்குவமாய் சுட்ட மண்பாண்டங்களைப் பிரித்து உள்ளங் கையால் தட்டி பேசுகிற மண்பானையை - மண்பாத்திரங்களை எடுக்கின்றனர். தட்டிப் பார்த்தப் பின்பே இவனது சிருஷ்டியின் தரம் அறியப்படுகிறது. நிலையாமையைப் பற்றியே இவனது படைப்புகள் பேசிக்கொண்டிருக்கின்றன.

மண்பானைகள், உண்டியல்கள், அகல்விளக்குகள், சட்டிகள், மூடிகள், அகல் விளக்குகள் - வண்டியில் ஏற்றி சந்தையிலும், ஊர்த்திருவிழாக்களிலும் விற்று பொழைப்பை நடத்துகிறார்கள்.

மண்பாண்டங்களைத் தவிர 'டெரக்கோட்டா' பொம்மைகளும் செய்கிறார்கள். பூந்தொட்டி, ஜாடி என்று மண்படைப்புகளும் உருவாகின்றன.

கிராமங்கள் என்றாலே ஞாபகத்துக்கு வருவது இந்த மண்ணில் விளையும் பொம்மைகள்தானே? வீட்டில் இருக்கும் கொலு பொம்மைகள் மண்ணில் பிறந்ததுதானே. இந்தப் பொம்மைகள் அய்யனாராக, வீரனாக, காவல்தெய்வமாக, எல்லை அம்மனாக, குதிரைகளாய் நின்று கொண்டிருக்கின்றன.

கார்த்திகை மாதத்துக் காலையில் கோலமுற்றங்களில் மஞ்சள்நிறப் பறங்கிப் பூக்கள். இரவில் வாசற்படியெங்கும் **கார்த்திகை விளக்குகள்.** பறங்கிப்பூவிதழ் போல் மஞ்சள் சுடர்கள்.


மணப்பெண் போகிறாள். அவள் தலையில் வரிசையாய் மூன்று குடங்கள். பக்கத்தில் நடந்து வரும் பெண்களின் தலைகளில் என்ன? வெள்ளையும் சிவப்புமாய் கோலம் போட்ட **மண்குடங்கள்.**

ஒன்றில் துவரை, மற்றொன்றில் அவரை, பருப்பு, இன்னொன்றில் புளி. மகசூல் வந்ததும், இப்படியெல்லாம் பத்திரப்படுத்த வேண்டும் என்ற ஞானத்தைப் பெறுகிறார்கள். அரசாணிப் பானைகள் இன்று பல வீடுகளில் இருக்கின்றன.

கொஞ்சம் கொஞ்சமாக பூவரச மரநிழலில் சக்கரச்சுழல் நின்று வருகிறது. எவர்சில்வரும், பிளாஸ்டிக் குடங்களும், பிரஷர் குக்கர்களும், காப்பர் பாத்திரங்களும் ஆக்ரமித்து வருகின்றன.

அந்தச் சூளை சூடு தாங்காமல் ஓடாமல் நின்றுபோன வாழ்க்கைச் சக்கரத்தில் வதைபட விரும்பாமல் குயவன் மகன் வேறு வேலைத் தேடிப் போகிறான்.

ஊருக்கு ஓரிருவர் மட்டும் படைப்புத் தொழிலைச் செய்து வருவது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.



# கொம்புச் சீப்பு

“ஒரு பொருளைத் திறம்பட படைத்துக் காட்டுவதும் ஒரு வினை நிகழ்ச்சியைத் திறம்பட இயற்றிக் காட்டுவதும் கலை.”

“இருந்தாலும் பேனை சீவி எடுக்கறதுல்லே, கொம்புச் சீப்புக்கு வருமா” அம்மா இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஷாம்பு, பவுடர், சோப்பு என்ற பேன் வராம இருக்க பல விஷயங்க வந்துடுச்சி. இருந்தாலும் அந்தக் கொம்பு சீப்பு ஈர்க்குச்சிக்கு ஒரு மவுசு இருந்த காலம் உண்டு.

எங்க ஊர் கொம்பு சீப்பு கலைஞர்கள் கடைவீதிகளில் ஓரமாக அமர்கிறான். எருமைக் கொம்பை அறுத்து பொறுமையாக இளைக்கிறான். கொம்பு பளபளன்னு மினுக்குது. நுணுக்கமாக சீப்புகள் செய்கிறான். தன் கால்களுக்கிடையில் கட்டையை அழுத்தி, அதில் கொம்பை வைத்து அரம் கொண்டு ராவுகிறான். கையடக்க சிறு ரம்பத்தால் கோதுகிறான்.

ஸ்கூலுக்கு போகும்போதும் வரும்போதும் இந்தக் கலைஞனின் படைப்பை நண்பர்களுடன் சேர்ந்து களித்த அனுபவங்கள் உண்டு. அவனது கைவினைப் பொருட்களை கண் சிமிட்டாமல் பார்த்த ஞாபகம் இருக்கு. அவனது கலைச் சாதனங்கள் எல்லோர் வீட்டினையும் அலங்கரித்திருக்கும்.

வருஷம் பல போனாலும் அவனது கொம்புச் சீப்பில் பல் ஒன்றும் போகாது. கொம்புச் சீப்பு மட்டுமல்ல. ஈர்க்குவலி, குழந்தைகள் விளையாட செப்புக்குடம், வீட்டில் அழகு பார்க்க கொக்கு, மீன், கதவுக் கைப்பிடி, அரிவாள் கைப்பிடி, குங்குமச்சிமிழ்

என்று கொம்புகளிலும் யானைத் தந்தத்திலும் பல பொருட்கள் செய்வார்கள்.

இத்தொழிலுடன் வேறு சில துணைத் தொழிலையும் ஊரில் செய்வார்கள். அப்போதுதான் கன்று போட்ட மாட்டுக்கு, ஏன் மனுஷிகளுக்கும், காத்துக் கறுப்பு அண்டாமல் கம்பளிக்கயிறு கட்டுவார்கள். புள்ளை பெத்த ஈர உடம்புக்கு கம்பளிக்கயிறு சூடு இதமாய் இளஞ்சூட்டைத் தந்து கொண்டே இருக்கும். இதிலே பின்னால் சடங்காகியப் போது, கழிப்பு கழிக்கிற வேலை கூடச் செய்வார்கள்.

ஊர் ஊராய் அலையும் இவர்கள், ஒரு ஊரில் தங்க நேரும்போது பெரிய வீடுகளின் தாழ்வாரத்தில் மாடு, கன்னு கட்டும் தொழுவங்களில் தங்கிக் கொள்வார்கள்.

காகிதப்பட்டரை தெரு மடத்துலே தங்கியிருந்ததைக் கூட சின்ன வயசிலே பார்த்த ஞாபகமிருக்கு.

ஒரு காலத்தில் மலைவாழ் மக்களாய் மலையிலிருந்து இறங்கி சமவெளிப் பார்த்து வந்த இனம்தான் இவர்கள். இவர்களது கைவினைப் பொருட்கள் இடத்தில், உருக்கி வார்க்கப்பட்ட பொருட்கள் வந்துவிட்டன. கைவினைப் பொருட்களைக் கண்டு, கண்சிமிட்டி இளக்காரமாகச் சிரிக்கின்றன.

அவனுடைய ரத்தமும் சதையும் கொண்டு ஜீவனுள்ள சீப்பு கை நழுவிப் போனது. காலம் அவனை ஓரம் கட்டிவிட்டது. அவனது நம்பிக்கை குரல் ஒடுக்கப்பட்டுள்ளது.

காலத்தின் தடங்தெரியாத குரல் அல்ல. தடந்தெரிந்து காலத்தை வென்று வருகிறது அவனது குரல்

◆◆◆

*"இறந்த நாள் ஞாப கங்கள்*
*இளமையின் கல்வெட் டுகள்".*

# உறுமிச்சத்தம்

ஞாபகங்கள் என்ற சொர்க்கத்திலிருந்து நம்மை யாராலும் விரட்ட முடியாது.

நினைத்தாலே உறுமிச்சத்தம் கவர்ந்திழுத்ததை காதில் தேனிசையாய் இன்றும் ஒலிக்கிறது. பால்ய வயது பதிவு கம்ப்யூட்டரில் பதிந்துள்ளது போல் பதிந்துள்ளது.

இந்த உறுமிச் சத்தத்தின் மங்கல ஒலி வீட்டிற்குள் கேட்டிருக்கிறேன். கோயில் விழாக்களில் ரசித்திருக்கிறேன். பெண்கள் பூப்புனித நீராட்டு விழா சடங்கிலும் ரசித்திருக்கிறேன். சாவு விழுந்த வீட்டிலும் அந்த இசையைக் கேட்டு புல்லரித்திருக்கிறேன்.

பெரிய உடுக்கைப் போல் வடிவமைக்கப்பட்ட உறுமி, தோளில் தொங்கி இடுப்பின் முன்பக்கம் கிடக்கிறது. உறுமியின் ஒலி - எல்லா தோல் வாத்தியங்களிலும் தனித்து வித்தியாசப்பட்ட ஒலி. ஒரு பக்கத் தோலில் வளைந்த நொச்சிக் குச்சியால் அடித்தும், இன்னொரு பக்கத் தோலில் அதேபோல் வளைந்த நொச்சிக் குச்சியால் தேய்த்தும் இசைப்பார்கள்.

உறுமிக்கு எல்லா இடங்களிலும், எல்லா நிகழ்ச்சிகளிலும் ஒரே பேச்சுத்தான் உண்டு. **தேவதுந்துபி**, இடத்துக்குத் தகுந்த மாதிரி, ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு விதமாய் இசைக்கும்.

பூப்பூச் சடங்கு என்றால் அதில் ஒருவிதமாய் பேசும். தாலிக்கட்டப்படும் சமயத்தில் அது ஒருவகை. கோயில் விழா என்றால் அதற்கு ஒரு விதமாய் பேசும். அதிகாலை சாவு வீட்டில் ஒரு விதமாய்க் கூப்பிடும். அதன் மொழி, எத்தனை விதமாய் வேறுபடுகிறது என்பது அதனுடன் வாழ்ந்து நடந்த ஊர்க்காரர்களுக்குப் புரியும்.

மன்னார்குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் உறுமிக்காரர்கள் வசித்து வந்தார்கள். நாலு இடத்திற்குப் போய் உறுமித்தட்டி, மகசூல் காலத்தில் வயல் களத்திற்குப் போய் ரெண்டு மரக்கால் நெல் அளப்பை வாங்கிக் கொண்டு, அளவான வாழ்க்கை நடத்தினார்கள்.

மகசூல் சமயத்தில் வயல் மேட்டுக்கு வருவதைப் பார்த்திருக்கிறேன். அவன் தோளில் கரடு நார்ப்பெட்டி, கைகளில் சாக்குப்பை வைத்திருப்பான். கொடுப்பதைத் திருப்தியுடன் வாங்கிச் செல்லும் நிறை மனம் அவனுக்குண்டு.

புள்ளை மாதிரி மார்பில் உறுமியைப் போட்டு வைத்துக் கொள்வான். ஆனால் வருஷம் பூரா "உறுமி" படியளக்குமா? களையெடுப்பு, நாத்துப் பிடுங்குதல், நாத்து நடவு, கதிரறுப்பு என்று பல வேலைக்கும் போய் வருவார்கள்.

அடைமழை மாதமான ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வயலெல்லாம் களை அதிகமாகி நெருநெருவென்று இருக்கும். கூலிக்கு ஆள் கிடைப்பது கஷ்டமாயிருக்கும். ஆட்களுக்கு ரொம்ப கிராக்கி! உறுமிக்காரன் அகப்பட மாட்டான். எங்காவது ஒரு ஊரில் ஒரு விசேஷம் என்று உறுமியைத் தூக்கி தோளில் மாட்டிக் கொண்டு ஊர் எல்லையை விட்டுப் பறந்திருப்பான்.

உறுமிச்சத்தத்தை டி.வி. சத்தமும், ரேடியோ சத்தமும் தின்றுவிட்டது. உறுமியைப் பேசவிடாமல் டி.வியும் ரேடியோவும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றன.

எதிரே தெரிகிற கனத்த இருளில் எத்தனைக் கைகளால் தேடினாலும் நம்பிக்கையின் விதைகள் அகப்படுவதில்லை.

*ஞாபகங்களில் சில்லிட்டு*

*ஒலிக்கும் அந்த உறுமிச் சத்தம் எங்கே?*

❖❖❖

# காணிக்காத்த கலைஞர்கள்

மகிழ்ச்சி என்பது மங்கக் கூடிய மலரைப் போன்றது. ஆனால் ஞாபகங்கள் என்றைக்கும் வாசம் வீசுபவை.

மன்னார்குடியில் நடுமையமான வணிகப் பகுதியில் என் வீடு இருந்ததால், பல்வேறு கைவினைஞர்களும் வீட்டு வாசலில் அமர்ந்து தொழில் செய்வார்கள்.

குறத்தி இடது கக்கத்தில் பனைநார்ப் பெட்டியும் வலது கையில் நார்கிழிக்கும் வளைவுக் கத்தியும் முதுகில் குழந்தையும் சுமந்திருப்பார். குறிப்பிட்ட நாள்களில் வாசலில் அமர்ந்து கொள்வார்.

பனைநார் ஓலையில் முடைந்த சாமான்களை ஆக்கித்தருவதோடு, பழசான சாமான்களைத் திருத்தித் தருவாள். பழைய முறம், கூடைகளைத் தெரு மக்கள் கொண்டுவந்து சரி செய்வார்கள். திண்ணையில் படுத்துக் கொண்டு இவளது கைப்பின்னலைக் கண்டு வியந்திருக்கிறேன்.

கூடை, பெட்டி, கடகம், முறம் கொட்டான், நார்ப்பெட்டி, கட்டில் எல்லாம் பின்னித் தருவாள்.

நாற்பது வருஷங்களுக்கு முன் பூப்புனித நீராட்டு விழா என்று மங்கல காரியங்களுக்குச் சீர்வரிசை நார்ப்பெட்டியில் போகும். இடைவெளி தெரியாமல், ஒன்றுபோல் வரிவரியாய்க் கட்டப்பட்ட நார்ப்பெட்டிகள், களை எடுக்கப் போகையிலே, கையில் கள்ளக்குச்சியோடு நார்ப் பெட்டியோ, ஓலைப் பெட்டிக் கடகமோ போகும். கமுகாப்பெட்டி என்பது கட்கத்தில் இருக்கும் பெட்டி.

இவர்கள் கை விரல்கள் உருவாக்குவதுதான் நார்க்கட்டில்கள். எங்க மாவட்டத்து பண்ணையார்முதல் விவசாயி வரை வீடுகளில் பனைநார்க் கட்டில் போட்டுத்தான் படுப்பார்கள். மேல் விரிப்பு அவசியம்.



நார்க்கட்டில் ஒரு **மந்திரக் கம்பளம்.** முகம் ஆகாயம் பார்த்துக் கிடக்க, கண்களுக்குள்ளும் உடம்புகளுக்குள்ளும் சந்திரசோதி நுழைய வீசுகிற காற்றுக் குளிர்ச்சி ஒவ்வொரு அணுவிலும் இறங்கும்.

முற்றத்து வெளியில் போட்ட கட்டில் தூக்கத்தைச் சுகமாய் ஏந்திக் கொடுக்க விவசாயி சொர்க்கத்திற்குள் பதமாக நுழைவான். அதிகாலையில் முழிப்புத் தட்டுகிறபோது தான், மந்திரக் கம்பளம் ஆளைக் கீழ் இறக்கிவிடும். மறுநாளைக்கு எத்தனை ஏக்கர் நிலமானாலும் விவசாயி உழுது புரண்டு எடுத்து விடுவான்.

எங்க வீட்டிலே ஒரு நார்க்கட்டில். இதில் படுக்க சகோதரர்களிடையே போட்டி இருக்கும். இந்தக் கால ஒயர் கட்டில்கள் எல்லாம் இந்தக் கட்டிலுக்கு இணையாகுமா?

நிலம், நீச்சு சலவைத் தொழிலாளர்களுக்கு (வண்ணார்) 'கல்லுப் போட்ட இடம் காணி' என்று சொல்வார்கள். துவைப்புக் குழியும் கல்லுமே இவர்களது சொத்து. துவைப்புக்கல் எந்தெந்த ஊருகளில் போடுகிறார்களோ அந்த ஊரெல்லாம் அவர்களது காணியானது.

,இதுபோலவே, முறம், கூடை, செய்கிற தொழிலாளிகளுக்கும் கால் ஆதாரம் கொள்ள கையளவு பூமி இல்லாவிட்டாலும் ஒதுக்கப்பட்ட ஊரெல்லாம் அவர்கள் காணி. இத்தனை ஊர்கள் என அவர்களுக்கு காணியாக விடப்பட்டன. ஒதுக்கப்பட்ட ஊர்களையெல்லாம் சொந்தக் காணியாக நினைத்து தொழில் செய்து காத்து வந்த மேன்மையால் காணிகாத்த கலைஞர்கள் ஆனவர்கள்.

ஒரு குடும்பத்திற்கு இத்தனை ஊர்கள் என்று ஒதுக்கப்பட்டு குலமுறையாக வந்தது. பிள்ளைகள் வளர்ந்தது. கல்யாணம், காட்சி என்றாகிவிட்டால், சொத்துப் பிரிவினைப் போல் ஊர்களையும் பிரித்துக் கொண்டே போனார்கள்.

# 'வெளுத்த உள்ளங்கள்'

மனிதன் வாழ்வே ஒரு தனி கலைதான். அறிவினால் இயற்கை வளங்களை வாழ்வின் வளங்களாக மாற்றிக் கொள்ளும் திறமையே கலை.

நமக்குப் பக்கத்திலேயே ஒரு கலைஞர். நிலாவெளுப்பை வெள்ளாவித் துணிகளுக்கு கொண்டு வருகிற வித்தைக்காரன் சலவைத் தொழிலாளி. எங்கள் தெருக் கடைசியில் மூன்று குடும்பங்கள் இருந்தன.

நடேசன், சுசிலா இவர்களெல்லாம் தெருக்காரர்களுக்குப் பரிச்சயமானவர்கள். கல்யாண வீட்டுப் பந்தலில் வேட்டி, சேலையால் அழகு செய்வதும் அவனே. பந்தி நடக்கிறபோது மாற்று விரித்தான்.

கல்யாணத்தில் சோறு வடித்துக் கொட்டுவது. அவன் கொடுத்த வேட்டி பந்தி முடிந்து, சந்தடி ஓய்ந்து, வேட்டியோடு மீதமாகும் சோறு அவனுக்குச் சொந்தமானது.

மாப்பிள்ளையும், பொண்ணும் மணவறையில் இருக்கிற போது, மனைக்குக் கீழே இருப்பது அவன் விரித்த வேட்டி. வேட்டியால் நெல்குவித்து சடங்கு நடத்தி, திருப்பூட்டு நடந்து விட்டால் வேட்டியோடு நெல்லும் அவனுக்குச் சேர்ந்துவிட்டது.

இந்தக் கலைஞனின் சேவை கல்யாண வீட்டோடு நின்றுவிடுவதில்லை. ஊர்க்காரர்களின் வாழ்க்கை எங்கெங்கு போனதோ, அங்கெல்லாம் அவன் வாழ்க்கைப் போய்நின்றது.

அந்தோ ஒரு 'பூப்பல்லக்கு' போகிறது. அந்தப் பல்லக்கு முன்னால் அவன் துணிமாற்று விரித்துக் கொண்டே போகிறான்.

சுடுகாடு செல்லும் பிணத்துக்கும் இவனது துணிதான். அந்தப் பல்லக்கிலும் இவனது துணி அலங்காரம்.

வாராவாரம் வீட்டில் துணி எடுத்து போய் வெளுத்து வரும் திரு. நடேசன் உரிமையோடு தம்பி, பாப்பா, அய்யா, அம்மா என்று குடும்பத்தில் ஒருவராய் இருப்பார். இப்போதெல்லாம் ஊரில் இத்தகைய உறவுகளைத் தேட வேண்டியுள்ளது.

அறுவடைக் காலங்களில் நெல்லும் தருவோம். பண்டிகைக் காலங்களில் பணத்துடன் பலகாரங்களும் வாங்கிப் போவார்கள்.

இவர்கள் வீட்டுக்குள் போய் பலதடவை அவர்களது தொழிலைப் பார்த்து நேசித்திருக்கிறேன். ஆற்றங்கரையில் வெள்ளாவிப் பானைக்கருகில் நண்பர்களுடன் நின்று வேடிக்கைப் பார்த்துள்ளோம்.

பெருகி வழிந்த ஆற்றின் மேலாக உவர்மண் படியும். கோடையில் ஆற்றில் தண்ணீர் சுண்டச்சுண்ட உலை வைக்கிறபோது கொதி காணுமே அதுபோல் மண்ணுக்குள் இருக்கிற தண்ணீர் கொப்புளம் கொப்புளமாய் மேலே வந்து வெடிக்கும். வெடிப்புக் காய்கிறபோது உவர்மண் ஆறுநெடுக பருத்தி வெடிப்பாய் கண்ணைப் பறிக்கும்.

"உவரி" என்றொரு கத்தி. ஓலைபோல் மெல்லிசாய் இருக்கும். அடிமண் வாராமல் மேலாக உவர்மட்டும் சுரண்டி எடுக்க அந்தக் கத்திதான் அவர்களது ஆயுதம்.



எல்லா சலவைத் தொழிலாளிகளின் வீடுகளிலும் உவர்மண் போட்டு வைக்க ஒரு கூடு உண்டு. அதற்குப் பெயர் உவர்மண் கூடு.

வீட்டுக்கு வெளியே உவர்மண் கூடு வைக்கக் கூடாது. வெயில்பட்டு மண் வெளுத்துப் போகும். வெயில் படாத இடத்தில் வீட்டுக்கு உள்ளேயே உவர்மண்

கூடு. உழவர்கள் நெல் சேகரித்து வைக்கும் பட்டறைப்போல், சலவைத்

தொழிலாளிக்கு உவர்மண்கூடு.

நிலத்துக்கு மேலே இருப்பது பட்டறை. நிலத்துக்குக் கீழே கட்டுவது கூடு. பட்டறையின் தானியச் சேமிப்பை மேலிருந்து எடுக்க வேண்டும். உவர்மண் சேமிப்பைக் கீழிருந்துவடிக்க வேண்டும்.

இரண்டடி, மூன்றடி ஆழம் தோண்டி, கிணற்று உறை இறக்குவது போல சுற்றிக்கட்டி, அடியில் கையளவு ஓட்டை வைத்து அதிலிருந்து தேவைப்பட்ட அளவு உவர்மண் வடித்துக் கொள்வார்கள்.

கைப்பிடி மண் எடுத்து, தொட்டியில் கலக்கினால், பத்து பதினைந்து உருப்படிகளைத் துவைத்துவிடலாம் என்று பக்கிரிசாமி சொல்வார். நிலா அடிச்சமாதிரி வெளுப்பு கண்ணைப் பறிக்கும்.

எப்போது ஊர் சென்றாலும் அந்தச் சலவைத் தொழிலாளிக் கலஞைர்களைத் தேடுகிறேன். எல்லோரும் மரித்துப் போய்விட்டனர். அவர்களது குடும்பங்களே இப்போது தெருவில் இல்லை.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்ற பெருமை யுடையது அல்லவா இவ்வுலகம்?

❖❖❖

*உடம்புகள் அழியும் போதும்*
*உணர்வுகள் அழிவ தில்லை*
*இடம்மாறி வாழும் போதும்*
*இதயத்தில் மிதக்கும் எண்ணம்*
*தடம்மாறி போவ தில்லை*
*தாய்மடி மறப்ப தில்லை*
*படம்போடும் ஞாப கங்கள்*
*பாதியில் கலைவ தில்லை.*

# குறவன் குறத்தி

பால்ய வயதில் பார்த்த நிகழ்வுகள், முகங்கள், பரபரப்பான செய்திகள் எல்லாம் என் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கின்றன.

எங்கள் ஊர் கோயில் விழாக்களில் பங்குனிச் சித்திரை, வைகாசி மாதங்களில் வெகுச் சிறப்பாக குறவன் குறத்தி ஆட்டக் கதம்ப நிகழ்ச்சி விடிய விடிய நடக்கும்.

குறிப்பாக பங்குனிப் பெருவிழாவின் வெண்ணைத்தாழி, கருடசேவை போன்ற விசேஷ நாட்களில் விடிய விடிய ரசிக்கும் கூட்டங்களைப் பார்த்து இரசித்திருக்கிறேன்.

ஆட்டக்குழுவில் எட்டுப்பேர். மூன்று பெண்கள். மூன்று காமெடி. ஒரு தவில், ஜால்ரா. குறவன் குறத்தி, பண்ணையார், சாமியாடி, பேயாட்டம் என்று மணிக்கொருதரம் பிரிவு பிரிவாய்ச் செய்வார்கள். இந்த நிகழ்ச்சிகளில் ஒரு கதையும் இருக்காது. பல கதைகள் இருக்கும்.

ஆட்டக் குழுவில் ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை. ஆடத் தெரிந்தவன் ஆடுவான். பாடத்தெரிந்தவன் பாடுவான். இரண்டும் இல்லாதவன் வாய் வார்த்தையிலே சமாளித்துவிடுவான். அந்தக் கலைஞனுக்கு சலங்கையை வைத்தே சக் சக் என்று காலிலே ஆட்டத்தையும் முடித்துவிடுவான். நின்றபடியே அவனுக்கு கால் பேசும். வாயும் பேசும்.

முன்னதாகவே பேசி வைத்து பயிற்சி செய்வது ஆட்டத்தை அரங்கேற்றுவது இல்லை. இந்த ஆட்டக்காரனது வாய் ஜாலத்தைக் கண்டு வியப்படைந்திருக்கிறேன்.

இரண்டும் பேசிக் கொள்வதான காட்சி.

"அய்யாவுக்கு எந்த ஊரு?"

"தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டிணம் தாலுக்கா, ...."

"நாகப்பட்டினம் போஸ்ட் தானே, அது என்னைக்கு தாலுக்கா ஆனது.."

"ஒரு பேச்சுக்கு வச்சிக்கிற வேண்டியதுதானே. கழுதை என்ன காசாக் கேக்குது"

"நிலபுலம் இருக்கா?"

"வயல்வெளி எக்கச்சக்கம். கலப்பைச் சாத்த எடம் கிடையாது. இம்புட்டுச் சொத்துக்கும் வாரிசு ஒருபயதான். பெரும் பண்ணையார்."

"நிலபுலம் எங்கே இருக்கு?"

"நாகப்பட்டிணத்துக்கு கிழக்கே அந்தமான் வரை நம்ம நிலம்தான்..."

"அங்க கடல்லே இருக்கு...."

"கடல்தான். எம்பேரைச் சொல்லாம அங்க யாரும் தண்ணி அள்ளிக் குடிக்க முடியாது. அப்படியே குடிச்சிட்டாலும் நாலு அஞ்சு வாட்டி வாந்திதான் செய்வான்."

"முருகா"

"முருகா, முருகா... ஒனக்குத்தான் கடலெல்லாம் சொத்து இருக்கே. ஒனக்கெதுக்குப்பா கோயில், குளம்,உண்டி, நிலபுலம் இவ்வளவு சொத்து."

மொத்த கூட்டமும் சிரிக்கிறது.

குறத்தி தலையில் பட்டைத்துணி. பட்டைத்துணியில் இணைந்துள்ள கொக்கு இறகு. தோளில் கயிறு கட்டிய டப்பா. குறவன் தோளில் கயிறு கட்டிய சுரக்குடுக்கை. கோவணம் கட்டியிருப்பான். குறத்தி குட்டைப் பாவாடை - சட்டைப்போட்டு மாராப்புத் துணி அணிந்திருப்பார். குறவனும் குறத்தியும் பாசிமணிகள் கோர்வை செய்த மாலைகள் அணிந்திருப்பர்.

குறவனும் குறத்தியும் தம் முன்பறகளில் சொத்தைப் பறகள் எனக்காட்டும் வகையில் கருமை மை தீட்டியிருப்பர். கைகளில் குறவன் வேடக்காரர்கள் கவுட்டைப்புல் வைத்திருப்பான். இருவரும் கால்மணி கச்சங்கட்டியிருப்பார்கள். கைகளில் பாசிக் கோர்வையும், மணிக்கட்டில் கறுப்புக் கயிறும் கட்டியிருப்பர். குறத்தி கையில் வளையல் அணிந்திருப்பார். குறவன் தம் இரு கண் பட்டைகளிலும் வெள்ளைக் கலர் பூசியிருப்பார். மேலும், ஒட்டுமீசை அல்லது கருமையால் தீட்டிய மீசை எழுதியிருப்பார். குறத்தி முடியை 9

அள்ளிக் கட்டி செருகிய கொண்டைப் போட்டு இருப்பார். கொண்டையில் வட்ட வடிவில் பூச்சூடி இருப்பர்.

குறவன் குறத்தி ஆட்டத்தில் ஓடக்காரன் பாட்டு, சந்தைக் கடைப்பாட்டு, கோனார் கதைப்பாட்டு, தனுஷ்கோடி அழிந்தபாட்டு, அரியலூர் ரயில் விபத்துக்கதைப் பாட்டு.

குறவன் குறத்தி ஆட்டத்தில் கதைப்பாடல் பார்ப்பவர்கள் ரசிக்கத்தக்க வகையில் அமைகிறது.

குறவன் : அடியே, இன்னிக்கு ஒனக்கும் எனக்கும் கல்யாணமாகி பத்து வருஷமாகவே ஒன் வயித்துல ஒரு புழுபூச்சியக் காணோமடி.

குறத்தி : அடேய் நிதம் குடிச்சிட்டு வந்து வெட்டிச் சோத்தைத் தின்னுட்டு ஒட்டுத் திண்ணையிலே படுத்தா எனக்கு எப்படி வயிறு வீங்கும்?

குறவன் : அடியே, இன்னிக்கு ஒனக்கும் எனக்கும் சண்டை. செத்தா சண்டையிலே சாகணும். இல்ல இந்த மண்டையோட போகணும்.

குறத்தி : அடப்போடா எடுபட்ட பயலே. வீட்டுக்கு வாங்கித் தின்ன பயலே. மொள்ள மாரிப்பயலே. முடிச்சவுக்கிப் பயலே.

குறவன் : அடியே குறத்தி ஊருக்கு மேயப்போயிட்டு இங்கே எதுக்கடி வந்தே.

(அடித்தல், மிதித்தல், அடிவாங்குவது போன்று நடிக்கிறார்கள்)

குறத்தி : கேட்டாலும் கேட்டிடுங்க
பஞ்சாயத்துக் காரங்களே
பாயப்போட்டுப் படுத்திருந்தேன்
பசுபதி போல இந்தப் பாவிப்பய
அடிக்கிறானே குடிவெறியாலே

என்று கதையாடலில் ஆடிப்பாடுகின்றனர். வசனமும், பாடலும் கலந்து ஆடுவதும், பாடுவதும், நையாண்டி மேளக்கலைஞர்களைப் பஞ்சாயத்துத் தலைவர்களாகப் பாவித்துக் கதை நிகழ்த்துவதும் வேடிக்கையாக, ரசிக்கத்தக்கதாக இருந்தது. பார்வையாளர்களுடன் கலைஞர்கள் கலந்து விடுவதானது கலைநிகழ்ச்சிக்குச் சிறப்பு ஆகும்.

குறவன் குறத்தி டான்சிலே கொச்சை வார்த்தைகள் இருக்கும். ஆட்டத்திலே இது ஒரு பிரச்சனையாகவே இருக்காது. நம் நாட்டுக்

கதைகளிலே அப்படியான பாலியல் கதைகள் கொத்துக் கொத்தாகக் கிடக்கின்றன. புராணங்களிலும் உண்டு. கோயில் கோபுர சிற்பங்களிலும் இருக்கு.

கூட்டம் அதிகமாக இருக்கிற இடத்திலே குறவன் குறத்தி டான்சிலே கொச்சை அதிகமாக இருப்பதைக் கேட்டிருக்கிறேன். அப்படிப் பேசுவதில் ஒரு நுணுக்கம் தங்கியிருக்கும். சனங்களும் சிரிக்கிறாங்க.

"சாமி" குறத்தி.

"சாமீ, எமீன்னுக்கிட்டு... சாமிக்கு மருள் வரப்போவுது. வெரசாச் சொல்லு"

"நல்ல சமயத்திலே வந்திருக்கேன். எனக்கு ரொம்ப சிக்கலா இருக்கு சாமி"

"என்ன துருப்பிடிச்சுப் போச்சா"

"சீ... குடும்பத்திலே ரொம்ப கஷ்டமா இருக்கு சாமி"

"கஷ்டமா இருக்கு?" சாமியாடி கையை மேலே போடுகிறார்.

"சாமி கையை மேலே போடாதீங்க"

"சாமிதானே, கைய எங்க போட்டான்னே. சாமிக்கு கழிவு கிடையாது பொண்ணே"

"அப்படியா சாமி"

"ஆமா, அக்கான்னாலும் சரி. தங்கச்சின்னாலும் சரி. கூசாம கையைப் போடும்."

"கையை எடுங்க சாமி"

"மகளே நா வேணுமின்னா, போடுறேன்;

சாமிதானே போடச் சொல்லுது, பிள்ளை வேணுமா இல்லையா"

"வேணும்"

"அப்ப. சாமி கையைக் காலைப் போட விடமாட்டேங்குற"

சனங்க எல்லாம் வெட்கத்தால் சிரிக்கிறார்கள். கலைஞன் தனக்குள் அடைகாத்துக் கொண்டிருக்கும் பாலியல் வெக்கையை விரல் நுனியில் சுண்டி எடுத்து வெளியில் வீசுகிறான்.

மனிதனுக்குள் முகம் தெரியாமல் அடைத்து வைக்கப் பட்டிருக்கும் பாலியல் வக்கிரத்தை அடையாளம் காட்டுகிறது. இதைப் பார்த்த கண்களுக்கு பாலியல் கொச்சை ஏற்படுவதில்லை. ஏன்?

மக்களுக்கு வாழ்க்கை கிடக்கிறது நீண்டு, பரந்து, அகன்று எரியும் அக்னியுள்ள கடல் போன்ற வாழ்க்கை அவர்களுக்கு நேரமில்லை. அவசியமில்லை.

# வேடிக்கையான விஷயங்கள்

காலப்பாதையில் நீண்டதூரம் நடந்து வந்துவிட்டேன். என் கண்களின் முன்னே பால்ய காலத்து வேடிக்கையான விஷயங்கள் திரைக்காட்சிகளைப் போல் வந்து வந்து போகின்றன.

**முதல் இரயில் பயணம் :**

ஐந்தாம் வகுப்பு படிக்கும்போதுதான் முதலில் இரயிலில் பயணித்தேன். திருவாரூரில் நடைபெற்ற தெப்பத்தைக் காண குடும்பத்துடன் சென்றோம்.

மன்னார்குடி - நீடாமங்கலம் - ஒரு நாளைக்கு இரண்டு தடவை கோச் ரயில் போய் கொண்டிருந்தது. (இப்போதெல்லாம் கோச் ரயிலை எக்ஸ்சிபிசனில் தான் பார்க்க முடியும்)

கோச்சில் பயணித்து நீடாமங்கலம் ஜங்சனில் இறங்கினோம். தஞ்சாவூரில இருந்து நாங்கள் செல்லும் ரயில் வந்தது. ரயில் பிளாட்பாரத்துக்குள் நுழையும் போது பயணிகள் பழைய வாசனையுடன் குரங்கு மனிதர்களாக மாறி தாவி ஏறினார்கள்.

ரயில் பெட்டிகளில் கூட்டம் அடைத்துக் கொண்டுவிட்டது. பாசஞ்சர் ரயில் வழி நெடுக ஒவ்வொரு ஸ்டேசனிலும் நின்று புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தது. பயணம் முழுக்க குழந்தைகள் லூட்டித் தாங்க முடியலை.

சன்னல் ஓர சீட்டுக்கு எங்களிடையே போட்டி.

அந்த முதல் பயணம் இப்போதும் நினைவில் இருக்கிறது.

## வாத்துக்குட்டி

ஊருக்கு அடிக்கடி வாத்து மேய்ப்பவர்கள் வருவார்கள். நானூறு வாத்துகளுக்கு பின்னால் ஒரு குச்சியை வைத்து சாலையில் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் போகாதவாறு விரட்டிக் கொண்டு வருவார்கள்.

வாத்துக் குஞ்சுகள் 'க்ளாக் க்ளாக்' என்று ஒலியெழுப்பியவாறு தத்தித் தத்தி வேகமாகச் செல்லும். இதனைப் பார்த்து பரவசமடைவோம்.

இவர்கள் வந்தால் ஆறுமாசமோ, சமயத்தில் ஒரு வருஷம் கூட டேரா போட்டு வயல்வெளி ஓரங்களில் தங்கிவிடுவார்கள். வயல் வேலைத் தொடங்கியதும், வாத்துக்களைப் பத்திக் கொண்டு வேறு ஊருக்குச் சென்று விடுவார்கள். ஒருவரிடம் குறைந்தது 800லிருந்து 1000 வாத்து இருக்கும்.

வயலுக்குச் சொந்தக்காரர்கள் இவர்களுக்கு கூலி கொடுப்பார்கள். இந்தக் கூலியும் வாத்து முட்டைகளை விற்ற காசும்தான் அவர்களது வாழ்க்கை.

ஊர்க் குளங்களிலும், பாமினி ஆற்றிலும் பகலெல்லாம் வாத்துக் கூட்டம் நீந்தும். செக்கச்சிவந்த கால்களைத் துடுப்பாக்கி, வாத்துக்கள் தண்ணீரில் நீந்தி, புழு பூச்சிகளையும், மீனையும் உண்ணும் அழகே அழகு. இதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்போம்.

## ஸ்கூல்

முழுப்பரிட்சை லீவு விட்டதும் ஏதோ ஒரு பெரிய சுமையை இறக்கியதாக இறக்கைகள் கட்டிக்கொண்டு ஊர்ச்சுற்றுவோம். பாஸ் பண்ணிடுவோம் என்ற நம்பிக்கை.

புத்தகங்களைத் தெருவில் இருக்கும் ஜூனியர் பையன்களுக்கு அரைவிலை, முக்கால்விலை என்று பேரம்பேசி விற்றுவிடுவோம்.

எழுதாதத் தாள்களை நோட்டுப்புத்தகங்களிலிருந்து கிழித்து தனியே எடுத்து பத்திரப்படுத்துவோம். எழுதிய தாள்களைப் பேப்பர் வாங்குகிறவர்களிடம் விலைக்கு விற்போம்.

வானில் பார்க்கும் விமானங்களை இரசிப்போம். எப்போதாவது ஜெட் விமானம் மிக விரைவாகப் போய்க் கொண்டிருக்கும். மேகத்தில் மெலிந்த வெண்புகைக் கோடு போல் சில நிமிடங்கள் இருக்கும். இது மறையும் வரை இரசிப்போம்.

ஒற்றைச் சக்கர வண்டியை முதுகில் தூக்கிக் கொண்டு வருவான். "சானை புடிக்கலையோ, சாணைப் புடிக்கிலையோ" என்று கூவிக் கொண்டு வருவான். கத்தரிக்கோல், அரிவாமனை, கத்தி இவற்றை கூர்முனை செய்யும்போது வெளிவரும் மத்தாப்புப் பொறிகளைப் பார்த்து வியப்போம்.

வீட்டு வாசலிலேயே பழைய பித்தளைப் பாத்திரங்களுக்கு ஈயம் போடும் வேலையை அருகிலேயே அமர்ந்து பார்ப்போம்.

மாடு கன்று போடுவதையும், மாட்டுக்கு சினைபிடிக்க காளையையும் பசுவையும் சேர்க்கும் காட்சியை இரகசியமாக பார்த்து ரசிப்போம்.

கீரிக்கும் பாம்புக்கு சண்டை விடப்போவதாகச் சொல்லி கடைசிவரை ஏமாற்றிய பாம்பாட்டிக்காரன் கூட்டத்தில் கால்கடுக்க நின்றதும் ஞாபகத்துக்கு வருது.

**ஊஞ்சல் :**

எங்கள் வீட்டில் கூடத்தின் நடுவே ஊஞ்சல் இருக்கும். பால்ய வயதிலேயே என் கற்பனைச் சிறகுகள் பிறந்த இடம் இந்த ஊஞ்சல்தான்.

தனிமையில் பல மணித்துளிகள் ஆடுவது எனக்குப் பிடிக்கும். எங்கள் வீட்டில் ஊஞ்சல் ஆட நண்பர்கள் வருவார்கள். தெருவிலேயே எங்கள் வீட்டில் மட்டும் ஊஞ்சலிருப்பதில் பெருமை. சந்தோஷம்.

சந்தோஷமான தருணங்களையும் சோகத்தின் நேரங்களில் இளைப்பாறுவது ஊஞ்சலில்தான். அப்போதெல்லாம் ஊஞ்சலாட்டம் வேகமாக இருக்கும். எனது பால்யகால அனுபவங்கள் எல்லாம் இந்த ஊஞ்சலில் பதிய வைத்திருக்கிறேன்.

ஊஞ்சல் என்னுடைய அந்தரங்கத் தோழி. என்னுடைய மௌன நேரங்கள் மெதுவாக ஆடும் நேரங்களாக அமைந்திருந்தன.

ஊஞ்சலில் ஆடும்போது மனச் சிறகுகள் பறக்கத் தொடங்கும். கற்பனைச் சிறகுகள் மேகமில்லாத நிர்மல வானத்தில் சிந்தனையோடு சிரமமில்லாமல் பறக்கும்.

பழைய நினைவுகளை இப்போது நினைத்தாலும் நெஞ்சுக்குள் ஒரு மொட்டு கவிழ்கிறது.

# ரசனை

பால்யம் என்பது வாழ்க்கையின் காலைப் பொழுது. இது தூய்மையானதாக, கற்பனைகளைத் தூண்டுவதாக, லயம் மிகுந்ததாக இருக்கிறது. இந்த அளவுக்கு எனது பால்ய ரசனைகள் இருந்தன.

தனிமைதான் என் முதல் ரசனை. சின்ன வயசிலே தனிமையும், மௌனமும் எனது இரு கண்களாக அமைந்தன. யாருமற்ற தனிமையில் வானத்துடன் நட்சத்திரத்துடன், நிலாவுடன், மலர்களுடன் என் தோட்டத்து பூச்செடிகளுடன் இருந்த நேரங்கள்.

பல நேரங்களில் மௌனம் ஒரு சௌகரியம். மௌனம் ஒரு தவிப்பு. மௌனமே ஒரு பாதுகாப்பு.

அடிக்கடி நிமிர்ந்து வானம் பார்ப்பேன். சுத்தமாய் இருக்கும். வானம் பார்ப்பது எனது வழக்கம். அப்போதெல்லாம் வானம் சுத்தமாய் இருக்கும். எந்த இலக்குமின்றி வெகுதூரம் வெறித்துப் பார்க்கிற போது உள்ளே மனம் விரிவடையும்.

இந்தப் பழக்கத்தினால் இப்போது பிரச்சினைகள் வரும்போதெல்லாம் வானத்தைப் பார்க்கிறேன். மனதுக்குள் பாரம் உடனே குறைந்து போயிருக்கிறது. பிரச்சனைகளைச் சமாளிக்க புதிய நம்பிக்கை உதயத்தில் தோன்றும்.

கோயில் விழாக்களில் இசைக் கச்சேரியில் அப்பாவுடன் அமர்ந்து ரசிப்பேன். பந்தலடியில் பதினெட்டு நாட்கள் கச்சேரியும் இனிமையான நாட்கள்.

தவில்களின் தாளமும், நாதஸ்வரத்தின் இனிமை, புல்லாங்குழல்களின் சிணுங்கல், வீணையின் கனதொனி, வயலின்

ஒட்டு மொத்த பிரவாகம், ஷெனாயின் அகலமான ஓசைகள், தில்ரூபாவின்ஆனந்தமான அழுகை இவையெல்லாம் நேசித்திருக் கிறேன். இசை மனசிலே இருக்கிற துருக்களையெல்லாம் துலக்கி விடுகிறது.

படைப்பில் இருக்கும் போது பால்ய வயசு இரசனை.. எனக்குத் தேவைப்படுகிறது. அவளின் ஞாபகங்களே சுவாசமாகின. மனசின் பரப்பெங்கும் பீச்சியடிக்கும் ஒரு பிரவாகம். என் சின்ன வயசு இதயம், தன் காலைப் பொழுதைக் கண்டு கொண்டு, புத்துணர்ச்சி அடையும்.

கொத்து மலர்களில் குதூகலித்த நாட்கள். ஒளிவட்டம் போடுகின்ற காலை நேரத்தில் வாசலில் கோலத்தின் நடுவே பறங்கிப் பூக்கள் மனசைப் பறிக்கும்.

நண்பன் கூப்பிட்டான்.

குமார் நாளைக்கு காலையிலேயே அஞ்சு மணிக்கு தாமரைக்குளம் வந்துடு.

"எதுக்கு...?"

"குளத்திலே தாமரை மொட்டு இருக்குதுல்லே... அது மெதுவா... ஸ்டேஜ் பை ஸ்டேஜ்ஜா பூப்பதைப் பார்க்கலாம்."

விடியற்காலை மப்ளரைக் கட்டிக் கொண்டு ஓடினேன்.

மார்கழி மாதக் குளிரில் நானும் நண்பனும் குளத்துக் கரையில் மணிக்கணக்கில் நின்றுக் கொண்டிருந்தோம்.

எவரும் பார்க்காமல் வெட்கப்பட்டு இரகசியமாக மலர்கள் பூக்கின்றன. தமது இளமையை, மாலைக் காற்றில் வீணடிக்கின்றன.

தோட்டத்தில் வண்ணத்துப்பூச்சியின் அழகில் சொக்கி நிற்பேன். மலருக்கு மலர் பறந்து போகும் வண்ணத்துப் பூச்சிகளின் சுறுசுறுப்பைப் பார்த்து இரசிப்பேன். மழை நின்றதும் பறக்கும் பட்டாம்பூச்சிகளைப் பிடித்து இரசிப்பேன். ஆனால் அதன் வாலில் நூல் கட்டியதில்லை.

மண் உண்டியலில் ஆசைஆசையாய் காசு சேர்ப்பேன். சாமிப் படங்களையும் மயிலிறகுகளையும் புத்தகத்தின் பக்கங்களில் சேகரித்து மகிழ்வேன்.

தேங்கும் தண்ணீரில் அங்குமிங்கும் மிதந்து அலைந்து கொண்டிருக்கும் தண்ணீர்ப் பூச்சிகளை வேடிக்கைப் பார்ப்பேன்.

சிருஷ்டியில் ஒரு சித்திரமாக இருக்கும் எங்கள் ஊரில் உள்ள மரங்களைப் பார்த்து வியப்பேன். வானத்திற்குத் தூண்டில் போடும்

கிளைகள், சிரிப்பை ஊற்றி வைத்த இலைகள், உயிர் ஒழுகும் மலர்கள். ஞானத்தைப் போதிப்பதாக மரங்களைப் பார்ப்பேன்.

மரங்கள் இல்லையேல் காற்றை எங்கே போய் சலவைச் செய்வது. மரங்கள் இல்லையேல் மழைக்காக எங்கே போய் மனுச் செய்வது, மரம் மனித வாழ்வின் அங்கமல்லவா? நான் ஆடிய தொட்டில், நடைவண்டி, பென்சில், கட்டில், தலையணைப் பஞ்சு, சவப்பெட்டி, விறகு எல்லாமே மரத்தின் உபயந்தானே. சின்ன வயசிலே ஒவ்வொரு மரமும் போதி மரமாக மனதில் பதிந்தது.

மன்னார்குடியிலே ஒரே ஒரு பார்க். **கல்கி பார்க்.** பால்ய வயசில் இங்கு அடிக்கடி செல்வேன். நல்ல இடம். மரங்கள் சாமரம் வீசும். பசும்புல் மெத்தையாக இருக்கும். தென்றல் தவணை முறையில் தடவி விடும். ரேடியோவில் திருச்சி அலைவரிசை காதில் ஒலிக்கும்.

ஒவ்வொருமுறை வயலுக்குச் செல்லும்போது நீரோடை களில் கலகலப்பையும் ஓரிடத்தில் மட்டும் குமிழி போல் முகிழ்ந்து வரும் நீரையும் பார்த்துக் கொண்டே நிற்பேன். சாம்பல்நிற வானத்தையும், பறவைகளின் பாடல்களையும் இரசிப்பேன். பூமி தன்னைப் பச்சையாய் நெய்து வைத்திருப்பது மனதுக்கு சுகம் தரும்.

மல்லிகை வாசம் பாஷையில்லாமல் என்னை அழைக்கும்.

சின்ன வயசிலே பூமியில் நின்று இளமையில் வானத்தைப் பார்த்தேன். இன்று வானத்தில் இருந்தும் பூமியைப் பார்க்கிறேன். தியானத்தில் ஏகாந்த வானத்தைப் பார்ப்பதில் ஒரு சுகம். தூங்கி எழுந்ததுமே வானத்தைப் பார்ப்பதும், சூரிய நமஸ்காரம் செய்வதும், பால்ய வயசுப் பழக்கம் இன்றும் தொடர்கிறது.

பௌர்ணமி முழு நிலவு - அமாவாசை இருட்டு - இரசிப்பேன். 'நட்சத்திரங்கள்' கண்சிமிட்டுவதைப் பார்த்து நானும் கண் சிமிட்டுவேன்.

குமுதத்தையும், ஆனந்த விகடனையும் ஆர்வமாய் புரட்டிய நாட்கள், கல்கியின் பொன்னியின் செல்வனை கொஞ்சம் கொஞ்சமாகப் படித்து இரசித்த நாட்கள். புது புத்தங்களைப் புரட்டி வாசனையை நுகர்ந்த ஞாபகங்கள் மனதுக்குள் விரிகிறது.

சின்ன வயசு ஆசைகள் மனதின் ஓரத்தில் விரிகிறது. சின்ன வயசு ஆசைகள் மனதின் ஓரத்தில் இன்றும் பயணித்துக் கொண்டிருக்கிறது.

மேகக்கூட்டங்களையும், விண்மீன்களின் கண் சிமிட்டல் களையும் ரசித்துப் போட்ட விதைதான் இன்று என் கற்பனைச் சிறகுகளுக்கு வேகத்தைக் கூட்டி வருகின்றன.

மின்னும் பளபளப்பு, பூமியிலிருந்து மங்குகிறது. ஒரு கம்பீரமான அமைதி வானில் வருகிறது. பகல் பொழுது முடிந்துவிட்டது. இரவின் இறக்கைகளிலிருந்து இருள் வீழ்கிறது.

என்னுடைய ரசனைகள் - தொட்டால் சுருங்கி இலைகள் - நம் விரல் பட்டதும் சட்டென சுருங்குவதை -- குரங்கைக் குட்டி பிடித்துக் கொண்டு தாயுடன் போவதை, பூனை தன் குட்டிகளை வாயில் கவ்விப் போவதை - தாயின் பின்னே குடுகுடுவென ஓடும் பன்றிக் குட்டிகளை - பாசிமணி விற்கும் நரிக்குறவன் மூக்கில் போட்டிருக்கும் வெள்ளி வளையத்தை - அய்யோ? நண்பர்களுடன் எதையெல்லாம் கண்டு பிரமித்திருக்கிறேன். ரசித்திருக்கிறேன்.

தாமஸ் வாத்தியார் வீட்டுக்கு கிறிஸ்துமஸ் தினங்களில் கேக் வாங்கிப் போவேன்.

அவர் வீட்டில் நாசியைத் துளைக்காத வாசனை எப்போதும் இருக்கும். வாசற்படிகளில் குழாய் மணிகள் கிணுகிணுக்கும். ரேடியோ மீது போர்த்தியுள்ள துணிகள் மீது பச்சைக் கிளிகள் கொஞ்சும். தொட்டிகளில் உள்ள செடிகள் எல்லாம் சந்தோஷத்துடன் மலர்ந்திருக்கும். அந்த வரவேற்பறையின் அமைதி சுமந்த அழகு, வெயிலோடு அழைத்து வந்த வெப்பத்தையெல்லாம் வெளியே அனுப்பிவிடும்.

அவர் வீட்டு டைனிங் டேபிளைப் பார்த்து ரசிப்பேன். ஒரு ஆப்பிளை நிறுத்தி வைப்பதில் கூட அழகு. கண்ணாடி கிளாசில் தண்ணீர், கப் அன் சாசரில் டீ, திரைச்சீலைகளில் ஒரு நளினம்.

எங்குப் போனாலும் என் ரசனையும் என்னைத் தொடர்ந்து கொண்டே வந்ததுதான், இன்று எனது கற்பனைக்கு அடித்தளமாக அமைந்தன.

கிணற்றுக்குள் போட்ட வாளி ததும்பத் ததும்ப மேலே நீரைக் கொண்டு வருவது போல், என் நெஞ்சிலும் பழைய நினைவுகள் ததும்பிக் கொண்டிருக்கின்றன.

# விளையாட்டுக்கள்

மனித வாழ்க்கையில் பதினைந்து வயது வரை விளையாட்டுப் பருவம். இந்தப் பருவத்தில் விதவிதமான விளையாட்டுகள் நெஞ்சில் புதைந்த இந்த நிகழ்வுகள் அடிக்கடி நிழலாடுகின்றன.

அந்தக்கால விளையாட்டுகள் மனதுக்கு அமைதியும் சந்தோஷமும் தந்திருக்கின்றன. நல்ல உடற்பயிற்சியாகவும் இருந்திருக்கின்றன.

சின்ன வயசிலே மழலைப் பட்டாளத்துடன் ஓடி ஆடித் திரிந்த விளையாட்டுகள். நினைத்தாலே இப்போது இனிக்கின்றன. ஒருவர் மீது ஒருவர் உப்புமூட்டை விளையாட்டு - பச்சைக் குதிரைத் தாண்டுதல்கள் - எத்தனை எத்தனை விளையாட்டுக்கள்.

ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரு பூ பூத்தது. - இரண்டு குடம் தண்ணி ஊத்தி இரண்டு பூ பூத்தது. அர்த்தமுள்ள விளையாட்டு. சோப்புத் தண்ணீரில் மெல்லிய துவாரமுள்ள வைக்கோல் குழாய் வைத்து ஊதி நுரைக்குமிழ் உலகம் உருவாக்கி காற்றில் பறக்க விடுவோம்.

கட்டையை வைத்து இரண்டு பக்கங்களும் நுங்கு மட்டையைப் பொருத்தி இருக்கும் நுங்கி உருட்டி விளையாட்டு. சைக்கிள் டயரை உருட்டி ஓடி விளையாடும் விளையாட்டு. ஆகா என்ன ஆனந்தம்.

பல்லாங்குழி, ஆடுபுலியாட்டம், புளியங்கொட்டை, சோழி, பம்பரம், மூளைக்கும் உடலுக்கும் வேலை தரும் விளையாட்டுக்கள்.

நண்பர்களுடன் அரிசி பருப்பு எடுத்து வந்து கூட்டாஞ் சோறு சமைப்போம். கடவுளுக்குப் படைத்துச் சாப்பிடுவோம். ஆற்றங்கரைப் பக்கம் சென்று மணல் வீடு கட்டுவோம். கோபுரமாக கோயில் கட்டுவோம். வீட்டுக்குக் கிளம்பும்போது அதன் மேல் குதித்து இடித்து வருவோம்.

கோலி விளையாட்டு, கலர் கலராய் சிறியது பெரியது என்று சேகரித்திருப்போம். தரையில் இடது காலை மடக்கி, வலது முழங்கால் இட்டு வலது கையால் கோலியினைப் பிடித்துக் கொண்டு ஆள்காட்டி விரலில் குறிப்பார்த்து எதிர் அணி குண்டினை அடித்து நகர்த்துவோம்.

**பல்லாங்குழி**

பல்லாங்குழி ஆட்டம் மிகவும் பிரபல்யமாக இருந்தது. சில வீடுகளின் முற்றத்திலே பல்லாங்குழி ஆட குழி போட்டு வைத்திருப்பார்கள். மரத்தினாலும், பித்தளையினாலும் செய்த பல்லாங்குழி பலகைகள் கிடைக்கும்.

மகளைத் திருமணம் செய்து அனுப்பும் போது சீர்வரிசையில் பல்லாங்குழி பலகையும் சேர்த்து அனுப்புவார்கள். சீசன் நேரத்தில் புளியை வாங்கிக் கொட்டை நீக்கிவிட்டு, சமையலுக்குப் பயன்படுத்துவார்கள். புளியங்கொட்டைகளைப் பல்லாங்குழி ஆடப் பயன்படுத்துவார்கள். தனித்தனியாகவோ, இரண்டு பேர் சேர்ந்தோ பல்லாங்குழி விளையாடுவோம்.

புளியங்கொட்டைகளை அடுப்பில் சுட்டுச் சுவைத்த அனுபவமும் பலருக்கு இருக்கும்.

தாயக் கட்டைகளை உருட்டி பரமபதம் விளையாடுவோம். சோழிகளையும் உருட்டுவதுண்டு.

கிட்டிப்புள் விளையாட்டு கவுண்டி அடித்தல் மறக்க முடியாதது. ஒரு அடி நீளக் குச்சியை ஒரு முனையில் பிடித்துக் கொண்டு இரண்டு முனைகளும் கூர்ப்பாக்கப்பட்ட ஐந்து அங்குலக் குச்சியை குழியில் வைத்துப் பந்து போல் விளையாடுவோம்.

பாண்டி விளையாட்டு விளையாடாத சிறுவர்களே, இருக்க மாட்டோம். நான்கு கட்டங்களில் 'சில்' வைத்து விளையாடிய அனுபவங்கள் எல்லோருக்கும் இருந்திருக்கும்.

## பம்பரம்

பெரியக் கடை வீதி சென்று சிறியது, பெரியது என்று கலர் கலரான பம்பரமும், அதற்குரிய கயிறும் வாங்கி வருவோம். அடியில் பூண், ஆணி அடிக்க அதற்குரியவர்களிடம் சென்று போடுவோம்.

மண்ணில் பெரிய வட்டம், சிறிய வட்டம் என்று போட்டு விளையாடுவோம். பம்பர விளையாட்டில் சேகர் கில்லாடி. விளையாட்டில் தோற்பவர்கள் பம்பரத்தை, வட்டத்தின் மையப் பகுதியில் குவியலாக வைத்து, மற்றவர்கள் தாக்குதல் தொடங்குவார்கள். 'ஆக்கர்' என்ற குத்துக்கள் ஏற்பட்டு பரிதாபமாகக் காட்சியளிக்கும்.

சுற்றிக் கொண்டிருக்கும் பம்பரத்தின் மீது கயிற்றைப் போட்டு சாமர்த்தியமாக மேலே தூக்கி உள்ளங்கையில் தாங்கி சுற்ற வைப்பார்கள். வேகமாக அபிட் எடுப்போம். அரைக் கயிற்றில் பம்பரத்தைச் சுற்றிச் சுழல வைக்கும் நண்பர்களும் உண்டு.

## சடுகுடு

ஐந்து பேர், ஏழு பேர் கொண்ட இரண்டு டீம், பெரிய செவ்வக வட்டம். நடுவில் கோடு. மூச்சு விடாமல் கபடி சொல்லி விளையாடுவோம். டீம் ஸ்பிரிட்டும் இயல்பாக வந்து விடும். அடுத்தடுத்தத் தெரு டீமோடு சென்று விளையாடி வெற்றித் தோல்விகள் பெற்றதும் உண்டு.

## பட்டம் விடுதல்

பட்டம் விடும் சீசனில் கலர் கலர் பட்டங்கள் விற்பார்கள். நாங்களே தயாரித்தப் பட்டங்களும் உண்டு. நூல் கண்டு வாங்குவோம். திறமையுள்ளவர்கள் நூல் கண்டில் 'மாஞ்சா' தடவி வருவார்கள். சுமார் இருநூறு அடி வரை வானத்தில் பறக்க விடுவோம்.

முதலில் பட்டங்கள் வட்டமிடத் தொடங்கும். ஆகாயத்தில் பட்டம் சுழலும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சில பட்டங்கள் உயரமாகப் பறக்கும். சில பட்டங்கள் மற்றது வழியில் கிராஸ் செய்யும். சில பட்டங்கள் அறுந்து பறக்கும்.

அறுந்த விழுந்த பட்டத்தைப் பிடிக்க சிறுவர்கள் ஓடிக் கொண்டிருப்பார்கள். வயது வித்தியாசமில்லாமல் பறக்கும் பட்டங்களை ஆகாயத்தில் பார்த்து எல்லோரும் இரசிப்பார்கள்.

## நீச்சல்

அப்பாதான் எனக்கு நீச்சல் கற்றுக் கொடுத்தார்கள். திருப்பாற்கடலில் பத்தடி, இருபது அடி வரை சென்று நீந்துவோம். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பாதிகுளம் வரை சென்று திரும்புவோம். நாளடைவில் குளத்தின் அக்கரைக்கும் சென்று விடுவோம்.

பாமினி ஆற்றில் தண்ணீர் வரும் சமயங்களில் ஆற்றுப் பாலத்திலிருந்து குதிப்போம். அப்பாவுக்குத் தெரிந்தால் கண்டிப்பார்கள். யாராவது தெரிந்தவர்கள் பாலத்தின் பக்கம் சென்றால் குதிக்க மாட்டேன். நண்பர்களுடன் நீச்சல் - டைவ் என்று கும்மாளமிடுவோம்.

அயிரை மீன்குஞ்சுகளைப் பாட்டிலில் அடைத்து எடுத்து வருவோம். தூண்டிலில் மீன் பிடிப்போம். நண்பர்களுடன் ஓட்டுச்சில்களை வைத்துக் கொண்டு, குளத்து நீரில் எறிந்து விளையாடுவோம். கல் நீரின் மேல் பகுதியில் விழுந்து திவலைகளாகச் சிதறி வெளியேறும்.

விளையாட்டுப் பருவத்தில் விளையாடியப் பல்லாங்குழி, கிட்டிப்புள் போன்றவை பயத்தைப் போக்கின. அறிவுத் திறனையும், புத்திக் கூர்மையையும், உடல் வலுவையும், ஒருமுகச் சிந்தனையையும் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் வளர்ப்பதாக அமைந்தன.

# கிராமபோன் பெட்டி

மியூசியத்திலும் பழைய ரேடியோக்கடைகளிலும் காட்சிப் பொருளாய் இன்று பார்க்கலாம். கிராமப்போன் பெட்டி, மர்பி ரேடியோ, பிலிப்ஸ் ரேடியோ, ஆடியோ, சி.டி. என்று வளர்ச்சியடைந்து வரும் அதிசயம்.

எங்கள் தெருவிலே, தாமரைக்குளத்து வடகரையில் மீன்வியாபாரி ஒருவர் கிராமபோன் பெட்டி வைத்திருந்தார். மாலை நேரங்களில் இதைப்பாட விடுவார். சிறுவர்களாகிய நாங்கள் எல்லோரும் அங்கு ஆஜராகிவிடுவோம்.

முதன் முதல்லே அந்தப் பெட்டியைப் பார்த்து வியப்படைந்தேன். ஒரு பெட்டி பெட்டியைத் திறத்தால் நடுவில் வட்டமான சுழல் மேடை. அதன் மேலே பச்சைக் கலரில் மெல்லிய வெல்வெட் துணி ஒட்டி போத்தியிருக்கும். அதன் மேலே இசைத்தட்டை வைக்கணும். இந்தப் பெட்டிக்குத் துணியில் ஒரு கவர் போட்டிருந்தார். வசதியானவர்கள் வீட்டில்தான் கிராமபோன் பெட்டி இருந்தது.

இசைத்தட்டிற்கென்று ஒரு ஊசி இருக்கும். நூறு எண்ணிக்கைக் கொண்ட ஊசி பெட்டியாக இருந்தது. அதன் அப்போதைய விலை ஒரு ரூபாய். இசைத்தட்டின் விலை எழுபத்தைந்து காசிருக்கும். இசைத்தட்டுக்கள் அரக்கினால் செய்யப்பட்டிருக்கும்.

கிராமபோன் பெட்டியில் கூம்பு வடிவிலான குழாய் ஒன்று செருகப்பட்டிருக்கும். கூம்பின் வழியாக இசை சிறிது தூரம்வரை கேட்கும். இதற்கு மின்சாரம் தேவையில்லை.

ஒரு தடவை இசைத்தவுடன் மறுபடியும் தட்டைப் பயன்படுத்தும்போது பழைய ஊசியை எடுத்துவிட்டு புதிய ஊசிகள் போடுவார்கள். உபயோகப்படுத்தப்பட்ட ஊசியை மறுபடியும் பயன்படுத்தமாட்டார்கள். முனை மழுங்கிய அந்த ஊசியைப் பயன்படுத்தினால் இசைத்தட்டில் கீறல் விழுந்திடும்.

இசைத்தட்டில் கீறல் இருந்தால் பாடும்போது கீறியப் பள்ளத்தில் ஊசி நகராது. அப்போது பாடிய வரிகளே திரும்பத் திரும்ப பாடிக் கொண்டிருக்கும். கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கும். இச்சமயங்களில் சிறுவர்களாகிய நாங்கள் சிரித்து மகிழ்வோம். இசைத்தட்டும் கெட்டுவிடும்.

கிராமபோன் பெட்டிக்கு அடிக்கடி சாவி கொடுக்க வேண்டும். இத்தட்டை வைத்துப் பாட்டுப் போட்டால் ஒருவர் அருகில் இருந்து கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

சாவி கொடுத்தால்தான் இசைத்தட்டு வைக்கும் மேசை சுற்றி சுற்றி வரும். பாட்டும் குழாய் வழியாக வரும். அவர் ஸ்ரீவள்ளி, சிவகவி போன்ற சினிமாப் பாடல்களை அடிக்கடி போடுவார்.

தியாகராஜ பாகவதர், டி.ஆர்.மகாலிங்கம், எஸ்.ஜி. கிட்டப்பா போன்றவர்கள் பாடிய லேட்டஸ்ட் பாடல்களைக் கேட்போம். கொலம்பியா, ஒடியன், ஹிஸ்மாஸ்டர்ஸ் வாய்ஸ் முதலிய இசைத்தட்டுகள் மேல் எழுதியிருக்கும்.

சின்ன வயசிலே கிராமபோன் பெட்டியையும் அதிலிருந்து வரும் இசையையும் அதிசயமாகப் பார்த்து இரசிப்பேன். அந்தக் கால மலரும் நினைவுகள் நினைத்தாலே இனிக்கின்றன.

# டூரிங் டாக்கீஸ்

மன்னார்குடிக்கு அருகில் உள்ள கிராமங்களில் டூரிங் டாக்கீஸ் சென்று சினிமா பார்த்த அந்தக்கால நினைவுகள் நெஞ்சில் அலைமோதி அலைமோதி ஞாபகப்படுத்துகின்றன.

எங்க ஊரிலே கல்கி டாக்கீஸ், செண்பகா டாக்கீஸ், ஸ்ரீராம் டாக்கீஸ் என்ற மூன்று சினிமா தியேட்டர்கள் இருந்தன. ஆஸ்பட்டாஸ் சீட் போட்ட மூன்றும் பழைய குடோனாக இருந்தன. தியேட்டராக மாறியது. பின்னர் ரத்னா தியேட்டர் நவீன வசதிகளுடன் வந்தது.

அருகில் ஐந்து மைல் தூரங்களில் டூரிங் டாக்கீஸ் இருந்தன. சினிமா பார்ப்பது அந்தக் காலத்தில் திருவிழா போல் இருக்கும். ஒவ்வொரு சமயமும் சினிமா வெளியிடும்போது மாட்டு வண்டியில் தம்பட்டம் அடித்துக் கொண்டு தெருத்தெருவாக வருவார்கள். நோட்டீஸ் விநியோகிப்பார்கள். பின்னால் சிறுவர்களில் சிறுவனாய் ஓடிய அனுபவமும் உண்டு.

உள்ளூர் தியேட்டர்களில் புதுப்படம் வந்தால் நடந்தே போவோம். தூரத்தில் இருக்கும் தியேட்டர்களுக்கு வாடகை சைக்கிளில் நண்பர்களுடன் போய் வருவோம்.

ஊரிலே அங்கங்கே பஸ் ஸ்டாப், சந்தை, கடை வீதிகளில் முக்கியமான இடங்களில் சினிமா போஸ்டர் ஒட்டியிருப்பார்கள். தியேட்டர் வாசலில் 'வருகிறது' என்று அடுத்து வரும் திரைப்படத்தைப் பற்றிய போஸ்டர் ஒட்டியிருக்கும்.

விட்டலாச்சாரிய படங்கள்தான் பிரபல்யமாக அதிக நாட்கள் ஓடின. பத்துப் பதினைந்து நாட்களுக்கு மேல் மற்றப் படங்கள்

ஓடாது. டூரிங் டாக்கீசுக்கு நண்பர்களுடன் டபுள்சில் சைக்கிளில் வேர்க்க வேர்க்க வேகமாய்ப் போவோம். சைக்கிளை வேகமாக அழுத்தும்போது டூரிங் டாக்கீசில் இருந்து போடும் ரிக்கார்டு பாட்டு கேட்கும்.

இரண்டு காட்சிகள் நடைபெறும். முதல் காட்சிக்குத்தான் போவோம். கீற்றுக் கொட்டகையில் படம் பார்க்கும் சுகமே தனிதான். வரிசையாக நின்று டிக்கட் வாங்க சவுக்குத் தடுப்புகள் இருக்கும். தார் டின்களில் தடுக்கப்பட்ட டிக்கட் கொடுக்கும் அறை இருக்கும்.

தரை, பெஞ்சு, சேர் என்று மூன்று வகையாக டிக்கட் பிரித்துக் கொடுப்பார்கள். மஞ்சள், பச்சை, நீலம் கலர்களில் டிக்கட் இருக்கும். கூட்டம் வந்த பிறகுதான் படம் போடுவார்கள். ரொம்ப லேட்டானால் பொறுமையிழந்த ரசிகர்கள் விசிலடிப்பார்கள். படத்தைப் போட ஆரம்பிப்பார்கள்.

சின்னப் பொந்திலிருந்து கறுப்பு, வெள்ளை, கலர் ஒளி வரும். திரையில் படம் வந்ததும் விசிலடிக்கும் கூட்டம் ஆர்ப்பரிக்கும். மணலில் உட்கார்ந்து படம் பார்த்த சுகமே சுகம்.

சிலர் மணலை மேடாகக் குவித்து, உட்கார்ந்து பார்ப்பார்கள். புகைத்து முடிக்கப்பட்ட பீடித் துண்டுகளும், சுருட்டும் கீழே பரவிக் கிடக்கும். சிலர் வெற்றிலைப் பாக்கை வாயில் குதப்பி அங்கங்கே திட்டுத்திட்டாய் எச்சிலைத் துப்பி வைப்பார்கள். இதையெல்லாம் பார்த்துப் பார்த்து கவனமாக உட்காரணும்.

நான்கு ரீல்கள் உண்டு. ஆப்ரேட்டர் இடைவேளைக்கு முன்பும் பின்பும் நான்குமுறை ரீலை மாற்றிப் போடுவார். இடைவேளையின்போது கலர் சிலைடுகள் போடுவார்கள். புகைப்பிடிக்கக் கூடாது. ஜவுளிக்கடை, டெய்லர் கடை அடுத்து வரவிருக்கும் படங்கள் இருக்கும்.

சமயங்களில் டிரெய்லர் போடுவார்கள். ரசிக்கும்படியாக வேகவேகமாகக் காட்சிகள் நகரும். இந்தப் படத்தைப் பார்க்கணும்னு ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்கும்.

இடைவேளையில் முறுக்கு, கடலை, பட்டாணி, கடலைமிட்டாய்கள் எல்லாம் தட்டில் வைத்து விற்பார்கள். சோடா, கலர், டீ, காபி, விற்பனையும் பிரமாதமாக நடக்கும்.


காட்சிகளில் காதல் காட்சிகள், படுக்கையறைக் காட்சிகள் வரும்போது வாலிபர்களின் விசில் சத்தம் காதைப் பிளக்கும். பெண்கள் முகம் சுளிப்பார்கள். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரு கயிறுதான் தடுப்பு இருக்கும்.

பெண்களைச் சைட் அடிக்கவே பல வாலிபர்கள் கூட்டம் வரும். இவர்கள் பார்ப்பதை ஓரக் கண்களால் பார்க்கும் பெண்களும் உண்டு. தலையைத் தொங்க விடும் பெண்களும் உண்டு.

"அப்பொதெலாம் ஊருக்கு ஒரு தியேட்டர் இருந்தது. இப்ப வீட்டுக்கு வீடு - வீட்டுக்குள்ளேயே தியேட்டர் இருக்குதே" என்று எனது ஆன்மீக நண்பர் சுவாமி நித்யானந்தர் கூறுவார்.

ஊருக்குள்ளே போகும் போதெல்லாம் நான் தேடுறது அந்த மூன்று சினிமாக் கொட்டகைகளைத்தான். அது இன்றும் என் கண்ணிலே நிக்குது.

❖❖❖



# சர்க்கஸ்

வாழ்ந்துவரும் கலைகளில் சர்க்கஸும் ஒன்று. சர்க்கஸில் மட்டும்தான் சாகஸ விளையாட்டுக்களை நேரடியாகப் பார்க்கலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையிலான எல்லோரையும் சந்தோஷப்படுத்துவது சர்க்கஸ்.

மன்னார்குடியில் சந்தைப்பேட்டைக்குப் பின்புறம், பொட்டையன் குளத்துக்கருகில் உள்ள மைதானங்களில் பாரத் சர்க்கஸ், ஜெமினி சர்க்கஸ் ஏதாவது நடைபெறும். நண்பர்களுடன் முதன் முறையாக சர்க்கஸ் பார்த்த ஞாபகம் நினைவில் உள்ளது.

வட்ட வடிவமான மைதானம். மெர்க்குரி வெளிச்சம். உயரத்தில் இசைக் கலைஞர்களின் இசை. சுற்றிலும் பார்வையாளர்களுக்குரிய சேர், பின்புறம் காலரிகள்.

சர்க்கஸ் கலைஞர்கள் வண்ண வண்ண உடையணிந்து வலம் வந்த அணிவகுப்பு கண்ணைக் கவரும் வண்ணம் இருந்தது. ரஷ்யா, ஜப்பான், மலபார் கலைஞர்களின் பின்னே யானை, கரடி, ஒட்டகம் அணிவகுப்பும் பிரமாதம்.

சுமார் ஐம்பதடி உயரத்தில் ஒரு வீராங்கனை இரும்பு வளையத்தில் எவ்வித ஆதாரமும் இல்லாமல் தன் உடலை வில்போல செய்தாள். வட்டவடிவமான மேஜையில் தன் உடலை ரப்பர் போல் வளைத்து சாகஸம் செய்து பார்வையாளர்களின் கைத்தட்டலைப் பெற்றனர்.

தன் கையில் நான்கு சிறிய, பெரிய பந்துகளையும், பிளேட்டுகளையும் தொப்பிகளையும் மாற்றி மாற்றிப் போட்டு ஒருவர் பிடித்தார். ஆச்சரியத்துடன் அவரது சாகஸத்தை ரசித்தோம்.

பத்தடி நீளமுள்ள ஏணியை மேஜை மீது வைத்தார்கள். எவ்விதப் பிடிப்பும் இல்லாமல் ஏணியை ஆட்டி ஆட்டி அதன் உச்சிக்குச் சென்ற அழகி, அங்கு இருந்த சிறிய வளையத்திற்குள் நுழைந்து அதில் இருந்து வெளியே வந்தாள்.

பின்பு தன் தலைமீது உயரமான இரும்புக் கம்பியின் நான்கு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் ஊற்றி அதன்மீது ஒரு மூடியை வைத்து அதற்கும் மேல் நான்கு முட்டைகளை வைத்து ஒரு கம்பியில் அந்த மூடியை இலாவகமாகத் தட்டி கண்ணாடித் தம்ளர்களில் முட்டையை விழச் செய்து பிரமிக்க வைத்தாள்.

ஒரு ரப்பர் பொம்மையை ஒரு வீரரும், வீராங்கனையும் கொண்டு வந்தார்கள். அதைத் தங்கள் இஷ்டத்துக்கு கைகளையும், கால்களையும் வளைத்தார்கள். தூக்கிப் போட்டுப் பிடித்தார்கள். பார்ப்பவர்கள் ரப்பர் பொம்மைதான் என்று நினைத்தார்கள். கடைசியில் அந்தப் பொம்மை ஒரு சிறுமியாகத் தோன்றியதும் வியப்புத்தான் தோன்றியது.

வெள்ளை வெளேரென ஒரு ஜப்பானிய பெண் தன் உடம்பில் பிரம்பாலான வளையத்தை வைத்து தன் உடம்பை வளைத்து வளைத்து ஆட்டி வளையங்களைத் தன் உடல் முழுதும் கொண்டு சென்று ரசிகர்களை மகிழச் செய்தாள்.

நடுநடுவே குள்ளர்கள் பபூன்களாக வேடிக்கைகள் செய்து சிறுவர்களை, ஏன் பெரியவர்களையும் குஷிப்படுத்தினார்கள்.

வட்டமேசையில் பத்தடி உயரமுள்ள ஒற்றைச் சக்கர சைக்கிளில் நின்ற வீராங்கனை ஏறி தன் காலால் நான்கு கப் அண்ட் சாஸரைத் தூக்கி தன் தலையில் வரிசையாக அடுக்கி வியப்பூட்டினார்.

பத்து அழகிகள் பத்து சைக்கிள்களில் வந்து சாகஸச் செயல்களையும் வித்தைகளையும் செய்து ரசிகர்களிடம் கைத்தட்டல்களைப் பெற்றனர்.

வட்ட மேஜையில் ஒரு அழகி படுத்துக் கொண்டு தன் உள்ளங்காலால் ஒரு பெரிய இரும்புக் கம்பியில் பந்தை ஒவ்வொரு குழியாகப் போட்டு கடைசியில் ஒரு கூடையில் போட்டு விளையாடியதைப் பார்த்தது இன்னும் ஞாபகமிருக்கு.

பார்ப்பவர்கள் மெய்சிலிர்க்க வைக்கும் காட்சியும் இருந்தது. பூமி போன்ற பெரிய இரும்புக் கூண்டில் இரண்டு வீரர்கள் 'விர்விர்' என்று மோட்டார் சைக்கிளில் ஓட்டி சாகஸம் செய்தனர்.

இரும்பு பெட்டிக்குள் இருந்து இறங்கிய சிங்கம், புலி எல்லாம் சாகஸங்கள் செய்தன. காண்டாமிருகத்தை ஒரு அழகி அழைத்து வந்து 'ஆ' என்று அதன் வாயைத் திறக்கச் செய்தார்.

யானைகளைப் பார்த்ததும் சிறுவர்களுக்கு குஷி. யானையின் விநாயகர் பூஜை, கிரிக்கெட், விளையாட்டு, ஒரு யானை மது குடித்து மயங்கி விழுவதும், அந்த யானைக்கு மற்றொரு யானை சிகிச்சை அளிப்பது போன்ற காட்சிகளுக்கு கைத்தட்டல்கள் அதிகமிருந்தன.

பறவைகள் கம்பியில் நடந்தன. ஆஸ்திரேலிய பஞ்சவர்ணக் கிளிகள் பார் விளையாட்டு மற்றும் கம்பியில் சைக்கிள் ஓட்டியது பிரமாதமாக இருந்தது.

இறுதியாக பார் விளையாட்டுகள் தொடங்கின. இளம் வயது கலைஞர்கள் கயிற்றில் அபாயகரமாக அத்தனை உயரத்தில் தாவி விளையாடினார்கள்.

க்ளைமாக்ஸ் காட்சியாக அணைத்து லைட்டுகளும் அணைக்கப்பட்டன. இருட்டில் பார் விளையாட்டில் தாவிக் கொண்டு விளையாடி சாகஸம் புரிந்து சாதனைப் படைத்தனர்.

சுமார் முப்பது விதமான காட்சிகள் இரண்டரை மணி நேரம் போனதே தெரியவில்லை. நண்பர்களுடன் மகிழ்ச்சியாக வீடு திரும்பினோம்.

பழைய நினைவுகள் - மனசின் கரைகளை அரித்துக் கரைக்கின்ற நினைவுகள் மனம் சுகப்படுகிறது.

# மழை

மழை பெய்தல் மனமென்னும் புல்வெளியில் ஆச்சரியம் பூச்செரியும் மழை! மழை! மழை! மண்ணின் அதிசயம் மழை. பூமியை வானம் புணரும் கலை மழை. அது விழுவதில் அழகு.

மழையை மண் வாசனை அனுப்பி வரவேற்கிறது. பூமிக்கு அடிக்கடி புனித நீராட்டு விழா. சமுத்திரம் எழுதும் சமத்துவ விழா. மழையோடு வாழாத வாழ்வு வாழ்வல்ல.

வானம் உறுமுறச்சே வாசலில் வந்து கொட்டும் மழையை இமைக்காமல் பார்ப்பேன். சாரல் என் பக்கம் வீசும் போதெல்லாம் புல்லரித்து கண்மூடி அனுபவித்தேன்.

கருமை கருமையாக மேகங்கள். கல்யாணமாகி இன்னும் கர்ப்பம் தரிக்காத பெண்ணைப் போன்ற மேகங்களாக மாறவும் செய்யும். மலட்டு மேகங்களாகப் போய் விடுவதும் உண்டு. எல்லாம்... அடிக்கிற காற்றைப் பொறுத்த விஷயம்.

மழை தேவதை மண்ணுக்கும் விண்ணுக்கும் சங்கீதம் பாடி சதுராடிகிறாள். வானத்திலிருந்து என் வீட்டுக்கு வரும் மழை விருந்தாளியை வரவேற்பேன். மழையை என் தோட்டத்திற்கும் விருந்துக்கு வருமாறு கையேந்தி அழைப்பேன்.

"என்மேல் விழுந்த மழைத்துளியே இத்தனை நாள் எங்கிருந்தாய்?"

வாசலில் மழையுடன் கைநீட்டிப் பிடித்து மழையைப் பிடித்து விளையாடும் சுகம் நினைத்தாலே இனிக்கிறது. இதைப் பார்த்த அம்மா "உள்ளே வாங்க ஜுரம் வந்துரும்"ன்னு சத்தம் போடுவார்கள். அம்மா திட்டினாலும் ஒரே குதியாட்டம் கொண்டாட்டம்தான்.

மழையிலே நனையுற சுகமே தனிதான். குடையிருந்தும் மழையில் நனைந்த காலம் அது. மழைத்தூறல் சிலுசிலுன்னு பன்னீர்போல் தெளிக்கும் சமயங்களில் மழைநீரை கையில் ஏந்திக் குடிப்போம்.

*கண்டேன் கண்களுக்குள் மழை.*
*கேட்டேன் காதுக்குள் கச்சேரி*
*தொட்டேன் ஜீவனுக்குள் சில்லிப்பு*
*உண்டேன் பல்லிடுக்கில் பனிக்கட்டி*
*நுகர்ந்தேன் இனந் தெரியாத ஈரமணம்*

மழை பெய்து முடிந்தவுடன் ஒரு அமைதி. கொல்லைப்புறமும் வாசற்புறமும் சொத சொதன்னு சேறு இருக்கும். சேற்றில் வரப்பு கட்டி தேக்கி வைப்போம். சமயங்களில் அணைக்கட்டி மழைநீரை தேக்கி வைப்போம். அப்பா பாத்துட்டா வீட்டுக்குள் ஓடி வந்துடுவோம்.

மழை முடிந்தவுடன் இரவு முழுவதும் தவளைகள் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இரவு முழுவதும் விதவிதமான சங்கீதக் கச்சேரிகள் களைகட்டிவிடும். நத்தைகள் கூடு சுமந்து நகர்ந்தபடி இருக்கும். தட்டாம் பூச்சிகள் சிறகடித்து பறக்கும்.

நீண்ட அழகிய வானவில்லைப் பார்த்து இரசிப்போம்.

மழைததுளிகள் மண்வாசனை கொண்டவை. வாழ்க்கை வேர் பிடிக்கும்போது அதனை உறுதி செய்யும். சிலிர்த்துக் கொள்ளும் விதமாக 'சில்' என்று பெய்பவை. பூக்களில், இலைகளில், புல் வெளிகளில் தங்கியிருந்து, வழியெல்லாம் நம்மைத் தொடுபவை.

*"ஜீவன் பிறந்தது மழை தந்த கொடைதான்*
*சிந்தும் மழைத்துளி கடல்தந்த கொடைதான்"*

மழைநின்றபின் இலையிலிருந்து நீர்த்துளி கொட்டுவது அழகுதான்.

*"மழைநின்ற பின்னாலும்*
*இலை சிந்தும் துளியழகு"*

மழை நேர மாலை நேரங்களில் வெள்ளை வெளேரென்று காளாண் குடை பிடித்துக் கொண்டிருக்கும். அதைப் பிடுங்கி எறிந்தபின்புதான் மனம் அமைதியுறும். பீர்க்கன்கொடி மஞ்சள் பூக்களும், பூவரசு மஞ்சள் பூக்களும் பேசிக் கொண்டிருக்கும்.

சமயத்தில் மழை, இடி மின்னலுடன் உறுமிக் கொண்டு வரும். மரக்கிளைகள் பேயாட்டம் ஆடும். காற்று உஸ் உஸ் என்று ஒலி எழுப்பும்.



மேகங்களின் உச்சபட்சத் தாக்குதலே இன்றுதான் என்பது போல, பூமியை சர்வநாசம் செய்யும் நினைப்புடன் மழை இறங்கி விட்டதைப் போல, ஆக்ரோஷமாக ரொம்ப நேரம் மழை பெய்யும்.

"அர்ச்சுனா... அர்ச்சுனா..." என்று இடிக்கும்போது பயத்துடன் சொல்லுவோம். அர்ச்சுனன் தனது வில்லால் இடியை துவம்சம் செய்துவிடுவார் என்று பாட்டிச் சொன்னது பசுமையாக பதிந்து விட்டது.

குடைகள் பிடித்துக் கொண்டு கடைத்தெருவுக்குச் சிலர் போய்க் கொண்டிருப்பார்கள். சிலர் சாக்குப் பையைத் தலையில் மாட்டிக் கொண்டு போவார்கள். தலைக்கு மட்டும் மூடாப்பு இருக்கும். குளிர் நேரத்தில் டீக்கடைகளில் வாயில் பீடி, சிகரெட்டு, கையில் டீ கிளாசுகளுடன் பெஞ்சுகளில் உட்கார்ந்து கதையளந்து கொண்டிருப்பார்கள்.

மழைநின்ற பிறகு நண்பர்களை நைசாக மரத்தின் கீழ் அழைத்துச் சென்று நிற்க வைத்து மரத்தை உலுக்கி மழை நீரில் அவர்களை நனைய வைத்து மகிழ்வோம்.

பால்மழைக்கு காத்திருக்கும் பூமி. மழைக்கவிதை கொண்டு வருகிறது. கதவுகளை அடைக்காதீர்கள். மழையில் நனையாத போது எதை இழக்கிறோம்.

*மேகம் சுரந்த பாலில் – ஏன்*
*நனைய மறுக்கிறாய்! – நீ*
*வாழவந்த வாழ்வில் – ஒரு*
*பகுதி இழக்கிறாய் – இதில்*
*கண்கள் மூடிக் கரையும் போது*
*மண்ணில் சொர்க்கம் எய்துவாய்*

மழை விழுந்தால் என்னவாகும்.

*பூவினில் விழுந்தால் தேன்துளியாய் வருவாய்*
*வேரினில் விழுந்தால் தானியமாய் வருவாய்*
*சிப்பியிலே விழுந்தாய் - முத்தென ஒளிர்வாய் - என்*
*கண் விழிக்குள் விழுந்ததினல் கவிதையாய் மலர்ந்தாய்*

பெரும் மழையில் வீட்டு வாசலில் ஆறாய் ஓடும். வெள்ளைத் தாளைக் கிழித்து பேப்பர் படகுகள், கப்பல்கள், கத்திக் கப்பல்கள் செய்து விடுவோம். யார் படகு வேகமாகப் போகிறது என்பதில் போட்டி. சமயங்களில் கப்பல் கவிழ்ந்து விடுவதுண்டு.

மழைத்துளிகள் நிலத்தை நோக்கி வருகின்றன ஒன்று. மண்ணின் மடியை முத்தமிட்டுச் சென்றது. ஒன்று தெரு ஓரம் நீரில் ஓடிச் சென்றது. ஒன்று கடலில் விழுந்து உப்பாக உருவம் மாறிப்போனது. ஒன்று பூத்தப் பூவுக்குள் விழுந்து தேனாய் ஆனது. ஒன்று சிப்பியின் வாய் விழுந்து ஒளிரும் முத்தாய் ஆனது. ஒன்று புல்லின் நுனியில்அமர்ந்து அமுதமாகியது.

வானம், மண் 'மானம்' காப்பதால் மனம் என்றொரு பெயரும் உண்டு. வானம் எழுதும் மரபுக்கவிதை 'மழை'. இதனைப் 'பொழிப்பு'ரையாகவே பூமிக்குத் தருகிறது.

நிலமகளும் வானமும் நெடுநாள் காதலர்கள்! 'மழை' வடிவத்தில் பூமியைத் தழுவுகிறது. வானம் 'ஆவி' உருவில் வந்து பூமகள், வானத்தை அணைக்கிறாள். தொட்டுக் கொள்ளாத தூய்மையான காதலிது.

மழையின் தத்துவம், எத்துணை விசித்திரமானது. ஆனால் அதே சமயம் எத்துணை எளிமையாக இருக்கிறது. பூமிக்குத் தண்ணீர் பாய்ச்ச இப்பேர்பட்ட அருமையானதொரு ஏற்பாட்டை இறைவனைத் தவிர வேறு யார் செய்ய முடியும்?

❖❖❖

*அந்தியை எனக்கு வானம்*
*அறிமுகம் செய்த தங்கே*
*சந்திரன் என்னைப் பார்த்து*
*சௌகர்யம் கேட்ட தங்கே*
*விந்தைகள் மிதக்க, வெட்ட*
*வெளிகளில் மனம டங்க*
*சிந்தையில் மங்க லான*
*சிந்தனை முளைத்த தங்கே!*

# ஊர் பெரியவர்கள்

பழைய ஞாபகங்களை அசைபோடும்போது ஊரில் வாழ்ந்த சில பெரிய மனிதர்களும் நினைவில் வந்து போகிறார்கள்.

**ராஜம் செட்டியார்**

மன்னார்குடியில் மிகவும் முக்கியமானவர். வசதியானவர். வள்ளல் குணம் படைத்தவர். எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டத்திற்கும் முன்னர் காமராஜர் மதிய உணவுத் திட்டத்திற்கும் முன்னர் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கிய வள்ளல்.

வறுமை கொடியது - அதிலும் இளமையில் வறுமை அதைவிடக் கொடியது. இளமையில் வறுமையுற்றவர்களின் பசியைத் துடைத்த பண்பாளர். ஏழை எளிய மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகங்கள், சீருடை வழங்குவார்.

ஆத்துப் பள்ளிக் கூடத்தில் படிக்கும் போது சின்ன வயசிலேயே வகுப்பு மாணவ மாணவிகள் மதிய நேரத்தில் இங்கு போய் சாப்பிட்டு வருவார்கள். இந்தப் புண்ணியவானைப் பார்க்க எனக்கு அந்த வயசிலே ஆசை ஏற்பட்டது.

ஒருநாள் சிறுவர்களோடு நானும் போனேன். பெரிய ஹாலில் அமரவைத்து அனைவருக்கும் சாம்பார் சாதமும், தயிர் சாதமும் போட்டனர். செட்டியாரைப் பார்க்கணும்னு சொன்னேன். மாலையில வரச் சொன்னார்கள். வீட்ல அப்பாவிடம் சொன்னதும் 'அதிகப்பிரசங்கி' என்று அடக்கிவிட்டார். கடைசி வரை அவரைப் பார்க்கவே இல்லை. அவரது வாரிசுகள் கோவை சென்றுவிட்டதாக அறிந்தேன்.

## தாமஸ் வாத்தியார்

என்.சி.சி. ஆபிஷர் என்று ஊரில் அழைப்பார்கள். பின்லே உயர்நிலைப் பள்ளியில் பி.இ.டி.யாக வேலை பார்த்து வந்தார். மிகவும் உயரமானவர். கண்டிப்பானவர். பேசும்போது மிடுக்காகவும் கணீரென்றும் அழகாகவும் பேசுவார்.

என்.சி.சி. யூனிபார்மில் பார்த்தால் எஸ்.பி. என்று நினைத்து பலரும் பயந்து மரியாதைக் கொடுப்பார்கள். வழியில் அவரைப் பார்த்தால் ஆசையுடன் அவருக்கு வணக்கம் சொல்வோம். அவரைப் போல் மிடுக்காக ஆக வேண்டும் என்று நாங்கள் நினைப்போம்.

## மன்னை நாராயணசாமி

மாநில அமைச்சராக இருந்தவர். மன்னை என்று எங்கள் ஊர் பெயரை வைத்துக் கொண்டு ஊருக்கும் பெருமை சேர்த்தவர். குடும்பத்தில் ஒரே பிள்ளையாக செல்லமாக வளர்ந்தவர். அப்பாவின் பள்ளித் தோழர்.

அமைச்சராக இருந்தபோது உதவி தேடி வந்தவர்களிடம் முகம் சுளிக்காமல் உதவி செய்து வந்தார். ஊரில் பாமனியில் பெரிய உரத் தொழிற்சாலையும், அரசுக் கல்லூரியையும் தனது முயற்சியால் அமைத்தார்.

அவர் அமைச்சரானதால் ஊருக்கும் பெருமை. ஊர் மக்களுக்கும் பெருமை.

## பென் அன் கோ கலியமூர்த்தி

மன்னார்குடியில் அந்தக்காலத்தில் பென் அன் கோ கலர் என்றால் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். இப்போதைய காளிமார்க், பவுண்டோ போன்று பிரபல்யமாக இருந்தது.

பென் அன் கோவில் ஜிஞ்சர், சோடா, கலர் என்றால் அதன் சுவையே தனி. திரு. கலியமூர்த்தி வியாபார நோக்கமின்றி சேவையாக ஊர் மக்களுக்குத் தொண்டாற்றியவர்.

சிறந்த பண்பாளர். காங்கிரஸில் முக்கிய பிரமுகர். எங்கள் வார்டு கவுன்சிலர். நகராட்சி மூலம் ஊரில் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தியவர். தெருவில் செட்டிக்குளம், அதன் மேலிருந்த வாட்டர் டேங்க் இவரது முயற்சியில் கட்டப்பட்டவை. (இப்போது இல்லை).

இவருக்குக் குழந்தைகள் கிடையாது. பொதுநலத் தொண்டே இவரது சுவாசம். தொண்டை தொழுகையாகச் செய்து வாழ்ந்து மறைந்த உத்தமர்.

## கோபாலசாமி தென்கொண்டார்

அரிசிக்கடைத் தெருவில் பிறந்து கீழராஜ வீதியில் வசித்தார். காமராஜரின் தீவிர தொண்டராய் இருந்து, மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் அன்புக்குரியவராய் திகழ்ந்தவர்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். தனது செல்வாக்கால் மன்னார்குடியில் இந்திராகாந்தி தலைமையில் காங்கிரஸ் மாநாட்டை நடத்தியவர்.

ஊரில் நல்லது கெட்டதுகளில் கலந்து கொள்வார். ஊரில் எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அவரிடம் சொல்வார்கள். தீர்த்து வைப்பார்.

## தெருப் பெரியவர்கள்

பக்கத்துவீட்டு ராமலிங்கம், வடிவேல் கோனார், வைத்தியநாதன், தொந்திக்கோனார், பழக்கடை வேணுநாயுடு, ராமசாமி நாயக்கவாடியார், கோசல்ராம் நாயுடு, சுப்பிரமணி முதலியார் போன்றவர்களுடன் அப்பாவும் இணைந்து முனீஸ்வரன் கோயில், தங்க விநாயகர் கோயில்களைப் புனரமைத்தார்கள்.



தெருவில் நலலது கெடடதுகளில் கலந்து கொண்டு சிறப்பிப் பார்கள். தெருவின் அமைதிக்கும், வளர்ச்சிக்கும் உதவுபவர்கள்.

பழைய முகங்களில் பலர் இன்று இல்லை. அவர்கள் மறைந்து போனாலும் மீண்டும் பார்க்க மனம் ஆசைப்படுகிறது.

அவ்வப்போது எண்ணச் சிதறல்களில் முண்டியடித்து முகம் காட்டும் ஞாபகங்களில் சில மனிதர்கள் இன்றும் வந்துதான் போகிறார்கள்.

# சாமானியர்கள்

ஒருசில மனித முகங்களை மனசு பதிவு செய்துள்ளது. எனது ஞாபகத்தில் அவ்வபோது ஊர் மனிதர்கள் வந்து போவார்கள். இவர்கள் எல்லாம் சாதாரணமாக வாழ்ந்து மனதைக் கவர்ந்தவர்கள்.

ஞாபகங்களைத் தோண்டித் தோண்டி அவர்களின் பெயர்களைக் கூட தூசு தட்ட முடிந்தது.

**கோயில் அய்யர் கைலாசம்**

மிகவும் குள்ளமாக நடுத்தர வயதுடன் சிகப்பாக இருப்பார். முகம் பார்ப்பதற்கு சாந்த சொரூபியாக இருப்பார். நெற்றி நிறைய விபூதி அணிந்திருப்பார்.

நாள்தோறும் முனீஸ்வரன் கோயிலும், தங்க விநாயகர் கோயிலுக்கும் பூசை செய்ய **சைக்**கிளில் வருவார். பூஜை சாமான்கள் பாத்திரங்கள் எங்கள் வீட்டில் இருக்கும். வந்து வாங்கிப் போவார். எல்லோரிடமும் பிரியமாக அன்புடன் பழகுவார். மந்திரங்களைக் கணீரென்று சொல்வார்.

கோயிலுக்கு அதிகக்கூட்டம் வந்தாலும் பொறுமையாக அர்ச்சனைச் செய்வார். “தீபாரதனைப் பாருங்கோ, விபூதி குங்குமம் எடுத்துக்குங்கோ” மலர்ந்த புன்னகையுடன் சொல்வார்.

“எப்படி தம்பி இருக்கே... நல்லா படிச்சிண்டிருக்கியா... ஆத்துலே எல்லாம் சௌரியமா?” என்று பாசத்துடன் விசாரிப்பார். தெருக்காரர்களிடமும், ஊர்காரர்களிடமும் அன்புடன் பழகுவார்கள்.

## ஆப்பக்கார ஆத்தா

அரிசிக்கடைத் தெருவில் தாமரைக்குளம் அருகில் திருமேனி பாட்டி ஆப்பம் என்றால் பிரபல்யம். அதிகாலை ஆறு மணிக்கே ஆப்பக் கடையைத் திறந்து விடுவார்.

விறகு எரியும் அடுப்பில் எண்ணெய் சட்டி. அதில் ஒரு கரண்டி மாவு எடுத்த ஊத்தி, துணியினால் சட்டியைத் தூக்கி ஆப்பத்துக்கு வடிவம் கொடுப்பார். ஊதுகுழாயால் அடுப்பை ஊதுவார்.

திருமேனி பாட்டியிடம் ஆப்பம் சாப்பிடாத குழந்தைகளே தெருவில் இருக்க முடியாது..குழந்தையாயிருந்தபோது இவரிடம் பலகாலம் ஆப்பம் சாப்பிட்டிருக்கிறேன். இனிப்பு ஆப்பம், தேங்காய்பால் ஆப்பமும் சுவையாக இருக்கும்.

## போஸ்ட்மேன் ரெங்கராஜன்

போஸ்ட்மேன் ரெங்கராஜன் மிகவும் அன்பானவர். பொறுமையானவர். சைக்கிளில் வருவார். காலை பத்து மணிக்கும் மதியம் மூன்று மணிக்கும் தபால் கொடுத்துவிட்டுச் செல்வார்.

காதில் பேனா வைத்திருப்பார். மணியார்டரோ, ரிஜிஸ்தர் தபாலோ கொடுக்கும் போது யாரும் பேனா தேடி அலைய வேண்டாம்.

ஊர்க்காரர்களிடம் சொந்தக்காரர்களிடம் பழகுவது போல் உறவாடுவார். அவர் தபால் கொடுக்கும் போது பிரியமுடன் கொடுப்பார். ஒவ்வொரு வீட்டிலும் நல்லது கெட்டதுகளை விசாரிப்பார்.

சில அவசரக்காரர்கள் காலை ஒன்பது மணிக்கே தபாலாபீஸ் சென்று சன்னல் பக்கமாக போஸ்ட்மேன் ரெங்கராஜினின் கடைக்கண் பார்வைக்காகக் காத்துக் கிடப்பார்கள்.

## கோவிந்தம்மாள்

நடுத்தர வயதினைச் சேர்ந்த வேலைக்காரப் பெண்மணி உடுப்பி ஓட்டலில் வேலைப் பார்த்தார்.

பரவாக்கோட்டை அம்மா என்றழைப்போம். உயரமாக கருப்பாக மெல்லியதாக இருப்பார். அவர் வீட்டுக்கு வரும்போது உடுப்பி ஓட்டல் ஸ்பெஷல் அயிட்டங்களைக் கொடுத்து எங்களைக் கவர்ந்து விடுவார்.

கோவிந்தம்மாளுக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பெண்கள். கணவர் மாட்டுவண்டி ஓட்டுவார். இவரது கடைசிப்

பையனும் மாட்டு வண்டி வைத்திருந்தார். பஸ் ஸ்டாண்டில் பார்த்து விட்டால் போதும் "தம்பி வாங்க" என்று அன்பாக அழைத்துப் பெட்டிகளை எடுத்து வைத்து வீட்டில் வந்து விடுவார். (அப்போதெல்லாம் ஊரில் மாட்டு வண்டிகள் மட்டுமே இருந்தன.)

**சாரங்கபாணி கோனார்**

கடைவீதியில் மணிக்கடை வைத்திருந்தார். அவர் கடைக்குச் சென்றாலே ஏதாவது வாங்கத்தோன்றும்.

வளையல்கள், மணிகள், குங்குமம், மஞ்சள் வியாபாரம் செய்வார். பம்பரம், கோலிக்குண்டு வாங்க இவரிடம்தான் செல்வோம்.

இவரது கடைசி பையன் கஸ்தூரி தெரு தோழன். அவன் வளர்த்த நாயே அவனைக் கடித்துவிட்டது. கடைசி நேரத்தில் நாய் மாதிரி குரைத்து நாய் சேஷ்டைகளைச் செய்து இறந்து விட்டான்.

இள வயசிலே பதிந்த இந்த நினைவு, நாய் வளர்ப்பது என்றாலே எனக்கு அலர்ஜியாகிவிட்டது. நாயை வளர்ப்பது நல்ல பாம்பை வளர்ப்பது போல் என்று இந்த நிகழ்ச்சியைப் பலரிடம் இன்றுவரை கூறி வருகிறேன்.

**மிகச்சாதாரணமானவர்கள்**

ஒரு பொழுதுக்கு ஆயிரம் வாள்கள் வடித்துக் கொடுக்கும் கொல்லன், ஒரு நாள் முழுதும் முயன்று கலப்பை முனை மட்டும் செய்கிற வல்லவன்.

ஒரு நாளைக்கு ஒரு தேர் செய்யும் தச்சன். ஒரு மாதம் உழைத்து ஒரு சக்கரத்தின் ஆரக்கால் மட்டுமே செய்கிற மதிநுட்பம் வாய்ந்தவன்.

உளிக்குள்ளிலிருந்து கல்மீது நட்சத்திரங்களை இறக்கி வைக்கிற சிற்பிதான் கல்ஆசாரி (கண்ணார்)

நிலா வெளுப்பை வெள்ளாவித் துணிக்குள் கொண்டு வருகிற வித்தைக்காரன் சலவைத் தொழிலாளி.

இவர்களின் மூளை வழியாக கைகளுக்கு இறங்கிய தொழில் தொழிலாக மட்டுமில்லாமல், கலை நுட்பமாக விரிவடைந்தது.

இவர்கள் யாரும் மிகச் சாதாரணமானவர்கள் இல்லை. ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு கலைஞன்.

குயவர் , குடிமகன், வண்ணார், தச்சர், கொல்லர், தட்டாசிரி என்று சாதிப்பெயர் தரப்பட்டாலும் அவர்கள் தொழிலாளிகள்.

மண்பாண்டத் தொழிலாளி, சலவைத் தொழிலாளி, முடிதிருத்தும் தொழிலாளி, தச்சுத் தொழிலாளி - என தொழிலாளிப் பெயர் இருந்தாலும் அவர்கள் கலைஞர்கள்.

மண்பாண்டக் கலைஞர்கள், முடிதிருத்தும் கலைஞர்கள், தச்சுக் கலைஞர்கள் என அழைக்கப்பட வேண்டியவர்கள். மதிக்கப்பட வேண்டியவர்கள், போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

எனது பால்ய காலத்திலிருந்தே இவர்களது தொழில்களையும், திறமைகளையும் பார்த்து கலைஞர்களாகவே மனம் பதிந்து வைத்துள்ளது.

## மருந்துக்கடை வேணுகோபால்

வேணுகோபால் நாட்டு மருந்துக்கடை ஊரில் பிரபல்யம். அரிசிக்கடைத்தெருவில் கடை வைத்திருந்தார்கள். நாட்டு மருந்துகளும் மளிகைச் சாமான்களும் கிடைக்கும்.

ஊர்க்காரர்கள் மற்றும் கிராமத்துக்காரர்கள் நோயுக்கேற்ற மருந்துகளைக் கண்டறிந்து கொடுப்பார். ஜாதிக்காய், குல்கந்து, தேன், சித்தரத்தை, கசகசா, குங்குமப்பூ போன்ற மருந்துப் பொருட்களும் கிடைக்கும்.

முகங்கோணாமல் வாடிக்கையாளர்களிடம் பழகுவார். அன்பும் கருணையும் கொண்டவர். காசில்லாமல் வருபவர் களுக்கும் போதிய காசு கொடுக்காதவர்களுக்கும் மருந்துப் பொருள்களைத் தருவதில் முகங்கோணமாட்டார்.

## பூக்காரர் மோகன்

மாலை நான்கு மணிக்கு சைக்கிள் மணி அடித்தால் பூக்காரர் மோகன் வந்து விட்டார் என்று கண்டுபிடித்துவிடலாம்.

சைக்கிளின் பின்சீட்டில் வட்டவடிவத்தில் பிரம்புத்தட்டு ஒன்றில் மல்லிகை, ரோஜா, கதம்பம், தாழம்பூ என்று விதவிதமான பூக்களை எடுத்து வருவார்.

சைக்கிளின் இரண்டு ஹாண்ட்பார்களில் உதிரி முல்லை, மல்லிகை, கனகாம்பரம் என்று வைத்திருப்பார். பூக்களில் இரு கைகளில் தூக்கிப் பிடித்து முழம் போடும் லாவகமே அத்தனை அழகாக இருக்கும்.

அவர் வரும்போதே, கமகமவென்று வாசனை நாசியைத் துளைக்கும். அவரது சைக்கிள் சத்தம் கேட்டதும் அவரைப்பார்த்து ரசிப்பதற்காகவே வீட்டுக்குள்ளிருந்து வெளியே வருவேன்.

என் மனதைவிட்டு யாரும் சாமானியத்தில் நகராமல் இன்றுவரை இருக்கிறார்கள்.

**பாண்டிச்சேரி கொத்தனார்**

நடுத்தர வயதுடையவர் ஆறரை அடி உயரம். வழுக்கைத்தலை. வேஷ்டியும், பனியனும் அணிந்து கையில் ஒரு பையுடன் ஊரை வலம் வருபவர்தான் பாண்டிச்சேரி கொத்தனார்.

நாட்டு ஓடு வேயப்பட்டிருக்கும் எங்கள் வீட்டிற்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஓடு மாற்றித் தருவார். அவ்வப்போது ஏற்படும் பராமரிப்பு வேலைகளையும் முகங்கோணாமல் செய்து கொடுப்பார்.

சிமெண்டையும், மணலையும் கலவை செய்வதிலிருந்து அனைத்து வேலைகளையும் தனி ஒருவராகச் செய்வதைக் கண்டு வியந்திருக்கிறேன். வேலையில் முழு ஈடுபாடு. கண்களில் ஆர்வம். தேனி போல் சுறுசுறுப்பாக இருப்பார்.

தான் வேலை செய்யும் இடத்தில் எல்லோரிடமும் பிரியமாக இருப்பார். குடும்பத்தில் ஒருவராகப் பழகுவார். வழியில் எங்காவது பார்த்தால் நலம் விசாரிப்பார்.

இவரை ஒரு தொழிலாளியாகப் பார்க்க முடியாது. சித்து வேலை செய்யும் சித்தாளாக கட்டட வேலைச் செய்யும் கலைஞராகப் பார்த்து இரசிப்பேன்.

தொழிலைத் தெய்வமாகப் போற்றும் அந்தக்கால மனிதர்கள் நினைவலைகளில் வரும்போது என்னையுமறியாமல் அவர்களைத் தொழுது வணங்குகிறேன்.

# கிராமத்து அடையாளங்கள்

பூமி தன்னைப் பச்சையாக நெய்து வைத்திருப்பதைப் பார்க்கும் போதெல்லாம் இதயத்துக்கு இதமாக இருக்கிறது.

உலகமும் ஊடகங்களும் புறக்கணிக்கின்ற கிராமங்கள்தான் நமக்குச் சோறுபோடுகின்றன. கிராமத்தானின் வியர்வையில்தான் சமூகம் உயிர் வளர்க்கிறது. தேசத்தின் பொருளாதார வாற்சிப்புக்களான கிராமத்து விவசாய மக்கள்தாம், தேசப் பொருளாதாரத்தைச் சிதைய விடாமல் காத்து வருகின்றனர்.

இன்றும் பயணிக்கும் போதெல்லாம் கிராமத்து அடையாளங்களாய் பல காட்சிகள், என் வாகனத்தில் ஜன்னல் வழியே நகர்ந்து நகர்ந்து என் நினைவலைகளைத் தட்டி எழுப்பிக் கொண்டே இருக்கிறது.

ஊரில் இருக்கும் தெய்வங்கள், அவற்றின் மரபு வழிவந்த நம்பிக்கைகள் - பண்டிகைகளிலும் திருவிழாக்களிலும் காணப்படும் ஒற்றுமை - ஊர்ப் பஞ்சாயத்து - பசுமையான வயல்கள் - தென்னை, மா, பலா என்று காய்த்துக் குலுங்கும் தோட்டங்கள் - அரசமரத்தடி மேடை - டீக்கடை பெஞ்ச் - சுமைதாங்கி - மாட்டுச்சந்தை என்று கிராமத்து அடையாளங்கள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**சுமைதாங்கி**

ஊர் எல்லையானாலும், ஊரணிக் கரையானாலும், ரோட்டோரமானாலும் இந்தக் கல்லைப் பார்க்கலாம். 'ப'னாவைக் கவிழ்த்துப் போட்டது போல்இந்தக் கல் நிற்கிறது.

ஒவ்வொருவருடையச் சுமைகளையும் தான் வாங்கி ஓய்வளிக்கிறது. எத்தனையோ மனிதர்களுக்கு இளைப்பாறும் இடமாக, எத்தனையோ பாரங்களை இறக்கி வைக்கும் தடமாக அசையாமல் தளராமல் ஆடாமல் ஜடமாக வீற்றிருக்கிறது.

*"கல்லாய் உனை மற்றோர்*
*காண்கின்றார் -*
*நான் இந்தக் கல்லுக்குள்ளும் ஏதோ*
*கசிவதை உணர்கிறேன்"*

ஒவ்வொரு கல்லுக்குள்ளும் ஒரு சோகக்கதை ஒளிந்திருக் கிறது. வயித்துச் சுமையை இறக்கி வைக்காமலேயே இறந்துப் போன கர்ப்பிணிப் பெண்களின் நினைவாக கட்டப்பட்டது சுமைதாங்கி.

கர்ப்பவதிகள் இயற்கையாகவோ, செயற்கையாகவோ இறந்து போனால் அதுவும் ஏழுமாத கர்ப்பிணியாக இறந்து போனால், கருமாதி அன்று அந்தப் பெண்ணின் நினைவாக சுமைதாங்கிக் கல் நடுவது கிராமத்து வழக்கம்.

எவ்வளவு பெரிய சுமையாக இருந்தாலும் யாருடைய உதவியுமில்லாமல் அவர்களாகவே சுமையை இறக்கவும், பின்பும் தூக்கித் தலையில் வைத்துக் கொள்ளவும் முடியும். நடந்துவிட்ட சோகத்தையே 'பொதுநலச்சேவை' என்ற போர்வையில் வாழ்ந்த சமுதாயம் வாழ்ந்த காலம்.

மற்றவர்களின் சுமையைத் தாங்கிக் கொள்வதால் சுமைதாங்கி என்று அழைக்கிறோம்.

## மாட்டுச்சந்தை

மன்னார்குடியில் சந்தைப்பேட்டையில் வாராவாரம் வெள்ளிக்கிழமைகளில் மாட்டுச்சந்தை நடக்கும். பெரிய பெரிய மாட்டுத் தரகர்கள் தலையில் முண்டாசுக் கட்டிக் கொண்டு கையைச் சுருட்டி விட்டுக் கொண்டு மாட்டுச் சந்தைக்கு வருவார்கள்.

ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் மாடுகளை ஓட்டி வந்து விடுவார்கள். மாட்டுக்குச் சொந்தக்காரர்கள் அப்பாவிகளாய் நிற்க விலை திகைத்துப் பேசி முடிந்தது. தரகர்கள் சேர்ந்து மாட்டை ஓட்டிச் செல்வார்கள்.

மாட்டை விலை பேசும்போது மாட்டை வாங்குபவரின் கையில் தரகர் துண்டைப் போட்டு விலை பேசுவதுதான் சிறப்பு. துண்டுக்குள் சேரும் கைகள் என்ன கணக்குப் போடும்? என்ன

பேசிக்கொள்ளும்! இரகசியம் இன்றுவரை அவர்களுக்கு மட்டுமே புரியும்.

மாட்டு வியாபாரிகளிடம், இருக்கும் வரவு செலவு விற்பனைக் கணக்கு விசித்திரமாக இருக்கும். அவர்களது கையசைப்பு, பரிபாஷை குறியீடுகள், வாய்ச் சாதுரியங்கள் இவற்றை நேரில் பார்த்தால்தான் உணர முடியும்.

மாட்டை விற்பவர்கள் மாட்டுத் தரகரிடம் சொல்லிவிட்டால் போதும், விலை போகாத மாட்டைக் கூட அவர் விலை போக வைத்துவிடுவார். இந்தக்கலை அவர்களுக்கு மட்டுமே புரிந்த கலையாகும்.

## ரேக்ளா ரேஸ்

கிராமங்களில் ரேக்ளா ரேஸ் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருக்கும். இந்த வண்டிப் பந்தயத்துக்கென்று மாடுகளுக்குப் ப்யிற்சி கொடுப்பார்கள்.

பெரியமாடு, நடுமாடு, பூஞ்சிட்டு, தேன்சிட்டு, கரிச்சான் மாடு என்று வகைப்படுத்தி பந்தயத்திற்கு தயாராகி வருவார்கள். இதற்கென்று ஊரில் மைனர்கள் இருப்பார்கள்.

இவர்களது மாடுகள்தான் மாற்றி மாற்றி பந்தயங்களில் வெற்றி பெறும். கிராமவாசிகளுக்கு ஒரு பொழுதுபோக்காக அமையும். இப்போட்டியைக் காண சுற்றுப்பகுதிகளில் இருந்து ஊர்மக்கள் வருவார்கள்.

இப்போது பெரிய விளையாட்டுக்களில் ஊக்க மருந்து சாப்பிட்டு பரிசுப் பெற்றதைக் கண்டுபிடித்து வருகிறார்கள். ரேக்ளா ரேசிலும் சாராயத்தை விட்டு விடுவார்கள் குறும்புக்கார மைனர்கள். மாடுகள் எக்குத்தப்பாய் ஓடி, ஒரு வண்டி இன்னொரு வண்டியுடன் மோதி குடைசாய்ந்து விடுவதும் உண்டு.

பந்தயத்தின் தொடக்கமாகப் பச்சைக் கொடி காட்டியதும் மாடுகள் சீறியபடி ஓடும். வண்டிக்காரர்கள் மாட்டை ஓட்டும் வேகமும், மாடுகள் பாய்ந்து ஓடும் வேகமும் கரணம் தப்பினால் மரணம்தான். பத்துகிலோ மீட்டர் கூட பந்தயதூரம் இருக்கும். குறிப்பிட்ட இலக்கை முதலில் தொட்ட மாட்டு வண்டிக்குப் பரிசு வழங்குவார்கள். பயிற்றுவிக்கப்பட்ட மாடுகள் தான் மாற்றி மாற்றி வெற்றி பெறும்.

## கூண்டு வண்டி

இன்று மாருதி, ஹுண்டாய் கார்கள் போன்று, அந்தக் காலத்தில் கூண்டு வண்டிகள் சிறப்பிடம் பெற்றிருந்தன. ஊர்களில் வசதியானவர்கள் வீட்டில்தான் கூண்டு வண்டி இருக்கும்.

பெரிய மனிதர்களுடைய வாழ்வில் கூண்டு வண்டியும் பின்னப்பட்டிருக்கும். அந்தக் காலத்தில் கிராமங்களின் பிரதான போக்குவரத்து வாகனம் கூண்டு வண்டியே. வண்டியின் அடியில் சின்ன அரிக்கேன் விளக்குத் தொங்கும்.

எங்கள் ஊரில் குன்னியூர் பண்ணையார் வீடுகளிலும், முதலியார் வீடுகளிலும் கூண்டு வண்டி இருக்கும். என்னுடன் படித்த பாலகிருஷ்ணனும் அவனது தங்கையும் கூண்டு வண்டியில் தான் ஸ்கூலுக்கு வருவார்கள்.

"ஹை... ஹை..." என்று மாட்டைத்தட்டி ஓட்டும் அழகே அழகு. வண்டி ஓட்டியின் சாமர்த்தியமும் இருக்கும். ஓட்டுகிறவர் வண்டியை ஓட்டினால் ஓடாத மாடும் ஓடும்."

இதுத்தவிர இந்தக்கால ஆட்டோவைப் போல பஸ் ஸ்டாண்டிலும் ரயிலடியிலும் வாடகைக்கு ஒத்தை மாட்டு வண்டி இருக்கும். ஊரில் இருந்து வந்தால் இதில்தான் பயணம் செய்வோம்.

வண்டிக்காரர் குச்சியின் முனையில் கூரிய ஆணியை வைத்து மாட்டைக் குத்தி ஓட்டுவது வேதனையாக இருக்கும். அடுத்தவர் வேதனையில் வாழும் மனிதர்களின் சுயநலம் - பிஞ்சு மனதில் பதிவை ஏற்படுத்தி விட்டது.

ஊரைவிட்டு வெகுதொலைவில் வந்து நகரவாசியாக ஆகிவிட்டாலும் மண்ணின் வாசனை இழந்து மனசுக்குள்ளே ஒரு தாகம் ஏற்படுகிறது.

மனச்சுமைகளை இறக்கி வைக்க அந்தரமாக நமக்கென்று பிரியமான சில மனங்கள் தேவைப்படுவது போலவே ஒட்டுதலுடன் இந்த மண் மீதான பிரியமும் உயிரில் கலந்துள்ளது.

# தெருக்கூத்து

கூத்து என்ற சொல் முதலில் நடனத்தையும் பின்பு கதையைத் தழுவி வரும் நாடகத்தையும் குறித்தது.

கிராமங்களில் மக்கள் விரும்பிப் பார்ப்பது கூத்து. கூத்து எல்லா விழாக்களிலும் நடைபெறுகிறது.

அறுவடை முடிந்து ஓய்வுக் காலங்களில் கிராமமாக இணைந்து கூத்தைப் பார்ப்பார்கள்.

கூத்து என்றால் நடனம், நாட்டியம், நாடகம் என்றெல்லாம் வழங்கப்பட்டாலும் கிராம மக்கள் தெருக்கூத்தை மட்டும் 'கூத்து' என்கிறார்கள்.

தமிழகத்தின் மரபுச் சார்ந்த கலைகளுள் ஒன்று கூத்துக் கலையாகும். தெருக்கூத்தும் பாகவத மேளாவும் உலகப் புகழ்பெற்ற அரிய கலைகளாகத் திகழ்கின்றன.

சிறுத்தொண்ட நாயனார் இசைக்கூத்து, உருக்குமாங்கத பாகவத மேளா, பிரகலாத நாடகம், அரவான் களப்பலி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, திரௌபதி அம்மன் கூத்து, மனுநீதிச் சோழ மகராச நாடகம் போன்ற கூத்துகள் பாரம்பரிய கலைகளாகும்.

கூத்தில் நிகழ்த்தப்படும் கதைகள், புராண காப்பியங்களைச் சார்ந்திருக்கும். கடவுள், மன்னர், முக்கிய பாத்திரங்களாக இருக்கும். மண் சார்ந்த மரபுகள், அது சார்ந்த சூழல் ஆகியவற்றின் தாக்கத்தை உள்வாங்கிக் கொண்ட புராணக்கதைகள் கூத்துக்குரிய கதைகளாயின.

நிகழ்த்தப்படும் ஒவ்வொரு கூத்தும் தனக்குரிய சூழல்களுக் கேற்ப உருவாக்கிக் கொள்கிறது. கூத்தில் நிகழ்த்தப்படும் கதைகள்

யாவரும் அறிந்த பழைய கதைகள் தான் என்ற போதிலும் ஒவ்வொரு கதையும் கூத்தாக உருப் பெறுகையில் அரங்கத்திற்கு அரங்கம் மாறுபடுகிறது.

பார்வையாளர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு இசைந்து கொடுத்து கூத்தர்களின் கலைத்திறனுக்கு ஆட்பட்டு தன்னை மறுப்படைப்பு செய்து கொள்கிறது.

மன்னார்குடிக்கு அருகில் உள்ள வெட்டிக்காடு, எடகீழையூர், பைங்காநாடு போன்ற ஊர்களில் கூத்துப் பார்த்த ஞாபகம் இன்றும் பசுமையாக இருக்கிறது. கூத்துப் பார்க்க பிற கிராமங்களில் இருந்தும் மக்கள் செல்வார்கள். நானும் அவர்களுடன் சென்றதுண்டு. எங்கள் தெருவில் முனீஸ்வரன் ஆலயத்தில், “சிறுத்தொண்டர் நாயனார்” கூத்தும் பார்த்ததுண்டு.

இரண்டு மூன்று கதாபாத்திரங்கள் வரும் வரை விழித்திருப்பேன். அதன்பிறகு தூங்கிடுவேன். உடன் வந்தவர்கள் முக்கியமானப் பாத்திரங்கள் வரும்போது என்னை எழுப்பி கூத்தைப் பார்க்கச் சொல்வார்கள்.

சில நிமிடங்கள் பார்ப்பேன். மீண்டும் தூக்கம். நாடகம் முடிந்து வீட்டுக்கு வந்தபின் முதல்நாள் கூத்துப் பற்றி விமர்சனங்களை அவரவர் பார்த்த அளவில் பேசுவார்கள். இதுதான் திறனாய்வு என கல்லூரி நாட்களில் தெரிந்து கொண்டேன்.

என் நினைவில் இரணியன், பிரகலாதன் பற்றிய முதல் பதிவு ஏற்பட்டது. அரிசிக்கடைத் தெருவில் பார்த்த சிறுதொண்ட நாயனார் கூத்து முழுமையாக பார்த்த கூத்தாகும்.

கூத்துகளில் பெரும்பாலும் விநாயகர் பூசனை நடத்தும்போது பட்டாச்சாரியார்கள் தோன்றி விகடம் செய்வார்கள்.

விநாயகர் தோற்றம் ஒவ்வொரு கதைமாந்தர்கள் தோன்றும்போதும் அம்மாந்தர் தோற்றம் பற்றியும் அவர்களைப் பற்றிய விளக்கமும் குணநலன்களைச் சாற்றும் தருக்களும் முன்னும் பின்னுமான சொற்கட்டோடு சிறுத்தொண்ட நாயனார் கூத்தில் முதல் சீனாக வந்தது.

*“வெள்ளிப் பிரம்பும் கையில் கொண்டு*
*வெள்ளைப் பல்லையும் கட்டிக் கொண்டு*
*வெள்ளை நாமம் சாத்திக் கொண்டு*
*குள்ளக் கட்டியங்காரன் வந்தானே*
*பட்டை நாமம் இட்டுக் கொண்டு*
*பட்டுத் துப்பட்டிக் கட்டிக் கொண்டு*

*கட்டியக் கோலும் ஊன்றிக் கொண்டு*
*கட்டியங்காரன் வந்தானே"*

கூட்டத்தில் கலகலப்பு ஏற்படுகிறது.

மகப்பேறு இல்லாததால் மனஞ்சோர்ந்து நின்ற துணைவியாகிய திருவெண்காட்டு நங்கையாரை அழைத்து உசாவி, திருச்செங்கோடு திருத்தலத்தின் பெருமையை அவளுக்கும், அவள்தம் தோழியாகிய சந்தன நங்கைக்கும் எடுத்துக்கூறி, கணபதிசுரம் சென்று மடம் அமைத்தல் அடுத்து வந்தது.

மடம் நிறுவி தமது மனைவியுடன் அடியார்களை அழைத்து அமுது படைத்துத் தமக்கு மகப்பேறுகிட்ட ஆசி அருளுமாறு வேண்டி நிற்றல் அடுத்து வந்தது.

வெண்காட்டு நங்கை கருவுற்று, கரு வளர்ந்து மருத்துவச்சியை அழைத்து மகனை ஈன்றெடுத்தல், அதன் தொடரான நிகழ்வாகும். மகன் பிறந்த மகிழ்ச்சியில் சிறுத்தொண்டர் தானம் பல செய்கிறார்.

சோதிடரை அழைத்து மகனுக்குச் சாதகம் குறித்துப் பலன் நோக்குதலும் அதனுள் சீராளன் சிறந்த மைந்தனாகத் திகழுவான் என்பதும், வாளால் அறுபட்டு மறுபிறப்புப் பெறுவான் என்பதுவும், இதன் தொடர்ச்சியாக சீராளன் பள்ளிக்கனுப்பப் பெற்றுக் கல்விக் கேள்விகளில் சிறந்தவனாகிறான்.

அடியார்க்கு அன்னதானம் செய்வதையே இறைத் தொண்டாகக் கொண்டு நிற்கும் சிறுத்தொண்டரின் பக்தியையும் பணிவையும் வியந்து நாரதர் திருக்கைலாயத்தில் வீற்றிருக்கும் ஈசரிடம் எடுத்தியம்ப, உடனிருந்து அவற்றைச் செவியுற்ற உமையவள் அடியாரைச் சோதனை செய்து ஆட்கொள்ள வேண்டுமாய் வேண்டுதல் அந்நாடகத்தின் மையமும் கதைத் திருப்புமுகமாக அமைகிறது.

இதனையொட்டித் தொண்டர் எங்குதேடியும் அமுதுண்ண அடியார் கிடைக்காது வருந்துகிறார். அதற்காக தம் துணைவியாரிடம் வினவ, அரசர் கோலம் புனைந்த அடியாரைவிடத் தொண்டர் கோலம் பூண்டுத் தேடுதலே சிறந்ததாகும் என்று வெண்காட்டு நங்கை பதிலிறுப்பதாகவும் கதைப்போக்குச் செல்கிறது.

அமைச்சருக்கான அரச உறுப்புக்களின் வேடங்களைக் களைந்து தொண்டர் வேடம் பூண்டு நாற்றிசையும் தேடியும் அமுதுண்ண அடியார் கிடைக்காமல் அயர்ந்து மூர்ச்சை யடைந்து

வீழ்தலும், அதுபோலவே அடியாரைக் காணாது வருந்தி நிற்கும் வெண்காட்டு நங்கையும் வருகிறார்கள்.

வெண்காட்டு நங்கை முன்னர் கங்களார் வேடமிட்டுச் சிவபெருமான் தோன்றி அமுதுபடைக்கக் கோரி, 'தலைவனில்லாத வீட்டில் தாம் உண்பதில்லை' எனவே ஆத்தி மரத்தடியில் அமர்ந்திருப்பதாகவும், தொண்டர் வந்தால் அனுப்பி வைக்க வேண்டியும் செல்கிறார். மூர்ச்சைத் தெளிந்த தொண்டர் வீட்டிற்கு வந்து கங்காளர் வரவு அறிந்து அவரை ஆத்தி மரத்திற்குச் சென்று அழைத்தல் அடுத்த நிகழ்ச்சியாக வந்தது.

ஆத்தி மரத்தின் கீழமர்ந்த பைரவமூர்த்தி, தமது உத்திராபுரி தேசத்து வழக்கப்படி ஐப்பசி மாதத்துப் பரணி நட்சத்திரத்தில் அன்னங்கேட்டு, சித்திரை மாதம் பரணியும் சிவனிரவாகிய சதுர்த்தசியும் கூடிய தினத்தில் கோத்திரத்திற்கோர் பிள்ளையாய் சகல கலையும் அறிந்த மைந்தனைத் தாய் மடியிலிறுத்தி தகப்பனறுத்துக் கறி சமைத்துப் போட்டால் உண்பதுண்டு என்று கூற அதற்குத் தொண்டர் வாக்களித்தலும் அதனைத் தொண்டர் நங்கையிடம் கூறுதலும் நிகழ்கிறது.

ஈசன் செயலல்லாது வேறொன்றில்லை என உள்ளுணர்வால் உணர்ந்த வெண்காட்டு நங்கை பள்ளிக்குச் சென்றிருக்கும் பிள்ளையை அழைத்து வரும்படித் தொண்டரைக் கேட்டல் நிகழ்வை மெள்ளப் பள்ளித் தளத்திற்குக் கொண்டு வருகிறது.

பள்ளித்தளத்தில் கஙகாளர் வருகை, அமுதுண்ணப் பிள்ளைக்கறி கேட்டல் போன்றவற்றைக் கனவால் உணர்ந்த சீராளன் அதனைப்பற்றி ஆசிரியரிடம் வினாவுதல் நாடகத்திற்குச் சுவையூட்டும் தன்மையானதாகும்.

கனவுப்பலன் கூறவந்தப் பள்ளி ஆசிரியர் கனவு நனவாகும் எனச் சாத்திரப்படித் தோன்றுவதால் சிவகாமத்தைத் துதித்துத் துன்பம் தவிர்க்க வழிகூறுதலும், பள்ளி வந்து மைந்தன் சீராளனை 'மாமன்' பார்க்க வந்துள்ளதாகத் தொண்டர் அழைக்கச் சீராளன் தெய்வச் செயலினை உள்ளுணர்வாக உணர்ந்து, கல்லடிக் காயப்படாமலுமுள்ள மனத்தை உருக்குவனவாக இருந்தது.

இந்தச் சீராள மைந்தனைத் தூக்கிவரும்போது தோன்றுகின்ற தீய சகுனங்களின் பட்டியலைத் தொடர்ந்து, மைந்தனை நீராடிவரச் செய்து ஊஞ்சலில் படுக்கவைத்துப் பாடி அவனை உறங்க வைத்து அறுக்கத் தயாராகிற நிகழ்வு தொடர்கிறது.

உறங்குவான் போலக் கண்களை மூடிக் கொண்ட சீராளன் கண்களைத் திறந்து தானே தன்னுடலைக் கறிசமைக்க ஒப்புக்

கொண்டு தயாராதல் தாய்க்கும் தந்தைக்கும் உளத்தையே முட்டி நிற்க, அவனது உடலை அறுத்துத் தொண்டர் வெண்கட்டு நங்கையிடம் ஒப்படைக்கும் உச்சக்கட்டமான நிகழ்வு உள்ளத்தை உருக்குகிறது.

சிவனைத் துதித்துச் சிந்தை மயக்கம் நீங்க நெஞ்சுக்கு உரமளித்த நாக்குகளையுடைய தலையைத் தனித்து வெண்காட்டு நங்கை ஒதுக்கி வைத்துவிட, அது சமயத்திற்கு உதவும் என சந்தனநங்கை பாகம் பண்ணி வைக்கிற நிகழ்வு கோடிடப்படுகிறது.

இச்சிறுத்தொண்டர் நாடகத்தின் பயன் நிறைவுப் பகுதியாகிய இறுதிகட்ட நிகழ்வுகள் மனத்திற்கு உருக்கத்தை அளித்தாலும், முடிவில் சீராளன் உயிர்பெற்று வருதலும் இறை கடாட்சத்தைத் திருத்தொண்டராகிய சிறுத்தொண்டர் பெறுதலும் முன்னரே அறிந்துள்ளமையால் அஃது எவ்வாறு நிகழ்ந்து முடிகிறது என்ற ஆவலைப் பார்வையாளர்களிடம் தூண்டுபவையாகக் காட்சி நிகழ்வுகள் இருந்தன.

உண்ணும் வேளை தப்பியதால் தாமதமாக வந்த சிவபெருமான் கடிந்து கள்ளனென்று மொழிவது போன்ற காட்சிகளில் சோகத்திற்குள்ளே ஈசனாரின் விளையாட்டிற்கு ஆட்பட்டச் சிறுத்தொண்டர் மீது ஈசனது விளையாட்டுப் பாங்கை வைத்து நிற்கும் உணர்வும் பின்னி நிற்பனவாக இருந்தது.

கங்காளரை அழைத்து ஆசனத்திலிருத்தி அமுதுபடைக்க தமக்குத் துணையாக உண்ணும் பரதேசியாகப் பக்கத்தில் அமர்ந்துண்ணத் தொண்டரை அழைத்தலும், தலைக்கறி கேட்டலும் சோதனையின் கடுமையையும், பெருமையையும் காட்டி நிற்கிறது.

பின்னர் பிள்ளையில்லாத வீட்டில் தாம் உண்பதற்கில்லை யெனக் காரணங்காட்டி சீராளனை அழைத்துவர ஈசன் வேண்டு தலாகிய இறுதிச்சோதனை நிகழ்வு நடைபெறுகிறது.

'அவன் இப்போதைக்கு இங்கு உதவான்' என சேக்கிழார் காட்டியத் திருத்தொண்டரைப் போலன்றி, நாடகத்துச் சிறுத்தொண்டரும், நங்கையும், தோழியாகிய சந்தனநங்கையும் சீராளனைப் புறமே சென்று அழைத்துப் பார்த்தல். பலவாறாக உருகியழைத்தப் பின்னர் சீராளன் உயிர்பெற்று வர அவனை உச்சிமோந்து மகிழ்வெய்தி வீட்டினுள் நுழையும் மூவரும் கங்காளர் காணாது மறைந்துவிட்ட அதிசயங்கண்டு நிற்கின்றனர்.

பின்னர் இறைவனை நினைந்து உருகிப் போற்றித் திருநாமம் பாடி அழைக்க, ஈசனும் அவர்கள் முன்தோன்றி தொண்டருக்கும்

சிவலோகம் காட்டி நிற்கிறார். சீராளனுக்குப் பொறுப்பினை யளித்துத் தொண்டர் மோட்சமடைவதாகவும் கூத்து நிகழ்வு முற்றுப் பெற்று நிற்கிறது.

சிறுத்தொண்ட நாயனார் நாடகம் கலைநிகழ்ச்சியாகக் காட்சிப் பொருளன்று. குலதெய்வ வழிபாட்டின் நீட்சியாகும். நாடகமாடுதல் என்பதைவிடச் சாமிகும்பிடுதல் என்று கூறுவதே சில இடங்களில் வழக்காக உள்ளது. மேலும் கங்காளரது வேடத்தில் மேடையில் தோன்றும்போது ஒரு நாடகப் பாத்திரம் தோன்றுதல் என்பதைவிட ஈசனே தோன்றுவதான எண்ணம் பார்வையாளர்களிடம் காணப்படுகிறது.

தெருக்கூத்து போன்றவற்றில் அர்ச்சுனன் தபசு நடைபெறும் போது மகப்பேறு இல்லாதவர்கள் தொட்டில் கட்டுவதாக நேர்த்திக்கடன் கொள்வதுண்டு. அதைப் போலவே சிறுத்தொண்டர் இசைக் கூத்திலும் வெண்காட்டு நங்கை தனக்கு மகவுபிறக்க வேண்டி மன்றாடிப் பாடும் காட்சியுண்டு.

அந்த நேரத்தில் நாடகத்தில் பிரசாதம் அளிக்கப்படும். எந்தப் பெண் நீண்ட நாட்கள் தனக்குக் குழந்தை இல்லாது வருந்தி நிற்கிறாளோ அவள் முந்தானையில் இப்பிரசாதத்தை ஏந்தி வாங்கி உண்டால் மகப்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்றும் கிராம மக்களிடம் உள்ளது.

சிறுத்தொண்டர் இசைக்கூத்தில் வழங்கப்படும் பிரசாதம் குறித்து குறிப்பிடுவது அவசியமாகும். இது வெறும் திருநீறு, வில்வம் என்பதோடு நின்று விடுவதன்று. பிள்ளைகறி வழங்குதல் என்னும் வழக்கம் ஒன்று உள்ளது. இக்கறி நம்நாட்டு சித்தவைத்திய முறையில் மிகவும் உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

சுக்கு, ஜாதிக்காய், ஏலம், பட்டை, சீரகம், கசகசா, சாதிபத்திரி, வெந்தயம், நெய், தினை, வால்மிளகு, குங்குமப்பூ, கடல்பாசி, தேன் போன்ற பல்வகையாக மருந்துப் பொருட்களால் தயாரிக்கப்பெற்ற மாவுப்போன்றது இம்மருந்து.

பூசனை முடிந்து மூன்றாம்நாள் இறைவனுக்குப் படைக்கப்பெற்ற பிள்ளைக் கறியைச் சிறிதளவு அனைவருக்கும் அளிப்பர். எனவே சுகாதாரம், வருமுன் காக்கும் மருத்துப்பாங்கு, உடலுக்கு உரமூட்டும் மருத்துவச்சத்து ஆகியவைகளுடன் இணைந்த சடங்குகளில் ஒன்றாகச் சிறுத்தொண்டர் இசைக்கூத்து வழிபாட்டு முறையும் அமைந்துள்ளது.

நமது மரபுவழி முறைகளில் கிராமத்துள் நடக்கும் கூத்துகளில் கிராம மக்களே பாகமேற்று நடிப்பது வழக்கம். இத்தகைய நாடகங்கள் வாழையடிவாழையாக ஆசிரியர் பொறுப்பேற்று ஆடல்பாடல் அபிநயங்களைச் சொல்லிக் கொடுத்து வருவது வழக்கம். இவற்றுள் வேடம் என்பது பெரும்பாலும் ஒருவருக்கு அளித்துவிட்டால், அவர்காலம் வரை வேறொருவர் எடுத்து நடிப்பது என்பது இருக்காது.

எனவே நாடகம் நடத்துவதற்குப் பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு முன்னதாகவே ஒத்திகை என்பது தொடங்கிவிடும். எல்லாக் கூத்துக்களிலும் இதனைப் பள்ளிகள் என்றே குறிப்பிடு கிறார்கள்.

சின்னஞ்சிறு வேடங்களுக்குப் புதியவர்கள் ஈடுபடுத்தப் படுவார்கள். மற்றவர்களைப் பொறுத்தவரை பழைய பாடத்தை நினைவுபடுத்திச் சுருதியோடு பாடிப்பார்த்தல் என்ற அளவிலேயே ஒத்திகைகள் அமைகின்றன.

இதுமட்டுமன்றி வருடந்தோறும் இதே நாடகம் நடிக்கப்படுவதாலும், அதன் ஒத்திகை நாட்களுள் மற்றைய கிராமத்து மக்கள் பார்த்துக் கேட்டுப் பழகிய காரணத்தாலும் நாடக நிகழ்வுகள் தெரிந்தவைகளாகி விடுகின்றன.

எனவே, பாடம் பழக்குதல் என்பது முறைசாரா முறைமையில் மக்கள் எல்லாரிடமும் படிந்த நிலையைக் காணலாம்.

பாடல்களில் கர்நாடக இசையைப் பின்பற்றிக் கேதாரகௌளை, முகாரி, மோகனம், சங்கராபரணம், யதுகுலகாம்போதி, காம்போதி, பைரவி, கல்யாணி, பூபாளம், தோடி, அசாவேரி, ஆனந்தபைரவி போன்ற இராகங்கள் கையாளப்படுகின்றன. விருத்தமும் அதையோட்டிய தருவும் பெரும்பாலும் ஒரே இராகத்தில் இருக்கின்றன.

இரவு பத்து மணிக்குத் தொடங்கும் நாடகம் மறுநாள் அதிகாலை ஆறு மணி வரை நடத்தல் உண்டு. பல இடங்களில் இரண்டு நாட்கள் நாடகம் நடைபெறுவது வழக்கம். நாடகத்தின் காலநிர்ணயங்கூட பரணி நட்சத்திரம் எத்தனை நாழிகை உள்ளது என்பதைப் பொறுத்ததாகும்.

*ஊஞ்சலிலே வைத்தாட்ட உறங்கினான் போல்*
*உளக்ககண்ணைத் திறந்து மூடா நிற்கும்*

*பாங்கி சிறுத்தொண்டருக்கு உறங்கினாளே பாருகமலக்*
*கண்காட்டப் பரமன் தொண்டர்*

(ஸ்ரீ ரெங்கநாத உபாத்தியாயர் பாடல்)

அமுதுபடையல் கமிட்டி விளக்காரத் தெருவில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. திருவிழா அன்று அன்னதானம் வழங்கி, சிறுதொண்ட நாயனார் கதையும் கதாகாலட்சேபமாக சொல்லப்பட்டு வருகிறது.

மனனார்குடிக்கு அருகிலிருக்கும் காரக்கோட்டையில் பல காலமாக திரு. சத்தியமூர்த்தி கூத்து நடத்தி வருகிறார். இவருக்கு சமீபத்தில் தமிழக அரசு கலைமாமணி பட்டம் வழங்கியுள்ளது.

மன்னார்குடி தாலுகா முழுவதும் சித்திரை மாதத்துப் பரணியன்று இந்நாடகம் ஆடப்படுகிறது. அந்தக் கால மலரும் நினைவுகளை இன்று நினைத்தாலும் மனம் சுகப்படுகின்றது.

**மனோரமா ஆச்சி**

தமிழ் திரைப்படங்களில் ஆச்சி என்று செல்லமாக அழைக்கும் மனோரமாவின் நடிப்பு பற்றி சொல்லவும் வேண்டுமா? இவரைப் பிரசவித்ததும் மன்னார்குடி என்பதில் எங்களுக்குப் பெருமை.

இதுவரை 1200 திரைப்படங்களில் நடித்திருக்கிறார். தேசீய விருது, கலைமாமணி விருது, பத்மஸ்ரீ விருது பெற்றவர். நான்கு முதலமைச்சருடன் நடித்தவர். இவரைப்பற்றி டாக்டர் கலைஞர் பெருமையாக குறிப்பிடுவார்கள்.

*காரைக்குடி ஒரு கண்ணதாசனைத் தந்தது*
*பரமக்குடி ஒரு கமலஹாசனைத் தந்தது*
*குன்னக்குடி ஒரு வைத்தியநாதனைத் தந்தது*
*மன்னார்குடி ஒரு மனோரமாவைத் தந்தது.*

❖❖❖

# கீதாரி

ஊருக்கு அடிக்கடி ஆடு மேய்ப்பவர்கள் வருவார்கள். நெல் அறுவடையான வயல்களில் செம்மறி ஆட்டுக்கிடை கட்டி விடுவார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து வந்து ஆடுமேய்க்கும் கீதாரிகள். அறுவடையானால் எங்கிருந்துதான் வருவார்களோ தெரியவில்லை. மந்தை மந்தையாய் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்து விடுவார்கள்.

பங்குனிப் பனிக்கு பச்சைக் காயாமலிருக்கும் புல்லையும் பசலிக் கொடிகளையும் மேய்ந்துவிட்டு ஆடுகள் நிறைய புழுக்கை போடுமென்பதால் இந்த நாட்களில் தங்களுடைய வயல்களில் கிடை கட்டிவிட வேண்டுமென்று வயல்காரர்கள் ஆசைப்படுவார்கள்.

ஆளாளுக்கு “என்னுடைய வயல்களில் கட்டு, என்னுடைய வயல்களில் கட்டு” என்று போட்டிப் போடுவார்கள். இப்படிப் போட்டிப் போடுவதில் கீதாரிகளுக்கு இந்த சீசனில் கிடைப்பணம் அதிகம் கிடைக்கும். இதைத் தவிர நெல், பச்சைப்பயறு, உளுந்து என்று அப்பகுதியில் விளைவதையும் ஓராண்டிற்குத் தேவையான அளவுக்குச் சேமித்து வைத்துக் கொள்கிறார்கள்.

கீதாரிகளின் நடைக்கு ஈடு கொடுத்து அவர்களுடன் நாங்களும் சேர்ந்து கொண்டு சில கிலோ மீட்டர்கள் நடந்து சென்று அன்புடன் அவர்களிடம் பேச்சுக் கொடுப்போம்.

“ச்சூ... ச்சூ... த்தே... த்தே....” ஆடுகளை வேகமாய் விரட்டிக் கொண்டிருந்தான் ராமு கீதாரி. கையிலிருந்து கம்பால் தரையை

அடித்துச் சிதறி ஓடிய ஆடுகளை வளைத்து ஓட்டினான். ஆடுகள் நீண்ட கும்பலாய் போய்க் கொண்டிருந்தன.

முன்னால் போய்க் கொண்டிருந்த அள்ளி வெறைக்கிடா ஆடுகளை முட்டி விரட்டியது. அதனுடையத் தலைச் சிலுப்பலுக்குப் பயந்த ஆடுகள் சிதறின. ஒன்றையொன்று முட்டி மோதி இடித்துக் கொண்டதால் நடக்க இடமில்லாமல், சில கூட்டத்தை விட்டு விலகின.

கீதாரியின் கம்புவீச்சுச் சத்தத்திற்குப் பயந்து மறுபடியும் கூட்டத்தில் சேர்ந்தன. ஆடுகள் ஒழுங்காகப் போனாலும், இந்தக் கிடாய்கள் அவற்றைப் பேசாமல் போகவிட்டால்தானே?

அள்ளிவெறைக்கிடா சுத்த மோசம். ஒவ்வொரு ஆட்டின் பின்பக்கத்தையும் மோந்து பார்த்து ஆடுகள் விடும் மூத்திரம் மூக்குக்குள் புக 'ஙே' என்று இளித்துக் கொண்டு செருமுகிறது.

பட்டிகளில் ஆடுகளை அடைத்திருந்தாலும் இரவில் அக்கடா என்று படுத்துறங்க முடியாது. முழுசா அறுவடையாகாத வயல்கள் நிறைய இருந்தன. பகலில் பச்சையைப் பார்த்துவிட்ட ஆடுகள் ஓரிடத்தில் ஒழுங்காகப் படுக்காது. எப்போது கண்ணயர்வார்கள் என்று காத்திருந்து அரவம் படாமல் போய் பச்சையில் வாய் வைத்துவிடும்.

ஓராடு இரண்டாடு என்றால் பரவாயில்லை. கிடையோடு வயல்களில் புகுந்து விட்டால் விடிந்துப் பார்க்கும் போது வயல்களில் பயிர் பச்சைத் தெரியுமா? நக்கியெடுத்த மண் சட்டி போலல்லவா இருக்கும் வயல்.

பின் வயல்காரர்கள் சும்மா விடுவார்களா? முழு நஷ்ட ஈட்டையும் கொடுத்தால்தானே ஆடுகளை ஓட்ட முடியும்? இது மட்டுமா பிரச்சினை. ஒரு கீதாரி மனம் ஒடிந்தார்.

இரவில் ஆடுகளை வலைக்குள் அடைத்துவிட்டு காவலாய் கீதாரி படுத்துக் கொண்டாலும், ஓட்டை விட்டு வலைக்குள் நாய்கள் நுழைந்து விடும். சகட்டு மேனிக்கு ஆடுகளைக் கடித்துக் குதறிவிடும். எனவே இரவு முழுவதும் கீதாரியால் தூங்க முடியாது. நரி நடமாட்டத்தையும் விழிப்பாய் கண்காணிக்க வேண்டும்.

இருநூறு ஆடுகள் உள்ள கிடையில் மாதத்திற்கு ஓரிரண்டு ஆடுகள் சாவதொன்றும் பெரிய விஷயமில்லைதான். சில சமயம் 'படுசாவு' வந்து ஒரே நாளில் பத்து இருபதென்று கூட ஆடுகள் சாகும். எவ்வளவு வைத்தியம் செய்தாலும் ஐம்பது ஆடுகளாவது செத்து விடும்.

ஆட்டுக்காரப் பெண்களால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாது. ஒப்பாரி வைத்து அழுது இரண்டு நாட்கள் சோறு திங்காமல் கிடப்பார்கள். அக்கம்பக்கத்து ஆட்டுக்காரர்கள் வந்து "வித்தாடு அருகும் செத்தாடு பலுக்கும். இதுக்கு யாம் அளுதுக்கிட்டு கெடக்ற?" என்று தேற்றியபிறகு கொஞ்சம் கொஞ்சமாக மனதைத் தேற்றிக் கொள்வார்கள்.

சாதாரணமாக ஒரு ஆடு செத்தால் உரித்து தோலை எடுத்து உப்புக் கண்டம் போட்டுக் காய வைத்து விடுவார்கள் குழம்புக்கு ஆகுமென்று. தொடர்ந்து ஆடுகள் செத்தால், செத்தவுடனே உடல் சூடு ஆறுவதற்குள் நூறுக்கோ இருநூறுக்கோ கறிக்கடைக் காரர்களிடம் விற்றுவிடுவார்கள்.

ஆனால் 'படுசாவு' வந்து ஆடுகள் ஒரே நேரத்தில் செத்தால் விற்கவும் முடியாமல் உரித்து உப்புக்கண்டம் போடவும் முடியாமல் போய்விடும். அதுபோன்ற சமயங்களில் பெரிய குழியாய் வெட்டி அதற்குள் ஐந்தாறு ஆடுகளை ஒன்றாய்ப் போட்டு புதைத்து விடுவார்கள்.

எவ்வளவு ஆடுகள் விரயமானாலும் மீதியிருக்கும் கிடையை ஒழுங்காகப் பராமரித்தால் மறு வருடமே கிடை நிறைந்துவிடும்.

ஆட்டுக்காரர்கள் சிரமத்தையும் நாடோடியாக அவர்கள் வாழும் வாழ்க்கையையும் கேட்கும் போது மனம் கனத்துப் போகிறது.

எங்க வயல்லே ராமு கீதாரி கிடை போட்டிருந்தார். அப்போது பத்து ஆடுகள் மேல் செத்து இழப்பு ஏற்பட்டிருந்தது. பொங்கலும் வந்துவிட்டது.


'என்ன ராமு வாட்டமாயிருக்கே! ஆட்டுக்குப் பொங்கல் உண்டா?' எனக் கேட்டேன்.

"நம்ம துக்கம் நம்மளோட. ஆடுக என்னச் செய்யும்? நம்ம வயத்துக்கு ஊத்துறதுக அதுங்கதேங். வருஷத்துக்கு ஒரு நட அதக்கொட செய்யலண்டா எப்படி" என்றவர் சுறுசுறுப்பானார்.

பக்கத்தில் நல்ல பனைமரமாய்ப் பார்த்து குறுத்தோலைகளை வெட்டினார். விரை கிடாய்களுக்கு மட்டும் ஓலையில் நெத்திச்சுட்டியும் முட்டைக் கோரையும் செய்து கட்டி விட்டார். கிடாய்களின் சிறிய சுருண்ட கொம்புகளுக்குச் சாயம் வாங்கி வந்து பூசினார்.

நெட்டிச் செடிகளை வெட்டி வந்து வட்ட வட்டமாய் சன்னமாய் சீவிக் கோர்த்து மாலையாக்கி கிடாய்களுக்கும் வெள்ளாட்டிற்கும் கட்டிவிட்டு அழகுப் பார்த்தார். தன் இடுப்பு

வாரிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்து கடைக்குச் செல்பவர்களிடம் படையல் பொருட்களை எல்லாம் வாங்கி வரும்படிச் சொன்னார்.



பொங்கலன்று இரண்டு மூன்று ஆட்டுக்காரர்கள் ஒன்று கூடி உற்சாகமாக இருந்தார்கள். பொங்கலிட வென்று நீண்ட கோடு வெட்டி அதில் பானைகளை வைத்துப் பொங்கினார்கள்.

களத்துமேட்டிற்கு எதிரே சிறிய தெப்பம் வெட்டி அதில் தண்ணீரும் ஊற்றி தெப்பத்தை நிரப்பினார்கள். தெப்பத்திற்கு முன்பாக கும்பம் ஜோடித்து வைத்துக் கொண்டார்கள்.

தெப்பத்திற்கு மேலாக கரும்புகளை வளைத்துக் கட்டி அழகுப்படுத்தினார்கள். படையலிடும் நேரத்தில் ஒவ்வொரு வருடைய கிடையிலிருந்தும் ஒவ்வொரு இளம் ஆட்டுக்குட்டியைப் பிடித்து வந்து தெப்பத்தைச் சுற்றிக் கட்டிக் கொண்டனர்.

அந்தக் குட்டிகளை மஞ்சள் நீரால் குளிப்பாட்டி பொட்டிட்டு பூமாலையும் போட்டனர். பின்பு அந்தக் குட்டிகளின் ஒரு பக்கத்து காதுகளை அறுத்து தெப்பத்திற்குள் போட்டனர். அறுத்த காதிலிருந்து வடியும் இரத்தத்தையும் தெப்பத்திற்குள் விழும்படிச் செய்தனர்.

பின்பு படையல் சோற்றை அக்குட்டிகளுக்கு ஊட்டினார்கள். கடைசியாக திருஷ்டி கழிக்க, சோறு பொங்கிய கோட்டிற்குள் பனை ஓலைகளைப் போட்டு எரியவிட்டு அதில் உப்பையும் மிளகையும் போட்டனர்.

உப்பு வெடிக்கும் சத்தத்துடனும் மிளகாய் கருகும் பொடியுடனும் நெருப்பு உயரமாய் எரிந்து கொண்டிருக்கும் போதே ஆடுகளை விரட்டி அந்தக் கோட்டைத் தாண்டச் செய்தார்கள். ஒரே பாய்ச்சலாக நெருப்பிற்குள் பாய்ந்து வந்தன ஆடுகள்.

மனித குலத்தின் நெடிய வரலாறு முழுவதும் காணக் கிடைக்கும் தீராத அலைச்சலும், மனக்கொதிப்பும் வாழ்தலுக்கான வேட்கையும், இயற்கை தன்னுள் வைத்திருக்கும் உயிர்களுக்கான ஆறுதலும் இப்பூமியின் பரப்பெங்கும் உக்கிரம் கொண்டுள்ளன.

# வயல்காடும் களத்துமேடும்

பருவ வயதில் நண்பர்களுடன் அவர்களது பக்கத்துக் கிராமத்துக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். ஏர்பிடித்து உழும்போதும், விதைக்கும் போதும் அறுவடையின் போதும் எங்கள் வயலுக்குச் செல்வதுண்டு.

எங்கள் ஊரின் வயல்களும் களத்துமேடும் பல கதைகளைச் சொல்லும். வயல் வரப்புகளில் சர்க்கஸில் கம்பிமேல் நடப்பதைப் போல நடப்போம். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நெல் வயல்கள் பசுமையாக இருக்கும். நெல் வயல் பார்க்கத் தெவிட்டாத காட்சியாகும்.

எங்களூர் விவசாய நகரமாகும். ஊரின் பொருளாதாரமே விவசாயத்தை சார்ந்தே உள்ளது. நெற்பயிருடன் பருத்தி, கரும்பு, உளுந்து, பச்சைப் பயிறு பயிரிடுகிறார்கள்.

கோரையாறு, முள்ளியாறு, பாமணியாறு தண்ணீரை நம்பியே பெரும்பாலான பாசன நிலங்கள் உள்ளன. இது தவிர, ஆழ்குழாய் கிணறு மூலமும் பாசனம் நடைபெற்று வருகிறது.

மன்னார்குடியைச் சுற்றியுள்ள 109 கிராமங்களிலும் அனைத்து சிறுநிலச் சுவான்தார்களும், பண்ணையார்களும் மூன்று போகச் சாகுபடி செய்வர். அதாவது ஆனி அல்லது ஆடி மாதத்தில் குறுவை நாற்று விடப்படும்.

இதற்கென்று ஒரு முகூர்த்த நாளில் 'விதை முகூர்த்தம்' நடத்தப்படும். அன்று ஊர் பொது மக்கள் ஒன்று கூடிக் குறிப்பிட்ட பொதுவான இடத்தில் சிறுபகுதி நிலத்தை உழுது அதில் விதை நெல்லைத் தெளிப்பர். அன்றைய தினம் குறுவை நாற்று விடுவோர் அவரவர் வயலின் ஒரு பகுதியில் விதை நெல்லைத் தெளிப்பர்.

சிறு விவசாயிகள் இவ்வாறு பயிரிடப்படும் நாற்றினை விலைக்கு வாங்கித் தங்கள் வயலில் நடுவர். ஆற்றில் நீர் வந்தவுடன் வயல்கள் உழப்பட்டு, அதில் குறுவைச் சாகுபடி தொடங்கப்படும். இது ஒரு குறுகிய காலப் பயிர். இந்தக் குறுவைப் பயிர் முதிர்ந்து புரட்டாசி மாத இறுதியில் அல்லது ஐப்பசி மாத தொடக்கத்தில் அறுவடைக்குத் தயார் நிலையில் இருக்கும்.

கிராமங்களில் உள்ள மக்கள் குறுவை நெல்லை வியாபாரி களிடம் விற்று விடுவார்கள். இந்த நெல்லைத் தங்கள் உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் தங்கள் உணவுத் தேவைகளுக்குப் பொன்னி அல்லது ஐ.ஆர்.எட்டு கலப்பினச் சேர்க்கை (ஒட்டு) நெற்பயிர்களைப் பயிரிடுவர். இவை சம்பா வகையின்பாற்படும்.

குறுவை பயிர் அறுவடைச் செய்யப்பட்ட பிறகு, குறுவைச் சாகுபடியிலிருந்த 75 சதவீத வயல்கள் மீண்டும் உழப்பட்டு தாளடி சம்பா நடப்படும். குறுவைப் பயிரின் பயிர்க்காலம் மே 15-ல் தொடங்கி செப்டம்பர் 15 வரை ஆகும். (120-135 நாட்கள்)

சம்பா சாகுபடி ஜூலை 15 தொடங்கி டிசம்பர் 14 வரை நடைபெறும் (155-165 நாட்கள்) தாளடி சம்பா செப்டம்பர் 15 தொடங்கி சனவரி 31 வரை (120-135 நாட்கள்) தாளடி சம்பா நெல் அத்தனைத் தரமுள்ளதாக இருக்கும். இந்த நெல்லைத்தான் எங்கள் வீட்டுப் பத்தாயத்தில் கொட்டி சேமிப்போம்.

சம்பா அறுவடை முடிந்தபிறகு அந்த வயல்களில் உளுந்து அல்லது பயறு தெளிக்கப்படும். இவை ஊடு பயிராக வளர்ந்து நல்லப் பலனைத் தரும். விவசாயிகளைப் பொறுத்த வரையில் எவ்வித கடின உழைப்பும் இல்லாது பெறப்படும் தானிய வகைகள் இவை. வீட்டு உபயோகத்திற்குச் சேமித்து வைக்கப்பட்ட பகுதியினைத் தவிர மற்றவை வியாபாரிகளிடம் விற்கப்படும்.

மொத்தத்தில் என் இளமைக் காலத்தில் எங்கள் வயல்களும் களத்துமேடும் செல்வச் செழிப்பில் இருந்தன. மக்களிடம் தாராளமாகப் பணப் புழக்கம். இதனால் விழாக்களும், பண்டிகைகளும், சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தன.


வயலுக்குள் ஏரை விவசாயி அழுத்திப் பிடிக்க மாடுகள் இரண்டும் இழுக்க, சேறு கீழும் மேலும் மாறி மாறி வரும். ஏருக்குப் பின்னால் இரண்டு பெண்கள் விதையை விதைக்க இந்தக் காட்சியைக் கண்டு பிரமித்து நின்றதுண்டு.

வயல் வரப்பில் ஓடி ஓடி தென்றல் காற்று பேயாக மாறி ஆடையைக் கலைக்கும். ஓயாதச் சிரிப்பும், கூத்தும் கும்மாளமும் மனசெங்கும் வியாபித்து இருக்கும்.

வயலுக்குச் செல்லும் இருபுறங்களிலும் சேவகர்களைப் போல் வரிசையாக நிற்கும் மரங்கள் எங்களை வரவேற்கும். அங்கங்கே நந்தவனம் போல் பூச்செடிகளும் மூலிகைச் செடிகளும் மணம் பரப்பிக் கொண்டிருக்கும். பறவைகளின் சத்தம் பாடி வரவேற்பதாக இருக்கும்.

நாற்று பிடுங்கும் போது விவசாயியின் கரங்கள் மெஷின் போல் வேலைச் செய்யும். சடக் சடக்கென்று இளம் நாற்றினைப் பறித்துக் கட்டுக்கட்டாகக் கட்டி அப்படியே சேற்றில் எறியும் கை லாவகம், பறித்துப் போடும் நாற்றுகளை நடவு நடக்கும் இடத்திற்கு கொண்டு சேர்க்கும் வேகம். கண் இமைக்காமல் ரசிப்பேன்.

நாட்டில் முதல் வணக்கத்துக்குரியவன் விவசாயி. மண்ணைக் கிண்டுவதைச் சுகமாக நினைக்கிறான்.



பெண்கள் வரிசை வரிசையாகக் குனிந்து கொண்டு நாத்து நடும் அழகு, பாடிக் கொண்டே களைப்புத் தெரியாமல் வேலை செய்யும் பெண்களின் வசீகரக் குரல்கள். இடையிலே அவர்களுக்குள்ளே கேலி கிண்டல்கள், இதனை வயல்மேட்டில் அமர்ந்து கொண்டு பார்ப்பது என்பது அலாதியான அனுபவம்.

நாத்து நடவுக்கு பத்துப் பதினைந்து பெண்கள் வந்திருந்தனர். சிலர் பச்சைக் குழந்தைகளைத் தொட்டில் கட்டி விட்டு நடவில் இறங்கினார்கள்.

தன் குழந்தைக்குப் பால் கொடுக்கப் போன ஒருத்தி, இன்னொருத்தியின் குழந்தைக்கும் பால் கொடுத்துவிட்டு நடவு நட சேற்றுக்குள் இறங்கினாள்.

என்ன ஒற்றுமை! சகோதரத்துவம்! தாய்ப்பாசம்! அப்படியே மலைத்து நின்றேன்.

வயல் ஓரங்களில் வாய்க்காலில் தண்ணீர் துள்ளிக் குதித்து ஓடும் சலசலப்பு. அதில் துள்ளி எழும் கெண்டை மீன் குஞ்சுகள் தாவிக் குதிப்பது, சின்ன வாண்டுங்கள் அங்கங்கே துண்டை வைத்து மீன் பிடித்துக் கொண்டிருக்கும் காட்சி இன்றும் கண்முன்னே படமாகத் தெரிகிறது.

அறுவடைக் காலங்களில் சூரியன் உச்சிக்கு வருவதற்குள்ளே, 'சரசர'என்று பயிர்களை அறுத்து விடுவார்கள். வளைக்கரங்கள் பம்பரமாய்க் கவிதைப் பாடுவது போல் இருக்கும்.

பச்சைத் தாவணி கட்டிய பருவ வயல்கள் - காற்றோடு சண்டைப் போட்டுக் கொண்டிருக்கும் தென்னை மரங்கள் - அசரீரி பாடும் குயில்கள் - கரைகளுக்கு நீதிமொழி சொல்லிக் கொண்டே நடந்து போகும் வாய்க்கால்கள். இவைகளிலெல்லாம் கரைந்த நாட்கள். நினைத்தாலே மனதில் மத்தாப்பு மலர்கிறது.

கிராம வாழ்க்கையை நாட்டுப்புற வாழ்க்கை என்று சொல்வதுண்டு. கிராமங்களில் நகர வாழ்க்கை இருந்தால் அது ஊடுருவல்தான்.

பாலுக்கு மாடு வளர்ப்பதும், பசிக்குப் பயிர் வளர்ப்பதும் அன்றைய வாழ்க்கை. கிராமமும் விவசாயமும் உயிரும் சதையுமாக இருந்தது.

பருவகால மாற்றங்களில் ஏற்படும் ரெண்டுங் கெட்டான்களைத் தவிர்ப்பதற்கென்றே 'பட்டம்' என்று (பருவம்) வைத்து, ஊர்கூடி ஒரே நேரத்தில் விதைப்புத் துவங்குகிற பழக்கம் இருந்தது.

சித்திரைப் பிறந்தால் - கிராமங்கள் களைகட்டிவிடும். சொந்த பந்தங்களுக்கு நடக்கும் கல்யாணம் காட்சிகளுக்கு கூட ஊரைவிட்டு யாரும் அகலமாட்டார்கள்.

கலப்பையைக் கொழுவைப் பட்டறைகளில் கொடுத்து அடித்து சரிப்படுத்தி வாங்குவார்கள். காளை மாடுகளுக்கு கொம்பு சீவி, லாடம் அடித்து, நீஞ்சவிட்டு குளிப்பாட்டி, பொட்டு வைத்து கழுத்துக்கு மணி கட்டுவது, வண்டிச் சக்கரத்துக்குப் பட்டைப் போடுவது, குடத்துக்கு மசகு போடுவது - கலப்பைக்கு விளக்கெண்ணெய் தேய்ப்பது, தவிக்குச்சிக்கு குஞ்சம் கட்டுவது என்று ஊரே அமர்க்களப்படும். மண்ணோடு வாழ்க்கையைப் பிணைத்தே ஜீவிக்கும் கிராம மக்கள்.

வயல்வெளிகளுக்கு வேலைக்குச் செல்பவர்கள் ஏர் ஓட்டுதல் - நாத்து நடவு, களையெடுப்பு, கதிர் அறுப்பு - எதுவாக இருந்தாலும் சூரியனைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டு வேலையில் இறங்குவார்கள். அவர்களுக்குள் ஒழிந்திருந்த நம்பிக்கை, பக்தி, தொழில் ஈடுபாடு யாவும் வெளிப்படும்.

வயல் சொந்தக்காரனுக்கு வருமானம் நெறைய வரணும். மனசார வேண்டிக் கொண்ட அவர்களின் பொழுதுபோக்கு - நம்பிக்கை மனதில் வேரூன்றி இருந்தது.

களத்து மேட்டில் கிராமத்துப் பெண்கள் கற்ற பாடங்கள் எல்லாம் வாழ்க்கையின் அனுபவங்கள். அர்த்தமுள்ள வாழ்க்கை இரகசியங்கள்.

ஆண்களும் பெண்களும் முறங்களை உயர்த்தி நெல் தூற்றுகிறார்கள். பறவைகள் தானியங்களைச் சாப்பிடுவதற்கு பறந்து கொண்டிருக்கும். பழைய வாசனையுடன் உள்ள களத்து மேடுகளை இப்போது பார்ப்பது அரிது.

பஸ்ஸில் ஊருக்குச் செல்லும் போதெல்லாம், தார் சாலையே களத்து மேடாக காட்சித் தருகிறது. வாகனங்களுக்கு வழிவிட்டு மீண்டும் வேலையில் ஈடுபடுகின்றனர்.

கிராமத்தின் விளிம்புகளாக ஊரைச் சுற்றிலும் ஓடைகள், மழைநாள் தவிர, மற்ற நாட்களில் நீரோட்டமில்லாத ஓடைகள். சில இடங்களில் பாறைகள், சில இடங்களில் மணல்.. இன்னும் சில இடங்களில் பொட்டல் தரைகள். ஆனால் எல்லா இடங்களிலும் வஞ்சனை இல்லாத வேலிச் செடிகள்.

கிராமங்கள் தங்கள் சொந்த முகங்களையும் அடையாளங்களையும் தொலைத்துக் கொண்டே இருக்கின்றன. கிராமத்துச் சாதியில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக நகரத்துச் சாதிக்கு அவர்கள் மாறிக் கொண்டே இருக்கிறார்கள்.

பழையகளத்து மேடும், மண்வாசனையும், வயல்வெளி அடையாளங்களும் இழந்து மனசுக்குள்ளே தாகம் ஏற்படுகிறது.

# கல்லூரி நாட்கள்

வசந்தமும் - இளமையும், காதும் கீதமும், எண்ணமும் முயற்சியும் இவை இணைபிரியாதவை. இவை யாவும் ஒன்றுசேர்ந்துதான் மாணவப் பருவ வாழ்க்கை.

மாணவப் பருவத்தில் கல்லூரி வாழ்க்கை கவர்ச்சியாகத் தோன்றும். கல்லூரி நாட்களில் புதுப்புது அனுபவங்கள். அந்த நாட்களை இப்போது நினைத்தாலும் ரசிப்பேன்.

மன்னார்குடி மாணவர்களுக்கு ஆபத்தாண்டவராக அமைந்தது வீரைய்யா வாண்டையாரின் பூண்டி புஷ்பம் கல்லூரியாகும். மன்னார்குடி, திருவாரூர், நாகப்பட்டிணம் பகுதியில் இருப்பவர்களுக்கு இந்தக் கல்லூரிதான். உயர் கல்வியைத் தந்தது. இந்தப் பகுதிகளுக்கு இருந்த ஒரே கல்லூரி.

இந்தக் கல்லூரிக்கு ஒரு சிறப்பு இப்பகுதி மாணவர்கள் இ.ரயில் மூலம் வந்து படிக்கும் வசதிகள் இருந்தது. மன்னார்குடியில் இருந்து நீடாமங்கலம் வரை இரண்டு பெட்டி இரயிலில் வந்து, நீடாமங்கலத்தில் வேறு இரயிலில் குடிகாடு (பூண்டி) வந்து படிக்கணும்.

மன்னார்குடி மைந்தர்களுக்கு உயர்கல்விக்கு பாதை வகுத்தது வீரைய்யா வாண்டையாரின் புஷ்பம் கல்லூரியும், இரயில் வசதிகளும்தான்.

அப்போது எனது சகோதரி தஞ்சையில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அதனால் தஞ்சாவூரில் இருந்து கல்லூரிக்கு இரயிலில் சென்று படித்து வந்தேன். தஞ்சாவூரிலிருந்து செல்லும் பாதையில் சுமார் 12 கி.மீ. தூரத்தில் குடிகாடு ரயில் ஸ்டேசன். இங்கிருந்து அரை கி.மீ. தூரத்தில் “புஷ்பம் கல்லூரி”

நான் படித்த புஷ்பம் கல்லூரி பிரமாண்ட அமைப்புடன் இருந்தது. ரயிலடியிலிருந்து கல்லூரி செல்லும் சாலையின் இருமடங்கிலும் உயரமான மரங்களும் சுற்றிலும் பசுமையான வயல்வெளிகள். பெரிய மைதானம்.

ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு கட்டிடம். பறவைகளின் ஒலிகள், சிவப்பு, மஞ்சள், வெள்ளைநிறப் பூக்கள். வாய்க்காலில் சலசலவென ஓடும் நீரோடையின் சத்தம். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் மனசுக்குள் அலை அடிக்கிற அந்தக் கல்லூரியின் வசீகரத் தோற்றம்.

கல்லூரி அருகே பிரமாண்டமான ஹாஸ்டல் கட்டிடம். இரயிலில் பயணிக்கும்போது கல்லூரியும், ஹாஸ்டலும், பல மைல் தூரம் வரைக் காட்சித் தந்து கொண்டிருக்கும். அவ்வளவு உயரமாகத் தோற்றப் பொலிவுடன் அமைந்திருக்கும்.

வகுப்பறை நேரம் தவிர மரத்தடியில் அமர்ந்து பேசுவதில், ஆர்வம் காட்டுவோம். ரயில்வே ஸ்டேசன் அருகே சின்ன டீக்கடை. பக்கோடாவும், டீயும் சுவையாக இருக்கும்.

என்னுடைய கூச்ச சுபாவம் கல்லூரி வாழ்க்கையில் ஓரளவுதான் தெளிந்தது. தலைமைச் செயலகத்தில் முதன் முதலில் பணிபுரிந்த நாட்களில்தான், வாழ்க்கையில் எனக்குத் தெளிவு கிடைத்தது.

லெக்சரர்களில் பலருக்குப் பட்டப்பெயர்கள் வைப்போம். வகுப்பில் சீரியசாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது சிலர் தூங்குவார்கள். குறும்புக்காரர்கள் ஊளையிடுவார்கள். அட்டெண்டசில் பிராக்சி கொடுக்கு ு கில்லாடிகளும் உண்டு.

தனியார் கல்லூரியாக இருந்ததால் பாடம் சொல்லிக் கொடுப்பதில் கல்லூரி தாளாளர் துளசி அய்யா வாண்டையார் சிறப்புக் கவனம் செலுத்துவார். பல லெக்சரர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதுடன், தேர்வுகளை அணுகும் முறைகளையும், அதிகமாக மதிப்பெண்களைப் பெறத் தேவையான நுணுக்கங்களையும் சொல்லித் தருவார்கள்.

மதியம் ஒரு மணி முதல் இரண்டு மணி வரை இடைவேளை. கேம்பஸ் நடுவில் அடர்த்தியாக நிழல் தரும் மரங்கள் இருக்கும். ரம்மியமானச் சூழ்நிலையில் சாப்பிடுவோம்.

காலை ஒன்பது மணிக்கு டிரெய்ன். மாலை நாலரை மணிக்குத் திரும்பச் செல்ல டிரெயின் வசதியுண்டு. சமயங்களில் கல்லூரிக்கு கட் அடித்தால் மதியம் ஒன்றரை மணி டிரெயினில் போவோம். கட் அடித்த நாட்களில் சினிமா தியேட்டரில் நண்பர்களுடன் இருப்போம்.

கல்லூரி மாணவர்கள் யாராவது மாவட்ட அளவில் இன்டர் காலேஜ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றால் அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம். காலேஜ் நிர்வாகம் இதற்கு அரைநாள், சிலசமயம் முழுநாள் லீவு விட்டு எங்களைக் குஷிப்படுத்தும்.

சரியான கிராமச் சூழ்நிலையில் கல்லூரி அமைந்ததாலும், ஆண்கள் மட்டுமே படித்தாலும் மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டியச் சூழ்நிலைகள் இயல்பாகவே அமைந்து விட்டது.

மாணவர் தலைவர் தேர்தல் வந்தது. கடும் போட்டி. நண்பர் வட்டத்தில் சிவானந்தம் என்பவனைத் தேர்தலில் நிற்க வைத்தோம். அவனுக்கு மேடைப்பேச்சு பேசவே தெரியாது. கடுமையாகப் போராடி அவனைத் தேர்தலில் ஜெயிக்க வைத்தோம். அவனோ கல்லூரி விழாக்களில் பேசி சமாளித்தான்.

திருச்சி தேசியகல்லூரியில் எம்.ஏ. படிக்க நேரிட்டது. மீண்டும் தஞ்சையிலிருந்து முதல் ஆண்டு முழுவதும் இரயில் பயணம். இந்தப் பயணத்தில் பல அறிவு சார்ந்த இரயில் பயணிகள் சிநேகிதம் கிடைத்தது. இப்பயண நேரத்தில்தான் நாவல், சிறுகதை, தொடர்கதை என்று படிக்கும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

***உயிரின் சுவாசமல்லவா புத்தகம்?***
***புத்தகம் என்பது எத்தனை அற்புதம்?***
***புத்தகம் என்பது எத்தனை சௌகரியம்?***
***புத்தகம் நாகரீத்தின் உச்சம்.***

இரண்டாமாண்டில் திருச்சியில் தங்கிப் படித்தேன். மன்னார்குடியையும் பெற்றோர்களையும் பார்க்க அடிக்கடி ஓடிவிடுவேன். எங்கள் வகுப்பில் என்னுடன் படித்த அனைவருமே தற்போது நல்ல முறையில் வாழ்க்கையில் செட்டில் ஆகிவிட்டனர்.

**பிரகலாதன்**

கல்லூரி வாழ்க்கையில் என்னுடன் புகுமுக வகுப்பிலிருந்து எம்.ஏ. வரை ஒன்றாகப் படித்த நண்பன் பிரகலாதன். இவனுடைய நட்பு புனிதமானது. ஆன்மீகத் தேடலை இவன் மூலம் கண்டுபிடித்தேன். ஸ்ரீராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் அடையாளம் காட்டியதும், ஞான வாழ்க்கைக்குப் பாதை காட்டியதும் இந்த நண்பன்தான்.

தற்போது சென்னையில் ஆடிட்டராக வேலைப் பார்த்து வரும் பண்பாளர். பழைய முகங்களில் சிலர் மறைந்து போனாலும் மீண்டும் பார்ப்பதற்கு மனம் ஏனோ ஏங்குகிறது.

ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு வசந்த காலம் நிச்சயம் இருக்கும். அதிலே வானவில் வட்டமடிக்கும். வண்ணங்களின் அணிவகுப்பு செய்யும் காலம். கனவுகளும் கற்பனைகளும் சிறகடித்த காலம். இதனை உணர்ந்து நெகிழ்ந்த நாட்கள் கல்லூரி நாட்களே.

❖❖❖






மாவீரன் நெப்போலியன வாழ்வில்
100
சுவையான நிகழ்ச்சிகள்

இதைக் கையில் எடுத்துவிட்டால் படித்து முடித்து விட்டுத்தான் கீழே வைக்க முடியும்.
அந்த அளவுக்குச் சிறப்பாக இதைச் செய்து முடித்திருக்கிறார் இந்நூலாசிரியரும்
எனது இனிய நண்பருமான பானுகுமார் அவர்கள்.
பல நூல்களைப் படித்து உண்மை விபரங்களை சேகரித்து, ஒழுங்குபடுத்தி ஒரு
அழகிய நூலாக உருவாக்கி இருக்கிறார்.
தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

உலகம் இதுவரை கண்ட மாவீரர்களில் முக்கியமான ஒருவர் நெப்போலியன்.
அருமையான வாழ்க்கை திரைப்படங்களைவிட அதிக திருப்பங்கள் கொண்டது
நெப்போலியன் வாழ்க்கையில் நடந்த 100 சுவையான நிகழ்ச்சிகளை சிறு கதைகளைப்
படித்த மன நிறைவு ஏற்படுகிறது.
தினத்தந்தி : 19.01.2005.

மாவீரன் நெப்போலியன் வரலாற்றை தெளிவாக விளக்கும் வகையில் அவரது
வாழ்க்கையிலே நடந்த நூறு சுவையான சம்பவங்களைத் தொகுத்து கூறும் நூல்.
தினமணி : 20.01.2005.

ஒரு வீர வரலாற்றை நூறு நிகழ்ச்சிகளில் அடக்கிய ஆசிரியரின் திறமை
பாராட்டுக்குரியது.
பொதிகை தொலைக் காட்சி.

# இரயில் பயணங்களில்

தஞ்சாவூரிலிருந்து பூண்டிக்கு சுமார் பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் தினசரி இரயில் பயணம் அற்புதமானது. காலை ஒன்பது மணி இரயிலில் கல்லூரி மாணவர்கள் கூட்டம் அலைமோதும்.

இரயிலுக்கு கார்டு விசிலடித்தவுடன் 'டேய் பங்காளி, பாஸ், சோமாறி" என்று பலவிதமான குரல்கள் ஒலிக்கும். அவ்வளவுதான் எங்கிருந்தோ திபுதிபுவென ஓடிவரும் இளைஞர் கூட்டம். படிகளில் தொற்றிக்கொள்வார்கள்.

இரயில் வேகத்தில் பாய்கின்ற காற்று முகத்தில் மோதி அந்தச் சுகத்தில் இலயித்திருந்த நேரங்கள்.

வட்டமடித்துச் சுழன்றோடுகின்ற வயல்வெளிகள் - கல்லைக் கண்ட நாயைப் போல "விருட் விருட்"என்று ஓடுகின்ற மரங்கள்.


இரயிலில் பயணிக்கும் பெண்கள் முன்பாக ஸ்டைலாக சிகரெட் பற்ற வைத்துக் கொள்வார்கள். ஒரு இழுப்பு இழுத்துவிட்டு பேசிக் கொண்டே வளையம் வளையமாகப் புகை விடுவது வேடிக்கையாக இருக்கும்.

புகைவண்டி சாந்தப்பிள்ளைக் கேட்டைத் தாண்டும்போது சரபோஜி காலேஜ் மகளிர் பஸ் நிற்பதைப் பார்த்தவுடன், விசில் சத்தம் பறக்கும். குறும்புக்கார மாணவர்கள் பிளையிங் கிஸ் அடிப்பார்கள். டாடாவும் காண்பிப்பார்கள்.

கல்லூரி வாழ்க்கையில் தஞ்சாவூர் To நாகூர் பாசஞ்சர் தான் எங்கள் வாகனம். நண்பர்களுக்கு ஒவ்வொரு டீம் இருக்கும்.

வேளாங்கண்ணி விழாவின் போது இரயிலில் அதிகம் கூட்டமிருக்கும். பயணிப்பதே சிரமமாயிருக்கும்.

பயணிகளில் பெண்களைக் கண்டால் உதாராகக் காலரைத் தூக்கி விடுவர் சிலர். சிலர் தலையைக் கோதிக் கொள்வதும், ஓரக்கண்ணால் பார்ப்பதும், சிரிப்பதும், நகைச்சுவைப் பேசுவதுமாக இருப்பார்கள்.



இரயில் பயணங்களில் கானாப்பாட்டு பாடுவோம். இரயில் பலகைகள் எல்லாம் வாத்தியக் கருவிகளாகிவிடும். சமயத்தில் நாட்டியமும் நடைபெறும். மாணவர்களின் குறும்பு சமயங்களில் லிமிட்டைத் தாண்டும். "தினம்.. தினம்... இதே ரோதனையாப் போச்சு" என்று உள்ளேயிருந்து பயணிகள் அலுத்துக் கொள்வார்கள்.

இரயிலில் சில சுவாரஸ்யமான சம்பவங்களும் உண்டு. வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு தொள்ளைக் காது தோட்டை ஆட்டிக் கொண்டு "தம்பி இந்த ரயிலு எங்கே போகுது?"ன்னு கேட்பார்.

"நீ எங்கேப் போகணும் கிழவி" என நக்கலாக எதிர்கேள்வி போடுவர் சிலர். "அம்மாப்பேட்டைக்கு" எனப் பாட்டிச் சொல்லுவார். கிழவியைக் கைத்தாங்கலாக இரயில் பெட்டியில் ஏற்றியும் விடுவோம்.

சில மனிதர்கள் ஏனப்பா நெருக்கமா உட்காருகிற என்று எதார்த்தமாய் கேட்பார்கள். இரயில்லே கூட்டம் ஜாஸ்தி. கைப்பட்டா குத்தம். கால்பட்டா குத்தம்னு சொன்னா இரயிலேயே வரக்கூடாது. கார்லே போகணும்..." என்று எகத்தாளமாக குரல் ஒலிக்கும்.

இப்போது நினைத்தாலும் ஆச்சரியம் கலந்த சுகமான நினைவுகளாக இருக்கின்றன.

இரயிலில் துக்கமான சம்பவங்களும் நிகழ்ந்திருக்கு. இரண்டாம் ஆண்டு மாணவன் எப்போதும் ஓடுற ரயிலே ஏறுவான். ஒரு சமயம் கால் தடுக்கியது. இரயில் சக்கரத்தில் இரண்டு ஷூக்கள் அணிந்த பாதங்கள் மட்டும் துண்டாகியது. ஆறு மாதம் கழித்து இரண்டு கை மூட்டுகளில் இரண்டு ஊன்றுகோலுடன் வந்தான். அவனைப் பார்க்கும்போது பழைய ஞாபகம் கண்ணில் நீரை வரவழைக்கும்.

இதைவிட நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சி. எனது பள்ளித்தோழன் ஜேம்ஸ்ஸின் தம்பி மோசஸ். மன்னார்குடியில் இருந்து இரயிலில் வருவான். சரியான குரங்கு சேஷ்டை. ஒருமுறை ஓடும் இரயிலில் சன்னல் கம்பிகளைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டு வந்தவன் கீழே விழுந்து, இடுப்புக்குக் கீழே சக்கரம் ஏறிவிட்டது. இரண்டு மணி நேரத்தில் உயிர் பிரிந்துவிட்டது. இன்று நினைத்தாலும் இச்சோகத்தை மறக்க முடியவில்லை.

இளமைப்பருவம் துடிப்பானது. வேகமானது. விவேகமாக நடந்து கொள்ள வேண்டிய பருவம். சிரிப்பும் கும்மாளமும் கொண்டு நிரம்பி வழியும். அந்த இரயிலை ஏதோ வேற்றுக் கிரகத்திலிருந்து பூமிக்கு வந்து பறக்கும் தட்டைப் போல மற்றப் பயணிகள் வெறித்துப் பார்ப்பார்கள்.

அடிக்கடி அபாயச் சங்கிலியை இழுத்து நிறுத்திவிடும் மாணவர்களும் இருந்தார்கள். குறிப்பாக பொது வேலை நிறுத்தம், கல்லூரி ஸ்ட்ரைக் என்றால் மாணவர்கள் ஒரே ஆயுதம் அபாயச் சங்கிலிதான். இந்த மாதிரி தருணங்களில் இரயில் சிப்பந்திகளின் கோபம் மாணவர்களைச் சுட்டெரிக்கும்.

கல்லூரி வாழ்க்கை குறிப்பாக எனது கல்லூரி நாட்கள் இரயில் பயணத்துடன் இணைந்து விட்டது.

சிறிய வயதைத் தொலைத்து விட்டு மளமளவென்று பெரியவர்களாகி விட்டோம். இலட்சியத்தை நோக்கிப் பயணித்தாலும் பால்ய வயசு ஆசைகள் மனதின் கரைகளில் ஜாலியாகத் தொடர்ந்து பயணித்துக் கொண்டே இருக்கிறது.

# சின்ன சின்ன...

இளவயதில் மனதில் பதிந்த சின்னச் சின்ன சம்பவங்களும் நிகழ்வுகளும் ஏராளம். அவை பால்ய வயசு சுவாரஸ்யங்கள். இப்போது ஞாபகத்தில் வந்தாலும் மனசு சுகப்படுகிறது.

காலப் பாதையில் நீண்ட தூரம் நடந்து வந்து விட்டேன். என் மனதில் மீண்டும் மீண்டும் சிலர் அடையாளம் மாறாமல் தோற்றமளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**திவசம்**

ஆண்டுதோறும் எங்கள் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் திவசம் வரும். திவச நாட்களில் எல்லோரும் குதூகலமாக இருப்போம். தாத்தாவும் பாட்டியும் இறந்த திதியில் திவசம் வருகிறது.

பத்து தினங்களுக்கு முன்னே ஐயர் வந்து திதி நாட்களைச் சொல்லிவிட்டுப் போவார். இவர் உசிலைமணி போல் குண்டாக இருப்பார். இவர் வீட்டுக்கு வந்தாலே களைகட்டிவிடும். அவருக்கென்று ஒரு ஆசனப்பலகை இருக்கும். அதில் அமர்ந்து ஹோமம் வளர்ப்பார். மந்திரங்கள் ஓதி பிண்டங்கள் போடுவார். அப்பா திவசம் கொடுக்க நாங்கள் அருகில் அமர்ந்திருப்போம். திவசம் முடிந்ததும் பஞ்சாமிர்தம் சாப்பிடுவோம். இதை வீட்டில் உள்ளவர்கள் மட்டும் தான் சாப்பிடணுமாம்.

ஏழை எளியவர்களுக்கும், புரோகிதருக்கும் மதியம் வடை பாயசத்துடன் சாப்பாடு. இதனால் இறந்தவரின் ஆவி படிப்படியாக மேலே சென்று சாந்தி அடையும் என்ற நம்பிக்கை. இந்தத் திவசம் மூன்று தலைமுறையினருக்கும் சேர்த்துச் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் வரும் திவசத்திற்கு முதல்நாளே இறந்த முன்னோர் நம் வீட்டுக்கு வந்து விடுவார்கள். அன்றைய பொழுதை ஒரு பொழுது என்பார்கள். விரதம் இருப்பார்கள்.

இறந்தவர் ஆத்மா சாந்தியடையத் தருமங்கள் செய்ய வேண்டும். திவசம் என்பதற்கு சிரார்த்தம் என்ற பெயரும் உண்டு. இந்திரஜித் இறந்தபோது இராவணன் தேம்பித் தேம்பி அழுவான். ஏன்? தனக்கு கையினால் எள்நீர் கடன் கழிக்காமல் மகன் சென்று விட்டதாகக் கதறுவான்.

நீத்தார் நினைவு நாளில் எள்நீர் தெளித்து வழிபடும் முறை தமிழகத்தில் பழங்காலத்தில் இருந்து தொடர்ந்து வருகிறது. திருவள்ளுவர் கூட இதனை 'தென்புலத்தார் கடன்' என்பார்.

## உடுப்பி ஓட்டல் :

மன்னார்குடி பந்தலடியைச் சுற்றி மூன்று உடுப்பி ஓட்டல்கள் இருந்தன. டிபன் வகைகள் சுவையாக இருக்கும். வியாழக் கிழமைகளில் 'கடப்பா' ஸ்பெஷல். கூட்டம் அதிகமாயிருக்கும்.

உளுந்துவடை, பஜ்ஜி, போண்டா மூன்றும் அவ்வளவு சுவையாக இருக்கும். போண்டாவில் மிளகு சேர்த்திருப்பார்கள். விதவிதமான இனிப்பு வகைகள் சுடச்சுடக் கிடைக்கும். நண்பர்களுடன் போய்ச் சாப்பிடுவோம்.

எஸ்.எஸ்.எல்.சி. படிக்கும் போது உடுப்பி கிருஷ்ண விலாசில் எனக்கு அக்கவுண்டு வைத்துக் கொடுத்தார் தந்தை. மாலையில் டிபன் சாப்பிட்டுவிட்டுத்தான் வீட்டுக்கு வருவேன்.

இன்று அந்த உடுப்பி ஓட்டல்கள் நிர்வாகம் மாறியுள்ளது. பெயர்களும் மாறியுள்ளது. அந்த நாள் சுவையும் மாறியுள்ளது.

## டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டியூட்

அப்போது மன்னார்குடியில் இரண்டு டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டியூட்தான் இருந்தன. தேரடியில் சரஸ்வதி இன்ஸ்ட்டியூட், பெரியகடைத் தெருவில் முதலி ஆண்டார் இன்ஸ்ட்டியூட்.

டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் காலை ஐந்து மணி முதல் இரவு ஒன்பது மணிவரை செயல்பட்டு இருந்தன. இன்று கம்ப்யூட்டர் சென்டரில் மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பது போல், அன்று டைப்ரைட்டிங் பழகி வந்தனர்.

பெண்களும் படித்து வந்தனர். அவர்களுக்குத் தனியாக நேரங்கள் ஒதுக்கப்பட்டன. இருபாலரும் சந்தித்துப் பேசவே முடியாது. சரஸ்வதி இன்ஸ்ட்டியூட்டில் நான் படித்தேன்.

பட்டப்படிப்பு விடுமுறையில் லோயரும், முதுகலைப் பட்டப்படிப்பு விடுமுறையில் ஹையரும் படித்தேன். தமிழ், ஆங்கிலம் இரண்டும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன்.

நண்பர்கள் திருஞானம், அருள்சாமி, முத்தையா, லத்தீப் சேர்ந்து படித்தோம். சில நண்பர்கள் டைப்பிஸ்டாக வேலைக்கும் சென்று விட்டனர். கூடவே 'சுருக்கெழுத்தும்' பயிலத் தொடங்கினேன். கல்லூரி வாழ்க்கையில் இதனைத் தொடர முடியலை.

ஷார்ட் ஹாண்ட் படிக்க முடியாமல் போனது குறித்து மாஸ்டருக்கு வருத்தம். இருப்பினும் எம்.ஏ. பட்டதாரியே டைப் அடித்துப் பழகுகிறார் என்று மற்ற மாணவர்களிடம் பெருமையாக என்னைப் பற்றி புகழ்வார்.

### டிபன் கடைகள்

பந்தலடியில் சாலை ஓரக்கடைகள் இரவில் ஜொலிக்கும். வழியில் போகிறவர்களை வரவேற்று உள்ளே அழைக்கும். சாலை ஓரத்திலேயே டைனிங் டேபிள், சேர் போட்டு பரிமாறுவார்கள்.

அருகே பெரிய தோசைக்கல்லில் புரோட்டா, கொத்து புரோட்டா, ரோஸ்ட் என்று மாஸ்டர் தயாரித்துக் கொண்டே இருப்பார். சுடச்சுட பஜ்ஜி, போண்டா என்று வெட்டுவோம்.

### திகில் நேரம்

வீட்டுக்குப் பக்கத்து சந்தின் கடைசியில் சாரதா என்ற அம்மையார் தனிமையில் இருந்தார். பைத்தியம். இரவெல்லாம் கத்துவார். திடீரென இறந்து விட்டார்.

இரவு நேரங்களில் அந்த சந்தில் தனியாக நடக்க பயம். யாராவது வந்தால் காத்திருந்து சேர்ந்து வருவது அல்லது ஒரே ஓட்டத்தில் வீடு வந்து விடுவேன். இந்நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

ஊர் நினைவுகளை அவ்வளவு சுலபமாக மனதிலிருந்து எடுக்க முடியவில்லை. இந்த ஊரில்தானே என் இளமைக் காலத்தை கழித்திருக்கிறேன்.

சொந்த ஊருக்கு போகும் சமயங்களில் எல்லாம் மனசு லேசாகிறது. அங்கே செல்லும் போது உள்ளத்துக்கும் உடலுக்கும் உற்சாகம் பீறிடுகிறது. அங்கே இருக்கும் தருணங்களில், வீசும் தென்றல் கூட இதயத்துக்கு இதமாக இருக்கிறது. மகிழ்ச்சியில் மனம் மகிழ்கிறது.

# மன்னார்குடி தேவதைகள்

மனிதர்களுக்கு பருவம் எப்போது வருகிறது? பையனுக்கு அரும்பு மீசை அரும்பும் போதும், தொண்டைக் குரல் மாறும்போதும், பெண்ணுக்கு மாதவிடாய் தொடங்கும்போதும் பருவம் பக்குவமாய் சிறகடிக்கத் தொடங்குகிறது.

இந்த வயதில் எதைப் போட்டாலும் முளைக்கும். பக்குவமாய் இருக்க வேண்டிய வயது. பால் கவர்ச்சி ஏற்படும் காலமிது. நட்பா காதலா என்று வேறுபடுத்திப் பார்க்க முடியாத வயது.

சம வயதில் சமகாலத்தில் எங்கள் ஊரில் தேவதைகளும் இருந்தார்கள். ஸ்கூலில் இருந்து காலேஜ்வரை படித்துக் கொண்டிருந்தார்கள். காலச் சக்கரத்தில் இடம் பெயர்ந்து எங்கெங்கோ போய்விட்டார்கள்.

பல வருடங்களுக்குப் பின்பு பாண்டிபஜாரில் எலிசெபத் என்ற தேவதையைப் பார்த்தேன். ஆனால் பழைய முகத்தைக் காண வில்லை. முதுமையும் அழகும் காலத்தினால் பறிக்கப்பட்டிருந்தது.

தேவதைகளைத் தரிசிக்க நண்பர்கள் விதவிதமான கலர்களில் அழகாக மிடுக்காக டிரஸ் செய்து கொள்கிறார்கள். தேவதைகளைக் கவருவதற்காக பஸ்டாண்டு, ஸ்கூல், கோயில், திருவிழாக்கள், டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டியூட் ஆகிய இடங்களில் காத்திருந்து காலத்தை விரயம் செய்து கொண்டிருந்தார்கள்.

இளம் பெண்கள் அனைவரும் பாவாடை தாவணியுடன் வலம் வரும்போது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சுடிதார் அணியும் காலகட்டத்தில் பாவாடை தாவணியைப் பார்த்த உருவங்கள் மனதில் பதிந்துள்ளன.



வெள்ளிக்கிழமைகளிலும், திருவிழாவிலும் சாமி தரசினத்துடன் தேவதைகளின் தரிசனமும் கிடைக்கும். மைதிலி, சுமித்ரா, உஷா, கல்யாணி, ரோஷினி, எலிசபெத் என்ற தேவதைகள் பள்ளிக் கூடத்தில் பிரபலமாகி இருந்த நேரம்.

ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடும். பார்த்தாலே குளிக்கவேண்டும்போல் தோன்றும். பெண்கள் மார்புவரை புடவையைச் சுற்றிக் கொண்டு ரொம்ப ஜாலியாகக் குளித்துக் கொண்டிருப்பார்கள். இத்தேவதைகளைக் காண சில ரோமியோக்களும் இருந்தனர்.

திருவிழாவிற்கு வரும் கிராமத்துப் பெண்கள் முகத்தில் தெரியும் கள்ளங்கபடமற்ற வசீகரம். வீட்டு வாசலில் தேவதைகள் போடுகின்ற கோலங்கள், அவர்களது விரல்களுக்குள் ஒடுங்கியிருக்கின்ற கலையின் மேதாவிலாசமல்லவா?

சுலோச்சனா என்பவள் எங்கள் வகுப்புத் தோழி. ரொம்ப ஸ்டைலா போகும். நல்ல கருப்பு. உடம்பு ஒரு மாதிரி வாகாக ரேஸ் குதிரை போல் இருக்கும். முகத்தில் திட்டுத் திட்டாய் பவுடர்கள். தன்னைவிட வயதுக் குறைவான பெண்களுடன் பேசிக் கொண்டே இருப்பாள். அவளுக்குத் தேவதை என்ற நினைப்பு.

சின்ன வயசிலே பத்மினி எப்படி இருந்தாரோ அதே போல் உஷா இருந்தாள். அவள் அப்பா பெரிய பைனான்ஷியர். குஜராத் சேட்டுக் குடும்பம். தினசரி மாலை ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள் டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டியூட்டிற்கு போய்க் கொண்டிருந்தாள்.

இவளை சைட் அடிப்பதற்காகவே ஒரு கூட்டம் அலைந்து கொண்டிருக்கும். அவளோடு டைப்ரைட்டிங் கிளாஸிலேயே சேர்ந்து விட்டார்கள். உஷாவின் கவனத்தைக் கவருவதற்கு முயற்சி பண்ணிப் பார்த்தார்கள். அட்லீஸ்ட் பிரண்டு பிடிக்கவும் முட்டி மோதிப் பார்த்தனர். உஷாவோ அவர்களைக் கண்டு கொள்ளவே இல்லை.

பள்ளிக்கூடத்தில் ஜான்பீட்டர், ராஜேந்திரன், சோமு போன்ற மன்மத ராஜாக்கள் நிறைய பேர் இருந்தனர். இவர்களை கான்வென்ட் வாசலிலும், கோயில் வாசலிலும் அதிகம் பார்க்கலாம். தேவதைகளை சைட் அடிப்பதற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கும் மன்மத ராஜாக்கள்.

இந்த மன்மத ராசாக்கள் எல்லாம் எங்கு சென்றார்கள் என்றே தெரியவில்லை. விசாரித்தாலும் சரியான தகவல்கள் கிடைக்கவில்லை.

ஹிந்தி டியூசனுக்கு போய்க் கொண்டிருந்த செங்குட்டுவன் அங்கே இருந்த ரம்பா என்று செல்லமாக அழைக்கப்பட்ட செண்பகலெட்சுமியிடம் காதல் கடிதம் கொடுத்தான். அவள் அதைக் கண்டுகொள்ளவே இல்லை.

நான் படித்த திருச்சி தேசியக் கல்லூரியில் கோஎஜுகேஷன் இல்லை. அதனால் நண்பர்களுடன் மெயின்கார்டு கேட் அருகே மணிக்கணக்கில் நின்று கொண்டிருப்போம். சீதாலட்சுமி, ஹோலி கிராஸ் கல்லூரி தேவதைகளின் கண்பார்வைக்காக ஏங்கி நின்ற காலம் அது. பொழுதும் நேரமும் போகணும்னு நினைச்சா இங்கு ஓடி வந்து விடுவோம்.

திருச்சியில் மன்னார்குடி தேவதைகளும் பெண்கள் கல்லூரியில் படித்து வந்தனர். என்னுடன் விடுமுறைக்கு ஊர் வருவார்கள். வெட்கத்துடன் பேருந்தில் கூட பதில் சொல்லும் தேவதைகளும் இருந்தனர்.

மன்னார்குடி தேவதைகள் இப்போது எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. தேவதைகள் என்பதால் பறந்து விட்டார்களா? பேரன் பேத்திகளோடு எங்காவது வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா? தெரியலை.

இப்போது ஊருக்குப் போக நேரிடும் சமயங்களில் எல்லாம் மனம் அனிச்சையாக தேவதைகள் உலா வந்த இடங்களைத் தேடுகிறது.

*எந்த ஊரில் எந்த நாட்டில்*
*என்று காண்போமா!*
*எந்த அழகை எந்த விழியில்*
*கொண்டு செல்வோமா!*

# அவள் ஞாபகம்

அன்புதான் மானுடத்தின் அடித்தளம். அன்பு நட்பாகி காதலாகி கசிந்து விடுவதும் உண்டு. பருவமாற்றங்களில் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இளம் வயதில் ஏற்படும் காதல் உணர்வு. அது வந்து போன பாதையைப் பார்த்தால் "இதுதான் காதலா" என்று தோன்றும்.

எனது வாழ்க்கையிலும் அது வந்தது. அதுவும் பால்ய வயசிலே வந்தது. ஆர்வமோ, ஏக்கமோ, வயசுக் கோளாறோ இல்லை. எப்படியோ மனசுக்குள் நுழைந்து விட்டது.

குழந்தைப் பருவம் முதல் தாவணி போட்ட பருவம் வரை கண்டு, கேட்டு உயிர்த்தெழுந்து, காதலாகி, கடைசியில் கனவாகிப் போன தெய்வீகக் காதல்.

அப்போதெல்லாம் அவளைப் பார்க்கும்போது அவளை நினைக்கும்போது நெஞ்சுக்குள் சந்தோஷ அலைப் பொங்கும். மனம் திக்குமுக்காடும். அவளைப் பார்க்க பார்க்க அதிசயமாக இருக்கும்.

மனசுக்கே விளங்காத மன ஆழத்தில் உறைந்து கிடக்கின்ற உணர்வுகளுக்கு, உயிர் தருகின்ற உயிர் வடிவம்.

திருமண நிகழ்ச்சியில் நிகழ்ந்த அந்தத் தித்திப்பான முதல் சந்திப்பு... ஆ... ஆயுள் முழுசும் நெஞ்சுக்குள் இனிய தென்றலாய் வீசிக் கொண்டிருக்கிறது.

முதல் சந்திப்பு, எதிர்படுகின்ற பொழுதெல்லாம் புன்சிரிப்புகளாய் மலர்ந்து கண்களால் நீரூற்றி வளர்ந்த பிறகு, ஏதோ ஒரு தருணத்தில் மனசின் கரைகளை உடைத்துக் கொண்டு காதலாக சங்கமித்தது.

காதல் ஒரு தவம். காதல் ஒரு வரம். காதல் ஒரு சக்தி. காதல் என்பது காலமும் இடமும் மனமும் உரமிட்டு வளர்க்கும் உன்னதப்பூ.

பால்ய வயதில், ஆர்வமும் துடிப்புமான கேள்விகளால் மனசை நீவிவிட்ட அவளது அன்பு இன்று நினைத்தாலும் ஆறுதலாக இருக்கிறது. மனசை வருத்திக் கொண்டிருக்கும் பாரத்தை இறக்கி வைக்க பழைய நினைவுகளுக்குச் சென்று விடுவதுண்டு.

அவள் ஞாபகத்தில் கரைகிற சந்தோஷத்தில் உல்லாசமாக விசிலடித்துக் கொள்கிறது மனசு. என்னென்னவோ பழைய ஞாபகங்கள்.

அவள் நினைவுகள் நெஞ்சுக்குள் இன்றும் பின்னலாடிக் கொண்டிருக்கின்றன.

ஓர் அனாதை வீணையை அவசரமாய் ஒரு தென்றல் வந்து மீட்டி விட்டுப்போனதைப் போல் அவள் என் மனதை மீட்டிவிட்டுச் சென்று விட்டாள்.

அவள் வரும் போதெல்லாம் பூமியே தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும். ஐம்பது வசந்தங்கள் கடந்த பிறகும் அவளது நினைவுகளின் பதிவு. மனதில் திரைக்காட்சியாக மலர்ந்து கொண்டிருக்கின்றது.

பருவ வயசுக்குரிய குறுகுறுப்பு கலந்த உணர்வுகளுடன் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே செல்வாள்.

முதல் சந்திப்பு, நெகிழ்வு சூழ்ந்த திகைப்பு, கனவு, கண்களால் பேசியது, சில்லிட்ட மனசு, பின்பு துவண்டு போன மனசு, முற்றிலும் மாறுபட்ட அதிர்வு பசுமையாக இன்றும் நெஞ்சில் நிறைந் திருக்கிறது.

அந்தப் பார்வையில் ஆயிரம் விஷயங்களைப் பேசி முடித்ததாக நிறைவு. அவளின் பார்வையில் என் அந்தரங்க நந்தவனம் பொசுக்கென்று பூப்பூத்துவிடும்.

பல நாட்களில் அவள் மௌனமே என்னுடன் பேசுவது போல் இருந்தது. அவளது குரல். ஓடி ஆடித் திரிந்த நிகழ்வுகள், ஒன்றாகச் சாப்பிட்டது - விளையாடியது - நன்றாக ஞாபகம் இருக்கிறது.

அன்றலர்ந்த தாமரைப் போல் தென்படும் அவளது வசீகரமே அந்தத் துடிப்புதான். கண்களின் கனிவு, பார்வையில் இரகசியம், அழகும் இளமையும் பூசிய புத்தகத்தில் அவள் நினைவுகள் ரகசியமாக இருக்கின்றன.

அவள் ஞாபகம் வரும்போது, புடைத்தெடுத்த தானியம் போல் மனசு எல்லாம் 'ஜில்' என்றாகிவிடும். உடம்பையும் மனசையும் லேசாக்கி விடுகிறது.

சாலைகளில் சந்திக்கும்போது தனது காந்தக் கண்களால் ஒரு பார்வை பார்ப்பாளே அடடா ஜென்மத்திற்கும் மறக்க முடியாது. அந்த ஒரு நொடிப் பொழுதில் என்னை மறந்த வினாடிகள் உண்டு.

அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவள் முகத்தில் சட்டென மின்னியப் புன்னகை. புன்னகையையும் மீறி ஏதோ ஒன்று கவர்ந்திழுக்க அவள் பின்னே ஓடிய மனசு.

அந்தக் காதல் தேவதையுடன் ஒருவருக்கொருவர் பார்வை பூக்களை வீசிக் கொள்வதோடு சரி. அவளின் ஞாபகங்களே எனக்கு சுவாசமாயின. காதலின் சுகம் என்ன தெரியுமா? அந்த அவஸ்தைதான்.

அவளைப் பற்றிய ஞாபகங்களை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறேன். அப்போது யாருக்கும் அவற்றைப் பிரகடனம் செய்யாமல் இருந்த எனது மௌனங்கள் இரகசியமாய் இருந்தன.

காலம் கடந்து ரகசிய சினேகம் தெரிந்து போனதும் துடித்துப்போன அவளது மனசு - வேதனைப்பட்ட நெஞ்சம் - விதி என்னும் வசத்தால் வாழ்க்கைப் பாதைகள் தடம்புரண்டன. அவள் இப்போது எங்கிருந்தாலும் நினைவலைகளினால் அவள் என்னருகே வருகிறாள். மனசைத்தொட்டுப் பார்க்கிறாள்.

பால்யத்தில் பிறந்து இளமையில் வளர்ந்து முதுமையில் மனசெல்லாம் மரமாகி நிற்கிறது அவள் நினைவு.

காதல் இன்பம் கடுகளவுதான். அதனால் ஏற்படும் போராட்டமோ வாழ்நாள் முழுதும்.

மழையைப் போல் கதிரவனைப் போல் காதல் மனசுக்கு நிம்மதியைத் தருகிறது. நெஞ்சுக்குள் அவளது நினைவுகள் சகலத்தையும் தழுவி இழுத்துச் செல்கிற காற்றாக நினைவுகள்.

*"கண்மூடிப்படுத்தாலும் அவள் நினைப்பு*
*கல்லூரி சென்றாலும் அவள் நினைப்பு*
*விண்மூடி விளையாடும் முகிலைப் போலே*
*விழியழகி என் நினைவைமூடி, இன்பப்*
*பண்பாடி வருவதுபோல் ஒருநினைப்பு*
*பக்கத்தில் இருப்பது போல் ஒரு நினைப்பு*
*மண்மூடிப் போனாலும் அவள் என்றன்*
*மனதகற்ற இயலாத ஓர் இணைப்பு*

# மன்னார்குடி இன்று

அமைதியான ஆரவாரமற்ற பழைய ஊரின் தோற்றம் இல்லை. புதிய கட்டிடங்கள், புதிய மனிதர்கள், ஜன நெருக்கடி, பஸ் ஸ்டாண்டில் அலைமோதும் கூட்டம், தெரிந்த முகங்களைத் தேட வேண்டியிருக்கிறது.

பழைய முகங்களான ராமதாஸ், மோகன், ஜெயபால் - இவர்கள் எப்போதாவது தென்படுகிறார்கள். பழைய புன்னகையைத் தான் தேட வேண்டியிருக்கிறது.

**பாதையே சுகமா**

இன்று புதிதாய் தெரிகிறது. ஊர் எத்தனை மாற்றங்கள். மண் கொஞ்சம் கிழடு தட்டியிருப்பதாகத் தோன்றுகிறது. மரங்கள் குறைந்திருக்கின்றன. மரங்களின் எண்ணிக்கையை ஈடுசெய்ய மின்சாரக் கம்பங்கள் முளைத்திருக்கின்றன. எல்லா முகங்களிலும் அவசர நிழல். வாகனங்களின் கனம் தாங்காமல் பிரசவ வலியில் தவிக்கும் பெண்ணாக சாலைகள்.

ரயில் நிலையம் மூடப்பட்டிருக்கிறது. தண்டவாளங்களின் மேலே குடிசைவாசிகள் வாழ்கின்றனர். ரயில் பாதையை- அதனைச் சேரும் சாலையின் தடயங்களே இல்லை. பல ஊர்களை இணைக்கும் மன்னார்குடிக்கு இருந்த சின்ன ரயிலும் சிறகடித்து ஓடிப்போன சோகம் மனதைக் கனக்க வைக்கிறது.

கடைவீதிகள் மாறியிருக்கின்றன. விதவிதமான கடைகள், ஷோரூம்கள், புதிய ஓட்டல்கள், புத்தகக் கடைகள், ரியல் எஸ்டேட் ஆபீசுகள், எங்கும் நிறைந்திருக்கின்றன.

மேற்குப் பக்கம் செருமங்கலம் வரையிலும் தெற்குப் பக்கம் மரவாக்காடு வரையில் நகரம் விரிவடைந்துள்ளது. புதிய புதிய நகர்கள். பிரமாண்டமான கட்டிடங்கள். கிராமத்துவாசிகள் புதிய நகரில் தடம் பதித்துள்ளனர்.

ஊரின் தெருக்கள் எல்லாம் சுருங்கி விட்டன. பல இடங்களில் தேசிய வங்கிகள், கும்பகோணம் பரஸ்பர வங்கிக்கு சொந்தக் கட்டிடம், மன்னார்குடியின் ஜனத்தொகையும் பெருகிவிட்டது.

பந்தலடி, கீழராஜவீதி, மேலராஜவீதி, கீழப்பாலம் எல்லா இடங்களிலும் புதிய புதிய கடைகள், வியாபாரங்கள். விளம்பரங்கள். பழைய கடைகள் பலவற்றை காணவில்லை. ரங்கூன் ஸ்டோர்ஸ், பீப்பிள்ஸ் ஸ்டோர்ஸ், கொழும்பு ஸ்டோர்ஸ் போன்ற கடைகளின் தடயமே தெரியவில்லை.

பஸ் போக்குவரத்து அதிகமாகி விட்டது. மன்னார்குடியில் இருந்து பல ஊர்களுக்கும் செல்கின்ற அளவுக்கு பயண வசதிகள், கலர் கலராய் தனியார் மற்றும் அரசுப் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. மினி பஸ்களும் வேறு ஓடிக் கொண்டிருக் கின்றன. ஆச்சரியம்! எங்கள் தெரு வழியே டவுன் பஸ் செல்கிறது.

முனீஸ்வரன் கோயில், தங்க விநாயகர் கோயில், ஆத்தங்கரை பிள்ளையார் கோயில் அனைத்துக் கோயிலும் வியத்தகு முறையில் மாற்றங்கள் செய்து புனரமைக்கப்பட்டுள்ளன. ராஜகோபால சாமி பெரிய கோயில் நம்ப முடியாத அளவுக்கு சீரமைக்கப்பட்டுள்ளது. அறநிலையத்துறையின் கீழ் இருந்தாலும் ஊர்ப் பெரியவர்கள் கோயில்களைப் பராமரிப்பதால் சிறப்புக் கவனம் செலுத்தி வருவது மனதுக்கு இதமளிப்பதாக உள்ளது.

தெப்பக் குளத்தை தூர்வாரி, சீரமைத்து தெப்பம் விழாவும் சிறப்பாக நடைபெறுவது ஆனந்தமளிப்பதாக இருக்கிறது. எல்லாக் குளங்களும் தூர் வாரப்பட்டு இருக்கிறது.

தியேட்டர்கள் பேரெல்லாம் மாறி இருக்கிறது. நான்கு காட்சிகள் ஓடுகிறது. புதிய சினிமாக்கள் ரிலீசாகிற அளவுக்கு முன்னேற்றம்.

ஊர் முழுவதும் விதவிதமான வடிவங்களில் கம்பீரமாக கட்டிடங்கள் எழுந்து நிற்கின்றன. வாடகைக்கு காலனி வீடுகள் நிறைய உள்ளன. ஹவுசிங் யூனிட்டும், ஊரின் குடியிருப்புத் தேவையைக் குறைத்திருக்கிறது.

சாலைகள் ஓரத்தில் காலையிலும், மாலையிலும் ஆண்கள், பெண்கள் சுறுசுறுப்பாக வாக்கிங் சென்று கொண்டிருக் கிறார்கள்.

புதிய புதிய பாலி கிளினிக்குகளும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

டாக்டர் அசோக்குமார் பெரிய மருத்துவமனை கட்டி, மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகச் செய்து வருகிறார். எங்கோ பிறந்து வளர்ந்து படித்து எம் மண்ணின் மக்களுக்கு மலிவாக மருத்துவம் பார்க்கும் இந்த மருத்துவரை திசை நோக்கித் தொழுகிறேன்.

ஒரு காலத்தில் கல்லூரியே இல்லாத ஊரில் கல்லூரி தொடங்கி கல்விக் காவலராய் கோயில்களையும் புனரமைத்து அறங்காவலராய் ஊர் முன்னேற்றத்துக்கு தொண்டு செய்து வருகிறார் திரு. திவாகர். என்னுடைய பால்ய காலத்து சினேகிதர்களான ஆத்துப்பிள்ளையார், திருப்பாற்கடல், காசி விஸ்வநாதர் கோயில் மூன்றையும் புனரமைத்து என் கனவுகளை நினைவாக்கியிருக்கிறார். இவர் சேவையைப் பார்க்கும் போது பிரமிப்பாக இருக்கிறது

பழைய மன்னார்குடி புகைப்படமாக என் மனத்திரையில் இருக்கிறது.

**ஒளிமயமான எதிர்காலம்**

எங்கள் ஊரின் வளமான எதிர்காலம் பிரகாசமாகத் தெரிகிறது. ஆசியாக் கண்டத்திலேயே மிகப்பெரிய அளவில் மன்னார்குடியில் (நிலக்கரி) கனிமவளங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை 19,500 கோடி டன்கள் தரமான நிலக்கரி இருப்பது தெரிய வந்துள்ளது. ( Moisture 40 to 50 % Ash 4 to 12 % Volatile matter 18 to 23% Fixed carbon 17 to 20% Caloric value 2200 to 3200 Kal / kg.)

நிலக்கரி தோண்டி எடுக்கும் பணி இன்னும் தொடங்க வில்லை. விவசாய நிலங்கள் அதிகமிருப்பதால் இப்பணி தாமதப்படுகிறது. இருப்பினும் நிலக்கரியைத் தோண்ட தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எங்கள் ஊருக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது.

ஊரைவிட்டு வந்து எத்தனை ஆண்டுகள் ஆனாலும், திரும்ப நினைக்கும் போது ஊர் ஞாபகங்கள் பசுமையாகவே இருக்கின்றன.

ஊரின் அபரீதமான வளர்ச்சிக் கண்டு ஒரு பக்கம் மகிழ்ச்சி. பழைய ஊரை பார்க்க முடியாத வருத்தம் மறுபக்கம். இன்பமும் துன்பமும் மகிழ்ச்சியும் சோகமும் நிறைந்ததுதானே வாழக்கை.

# மீண்டும் நினைவுகள்

ஊரை நினைத்தாலே நினைவுகள் அலைபுரள்கின்றன. மனசின் கரைகளை அரித்துக் கரைக்கின்ற நினைவுகள். ஒன்றுடன் ஒன்று மோதி சங்கமிக்க ஆவல்படுகிற நினைவுகள்.

நினைவுகள் என்ற சொர்க்கத்திலிருந்து நம்மை யாராலும் விரட்ட முடியாது. மனசின் கரைகளை உடைத்துக் கொண்டு சங்கமித்த அந்த பால்ய தருணம்.

என்னுடைய மன்னார்குடி வாழ்க்கை இருபத்திமூன்று வயதோடு முடிந்து போனது. ஊரைவிட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டாலும் **ஊரை நினைக்கும்போது சொர்க்க லோகத்தில் மிதக்கிற மாதிரி உணர்வுகள் ஏற்படுகின்றன.**

மனதில் சோகம் தட்டும் பொழுதுகளில் பழைய நினைவுகள் கொஞ்சம் எடுத்துக் கொள்ளும்போது சுகம் ஏற்படுகிறது.

சிறு வயது முதற்கொண்டே ஊர் பல கதைகளைச் சொல்லி வந்திருக்கிறது. வாழ்வில் சில ஸ்பரிசங்கள் நீங்காதவை.

**'மன்னார்குடி'** என்கிற போர்டுடன் ஒரு பஸ்ஸைப் பார்க்கிறபோது பிரியமான உணர்வும் மேலிடுகிறது. பிறந்த மண்ணின் மீது இருக்கும் உறவின் அடையாளம் தான் இந்த உணர்வு.

இளமைக்கால நினைவுகள் சம்பவங்கள் ஆகியவற்றை இப்போது நினைத்துப் பார்த்தால் சுகம் ஏற்படுகிறது. மகிழ்ச்சியான தருணங்கள், ஆதரவான வார்த்தைகள், அழகிய எண்ணங்கள்,

நம்பிக்கை ஊற்று - எல்லா நினைவோடு மனதில் சிறகுகளாக நிற்கின்றன. இத்தருணங்கள் தான் வாழ்க்கை. அவற்றின் தொகுப்புத்தான் நினைவுகள்.

இளவயதில் ஏன் எதற்கு என்று எங்களுக்குப் பல கேள்விகளும் சம்பவங்களும் தோன்றிக் கொண்டே இருக்கும். விடைகளுக்கு மரணம் உண்டு. வினாக்களுக்கு இல்லை. வாழ்க்கையில் நடக்கும் பல சம்பவங்கள் மறைந்தும் மறந்தும் போகின்றன.

ஊர் நினைவுகள் மனதில் அழுத்தமான பதிவுகளை ஏற்படுத்தி விடுகிறது. இந்த நினைவுகளை அவ்வளவு சுலபமாக மனதிலிருந்து உதறமுடியவில்லை.

அந்த ஈரம் கசிந்த மனிதர்களை திறமை மிக்க கலைஞர்களை சாமானியர்களை மனம் மறக்காமல் நினைவு வைத்திருக்கிறது. அங்கே வாழ்ந்த வாழ்க்கை எல்லாம் என் வாழ்க்கையின் ஒரு பகுதியாக இணைந்துவிட்டது.

இப்போது அங்கு போகிறபோது ஓடியாடி விளையாடிய இடங்கள், உறவாடிய தெருக்கள், நீச்சலடித்த குளம், ஆறு, வலம் வந்த கோயில்கள், பள்ளியில் படித்த நாட்கள் எல்லாம் மனதில் பதிந்திருப்பதை உணர முடிகிறது.

ஊருக்குச் செல்கையில் ஜீவ சமாதியில் உள்ள சித்தர்கள் என்னை வாழ்த்துவதை உணர முடிகிறது. வயதான உயர்ந்த அந்த மரங்கள், அதன் கிளைகள், என்னை அசைந்து வரவேற்பதை உணருகிறேன். என்னை விட்டு பிரிய உனக்கு எப்படி மனம் வந்தது? என்று ஊரே என்னைக் கேட்பதாகத் தெரியும். அனுபவங் களை எழுத வார்த்தைகள் தெரியாமல் தடுமாறுகிறேன்.

ஒவ்வொருவருடைய இளமைக்காலப் பதிவுகளும் அவரவருக்குச் சரித்திரப் புத்தகமே. என் சரித்திரப் புத்தகத்தில் ஈரம் படிந்த விரல்களோடு இன்னும் திறக்கப்பட வேண்டிய பக்கங்கள் அதிகமிருக்கின்றன.

சில மறக்க முடியாத சம்பவங்களைக் கற்பனையைத் தடவி மாற்றி எழுதுகிறேன். பதினைந்து வயசுக்குள் பருவத்தின் செயல்பாடுகள், ஞாபகப் பிசகு இல்லாமல் எழுதப்பட்டிருக்கும். பால்ய நினைவுகள், காயங்கள், காட்சிகள் எல்லாமே எழுத்தின் ஊற்றுக்கண் ஆகும். இவை எப்போது எந்த வடிவத்தில் எந்தக் கலவையிலாவது வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

கோயில் அய்யர், தாமஸ் வாத்தியார், மைதிலி, பார்த்தசாரதி, ஜானகி டீச்சர், கிராமத்துக் கலைஞர்கள் ஆகிய பாத்திரங்கள் ஊர் மண்ணிற்குப் பொதுவான கதாபாத்திரங்கள். இவர்களை விட்டு அதிக தூரம் வந்துவிட்டாலும் மனதில் இன்றும் அடையாளம் மாறாமல் அப்படியே இருக்கிறார்கள்.

ஊருக்குப் போகும்போது பழைய நண்பர்களைத் தேடுகிறேன். ஞாபக அலைகள் வேகமாகச் சிறகடிக்கின்றன. "டேய் குமார்" யாராவது உரிமையோடு அழைக்க மாட்டார்களா என்ற எதிர்பார்ப்பு ஏக்கமாய் இருந்து வருகிறது.

வாழ்க்கைப் பருவங்களில் இளமைக்காலம் ஆழப் பதிந்திருந்தாலும் வேலை, குடும்பம், வாசிப்பு, எழுத்து என்ற விலகலும் வந்து விடுகிறது.

சொந்த மண், மண்ணின் மனித முகங்கள், அவர்களது சந்தோஷங்கள், சோகங்கள், கோபங்கள் எல்லாம் கலந்த கலவை வீச்சு - கலாச்சாரம் - சுலபமாக உதறிவிட முடியாது. இந்த மக்களைப் பாக்குறபோது **'இது நம்ம மண், நம்ம மக்கள்'** என்று என்னையுமறியாமல் உணர்வுகள் மேலிடுகின்றன.

வேலை நிமித்தமோ அல்லது ஏதாவது சூழ்நிலைகள் அல்லது கட்டாயத்தினாலோ சொந்த மண்ணை விட்டு நெடுந்தூரம் வந்து விடுகிறோம். ஊரை விட்டுப் பிரிந்து தொலைதூரத்தில் இருப்பது ஒருவித சோகம்தான். நிழலின் அருமை வெயிலில் தானே தெரியும்.

இயந்திர வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் போது ஒரு மாறுதலுக்காக சொந்த ஊர்ப் பக்கம் போய் வரலாம் என்ற நினைவு வருகிறது.

ஊருக்குள் கால் வைக்கும் போது மனது பேசுகிறது. ஊருக்குப் போய் ஒவ்வொரு முறையும் திரும்பும்போது வற்றாத வசந்தத்தையும், கழியாத ஊக்கத்தையும் நினைவில் அள்ளிக் கொண்டு வரத் தவறுவது இல்லை.

மன ஊஞ்சலில் அலை மோதிய என் ஞாபகங்களை நினைவு படுத்தி பதிவு செய்தபோது நானே எனக்கு ரசிகனாகிறேன்.

பல மாதங்களாகப் பட்டாளத்தில் இருந்து வந்தவன் தன் பருவ மனைவியின் கட்டுக்குலையாத அழகைக் கண்டு ரசிப்பது போல் ரசித்து ருசிக்கிறேன்.

## நெஞ்சை பிழியுதம்மா

ஐம்பது ஆண்டுகள் கழிந்த பின்னரும் இந்த ஊரில் இன்று தான் நடைபயில்வது போன்ற உணர்வு. காலில் பரவசம். மனசில் வலி.


ஞாபக வெளிகளிலே என் மனநதி ஓடுகிறது... பின் நோக்கி நகர்கிறது. என் பாசத்திற்குரிய பழைய முகங்களே... நான் பழகிய பழைய கண்களைப் பார்க்க வந்தேன். அன்று கூவிய பறவைகளில் ஒன்றைக் கூட காணமுடிய வில்லை. எந்த மழையிலோ கோடையிலோ மாண்டிருக்குமோ? அன்று குடைபிடித்த மரங்கள் இப்போது இல்லை. கதவாய் --- சன்னலாய் --- சாம்பலாய் எந்த வடிவம் பூண்டனவோ? அன்று தாமரைக் குளத்தில் இருந்த அல்லிகள் பூண்டோடு அழிந்துள்ளன. எங்கு இடம் பெயர்ந்தன என்று தெரியலை. அன்று திருப்பாற்கடலில் தத்தியெறிந்த தவளைக்கல் குளத்தின் ஆழத்தில் கிடைக்குமா, கிடைக்காதா?

வானத்து நட்சத்திரங்கள், தோட்டத்துப் பூக்களும் நிரம்பிய பால்யப் பருவத்து நேரங்கள் ஒவ்வொருவருக்கும் முக்கியமான தருணங்கள், நான் பயணித்த அனைத்து இடங்களுக்கும் உங்களை முடிந்தவரை அழைத்துச் சென்றிருக்கிறேன்.

நினைவுப்படுத்திக் கொண்ட கடந்த கால நினைவுகள் பால்யத்தை ஞாபகப்படுத்துகின்றன. அவை நீரூற்றுகள், ஓடைகள், கடல்கள். இந்த இன்பங்கள் - அலைகள் - நிகழ்காலத்தில், எதிர்காலத்தில் எப்போதும் தந்து கொண்டே இருக்கும்.

விவசாயினுடைய வியர்வைச் சிந்துகின்ற உழைப்பும், சிலைக்கு கண் திறக்கின்ற சிற்பியின் நளினமும், பாரதியைப் போன்ற பிரசவ அவஸ்தையும், கிப்ரானைப் போன்ற எழுத்துக்களுக்குள் இன்னமும் சிக்கிக் கொள்ளாத கனவுகளும், ஊரைப் பற்றிய ஞாபகம் வரும்போது சந்தோஷ அலைகள் என்னுள்ளே எட்டி மோதித் தெரிக்கின்றன.

பூமியின் முகத்தில் காலத்தின் கீறல்கள் எல்லாம் மாறி மாறித் தேய்த்தன. மன்னார்குடியில் பதிந்த என் பிஞ்சுக்கால் தடங்களை நம்பிக்கையோடு தேடுகிறேன்.



மன்னார்குடி ஜெயங்கொண்டநாதர் கோயில் செப்பேடு - 11.5.1757



இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள மன்னார்குடி ராஜகோபாலன் ஓவியம்
ஓவியத்தின் கீழ் தெலுங்கில் " உபய நாச்சியாருல ஸமேதமுக ராஜ மன்னாரு ஸ்வாமி " - என்று எழுதப்பெற்றுள்ளது.

## ஆசிரியரின் பிற நூல்கள்

### ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்
4. திருவாசகம் திருவாசகம்தான் அரியசெய்திகள் 1000)
5. வரலாறு போற்றும் குரு சீடர்கள்

### வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. நபிகள்நாயகம் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
5. குருவுடன் வாழ்ந்தவர்
6. வேதாத்திரி மகரிசி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

### தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்

4. **வேதாத்திரி மகரிசியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.**
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

**ஒப்பாய்வு** (வேதாத்திரி மகரசி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரசியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரசியும்
3. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிசியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞானஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள்
10. பாமரமக்களின் தத்துவஞானிகள்
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிசியும்.
12. **புத்தரும் வேதாத்திரியும்**
13. **இயேசுவும் வேதாத்திரியும்**
14. **புரட்சி சித்தர்கள்**

**ஒப்பாய்வு** (தாயுமானவர்)

1. தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும்
2. தாயுமானவரும் மௌனகுருவும்.
3. தாயுமானவரும் பட்டினத்தாரும்
4. தாயுமானவரும் அருணகிரிநாதரும்
5. தாயுமானவரும் திருஞானசம்பந்தரும்

6. தாயுமானவரும் சனகாதி முனிவர்களும்
7. தாயுமானவரும் திருஞானசம்பந்தரும்.
8. தாயுமானவரும் திருநாவுக்கரசரும்.
9. தாயுமானவரும் சுந்தரரும்
10. தாயுமானவரும் மாணிக்கவாசகரும்,
11. தாயுமானவரும் பத்திரகிரியாரும்,
12. தாயுமானவரும் சுகதேவரும்.
13. தாயுமானவரும் ஜனகரும்.
14. தாயுமானவரும் மார்க்கண்டேயரும்
15. தாயுமானவரும் திருமூலரும்.
16. தாயுமானவரும் திருவள்ளுவரும்
17. தாயுமானவரும் பாரதியாரும்
18. தாயுமானவரும் புத்தரும்
19. தாயுமானவரும் மகாவீரரும்

**வேதாத்திரி மகரிசி**

1. **வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள்.**
2. **வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (மூன்று பாகங்கள்)**
3. **இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி**
4. **தினசரி தியானம்.**
5. **வேதாத்திரி மகரிசி காட்டும் வறுமை**
6. **மனைவிக்கு மரியாதை**
7. **குடும்பச் சிக்கல்களுக்கு வேதாத்திரியம் தரும் தீர்வுகள்**
8. **வேதாத்திரியத்தை ஏற்றால் வெற்றியே**
9. **வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்**
10. **மனைவிக்கு மரியாதை**

தாயுமானவர்

1. தாயுமானவர் பாடல்களில் உவமைகள்
2. தாயுமானவரும் தரும் உயிர் விளக்கம்
3. தாயுமானவர் தாயுமானவர்தான் (அரியசெய்திகள் 1000)
4. தாயுமானவரின் சமரச நெறி
5. தாயுமானவர் ஒரு சித்தர்
6. தாயுமானவரின் மெய்ப்பொருள்
7. தாயுமானவரின் ஆனந்தக் களிப்பு
8. தாயுமானவர் பாடல்களில் மனம்
9. தாயுமானவரின் உவமைகள் 100
10. வாசக ஞானத்தால் வருமோ ஞானம்.
11. தாயுமானவர் தரும் பிரபஞ்சக் கோட்பாடு
12. இன்பத் தமிழுக்கு இலக்கியமான தாயுமானவர்
13. தாயுமானவரின் இலக்கிய நயம்

பயணங்கள்

1. ஞாபகம் வருதே ஞாபகம் வருதே
2. அமெரிக்க மண்ணில் ஆறுமாதங்கள்.
3. சிம்லாவில் ஐந்து நாட்கள்

வரலாறு

1. மன்னார்குடி வரலாறு
2. ராஜமன்னார்குடி அரிய செய்திகள் 1000

சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

**ஆய்வு நூல்கள்.**

1. **நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்.**

**நாவல்**

1. **வர்ஷா**

**சொற்பொழிவுகள்.**

**Youtube speeches ‘vethathiriam banukumar”**

**இணையதளம் - banukumar.in**

**Website App**

**Spiritual thoughts Vethathiriam**

**முகநூல் .FACE BOOK**


**MANNARGUDI BANUKUMAR**

**வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.**

**தாயுமானவர் தாயுமானவர்தான்**

**Natives of Mannargudi**

**Pages - சேரவாரும் ஜெகத்தீரே**



டாக்டர் சி. அசோக்குமார்,
எச்.எல்.
மன்னார்குடி.

மனித மனம் ஞாபகச்
சங்கிலியால் பின்னப்பட்டுள்ளது.
நினைத்து உருக, மகிழ, வருந்த,
அதிர, அதிசயிக்க என
ஏராளமாய் எல்லோருக்குள்ளும்
ஞாபக அலை அடித்துக்கொண்டே
உள்ளது. பானுகுமார்
எடுத்துக்கோர்த்துள்ள ஞாபக
முத்துக்கள் வாழ்வின் அனுபவ
வித்துக்கள். மன்னார்குடியில்
நான் பிறக்கவில்லை ஆனால்,
பானுகுமாரின் இளமைக்கால
நினைவுகளை ஆய்ந்தபோது
நானும் மன்னையில்
பிறக்கவில்லையே என்ற ஏக்கம்
எழத்தான் செய்கிறது.

**அன்பகம் வெளியீடு**
பி-58, ஏழாவது குறுக்குத் தெரு,
அண்ணாநகர், செங்கற்பட்டு-603 001.